
நிஜத்தடன் நிலவனின்
விழுதுகள்
தொகுப்பு
பாகம்-01

# விழுதுகள்

## பாகம் 1

*தொகுப்பு*

நிஜத்தடன் நிலவன்

தயாரிப்பு

வெளியீடு

நிதர்சனம்
NIEDHARSHANAM

விழுதுகள்

நூலின் வகை - போர்க்கால இலக்கியம்

மாவீரர்களின் சுவடுகள் (பாகம்- 01)

தயாரிப்பு - உயிர்ப்பூ

வெளியீடு - நிதர்சனம்

பக்கம் - 300

பிரதிகள் - 1000

முதற்பதிப்பு - 2020

அட்டை வடிவமைப்பு - இளங்கீரன்

உள் வடிவமைப்பு - யுகன்

ISBN – 97 80 6450 38309

தொடர்புகளுக்கு: தொடர்பு இலக்கம் - 0061 4067 70300

மின்னஞ்சல் - *Nilavan8311@gmail.com*

பங்களிப்பு- $ 25

***Viluthugal'*** thoguppu Anthology

Author : Nijathadan Nilavan

Language :Tamil

First Edition : November 2020

Size : 1x8

Paper : News Print

Pages : 300

Published by Nitharsanam

Presented by Uyirpu

Contact : Phone: +61406770300

*email:nilavan8311@gmail.com*

Printed at : India

ISBN : 97 80 6450 38309

## அர்ப்பணம்

தமிழீழ விடுதலைப்போரில்
வீரச்சாவடைந்த அனைத்து
மாவீரர்களுக்கும்

# நன்றி!

களத்தில் பத்திரிகை
தமிழீழத்தேசியத் தொலைக்காட்சி
நிதர்சனம் நிறுவனம்
புகைப்படப் பிரிவு
இணையங்கள்

# இதயக்கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்

*எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இழப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள், சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் (தியாகிகள்) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.*

*ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்வு உன்னதமானது. 'அர்த்தமுள்ள சுதந்திரம்' என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள். அசாதாரணமான பிறவிகள்.*

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

மேதகு வே. பிரபாகரன்,

தலைவர்,

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(மாவீரர் நாள் கையேடு நூலில் இருந்து 1992-11)

# பதிப்புரை

*அன்பு உறவுகளுக்கு வணக்கம்..!*

'இயற்கை எனது நண்பன்;
வாழ்க்கை எனது தத்துவாசிரியன்;
வரலாறு எனது வழிகாட்டி' என்பது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சிந்தனையாகும். இன்றையகால சூழ்நிலையில் சிங்களப் பேரினவாதம் உட்படஅவர்களோடுசேர்ந்து இயங்கும் தமிழர் விரோதசக்திகள் தமிழர் வரலாற்றை அழித்தும் திரிவுபடுத்தியும் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர். தமிழர்கள் உலகின் மூத்த குடிகள் என்பதையும் அவர்களின் வீரம் செறிந்த வரலாற்றையும் எமது அடுத்த தலைமுறையினர் அறிந்துவிடக்கூடாது என்பதில் இவர்கள் அதிக கவனம் மிக்கவர்களாக இருக்கின்றனர். இதுவே கீழடிமுதல் இனவழிப்பின் உச்சமான முள்ளிவாய்க்கால் வரை எமக்கு உணர்த்தி நிற்கும் உண்மையாகும்.

இன்றைய நவீனதொழில்நுட்ப உலகில் கருத்து சுதந்திரத்தை வலுவாகப் பேசுகின்ற சமூக ஊடகங்களிலும் இணையத்தளங்கள் மற்றும் காட்சி ஊடகங்களிலும் தமிழ்த்தேசிய கருத்துருவாக்கத்தை சிதைக்கவும் தமிழீழக் கோட்பாட்டை இல்லாமல் ஒழிக்கவும் பலவேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாகத் தமிழர் இன அழிப்பிற்கான சாட்சியங்கள் உட்பட தமிழீழக் காணொளிப் பாடல்கள் வரலாற்றுஆவணங்கள் பல இணையத் தளங்களில் இருந்து அழிக்கப்பட்டுவிட்டன.மீண்டும் புதிதாக அவற்றை நாம் இணைப்பதற்கு எமக்கு எந்த ஒருசந்தர்ப்பமும் வழங்கப்படவில்லை. இதனை மிகப் பெரிய இன அடக்குமுறையாகவே பார்க்கவேண்டியுள்ளது. மாவீரர்களின் துயிலும் இல்லங்களை இடித்து அழிப்பது, அவர் தம் கல்லறைகளைச் சிதைப்பது, நினைவேந்தல் மற்றும் எழுச்சி நிகழ்வுகளை நடத்தவிடாமல் மக்களை அச்சுறுத்துவது என மனிதபேரவலம் தாய் நிலத்தில் தொடர்கதையாகவே நீள்கிறது. இவற்றை செய்வதனுடாகத்

தமிழர் தம் விடுதலை உணர்வை நீர்த்துபோகச் செய்யலாம் எனசிலர் பகல் கனவுகாண்கின்றனர் .

மக்களின் விடிவிற்காகவும் தமிழீழ மண்ணின் புலர்வுக்காகவும் தம் இன்னுயிரைத் தியாகம் செய்தவர்கள் எங்கள் மாவீரர்கள். இவர்களே எங்களின் காவல் தெய்வங்கள். இவர்களே தமிழீழதேசத்தின் விடிவெள்ளிகள் . தமிழீழமக்களின் உள உரன்கள் சிதைக்கப்படும் போதெல்லாம் ஒளித்தீபமாய் நெஞ்சிலே உறுதி தருபவர்கள். இவர்களின் வரலாறுகளைக் காலத்தால் அழித்துவிடமுடியாது. கயவர்களினால் சிதைத்துவிடவும் முடியாது. புறநானூற்றுக் காலத்தில் தமிழர் தம் வீரத்தை இன்றுமீண்டும் உலகுக்கு காட்டிய வீரபுதல்வர்கள் எங்கள் மாவீரச்செல்வங்கள். தமிழீழத் தேசியதலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வழிகாட்டுதலில் போர்க்களம் புகுந்த வீரமறவர்களின் வரலாற்றுச் சுவடுகளை நம் அடுத்த தலைமுறையினரும் அறிந்து, அவர்களின் வழித்தடத்தில் தமிழராய் தலைநிமிரவேண்டும்.

ஒவ்வொரு தமிழர்களும் மாவீரர்களின் தியாகங்களையும் அவர் தம் வீர வரலாறுகளையும் பேசவும், எழுதவும், மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டுள்ளோம். அந்தவகையில் உயிர்ப்பூ வெளியீட்டுப் பிரிவினர் ஆகிய நாம் எமது மாவீரச் செல்வங்களின் வரலாற்றுச் சுவடுகளை ஆராய்ந்து சரியான தகவல்களைத் தொகுத்து ‘விழுதுகள்’ என்கின்ற இந்த நூலில் ஆவணப்படுத்தி உள்ளோம். தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தம் மௌனிக்கப்படும்வரை களமாடிய மாவீரர்களின் வரலாற்றுத் தடங்களையும் தேடித் தொகுத்துதொடர் பாகமாக வெளியிடஎண்ணியுள்ளோம் என்பதையும் மனநிறைவோடு அறியத்தருகின்றோம்.

‘தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்’

**இளங்கீரன்**

உயிர்ப்பூ வெளியீட்டு நிறுவனம்

*27.11.2020*

# முன்னீடு

## வரலாற்றின் சுவடுகள் விழுதுகளாய்...

**த**மிழீழதேசம் தனது விடுதலைக்காக கடந்த 75 வருடங்களுக்கு மேலாக அறவழியிலும் ஆயுதவழியிலும் போராடிக் கொண்டிருக்கின்றது. முப்பது வருடத்திற்கும் மேலான ஆயுதமுனைப் போரில் நாற்பத்தி ஐயாயிரத்திற்கும் மேலான மாவீரர்களை மண்ணில் விதைத்து இன்று நீறுபூத்த நெருப்பாக உறங்கிக்கொண்டிருக்கின்றது.

சிங்கள அரசுகளின் கொடூரமான இன அடக்குமுறைக்குள் தமிழ் மக்கள் சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்தார்கள். காற்றில் பறந்த இலவம் பஞ்சுபோல் தேசமெங்கும் உறவுகள் கலைந்து சென்றார்கள். உலகப்பந்தில் இன்றுதமிழன் இல்லாத நாடு இல்லையெனும் நிலையில் எம் உறவுகள் கலைந்துசென்றார்கள். 'தமிழன் இல்லா தநாடும் இல்லை, தமிழனுக்கு என்று ஒருநாடும் இல்லை' எனும் நிலையில் உலகப்பந்தில் ஒருபாரம்பரிய வரலாற்றைக் கொண்ட இனம் இன்றுவாழ்ந்து வருகின்றது என்றால் அது தமிழ் இனமாகத் தான் இருக்கும். ஆயினும் தொப்புள் கொடியுறவு அறுந்துவிடாமல் போர்க்காலத்திலும் சரி இன்றும் சரி தூயக மக்களுடன் தொடர்ந்தும் இணைந்திருந்து தம்மாலான உதவிகளை செய்து வருகிறார்கள். கலை கலாச்சார விழுமியங்களை இன்னமும் பாதுகாத்துவருவது தமிழ் இனத்தின் சிறப்பே. போரின் கொடிய அழுத்தத்தால் தமிழ் மக்கள் துவண்டிருக்கும் போதுபுலம் பெயர் தேசத்தில் வாழும் உறவுகளே

தூண்களாக எம்மக்களைத் தாங்கிவருகிறார்கள். ஈழத்தமிழ் இனத்தின் ஒருபாதி சமூகம் இளம் தலைமுறையினர் இன்று பல்வேறு நாடுகளிலும் பல்வேறுதளங்களில் தமது திறமையான செயற்பாடுகள் மூலம் பலஉயர் மட்டங்களிலும் பணிபுரிந்துவருகிறார்கள். பலசாதனைகளைப் படைத்து வருகிறார்கள். இந்தசமூகத்தின் முன்னால் தேசவிடுதலையின் பணியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவேண்டியதும், எமதுவிடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை

அவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பும் எம் முன்னே விரிந்து கிடக்கின்றது. தமிழ் இனத்தின் வரலாறு என்பது இன்று தொடங்கியது அல்ல. ஏறக்குறைய பதின்மூவாயிரம் நூற்றாண்டுகளுக்கு மேலான இனப் பாரம்பரியத்தின் மூத்தகுடிகள் தமிழர்கள். அன்றுதொட்டு தமதுவிடுதலைக்காக போராடிய வீரமறவர்களை நடுகல் வழியாக வணக்கம் செலுத்தி வழிபட்டு வந்தும் அவர்களின் வீர வரலாறுகளை ஆவணமாக்கி அடுத்த சந்ததிக்கு கொடுத்தவையே இன்றுநாம் காணும் மூத்ததமிழ் குடியின் வரலாறு.

இதன் தொடர்ச்சியே எமது விடுதலைப் போராட்டத்தின் வரலாறுகளும் எம்மால் சுரியான வரலாற்றுப் பதிவுகளுடன் அடுத்த இளம் சந்ததியிடம் கையளிக்கப்படவேண்டும்.

ஈழத்தமிழர்களின் தேசவிடுதலைக்கான அர்ப்பணிப்புக்கள் வார்த்தைகளிலோ அல்லது வரிகளிலோ வடித்துவிட முடியாதவை. மயிர்கூச்செறியும் விடுதலைப் போராட்டத்தின் வீரம் ஈழமண்ணில் நிகழ்த்தப்பட்டது. உலகில் எந்தவிடுதலைப் போராட்டத்திலும் இல்லாத வகையில் தம்மைத் தாமே தம்மினத்திற்காக தற்கொடையாக்கிக் கொள்ளும் உயரிய உயிர்கொடையை எம்மண்ணில் நிகழ்தியவர்கள் கரும்புலிகள். தமிழீழதேசியத் தலைவரின் உன்னதத்தை, மாவீரர்களின் தியாகத்தை உலகத் தமிழினமே, இன்று போற்ற வணங்குகின்றது. ஒரு கெரில்லா அமைப்பாகத் தோற்றம் பெற்று தரைப்படை, கடற்படை, வான்படை என இன்னும் பல படைக் கட்டுமானங்களை உருவாக்கி ஒருதேசத்தை உருவாக்கிய தமிழீழவிடுதலைப் புலிகளை இன்றும் உலகம் வியந்துபார்க்கிறது. தமிழர் பாரம்பரிய வரலாற்றில் சேர, சோழ, பாண்டியர் வரிசையில் தலைவர் பிரபாகரனின் பெயரும் இணைத்துக்கொள்ளப்பட்டது. கழுத்தில் நஞ்சுகட்டி களமாடும் புலிகளின் வீரம் கண்டு சிங்களப் படைகள் மிரண்டுபோய் நின்றார்கள். பலநாடுகளின் கால்களில் உதவிக்காகஅலைந்தார்கள். அகிம்சைவழியில் தியாகி திலீபன் இந்திய அரசின் முகத்திரையை கிழித்து எம் போராட்டத்தின் நியாயத்தை உலகறிய வைத்தார். வெடிமருந்தேற்றிய வண்டியில் பகை நிலைகொண்டிருந்த தளத்தினுள் வெடிக்க வைத்து கப்டன் மில்லர் எமது விடுதலையின் தீவிரத்தை உலகறிய வைத்தார்.

பெண்ணடிமை, சாதிய, மதப்பாகுபாடுகள் எம் தேசியத் தலைவர் காலத்தில் மறைந்துபோனது. வீட்டினுள் மறைந்திருந்த பெண்கள் களத்தில் வீரத் தமிழிச்சிகளாக வலம் வந்தார்கள். புதியதோர் சரிதம் படைத்து உலகப் பெண்களுக்கே உதாரணமாக வாழ்ந்தார்கள்.

ஒரு புதியசகாப்தத்தைப் படைத்த எம் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் காலத்தில் வாழ்ந்தோம் என்பதில் இன்று நாம் பெருமை கொள்கிறோம். இவ்வாறானவீரம் செறிந்த வரலாற்றை நாம் நிச்சயம் வரலாற்றில் பொறித்துவைக்க வேண்டும். காலப்பதிவில் எம் விடுதலை வரலாறும் போராளிகளின் அர்ப்பணிப்புக்களும் மாவீரர்களின் தியாகமும் ஆவணங்களாக்கப்பட வேண்டும். தமிழ்ப்புலமைகொண்டவர்கள், அறிஞர்கள், கல்விமான்கள், கவிஞர்கள், போராளிக் கலைஞர்கள், களத்தில் போர்புரிந்தோர், போர்காலத்தில் தோளோடுதோள் நின்ற எமது மக்கள் எனஎல்லோரும் ஒருசேர, இணைந்து எமது ஈழகாவியம் எழுதப்படல் வேண்டும். இவை அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். இது இன்றை எமது நிகழ்காலக் கடமையாகும்.

ஒரு இனத்தை அழிக்கவேண்டுமாயின் முதலில் அவ்வினத்தின் வரலாற்றை அழிக்கவேண்டும் எனும் கருத்தில் உறுதியாக இருக்கும் சிங்கள அரசுகாலம் காலமாகத் தமிழர்களின் வரலாற்றுச் சான்றுகளை அழித்து வருகின்றது. யாழ் நூலகம் முதல் மாவீரர் துயிலும் இல்லங்களை அழித்ததோடு இன்றுதமிழர் தொல்லியல் சான்றுகள் உள்ள நிலப்பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்து அங்கு பௌத்த சான்றுகளைப் போலியாக உருவாக்கும் பணியில் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

அத்துடன் இணையத்தளங்களில் இருக்கும் ஈழவிடுதலைப் போராட்ட ஆவணங்களையும் இணையத்தில் இருந்து நீக்கி வருகின்றது. இவ்வாறாக சிங்கள அரசுதமிழர்களின் வரலாற்று ஆவணங்களை அழிக்க பலமுனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழர்கள் நாம் எமது வரலாற்றைப் பாதுகாக்க எவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இவ்விடயத்தில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டிய நிலையில் உள்ளோம். சர்வதேசமெங்கும் பரந்துவாழும் தமிழர்கள் அமைப்புகள் ரீதியாகவோ அல்லது தனிநபர்களாகவோ, இவ்வாறானஆவணப்படுத்தல் பணிகளை செய்யமுன்வரவேண்டும்.

இதன் ஒரு பகுதியாகவே அவுஸ்ரேலியாவில் வாழ்ந்துவரும் திரு. நிலவன் அவர்களின் உழைப்பால் வெளிவரும் 'விழுதுகளின் பாகத் தொடர்களை மாவீரர்களின் தியாக வரலாற்று பதிவுப் பொத்தகங்களாக உங்கள் கரங்களில் தருவதையிட்டு நிதர்சனம் நிறுவனம் பெருமை கொள்கிறது.

நிதர்சனம் நிறுவனம் எமதுவிடுதலைப் பயணத்தின் கண்ணாடியாக எமதுபோராட்டத்தின் பக்கங்களை எமதுமக்களின்

தேசவிடுதலைக்கான அர்ப்பணிப்புக்களை உலகம் எங்கும் கொண்டு சென்றது. இன்றும் ஈழவிடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுப் பதிவுகளை எதிரியானவன் அழிக்கமுடியாத அளவிற்கு எம் மக்களின் மத்தியிலும், சர்வதேசத்தின் மத்தியிலும், ஏன் ஐ.நா உயர் ஸ்தானிகராலயத்திலும் எமது வரலாறுகள் ஆவணமாக்கப்பட்டு சிங்கள அரசின் இன அழிப்பின் சான்றாக இருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் சிங்களபடைகளால் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையின் சான்றாகப் பல ஆவணங்கள் வெளியாகியிருக்கின்றன. இதன் தொடர்ச்சியே எமதுவிடுதலை வீரர்களின் தியாகத்தை அறிந்துகொள்ள ‘விழுதுகள்’ எனும் மாவீரர் வரலாற்றுத் தொகுப்பு அடுத்த இளம் தலைமுறையினருக்குஅவர்களின் தேடலுக்குபெரும் பங்களிப்புச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை.

போராட்டகாலத்தில் வெளியாகிய களத்தில் எனும் பத்திரிகையில், வெளியாகிய மாவீரர்களின் வரலாறுகளை இத் தொகுப்பில் காணலாம். ‘விழுதுகள்’ பாகம் - 1 இல் 46 போராளிகளின் வரலாறுகள் தொகுக்கப்பட்டிருப்பது பெருமைக்குரிய விடயமே. அதன் தொடர்சியாக ஏனைய மாவீரர்களின் வரலாறுகளும் பதிவுசெய்யப்பட்டு வெளிவரும் என்பதையும் இதில் பதிவு செய்யவிரும்புகிறோம். இப் பாரிய பொறுப்பினை பல நெருக்கடிகள் மத்தியிலும் தனது நேரத்தை இவ் வரலாற்றுப் பதிப்பிற்காக முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றிய தொகுப்பாளர் திரு. நிலவன் அவர்களுக்கு எமதுபாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் ‘விழுதுகள்‘ எனும் மாவீரர் வரலாற்றுத் தொகுப்பினை எமது இளம் சந்ததிக்கும் உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் சமூகத்திற்கும் கொண்டு சேர்ப்பது ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

காலத்தின் தேவைகருதி எமது இன விடுதலைக்காக அனைவரும் கைகோர்த்து நடப்போம். எம்மாலான பங்களிப்பினை எம் தேசத்திற்குவழங்குவோம்!

நன்றி!

‘தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்’

**நிதர்சனம் நிறுவனம்**

27.11.2020

# அணிந்துரை

2009 இன் பின் தமிழ் மக்கள் தமது எண்ணங்கள். சிந்தனைகள் எல்லாவற்றையும் இழந்து கூலிகளின் எடுபிடிகளாவே ஒடுங்கிப் போய் இருக்கவேண்டும் என்றே இனவாத அரசு விரும்புகின்றது. அந்த விருப்பையே சரிப்படுத்தும் வகையில் மக்கள் பிரதிநிதி என வெளிவேசம் போடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது. இதற்குப் பெரும் உதாரணம் வடக்கை நோக்கிய கலாச்சாரச் சீரழிவு, கல்வித்தரவீழ்ச்சி என பலவற்றைக் குறிப்பிடலாம். காணாமலாக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்கள் 1300 நாட்களுக்கு மேலாக வடக்கு கிழக்கில் போராடிக் கொண்டேவருகின்றனர். அவர்களின் போராட்டத்திற்கு எந்தத் தரப்பும் இதுவரை செவிசாய்க்கவில்லை. அந்த உறவுகளின் கண்ணீரில் அரசியல் நடாத்தி குளிர்காய்ந்து வருகின்றனர். தமிழ் அரசியல் கைதிகள் குறித்து எந்தத் தமிழ்ப் பிரதிநிதிகளும் அக்கறைக் கொள்ளவில்லை. கொள்ளைக்காரனும் கடத்தல்காரனும் கொலையாளியும் எனச் சிங்கள சமூகத்தினர் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பிலும் நீதிமன்றத்தினால் நிரபராதியாகவும் விடுதலை செய்யப்படும்போது எந்தக் குற்றமுமற்று காவலில் இருக்கும் பலர் இன்னும் கைதிகள்தான் .

கணவனற்ற நிலையில், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் அவலங்களைத் தீர்க்கவேண்டிய நாட்டின் நிர்வாகம் இரவுவேளைகளில் குறித்தபெண்களின் வீடுகளுக்கு செல்வதும், தொலைபேசியில் மணிக்கணக்கில் உறவு கொண்டாடுவதுமாகிய நிலையில் வன்னியில் தையல் தொழிற்சாலைகளைப் பெண்களுக்கென்றே உருவாக்கிஅவர்களின் வாழ்வியலை மறைமுகமாகச் சிதைக்கும் செயற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றன.

சிறுவர்கள், மாணவர்கள் இளைஞர்களைத் தேடிக் கல்வி வளாகங்கள் பாடசாலைகளுக்கு அண்மையில் போதை, கஞ்சா போன்ற

விற்பனையில் ஈடுபட்டு வருகின்றமை வடக்கின் கல்வித் தரத்தைப் பாதிப்பது எவருக்கும் தெரியாத விடயமல்ல. புலம் பெயர் மக்களின் கடின உழைப்பின் இரத்தங்கள் ஈழத்தவர்கள் பலரால் புரிதலின்றிய நிலையில் வீண் விரயம் செய்யப்படுகின்றது.

இளம் சமூகத்தினர் அரசதொழில் வாய்ப்பையும், இலவசமாகக் கிடைக்கும் புலம் பெயர் பணத்தையும் எதிர்பார்த்துக் காத்திருக்க,யுவதிகள் வெளிநாட்டுத் திருமணங்களுக்காகக் காத்திருக்கின்றனரே தவிர தமது சுயத்துடன் சொந்தக் காலில் நிற்கவும் தம்மையும் தமது தேசத்தையும் மண்ணையும் அடையாளத்தையும் பாதுகாக்கும் எண்ணங்களை, சிந்தனைகளை மறந்தும், மறக்கடிக்கப்பட்டும் வருகின்றன.

முள்ளிவாய்க்காலில் எமது தமிழ் இனத்தை அழித்த இராஜபக்ச அரசாங்கம் நம் தேசத் தலைவர்களுக்கு நினைவு கூருவதை தடைசெய்கின்றது. சங்க காலத்து நடுகல் வழிபாடும் கிறிஸ்தவ மக்களின் சவக்காலை திருநாள் வழிபாட்டிற்கும் மாவீரர் தினவழிபாட்டிற்கும் என்ன வித்தியாசம் உண்டு? இவற்றை அறிவுபூர்வமாகவும் புத்திபூர்வமாகவும் சிந்திக்கத் தெரியாதவர்களாகவே நாடும் நலனும் உள்ளது.

இந்த வாரம் தமிழ்த் தேசியமக்கள் முன்னணியினர் கோப்பாய் துயிலும் இல்லம் முன் துப்பரவுப் பணியில் ஈடுபட்டபோது நினைவு கூறலைத் தடுக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனுக்கும் பொலிசாருக்கும் இடையில் முரண்பாடு இடம்பெற்றது. 'எங்கள் மக்களைக் கொலைசெய்தது நீங்கள் உங்களிடம் என்ன அனுமதி நாம் எடுக்கவேண்டும்' என்றார். இதேவேளை அதே கட்சியைச் சேர்ந்த மகளிர் அணித்தலைவி சுதாகரன் வாசுகி மீதும் தியாகி திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியமைக்காக விசாரணை இடம்பெற்றது. இவ்வாறு ஆங்காங்கே மக்களிடம் உள்ள தமிழ்த் தேசிய எண்ணங்களையும் பற்றுக்களையும் அழிக்கும் நடவடிக்கையில் இனவாத அரசு தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது.

வெளியில் காட்டமுடியாத தமிழ்த் தேசிய எண்ணங்களுடன் பலர் தம் மனசுக்குள் விடுதலை வேட்கையைப் புதைத்து வைத்துள்ளனர். ஏனெனில் அவர்களுக்காகவோ, அல்லது அவர்களின் குடும்பங்களுக்காகவோ நம்பிக் களத்தில் செயற்படயாருமில்லை. தலைமையின்றித் தத்தளிக்கும் தமிழர்களுக்கு சரியான வழிகாட்டலைக் கொடுக்க, பொறுப்புக் கூற இப்போ ஒரு உயிரும்

இல்லை. எல்லாமே சுயநலப் பிடியில் இருக்கும்போது எந்த மக்களைப் பற்றி அவர்கள் எண்ணிக் கொள்வார்கள்?

இலஞ்சமும் ஊழலும் அநீதியும் இப்போஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றமும் சிங்கள அதிகாரிகள் சிங்களத்திற்கான தொழில்வாய்ப்புக்கள் என 99% பக்கச்சார்பு நிலையில் நகர்கின்றது. இதற்குத்தான் தமிழ் மக்கள் சாதாரண அப்பாவி மக்களுக்குப் பணத்தைக் கொடுத்து, பொட்டலத்தைக் கொடுத்து ஏமாற்றி அரசியல் ஆசனங்களைப் பிடித்து இனவாத அரசுக்கே மீண்டும் சேவகம் செய்ய பயணிக்கின்றனர்.

2009 இன் பின்னைய நிலைமையை உணர்வோமாயின் தாயகத்தில் உதிர்க்கப்பட்டுள்ள இத்தனை விதைகளும் இந்த மக்களுக்காகவா தங்கள் சுய எண்ணங்களையும் கற்பனைகளையும் கனவுகளையும் தொலைத்துச் சுதந்திரவேட்கையில் பயணித்தனர்?

300 ற்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்த விழுதுகள் தொகுப்பில் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தின் தியாகிகள் மாவீரர்கள் என்றுபெரும் வரலாற்றை பதிவுசெய்து இருப்பதைப் பார்க்கமுடிகின்றது. இன்று பலருக்கு மாலதி என்றால் யார்? அங்கயற்கண்ணி என்றால் யார்? கேணல் கிட்டு என்றால் யார்? விடுதலைப் போரின் முதலாவது தியாகி யார் என்றெல்லாம் கேட்டால் நிச்சயம் புதிய சந்ததிக்குத் தெரியவாய்ப்பில்லை. எம் அடையாளங்களை அழிப்பவர்களும் அழிக்கத் துணைபுரிபவர்களும் இந்த வரலாறுகளைச் சமூகத்திற்கு கடத்தப் போவதில்லை. அந்தவகையில் இந்தஆவணங்கள் மிகமுக்கியமான தொகுப்பு என்பதையே உணர்த்துகின்றது.

'மாவீரர்களை நினைவு கூர்வதாயின் வெளிநாடுகளுக்கு செல்லுங்கள்' எனக் கடந்த தினங்கள் இனவாதிகளின் கூச்சலும் பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருந்தது. வவுனியா தோணிக்கல் என்னும் இடத்தில் தனது கடையின் முன் சிவப்பு மஞ்சள் கொடியைப் பறக்கவிட்ட இளைஞனுக்கு விசாரணைக்காக வவுனியா பொலிஸார் சென்றபோது அந்த இளைஞன் அது தன் உரிமை என்றும் அதனைத் தடுக்கமுடியாது என்றும் மறுத்துள்ளான். இன்று 25.11.2020 யாழ் பல்கலைக்கழக வளாக வீதி, திருநெல்வேலி எனப் பல இடங்களில் இராணுவமும் பொலிஸாரும் கொட்டும் மழையில் குவிக்கப்பட்டுள்ளனர். தமிழ்த் தேசியமக்கள் முன்னணியினர் தவிசாளர் நிரோஷ் மற்றும் சில தமிழ்த் தேசியவாதிகள் நீதிமன்ற விசாரணைக்காக இன்று நீதிமன்று அழைக்கப்பட்டுள்ளனர். மாவீரர் தின நினைவு கூறலைத் தடைசெய்யும் உத்தரவு மனுவைப் பெற்றுக்

கொள்ளும் வகையில் முல்லைத்தீவு யாழ்ப்பாண நீதிமன்றங்களுக்கு அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு நெருக்கடியில் தமிழ் மக்கள் தமது உரிமைக்காக, உறவுகளுக்காக ஒரு சில நிமிடங்களைச் செலவு செய்ய முடியாதவர்களாக உள்ளனர். ஆயினும் இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களாகவும் சமுதாயம் தேசிய விடுதலையில் தொடர்ந்தும் பயணிக்கும் சிந்தனையாளர்களாகவும் நாம் இருப்போமானால் எமது அடையாளங்கள், எமது உரிமைகள் எதிர்காலச் சந்ததிகளால் பாதுகாக்கப்படும். எம்மால் நாமாகவாழமுடியும் என்பதை உணர்த்துவதே இந்த நூலின் ஒவ்வொரு தியாகங்களுக்கும் அர்த்தமுள்ளதாக இருக்கும் என நினைக்கின்றேன்.

மானுடம் சுடரும் விடுதலை நோக்கி.....

**யாழவள்**

*27.11.2020*

## உங்களுடன்...

*"எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒருகாலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.''*

**- தமிழீழத் தேசியத் தலைவர்**

**த**மிழர் நாமென்ற தலைநிமிர்வுடன் தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தமிழீழ மக்களின் அடையாளமாகவும் தமிழர்களைத் தனிப் பெரும் சக்தியாக உலகிற்கு அடையாளப்படுத்திய அமைப்பாகவும் விளங்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தாங்கள் கொண்ட கொள்கையில் இறுக்கமான பற்றுறுதி கொண்டவர்களாய் தமிழீழ தேசத்தையும் அதன் விடுதலையையும் அதிகம் நேசித்தார்கள். தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்குச் செயல் உருவம் கொடுத்தவர்கள், தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மையைப் பிரயோகிக்கவும் களமாடி, தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரவேள்விக்கு தம் உயிர்களை வித்தாகி விருட்சமாய் மிளிர்பவர்கள் மாவீரர்கள்.

தமிழினம் வரலாறு காணாத வகையில் வீரத்தைநிலை நிறுத்தித் தேசியத் தலைவர் மேதகுவே. பிரபாகரனின் வழிகாட்டலில் புதிய புறநானூற்றைப் படைத்துவர்கள் எங்கள் மாவீரர்கள். இவர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள், சுதந்திரச் சிற்பிகள், எமதுமண்ணில் மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமக்கு ஒருநாடு வேண்டும் - எமதுமக்களுக்கு விடுதலைவேண்டும் - எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும் - என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே, மாவீரர்கள் களத்தில் வீழ்ந்தார்கள் எமதுமாவீரர்கள். ஒவ்வொருவரது சாவும் எமதுநாட்டின் விடுதலையை முரசறையும் வீரச்சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது. தலைவரின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுத்தவர்கள் .

அடக்குமுறையாளர்களுக்கு எதிராக எழுந்து நிற்பவர் மாத்திரமல்ல, தமிழர்கள் மதிப்போடும் மாண்போடும்வாழ, ஒருதேசியத்தைக் கட்டியெழுப்பிட சிறந்த தலைவரின் வழிகாட்டலுடன் மக்களின் பேராதரவோடு தமிழர் ஒவ்வொருவரும் ,தமிழர் மொழி, தமிழர் தேசம், தமிழர் தேசியம், தமிழர் பொருண்மியம், தமிழர் தொன்மம் மற்றும் தமிழர் பண்பாடு என்றவாறு மண் சார்ந்து தமிழின விடுதலைக் கோட்பாட்டை நோக்கி நகர்ந்தும் அதேவேளை இனவுணர்வின்பாற்பட்டுச் சிந்திக்கக் கூடிய ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கான பணிகளில் மனிதநேய பணிகளை மிகச் சிறப்பான வடிவமைத்து செயற்படுத்திய பெருமைக்குரியவர்.

தமிழீழவிடுதலைப் போராட்ட வரலாறு தனிநபர்களோடும் அவர்களின் இணையத்தளங்கள், முகநூல் பக்கங்களோடும் முடங்கிபோய் விடக்கூடாது. திட்டமிட்ட வகையில் வரலாறுகள் ஒளிப்படங்கள் காணொளிகள் மறைக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள இளம் தலைமுறையினர் கடந்தகால வரலாறுகள் தெரியாமல் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் இந்த வரலாறுகளைத் தேடி அறிந்து கொள்ளவேண்டும். நாம் வாழும் தேசத்தில் மண்ணையும் மக்களையும் நேசித்து வாழ்ந்து வரலாறு படைத்து விழிமூடித் துயில்கின்ற மாவீரர்களின் வரலாற்றின் சிறுதுளி விழுதுகளின் தொகுப்பாய் பாகம் ஒன்று மிளிர்கிறது .

மாவீரர்கள் நமது தமிழீழ தேசத்தின் வீரப்புதல்வர்கள். எமது இனத்தின் சுகந்திரத்திற்காக, சுய கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்த தேசமகன்கள், எமது தேசத்தினுள் நிமிர்ந்தெழுந்த தேசிய அடையாளத்தினையும் ஆற்றல்களினையும் அவற்றினைக் காத்து நின்ற மக்கள் படையினையும் சிதைத்து விட்டதாகச் சிங்கள ஆட்சியாளர்கள் இறுமாப்புடன் செயற்படுகின்றார்கள் .

கழுத்தில் நஞ்சணிந்து கைகளில் கருவி ஏந்தி உடலில் வெடிசுமந்து கொண்ட கொள்கையில் குறியாய் நின்று தன்னினத்தின் விடுதலைக்காய் இன்னுயிரை ஈந்தமாவீரர் தியாகங்கள் வீண்போகப் போவதில்லை. தொடர்ந்துசெல்லும் எமது விடுதலைப்பயணத்திற்கு மாவீரர்களது தியாகங்கள் உந்துசக்திகளாக அமையும் என்ற திண்ணமத்துடன் மாவீரர் கனவு நனவாகும். அந்த நிதர்சனத்திற்காக எமது மாவீரர்களின் தியாக வரலாறுகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேசவிடுதலையின் குரலாக இன விடுதலைப் போர்க்களத்தில் தடைகள் பல கடந்து

சரித்திரம் படைத்த பல்லாயிரம் மாவீரர்களின் அர்ப்பணிப்பால் கட்டியெழுப்பப் பெற்ற எமது தேசவிடுதலைப் போராட்டம் நீதியானது என்ற உண்மையைச் சர்வதேச மன்றில் கோடிட்டுக் காட்டிட விடுதலையின் தியாகங்கள் நிறைந்த விழுதுகளாய் 'களத்தில் இதழில்' வெளியாகிய 'விழுதுகள்', 'பேராராளிகளின் குருதிச்சுவடுகள்', 'சுதந்திரத்தைத்தேடி' ஆகிய பகுதிகளில் பதிவாகிய மாவீரர்களின் பதிவுகளைத் தொகுத்து உங்கள் கரங்களில் தருவதில் மனநிறைவு அடைகின்றேன்.

தமிழீழத் தேசத்திற்கு ஒரு நீண்ட வரலாறு கொண்ட போராட்ட வரலாற்றில் தமிழர்கள் நாம் எமதுவரலாற்றினையும் சாதனைகளையும் பதிவுசெய்து ஆவணப்படுத்தாமை எமக்குள்ள மிகப் பெரிய குறைபாடாகும். விடுதலைப் போராட்டத்தின் எழுச்சி வளர்ச்சி அதன் கட்டமைப்புக்களை இல்லாது அழிப்பதில் சிங்களப் பேரினவாதம் செயற்பட்டு வருகிறது. இத்தகைய செயற்பாடுகளுக்குத் துணைபோகும் புலம்பெயர் உறவுகளும் அவர்கள் சார்ந்த அமைப்புகளிலும் தாயகவிடுதலைத் தீயில் வெண்சமர் ஆடிய உறவுகளை நினைத்துப் பார்க்கவேண்டும் அவர்கள் சிங்களப் பேரினவாதச் சக்திகளுக்கு கைக் கூலியாக செயற்படுவதைத் தவிர்த்து ஆரோக்கியமான மாற்றத்தை நிகழ்த்தவேண்டும். அதுவே தேசவிடுதலைக்கு சரியான வழி அமைக்கும்.

யுத்தம் எம்மீதும் எமதுமக்கள் மீதும் திணிக்கப்பட்டது. சிங்களப் பேரினவாதம் யுத்தவெறி கொண்டு தமிழ்மக்களை நசுக்கிவருகிறது. மாவீரர் துயிலும் இல்லங்களையும் சிங்களப் பேரினவாதம் சிதைத்து அழித்துள்ளமை மனித நாகரீகத்துக்கும், மனிதநேயத்திற்கும் முரணானது. மாவீரர் துயிலும் இல்லங்களை அழித்தாலும் தமிழர் நெஞ்சங்களில் இருந்து அதனை என்றுமே அழித்து விடமுடியாது. இதனை உலகம் ஒருநாள் புரிந்து கொள்ளவேண்டும் அதற்குப் போர்காலச் சாட்சியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழீழத்தின் மண்ணோடு மண்ணாக, காற்றோடு காற்றாக, தமிழ் இனத்தின் உணர்வுடன், உயிரத் துடிப்புடன் ஒன்றாகக் கலந்தவர்கள். இவர்களது தியாகமும் வீரமும் தமிழ் நெஞ்சங்களில் என்றும் நிறைந்துநிற்கும் உங்கள் கரங்களில்.... மாவீரர் சுவடுகள் 'விழுதுகள்' பாகம் ஒன்றின் விழுதாய் விரிகிறது

தியாகங்கள்- ஈகங்கள் - சாதனைகள் - வெற்றிகள் எனப் பல தலைமுறைகளைக் கடந்து எமது வரலாற்று நாயகர்கள் வாழ்ந்த காலத்தை விழுதின் விடியல்கள் சொல்லிக் கொண்டே இருக்கும். எமது மாவீரத் தெய்வங்களின் தியாகங்கள் என்றும் வீணாகிப் போய்விடாது

என்ற நம்பிக்கையினை விடுதலையின் விழுதாய்க் கொள்ளவேண்டும். விடுதலைக்கான வடிவங்களை மாற்றிட விதைத்த உயிர் விதைகள் உறங்காது காத்திருக்கும் மண்பிளந்து முளைத்திட விடுதலைக்காக ஒன்றுபட்ட மக்கள்திரளுக்கு மாபெரும் சக்தி உண்டு. உலகின் பெருமை மிக்க இனமாக நாம் மீண்டும் எழுவோம்.

தமிழீழம் பிறக்கும்! நம் மாவீரர்களின் கனவு பலிக்கும்!

தொடர்ந்து 'விழுதுகள்' பாகம் 02 இல் உங்களைச் சந்திக்கின்றேன்.

**"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"**

நிலவன்

*25.11.2020*

# பொருளடக்கம்


1. பதிப்புரை V

2. முன்னீடு VII

3. அணிந்துரை IX

4. உங்களுடன் XV

5. அகவணக்கம் 1

6. தேசியக் கொடிப்பாடல் 2

7. ஈழ நிலத்தில் அமையப் பெற்ற
மாவீரர் துயிலுமில்லங்கள் 3

8. இடப்பெயர்வு காரணமாக
தற்காலிக மாவீரர் நினைவுத்தடங்கள் 4

9. மாவீரர் பாடல் 5

10. தியாகி பொன். சிவகுமாரன் 7

11. லெப். சங்கர் 10

12 கப்டன் மில்லர் 14

13. லெப்.கேணல் திலீபன் 16

14. 2 ஆம் லெப். மாலதி 19

15. தியாக தீபம் அன்னை பூபதி 22

16. மேஜர் காந்தரூபன் 25

17. கப்டன் வினோத் 28

18. கப்டன் கொலின் 30

19. கேணல் கிட்டு 32

20. கப்டன் அங்கயற்கண்ணி 36

21. மேஜர் யாழினி 39

22. கப்டன் வாணன் 43

# பொருளடக்கம்

*தொடர்ச்சி...*


23. மேஜர் முரளி 50

24. 2 ஆம் லெப்டினனன்ட் சுரேந்தினி 54

25. கப்டன் அஜித்தா 57

26. லெப். கேணல் வேணு 63

27. லெப். மாதவன் 68

28. மேஜர் டேவிட் - மேஜர் சசி (மாமா) 73

29. கப்டன் மாஸ்ரர் 80

30. கப்டன் யேசுதாஸ் - லெப். நந்தன் 85

31. வீரவேங்கை கீதா 91

32. மேஜர் வீமன் 97

33. மேஜர் அழகன் 101

34. மேஜர் தாரணி 106

35. வீரவேங்கை கல்கத் - கிரிசாந்த் 111

36. கப்டன் மதியழகன் 116

37. கப்டன் அன்பரசன் (அக்பர்) 121

38. லெப். சோமேஸ் 126

39. வீரவேங்கை ஜஸ்மின் 132

40. மேஜர் அகத்தியர் 136

41. வீரவேங்கை கெங்கா 140

42. லெப். அன்பழகன் 145

43. லெப். திலக் 149

44. மேஜர் அபயன் 154

# பொருளடக்கம்

*தொடர்ச்சி...*


| | |
|---|---|
| 45. லெப். நித்தி / புகழேந்தி | 161 |
| 46. மேஜர் ஜொனி | 167 |
| 47. கப்டன் சிறீமதி | 173 |
| 48. கப்டன் குவேணி | 180 |
| 49. 2 ஆம் லெப். ரூபி | 186 |
| 50. லெப். கேணல் சரா | 192 |
| 51. லெப். மகிழினி | 198 |
| 52. கப்டன் அக்கினோ | 203 |
| 53. கப்டன் ஈழமாறன் / தினேஸ் | 209 |
| 54. கப்டன் ரஞ்சன் [லாலா] | 213 |
| 55. மேஜர் அல்பேட் | 220 |
| 56. மேஜர் கனீபா | 225 |
| 57. லெப். கேணல் சுபன் | 231 |
| 58. லெப். கேணல் ஞானி | 237 |
| 59. லெப். கேணல் பரிபாலினி | 250 |
| 60. லெப்டினன்ட் சீலன் | 259 |
| 61. லெப். கேணல் தட்சாயினி | 247 |
| 62. லெப்.கேணல் அகிலா | 263 |
| 63. லெப். கேணல் மதனா | 266 |
| 64. லெப்டினன்ட் கேணல் ரத்தி | 269 |
| 65. லெப்டினன்ட் கேணல் நவம் | 272 |
| 66. உறுதிமொழி | 272 |

# அகவணக்கம் !



அகவணக்கம் தொடங்கும்போது,
தமிழீழ விடுதலைப்போரிலே வீரச்சாவடைந்த
மாவீரர்களையும் சிறிலங்கா,
இந்தியப்படைகளாலும் இரண்டகராலும்
கொல்லப்பட்ட மக்களையும்
நாட்டுப்பற்றாளர்களையும் நினைவுகூர்ந்து
அகவணக்கம் செலுத்துவோமாக...
எனக்கூறி அகவணக்கம் தொடங்க வேண்டும்.

நிறைவுபெறும்போது
நிறைவுசெய்துகொள்வோம்
எனக்கூறி அகவணக்கம் நிறைவுபெறும்.

# தேசியக் கொடிப்பாடல்

**தேசியக் கொடிப் பாடல்**
**ஏறுதுபார் கொடி ஏறுது பார்**
**ஏறுதுபார் கொடி ஏறுது பார் - இங்கு**
**ஏறுதுபார் கொடி ஏறுது பார் - தமிழ்**

**ஈழத்தின் வேதனை தீர்த்தகொடி - எட்டுத்**
**திக்கிலும் மானத்தைச் சேர்த்தகொடி**
**காலத்தை வென்றுமேநின்ற கொடி - புலி**
**காட்டிய பாதையில் சென்றகொடி**
**(ஏறுதுபார்)**

**செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே**
**சீறிடும் கொடியிது - தமிழ்**
**மக்களைக் காத்த நம்மான மாவீரரை**
**வாழ்த்திடும் கொடியிது - புலி**
**வீரத்தின் கொடியிது - மா**
**வீரனின் கொடியிது**
**(ஏறுதுபார்)**

**எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்**
**ஏறிய கொடியிது - பெரும்**
**சத்திய வேள்வியில் செந்தமிழ் மீதினில்**
**சாற்றிய கொடியிது - தமிழ்**
**ஈழத்தின் கொடியிது - புலி**
**ஏந்திய கொடியிது**
**(ஏறுதுபார்)**

**சாதிகள் சண்டைகள் சாய்த்து விழுத்திய**
**சாதனைக் கொடியிது - சங்கு**
**ஊதி முழங்கிட ஊர்மனை யாவிலும்**
**உலவிய கொடியிது - சம**
**தர்மத்தின் கொடியிது - எங்கள்**
**தாயவள் கொடியிது**
**(ஏறுதுபார்)**

**ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்**
**ஆக்கியகொடியிது - பிர**
**பாகரன் என்றிடும் காவிய நாயகன்**
**போற்றிடும் கொடியிது - தமிழ்த்**
**தேசத்தின் கொடியிது - எங்கள்**
**தேசியக் கொடியிது**
**(ஏறுதுபார்)**

# ஈழ நிலத்தில் அமையப் பெற்ற மாவீரர் துயிலுமில்லங்கள்

1. திருகோணமலை ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம்.
2. திருகோணமலை வெளியகுளம் மாவீரர் துயிலுமில்லம்.
3. திருகோணமலை தியாகவனம் மாவீரர்துயிலுமில்லம்.
4. திருகோணமலை உப்பாறு மாவீரர் துயிலுமில்லம்.
5. மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலுமில்லம்.
6. மட்டக்களப்பு தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம்.
7. மட்டக்களப்பு வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லம்.
8. அம்பாறை உடும்பன்குளம் மாவீரர் துயிலுமில்லம்.
9. முல்லைத்தீவில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம்.
10. விசுவமடு மாவீரர் துயிலுமில்லம்.
11. துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம்.
12. வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம்.
13. அளம்பில் மாவீரர் துயிலுமில்லம்.
14. மணலாறு புனிதபூமி மாவீரர் துயிலுமில்லம்.
15. மணலாறு உதயபீடம் மாவீரர் துயிலுமில்லம்.
16. களிக்காடு மாவீரர் துயிலுமில்லம்.
17. கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம்.
18. முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம்.
19. வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம்.
20. ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம்.
21. பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம்.
22. யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்.
23. தென்மராட்சி கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம்.
24. வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம்.
25. தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லம்.
26 வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லம்.
27 மன்னார் முள்ளிக்குளம் மாவீரர் கல்லறைகள்.

## 2009 இடப்பெயர்வு காரணமாக தற்காலிக மாவீரர் நினைவுத்தடங்கள்

*01. தர்மபுரம் மாவீரர் நினைவுத்தடங்கள்*
*02. சுகந்திரபுரம் மாவீரர் நினைவுத்தடங்கள்*
*03 இரணைப்பாலை மாவீரர் நினைவுத்தடங்கள்*
*04. பச்சைப்புல்வெளி மாவீரர் நினைவுத்தடங்கள்*
*05. முள்ளிவாய்க்கால் மேற்கு மாவீரர் நினைவுத்தடங்கள்*
*06. முள்ளிவாய்க்கால் கிழக்கு மாவீரர் நினைவுத்தடங்கள்*

# மாவீரர் பாடல்

மாவீரர் நாளின் போது அந்தநாளுக்கென்று பாடப்பட்ட மாவீரர் பாடல் துயிலும் இல்லங்களில் ஒலிக்கப்படும். உருவாக்கப்பட்ட 1991ஆம் ஆண்டு கோப்பாய் துயிலும் இல்லத்தில் ஒலித்தது. எழுதியவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

*மொழியாகி எங்கள் மூச்சாகிநாளை முடிசூடும் தமிழ்மீதுஉறுதி!*
*வழிகாட்டி எம்மை உருவாக்கும்தலைவன் வரலாறுமீதிலும் உறுதி!*
*விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி!*
*இழிவாக வாழோம்! தமிழீழப்போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!*

*தாயகக்கனவுடன் சாவினைதழுவிய சந்தனப்பேழைகளே!*
*தாயகக்கனவுடன் சாவினைதழுவிய சந்தனப்பேழைகளே!*

*இங்கு கூவிடும் எங்களின் குரல்மொழிகேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!*
*இங்கு கூவிடும் எங்களின் குரல்மொழிகேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!*

*தாயகக் கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!*

*உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!*
*உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!*
*அன்றுசெங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!*
*அன்றுசெங்களம் மீதிலே உங்களோடாடியதே தாழர்கள் வந்துள்ளோம்!*

*எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!*
*எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியேமறுபடி உறங்குங்கள்!*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியேமறுபடி உறங்குங்கள்!*

*தாயகக் கனவுடன் சாவினை னதழுவிய சந்தனப்பேழைகளே*

*வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!*
*வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!*
*உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!*
*உங்கள் கல்லறை மீதிலும் கைகளைவைத்தொருசத்தியம் செய்கின்றோம்!*
*வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!*
*சாவரும் போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!*
*சாவரும் போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!*
*எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!*
*எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!*

*எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!*
*எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியேமறுபடி உறங்குங்கள்!*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியேமறுபடி உறங்குங்கள்!*
*தாயகக் கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!*
*உயிர்விடும் வேளையில் உங்களின்வாயதுஉரைத்தது தமிழீழம்!*
*உயிர்விடும் வேளையில் உங்களின்வாயதுஉரைத்தது தமிழீழம்!*
*அதைநிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!*
*அதைநிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!*

*உயிர்விடும் வேளையில் உங்களின் வாயதுஉரைத்தது தமிழீழம்!*
*தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர சென்றிடுவோம்!*
*தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர சென்றிடுவோம்!*
*எந்த நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்!*
*எந்த நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்!*

*எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!*
*எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!*

*தாயகக் கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!*
*இங்கு கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!*
*தாயகக் கனவுடன் சாவினை தழுவிய சந்தனப் பேழைகளே!*

### தமிழீழத்தின் முதல் தற்கொடையாளர்

# தியாகி பொன். சிவகுமாரன்



உரும்பிராயில் 1950 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26 ஆம் நாள் பொன்னுத்துரை, அன்னலட்சுமி ஆகியோருக்கு மூன்றாவது மகனாக சிவகுமாரன் பிறந்தான். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது உயர்கல்வி கற்றான். 1960 ஆம் ஆண்டில் தனது பத்து வயதில் 'தினப்புழுகு' என்ற பெயரில் ஒரு கையெழுத்துப் பத்திரிகையை நடாத்திவந்தான். அதில் இவன் -பி.எஸ்.கே- என்ற பெயரில் எழுதினான்.

1970 இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு ஆட்சியில் சிங்கள இனவாதத்தால் தமிழ் மக்களுக்கெதிரான கொடுமைகளும் படுகொலைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டு, தமிழ் மக்களின் சுதந்திர இருப்பு சிதைக்கப்பட்டது.

கல்வித் தரப்படுத்தலை அமுல்படுத்திய சிறிமா அரசின் தமிழ் மாணவர்களின் கல்வி மீது கத்தி வைக்கும் ஆரம்பக்கட்டம் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளில், சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் தரப்படுத்தல் அமுல்படுத்தப்பட்டதோடு நிகழ்ந்தது. இத்தரப்படுத்தல் திட்டத்துக்கு எதிராகத் தொடங்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிவகுமாரன் செயற்பட்டான்.

1970களின் தொடக்கத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அமைச்சரவையில்

இடம்பெற்றிருந்த சோமவீர சந்திரசிறீயின் வாகனத்துக்கு குண்டு வைத்தவர் இச்சம்பவத்திலிருந்து சிங்கள அமைச்சர் உயிர்தப்பிய போதும், அச்சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டில் கைதான சிவகுமாரன் சிறையில் மோசமான சித்திர வதைகளுக்குட்படுத்தப்பட்டான்.

1971 ஆம் ஆண்டு தொடக்கத்தில் யாழ்ப்பாண நகரத் தந்தையாகவும் அப்போது சிறிமா கட்சியின் அமைப்பாளராகவும் இருந்த அல்பிரட் துரையப்பாவுக்கு குறிவைத்து அவரது வாகனத்தில் குண்டு பொருத்தினான். குண்டுவெடித்து சிதறி வாகனத்தின் மேல்பக்கம் எல்லாம் பெருந்தொலைவுக்கு சென்று விழுந்தது. ஆனால் துரையப்பா வருவதற்கு முன்னரே குண்டு வெடித்துச் சிதறியது. இந்தத் தாக்குதலே ஈழ விடுதலைப் போராட்டத்தில் முதல் தாக்குதல் என்று கருதப்படுகிறது. வாகனத்துக்கு குண்டு வைத்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டு காலம் சிறையிலே கழித்தான்.

சிறையிலிருந்து வெளியே வந்த பின்னர் மீண்டும் அவன் சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறான். தனித் தாக்குதல் முயற்சி என்பது மட்டும் அல்ல. குறிக்கோளை வைத்துக் கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபடுத்திக்கொண்டான். இளைஞர் பேரவை அப்போது நடத்திய உண்ணாவிரதம் போன்றவற்றில் பங்கேற்று மதியுரைகளை வழங்கிச் செல்வான்.

1973 இல் மாணவர் பேரவையின் பொறுப்பாளராக இருந்த சத்தியசீலன் போன்றவர்கள் கைதான காலகட்டம். அதற்கு முதலே சிவகுமாரன் கைதாகி, அனுராதபுரம் சிறையிலே அடைக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குகளும் நடைபெற்றன.

சிறிமா அரசானது, 1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட 4வது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைக் குழப்பும் கீழ்த்தரமான நோக்கில் பல இடையூறுகளை விளைவித்தது. ஆனாலும் மாநாட்டு ஒழுங்கமைப்பாளர்களின் உறுதியான செயற்பாட்டால் மாநாடு பெரும் மக்கள் எழுச்சியுடன் நடந்தேறியது. இவ் வெற்றியின் பின்னணியில் சிவகுமாரன் மிகவும் உத்வேகத்துடன் செயற்பட்டான்.

யாழ். தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளுக்குப் பின்னர், அப்படுகொலைக்கு உத்தரவிட்ட சந்திரசேகரவைக் கொல்ல வேண்டும் என்ற முடிவை எடுத்தவன் சிவகுமாரன். மாநாடு நடைபெற்ற 9 நாளும் தன்னை தொண்டராகப் பதிவு செய்து கொண்டு மாநாடு வெற்றிபெற வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்தவன்.

மாநாட்டுக்கு குழப்பம் விளைவித்த சந்திரசேகராவை அங்கேயே கொல்ல வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறியவன். அதனாலேயே சிவகுமாரன் தேடப்பட்டான். சந்திரசேகராவைக் கொல்வதற்காக சிவகுமாரன் மேற்கொண்ட முயற்சி சூழ்நிலைகளால் தோல்வியடைந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்ட ஆரம்ப காலகட்ட களச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை உரும்பிராய் நடராஜா என்பவர் விடுதலைக்குப் போராடிய இளைஞர்களைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தவர். அவர்மீது தாக்குதல் நடத்துவதற்கு சிவகுமாரன் தலைமை ஏற்றான்.

சிறிலங்கா காவல்துறையினரால் கோப்பாயில் சுற்றிவளைத்த போது அகப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக சுற்றி வளைக்கப்பட்ட தருணத்தில் சயனைட் அருந்தி 05.06.1974 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் போராட்டத்தின் முதலாவது தற்கொலை போராளியாக தனது உயிரை கொடுத்து ஆயுத போராட்டத்திற்கு ஆரம்ப கர்த்தாவாகவிருந்த சிவகுமாரனின் பின்னர் தியாகி பொன். சிவகுமாரனின் எனும் நிலை வழங்கப்பட்டது.

முதற் சிவகுமாரனின் இறப்பு இளைஞர்களிடத்திலே ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. சுடுகாட்டுக்குப் பெண்கள் முதன் முதலில் வந்த நிகழ்வாக அது அமைந்தது.

மாணவர் சமூகம் பொங்குதமிழாய் உலகப் பரப்பெங்கும் பொங்கியெழுந்து தமிழீழத் தேசியத் தலைமையை வலுச்சேர்த்து நிற்கின்ற காலகட்டமது. கடல்கடந்து வாழுகின்ற தமிழீழ மாணவர் சமூகத்தின் ஆதரவு தாயக நிர்மாணிப்பிற்கு இன்று பெருமளவு தேவையாக உள்ளது. காலம் இட்ட கட்டளையை நிறைவேற்ற வரலாறாகிப் போன மாணவப் போராளியின் நினைவுமீட்புநாளில் தாயகத்திற்கு வளம் சேர்க்க இளையதலைமுறையினர் அனைவரும் உறுதியெடுத்து, புலத்திலிருந்து நிலத்திற்கு வந்து செயற்பட வேண்டிய தருணமிது

எமது தேசத்தின் நாளைய தூண்களான மாணவர்கள் நாளை எம் நாட்டைக் கட்டியெழுப்பும் இளைய சிற்பிகள். எமது தேச விடியலிற்காய் தம் உயிரை அர்ப்பணம் செய்தவர்களில் மாணவர்களின் பங்கு அளப்பரியது. ஜூன் 6 ஆம் நாள் சிவகுமாரன் நினைவாக 'தமிழீழ மாணவர் எழுச்சி நாள்' கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சுற்றுச் சூழல் நாள் ஜூன் 5 ஆம் நாள் வருவதால் அதற்கடுத்த நாள் சிவகுமாரன் நினைவு நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது.

தமிழீழத்தின் முதல் வித்து

# லெப். சங்கர்



தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகளாவிய ரீதியில் கூர்ந்து கவனிக்கப்படுவதற்கு முதலாவது அத்திவாரக் கல்லாய் அமைந்த உறுதி மிக்க போராளி லெப். சங்கர்.

சத்தியநாதன் என்னும் இயற்பெயரைக் கொண்ட லெப். சங்கர் 1961 இல் பிறந்தான். 1977 ஆம் ஆண்டு வீட்டில் கடிதம் ஒன்றை எழுதிவைத்துவிட்டு அவர் பண்ணை ஒன்றில் இயங்கிய விடுதலைப் புலிகளின் பாசறையை அடைந்தான்.

விடுதலைப் புலிகளின் தலைவர் அவர்கள் பண்டிதருடன் வந்த அவரை கூர்ந்து நோக்கினார். இளைஞன் தோற்றத்தில் சின்னவன். தலைமறைவுப் போராட்டம் என்பது மிகவும் கடினமானது. குறிவைத்த எதிரியை வீழ்த்துவதற்காக எதிரியின் கண்களில் மண்ணைத் தூவி பல நாட்கள் அலைந்து திரிய வேண்டும். நிரந்தரமாக ஓரிடத்தில் தங்க முடியாது. நேரத்திற்கு உணவு கிடையாது. அல்லது பல நாட்கள் உணவின்றியே இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் தாங்கும் மனோபலம் சிறுவனுக்கு இருக்குமா...? தலைவர் பிரபாகரன் கூற்றுப்படி படிப்பைத் தொடர்வதற்காக வீடு திரும்பினான்.

''ஏதோ அறியாதவன். சில நாட்கள் சுற்றிவிட்டு வீடு வந்து விட்டான். இனி ஒழுங்காகப் படிப்பைத் தொடர்வான்'' என இவரது பெற்றோர்

எண்ணினர். ஆனால் சத்தியநாதனின் உள்ளத்து உறுதி கலையவில்லை. தானும் ஒரு போராளியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொள்கிறான். இடைப்பட்ட காலத்தில் போராட்டத்திற்கு உறுதுணையாக சாரதிப்பயிற்சி பெறத்தீர்மானித்து அதில் வெற்றியும் பெற்றுவிடுகிறார்.

1978 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு நாள் இரவு மீண்டும் தம்முன் வந்து நின்ற சத்தியநாதனை ஏறிட்டனர் ஏனைய போராளிகள். அவர்கள் முகங்களில் புன்னகை. அதில் சத்தியநாதனின் உறுதி புலப்படுகிறது. சத்தியநாதனுக்கு தலைமறைவு வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் புனைப்பெயர் சூட்டப்படுகிறது. சத்தியநாதன்.... சங்கராக விடுதலைப் புலியாக மாறினான்.

சங்கரின் உள்ளத்தைப் போலவே உடலும் உறுதிபெற்றது. ஓயாது உழைத்தான். எதிலும் ஆர்வம் எப்போதும் சுறுசுறுப்பு. தோழர்கள் ஒன்றுகூடி கருத்தரங்குகள் வைப்பதும், திட்டங்கள் தீட்டுவதும், விவாதிப்பதுமாக... சங்கரின் அரசியல் அறிவு விரிந்தது. வளர்ச்சி பெற்றது.

இயக்கத்தில் ஆரம்பகாலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டது. ஓய்வு நேரங்களில் ரிவோல்வரில் குறி பார்ப்பதிலும் ஆங்கில சினிமாப் படங்கள் மூலம் தன் ஆயுத அறிவை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டினான் சங்கர். 1979 இல் சிறிய ஆயுதங்களில் குறிபார்த்துச் சுடும் பயிற்சி சங்கருக்கு வழங்கப்பட்டது.

சங்கருக்கு குறி பார்த்துச் சுடும் பயிற்சியிலிருந்த திறமையால் தலைவரிடமிருந்து வெகுமதியாக 0-45 ரிவோல்வர் ஒன்று கிடைத்தது. அது சங்கருக்கு கிடைத்த பின் அதை வைத்து மேலும் தனது திறமையை வளர்த்துக் கொண்டான். இரு கரங்களாலும் குறி பார்த்துச் சுடுவதில் தன்னிகரற்றவனாயினான். சிறந்த ஆயுதப் பராமரிப்பு, தினசரி துப்பரவாக்கப்பட்டு பளபளத்தது ரிவோல்வர்.

1979 வைகாசியிலே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதாக அறிவித்திருந்த அரசு விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடன் தேடுதல் வேட்டைகளை விஸ்தரித்தது. சங்கரின் பெயரும் எதிரிக்குத் தெரிந்துவிட்டது. அவனும் தேடப்பட்டான்.

1981ஆம் ஆண்டு நவீன ரக ஆயுதங்களை இயக்கும் பயிற்சி சங்கருக்கு வழங்கப்பட்டது. சங்கர் தாக்குதல் படைப்பிரிவில் ஒருவனானான்.

1982 ஆடி 2 ஆம் நாள் முதல்முதலாக எதிரியுடன் ஆயுதம் தாங்கிய மோதலில் சங்கர் ஈடுபடப்போகும் நாள் திட்டமிட்டபடி போராளிகள் நெல்லியடியில் ரோந்து வந்த பொலிஸ் ஜீப் மீது தாக்குதல் தொடுத்தனர். சங்கரிடம் ஒரு ரிவோல்வர் வேறொரு போராளியிடம் ஒரு இயந்திரத் துப்பாக்கி இதைத்தவிர வேறு ஆயுதங்கள் இல்லை

முதலில்... எதிரி வாகனச் சாரதி சுட்டு வீழ்த்தப்பட்டான். சங்கரின் நீண்ட காலக் கனவு நனவாகத் தொடங்கியது. வெற்றிகரமானத் தாக்குதலில் எதிரிகளில் நால்வர் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் எந்தவித இழப்புகளுமின்றி வெற்றியுடன் மீண்டனர்.

1982 இல் தலைவர் பிரபாகரனின் பாதுகாப்பிற்காக முதன் முதலாக இரு மெய்ப்பாதுகாவலர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அவர்களில் ஒருவனாக சங்கரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தான். இக் காலகட்டத்தில் நவீனரக ஆயுதவரிசையில் இரண்டு ஜீ-3க்கள் மட்டுமே இயக்கத்திடமிருந்தன. இவற்றில் ஒன்று சங்கருக்கு வழங்கப்படுகின்றது.

இராணுவத் தாக்குதல்களில் மட்டுமல்ல மக்களை அரசியல் மயப்படுத்தும் நடவடிக்கைகளிலும் சங்கர் ஈடுபட்டான். புலிகளை வலை வீசித் தேடும் நடவடிக்கைகளுக்கு ஊடாகவே இவற்றையெல்லாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

கூலிப்படைகளின் தேடுதல் வேட்டை மும்முரமாகின்றது. புலிகள் இயக்க ஆதரவாக இருந்த விரிவுரையாளர் ஒருவரின் வீட்டில் சங்கர்.... இதை மோப்பம் பிடித்துவிடுகிறது கூலிப்படை. வீடு முற்றுகையிடப்படுகிறது. முற்றுகை, முற்றுமுழுதான முற்றுகை. சங்கரின் கை இடுப்பிலிருந்த ரிவோல்வரின் பிடியை இறுகப் பிடிக்கின்றது. தப்பியோடத் தீர்மானிக்கின்றான்.

கூவிப் பாய்ந்த ரவைகளில் ஒன்று சங்கரின் வயிற்றைப் பதம் பார்த்துவிடுகிறது. தரையை நனைக்கின்றது குருதி. உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோரவில்லை. எதிரியின் கையில் தனது ரிவோல்வர் கிடைத்துவிடக்கூடாது. எப்படியும் தன் தோழர் கையில் அதனை ஒப்படைத்து விட வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தை உறுதியாக்க கிட்டத்தட்ட இரண்டு மைல் ஓடியிருப்பான். தெரிந்த ஒருவரின் உதவியுடன் நண்பர்கள் இரகசியமாகக் கூடும் இடத்தை அடைந்தான். ரிவோல்வரை தோழர்களிடம் கையளித்துவிட்டு உணர்விழந்தான் சங்கர். தோழர்கள் அவனைத் தாங்கிக்கொள்கிறார்கள்.

முற்றுகையில் அகப்பட்ட புலி கைநழுவிட்டது என்ற ஆத்திரம் அரச படையினருக்கு. ஆதரவாளர் கைது செய்யப்பட்டார். தேடுதல் முடுக்கிவிடப்பட்டது. தெருவெங்கும் இராணுவம். காயமுற்றவனை வெளியில் கொண்டு செல்லமுடியாத நிலை. இரத்த வாந்தி எடுத்த சங்கர் துவண்டு போனான். ஐந்து நாட்கள் கடந்தன சங்கரை பாரதம் கொண்டு செல்வதற்காக மோட்டார் படகு தயார் செய்யப்பட்டது. பலத்த சிரமத்தின் மத்தியில் சங்கர் ஒருவாறு கரைசேர்க்கப்பட்டான். அங்கும் போதிய வைத்தியம் செய்ய முடியாதநிலை. உடல்நிலை நாளுக்கு நாள் நலிவடைந்தது.

27-11-1982 அன்று... விடுதலைப் புலிகளால் மறக்கவே முடியாத நாள். தமிழீழ மக்கள் மனதில் உத்வேகத்தை ஊட்டிய நாள். ஆயிரமாயிரம் போராளிகளை தன்னகத்தே கொண்டு விடுதலைப் போர் வீறுநடை போட வித்திட்ட நாள் அன்று தான்.

தலைவரின் மடியில் அவர் கைகளை இறுகப்பற்றி ‘தம்பி’ என்றவாறே சங்கர் உயிர் துறந்தான்.

தலைவரின் விழிகளை நிறைத்த கண்ணீர் விழுந்து தெறித்து அவ் வீரனுக்கு அஞ்சலி செலுத்தியது.

தாயக மீட்புக்கான உரிமைப் போரில் வீரச்சாவடைந்த முதற்புலி லெப். சங்கரின் உடல் தமிழீழத்திற்கு வெளியே தமிழகத்தில் தகனம் செய்யப்பட்டது. இவனது வீரச்சாவுகூட மக்களுக்கும் புலிகளுக்கும் இடையே இருந்த இணைப்பு இறுகிய பின்னரே வெளியே தெரியப்படுத்தப்பட்டது.

இம் மாவீரனின் வழித்தடத்தில் நடந்த ஆயிரக்கணக்கான போராளிகள் விடுதலைப் போருக்கு தம்மை வித்தாக்கியுள்ளனர். இம் மாவீரர்களையெல்லாம் நினைவுகூரும் நாளாக லெப். சங்கர் வீரச்சாவடைந்த தினம் ‘தேசிய மாவீரர் நாளாக’ நினைவு நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது தமிழீழ மக்களால் அனுட்டிக்கப்பட்டு வருவதுடன் அவர்களின் இலட்சியப் பயணம் பல வெற்றிகளைப் பெற்று உறுதியுடன் தொடர்கின்றது.

தமிழீழத்தின் முதல் கரும்புலி

# கப்டன் மில்லர்



கூப்டன் மில்லர் என அழைக்கப்படும் வல்லிபுரம் வசந்தன் 1966 தை 01 நாள் பிறந்தார். வடமராட்சியின் துன்னாலைப் பகுதியைப் பிறப்பிடமாக கொண்டிருந்தான். இவன் கூடப்பிறந்தவர்கள் ஒரு ஆண்ணும் ஒரு பெண்ணும் ஆவர். தந்தை பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் பணி புரிந்தவர். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்றான்.

இளம் வயதிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்த வசந்தன் மிக விரைவிலேயே கரும்புலிப் பிரிவில் இணைக்கப்பட்டார். இயக்கத்தில் இவர் மில்லர் என அழைக்கப்பட்டான்.

'விடுதலை நடவடிக்கை' (*Operation Liberation*) என்ற பெயரில் சிங்கள இராணுவம் வடமராட்சியைக் கைப்பற்ற நடவடிக்கை ஒன்றை 1987 இன் நடுப்பகுதியில் மேற்கொண்டு சில இடங்களையும் கைப்பற்றியிருந்தது.

இலங்கை இராணுவம் வடமாராட்சி மீதான தாக்குதலை ஆரம்பித்தபோது, வசந்தன் இயக்கத்திற்காகத் தனது உயிரைக் கொடுக்கத் துணிந்தான். வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட சுமையுந்து ஒன்றை கரவெட்டியில் அமைந்துள்ள நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரின் முகாம் மீது செலுத்தி வெடிக்கத்திட்டமிட்டான்.

கப்டன் மில்லர் தன்னை ஒரு உயிராயுதமாக்கி முறியடித்தான். இதுவே தமிழ்த்

*தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டது*

*1987 சூலை 5 நாள் அன்று சரியாக யூலை 5ஆம் நாள் இரவு 7.00 மணி 3 நிமிடத்திற்கு கப்டன் மில்லருடைய வாகனம் முகாமிற்குள் மோதி வெடித்தது. நூற்றுக்கணக்கான இராணுவம் கொல்லப்பட்டும் பலநூறு படையினர் காயமடைந்தும் இருந்த அந்த வரலாறு எழுதப்பட்டது.*

*யாழ்ப்பாணம் வடமராட்சிக் கோட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த இலங்கைப் படைத்தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்தான்.*

*நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆக்கிரமிப்பு இராணுவமாக நிலை கொண்டிருந்தபோது அவ்வாறு இருக்க முடியாது என்ற செய்தியை மில்லரின் தாக்குதல் உணர்த்தி நின்றது.*

*மில்லரின் தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் இராணுவத் தளம் மீது தாக்குதல்களைத் தொடர்ந்தனர்.*

*கரும்புலி கப்டன் மில்லர் முதலாவது கரும்புலியாகவும் புலிகளின் முதலாவது தற்கொடைப் போராளி எனவும் புகழப்படுகிறார். ஆண்டு தோறும் சூலை 5 ஆம் நாள் ‘கரும்புலிகள் நாளாக] பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழீழ மக்களால் அனுட்டிக்கப்பட்டு நினைவுகூரப்பட்டு வருகிறது .*

*இவரது நினைவாக தாக்குதல் நடைபெற்ற இடத்தில் 2002 ஆம் ஆண்டில் சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.*

தமிழீழ அகிம்சைப் போராட்டத்தின் ஈகைச்சுடர்

# லெப்.கேணல் திலீபன்



**தி**லீபன் எனும் பெயரில் அறியப்படும் பார்த்தீபன் இராசையா என்பவர் 1963 நவம்பர் 27ம் நாள் பிறந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு ஆரம்பக்கால உறுப்பினரும் முக்கிய உறுப்பினராகவும் இருந்தவராவர். இவர் யாழ்ப்பாணம் ஊரெழு எனும் ஊரைச் சேர்ந்தவன்.

போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்தி தமிழீழ தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பி பாரத நாட்டை தலைகுனிய வைத்து உலகத்தின் மனசாட்சி உறைந்துபோக தமிழீழ விடுதலைப் போரின் ஆன்ம உறுதியை நிலைநாட்டிட ஆயுதம் தரித்துப் போராடிய வீரன் அகிம்சை வழியிலும் தன்னால் தாயக விடுதலைக்காக உறுதியுடன் போராட முடியும் என உலகிற்கு எடுத்துக்காட்டியவன்

1987 ஆம் ஆண்டு ஈழத்தமிழ் மக்களின் சார்பாக அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அப்போதைய சிறிலங்கா அரச தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இந்தியப் படைகள் தமிழர் தாயகத்தில் நிலைகொண்டனர்.

ஈழத்தமிழர்களின் தேசத்தில் அமைதியை ஏற்படுத்தவந்த படைகள் சிறிலங்காவில் நடந்து கொண்டிருந்த நில ஆக்கிரமிப்பைக் கண்மூடிப் பார்த்துக் கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அவசர ஒன்று கூடலைச் செய்தது.

இந்திய தேசத்திடம் நீதி கேட்டு அமைதிவழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கிறார்கள். அப்போது யாழ்மாவட்டத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் அண்ணா அவர்கள் 1987.09.15 நாள் அன்று நல்லூர்க் கந்தசாமி கோயிலின் முன்பாக இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து காந்திய வழியில் நீரும் அருந்தா சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தான்.

- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.
- புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடாத்தப்படும் சிங்களக் குடியேற்றம், உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.
- இடைக்கால அரசு நிறுவப்படும் வரை 'புனர்வாழ்வு' என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
- வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
- இந்தியா அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்க்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க் கிராமங்கள் பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள இராணுவ பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

''திலீபன் அண்ணாவின் கோரிக்கைகள் மட்டுமல்ல தமிழ் மக்களின் கோரிக்கைகளும் இதுதான். இதை நிறைவேற்ற வேண்டியது இந்திய அரசின் கடமையாகும். அவர் தமிழீழம் தாருங்கள் என்பதற்காக உண்ணாவிரதம் இருக்கவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்தே ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றும்படி வற்புறுத்தித் தான் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தான்.

இந்திய வல்லாதிக்கத்தின் கண்களைத் திறப்பதற்காக அவர் மேற்கொண்ட அந்தத் தியாகப் பயணத்தில் 12 நாட்கள் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் மனக்கட்டுப்பாட்டுடன் இருந்து தமிழ் பேசும் மக்களின் விடுதலைத் தீயைக் கொழுந்து விட்டு எரியச் தொடங்கி பன்னிரண்டு நாளாக தொடர்ச்சியாக 265 மணித்தியாலங்களை முடித்துக்கொண்ட வேளையில் 1987ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி சனிக்கிழமை காலை 10.58 மணியளவில் தமிழீழ மண்ணிற்கு தன் உயிரை ஈர்ந்து தமிழ் மக்களை மீளாத் துயரில்

ஆழ்த்தினார். இவரின் மறைவின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தியாக தீபம் லெப்டினன் கேணல் தியாகி திலீபன் எனும் நிலை வழங்கப்பட்டது. இவன் நினைவாக தமிழீழத்தில் விடுதலைக்புலிகளினால் 'திலீபன் மருத்துவமனை' தமிழீழம் எங்கும் ஆரம்பிக்கப்பட்டது

இவரை இந்திய அரசு இறக்க விட்டது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையே பின்னர் ஏற்பட்ட போருக்கு ஒரு முக்கிய காரணம்.

திலீபன் அவர்களின் போராட்டம் தமிழ் மக்களிடம் மூட்டிய விடுதலை நெருப்பு இன்னும் எரிந்து கொண்டிருக்கிறது. தாயக விடுதலை நோக்கிய திலீபன் அண்ணாவின் பயணம் இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் உலக சரித்திரத்தில் நிச்சயம் இடம்பெறும்.

தாயக விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் தியாகி திலீபன் அண்ணா போன்று தியாக மறவர்களின் அர்ப்பணிப்புக்கள் உருவாக்கிய விடுதலை வேட்கை என்றுமே வீணாகிவிடாது.

திலீபன் விரும்பிய மக்கள் எழுச்சியே விடுதலைக்கான பாதைகளைத் திறக்கும். அப்போது நிச்சயம் இந்தியாவின் மனச்சாட்சியும் கண்ணைத் திறக்கும்.

தமிழீழத்தின் முதல் பெண் மாவீரர்

# 2 ஆம் லெப். மாலதி



**த**மிழீழம் மன்னாரை சேர்ந்த சகாயசீலி பேதிருப்பிள்ளை 1967 சனவரி 01நாள் பிறந்தாள். தமிழீழத்தின். எமது சமூகத்தில் பெண் எப்படி இருக்க வேண்டும். பெண்ணானவள் இப்படித்தான் இருப்பாள். இதற்கு மேல் அவளால் முடியாது. ஆணைவிட பெண்ணுக்கு ஆற்றல் குறைவு என்ற கருத்துக்களை முறியடித்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் இந்திய ஆக்கிரமிப்பில் எமது தேசம் துவண்டிருந்த போது வீறு கொண்டெழுந்தாள். பெண்ணினால் எல்லாம் முடியும் என்று செய்து காட்டினாள் நாட்டின் விடுதலையோடு பெண்ணினத்தின் விடுதலையையும் கருத்தில் கொண்டு 1984 முதல் பெண்கள் ஆயுதப் போராட்டத்திற்குள் தம்மை இணைத்துக் கொண்டனர்.

விதைத்த விடுதலை மூச்சு என்னும் விதை தமிழீழப் பெண்களிடத்தில் பெரு விருட்சமாக வளர்ந்தும் பரந்தும் அவர்களின் எழுச்சிக்குக் கைகோர்த்தன. நம் தமிழீழப் பெண் சமூகத்தின் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கிறது.

இந்திய இராணுவத்தை நோக்கிச் சுழன்ற முதலாவது சுடுகலனும் மாலதியினுடையதுதான். கோப்பாய்- கைதடி வெளியில் எழுந்த சூட்டுச் சத்தங்கள் எங்கள் சரித்திரத்தில் புதிய அத்தியாயத்தை எழுதத் தொடங்கின.

எமது போராட்டத்தை அழித்துவிடும் நோக்குடன் தமிழீழத்திற்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் போராளிகளைத் தேடி இருள் கிழித்து உலாவத் தொடங்கியது. எல்லா இடங்களிலும் எம்மவரின் விழிகள் பகை வரவை எதிர்பார்த்தபடி காத்திருந்தனர்.

அந்த இலட்சியக் கனவோடே வீரச்சாவை தழுவிக் கொண்டாள். அன்று (10.10.1987) நடுராத்திரியில் தமிழ் பெண்களுக்கு அநீதி இழைத்த வல்லாதிக்க இந்திய இராணுவத்தை எதிர்கொள்ள கோப்பாய் கிறேசர் வீதியில் காத்திருந்தாள். 1987 அக்டோபர் 10 ஆம் திகதி நள்ளிரவு 1 மணியளவில் இந்திய வல்லாதிக்க இராணுவம் மீது அவளது எம்16 ரக துப்பாக்கியிலிருந்த குண்டுகள் சீறிப்பாய்ந்தன. சண்டை கடுமையாகத்தான் நடந்தது. சீறும் ரவைகளின் ஒலியும் அவற்றின் ஒளிர்வும் தாக்குதலின் கடுமையைப் பறைசாற்றின.

விடுதலை போராட்ட வரலாற்றில் முதல் பெண் மாவீராக 2 ஆம் லெப் மாலதி இராணுவத்தினருக்கு மிக அண்மையில் நின்று தாக்குதலைச் செய்து கொண்டிருந்தார். திடீரெனக் காலில் காயமுற்ற மாலதியின் குரல் வேட்டொலிகளையும் மீறி ஒலித்தது 'என்ர ஆயுதம் பத்திரம். என்னை விட்டிட்டு ஆயுதத்தைக் கொண்டுபோ' எனச் சொல்லி ஆயுதத்தைக் கொடுத்தவள், காயமடைந்த பின் இராணுவத்தின் கரங்களில் உயிருடன் பிடிபடக் கூடாது என்பதற்காக கழுத்திலிருந்த நஞ்சையருந்தி மண்ணை முத்தமிட்டாள்.

அது தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு வித்தாகவும் அமைந்தது. உலகின் சரி பாதி மக்கள் தொகையைக் கொண்ட பெண்கள் ஏன் வீட்டுக்குள் இருக்க வேண்டும் விடுதலைப் போராட்டங்களிலும் கலந்து கொள்ளக் கூடாது என்ற கருத்தை பெண்களிடம் விதைத்து விடுதலைப் போரில் பங்கு கொள்ள வைத்தவர் தேசியத் தலைவர் அவர்கள்.

விடுதலைப் போராட்டத்தில் பெண்களையும் அணி சேர்ப்பதினூடாகப் படிப்படியாக சமூகமாற்றத்தை ஏற்படுத்தி பெண் விடுதலையையும் தேசவிடுதலையையும் சாத்தியமாக்கலாம் என்ற தேசியத் தலைவரின் எண்ணம் பெண் புலிகள் என்ற தோற்றத்துக்குக் காரணமாயிற்று.

ஆணும் பெண்ணும் சமமான ஆற்றல்களுடனேயே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உடற் கூற்றியல் நிபுணர்களது கூற்றுக்கு பெண் புலிகளே உலகுக்கு உதாரணமாக வாழ்கிறார்கள் என பெண் போராளிகள் பற்றி தேசியத் தலைவர் பெருமிதத்துடன் பலதடவை குறிப்பிட்டது அனைவரும் அறிந்ததே.

பெண்போராளிகள் ஆண்போராளித் தளபதிகளின் கீழ் செயற்பட்டாலும் 90களின் பிற்பகுதியில் தனித்துவமாக செயற்படும் வகையில் பெண்கள் படையணி புலிகளால் கட்டியெழுப்பப்பட்டது. பெண்போராளிகள் புலிகளின் அனைத்து விதமான கட்டமைப்புக்குள்ளும் உள்வாங்கப்பட்டனர். அவர்கள் இராணுவ படையணியாக மட்டுமல்லாது தொழினுட்பத்துறை பொறியியல்துறை மருத்துவம் கடற்படை அரசியல் நிர்வாகக்கட்டமைப்பிலும் ஆண்போராளிகளுக்கு நிகராகவே உள்ளனர்.

வீரச்சாவு 1987 ஒக்ரோபர் 10 ஆம் நாள் அன்று இரண்டாம் லெப். மாலதி ஈழ விடுதலைப் போரில் முதல் பெண் வீராங்கனையாக சிறப்பிக்கப்பட்டு ‘மாலதி படையணியும்’ உருவாக்கப்பட்டது.

முதல் பெண் மாவீரரான 2 ஆம் லெப். மாலதி வழிகாட்டிச் சென்ற பாதையில் பயணங்களைத் தொடருவோம். அவர் உயிரிலும் மேலாக நேசித்த ஆயுதமும் இந்தத் தேசமும் அவரின் வரலாற்றைச் சுமந்திருக்கும்.

எத்தனையோ மாவீரர்களும் வீராங்கனைகளும் விடுதலைப் போரில் உயிர் துறந்தாலும் அவர்களின் உயிருக்கு பரிசாக தமிழீழம் விரைவில் உருவாகும் என்ற நம்பிக்கையுடன் ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல அனைத்து உலகத் தமிழர்களும் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு காத்திருக்கிறார்கள்.

மாவீரர்களின் நினைவிடங்கள் கல்லறைகள் அனைத்தையும் சிங்களம் நிர்மூலமாக்கினாலும் கூட அவற்றிற்கு உயிர் கொடுத்து நினைவில் நிற்க வைக்க வேண்டியது நாடு வேறுபாடுகள் இல்லாமல் அனைத்து தமிழர்களின் கடமையுமாகும். மாவீரர்களை நினைவு கூர்ந்து எமது இலட்சியம் நிறைவேறப் பலம் சேர்ப்போம் .

தமிழீழத்தின் வீரத்தாய்

# தியாக தீபம் அன்னை பூபதி

பூபதி அன்னை 1932 கார்த்திகை 3 ஆம் நாள் பிறந்து விடுதலை வேட்கையும் அதற்கான தியாகமும் நாட்டுப்பற்றின் சிகரமாக தமிழீழத் தேசியத்திற்கு ஆதரவாக பல வகைகளில் தமது பங்களிப்பை வழங்கினார். இந்தத் தேசத்திற்கான பங்களிப்புக்களின் சிகரமாகத் தியாகத்தின் அதியுயர் வடிவமாக அன்னை பூபதி அறப்போர் அமைத்தார்..



பூபதியம்மாவின் கணவர் பெயர் கணபதிப்பிள்ளை. பத்துப்பிள்ளைகளின் அன்னை வெறுமனே பிள்ளைகளுக்கு அன்னையானவர் அல்ல. போர்க் குணத்திற்கும் தமிழீழப் போராட்டத்திற்கும் அன்னையானவர் என்ற கோணத்தில் நோக்கப்பட வேண்டியவர்.

ஓர் சாதாரண அன்னையென்றால் தன் பிள்ளைகளுக்கே இறுதிவரை பாசமுள்ள அன்னையாக இருக்க ஆசை கொள்வாள். ஆனால் அன்னை பூபதி அப்படிப்பட்டவரல்ல, அன்னைப் பாத்திரத்தின் கட்டுக்களை அறுத்து அநீதிக்கெதிராகப் போர்க்கோலம் பூண்டு வெளிவந்தவர்.

மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளர். விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டு-அம்பாறை மாவட்ட அன்னையர்

முன்னணி முடிவு செய்தது. 1988ம் ஆண்டு மார்ச் மாதம் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்குகிற இந்த வீரத்தாய் அவருடைய உண்ணாவிரதப் போராட்டம் இரண்டு முக்கிய கோரிக்கைகளை மையமாகக் கொண்டு தொடங்கினார்.

- உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும்.

அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப்படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால் தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணாநோன்புப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில் 1988 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

போராட்டம் தொடர்ந்து நடந்தது. 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் தேதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை முறியவே சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்க முடிவு எடுத்தனர்.

பூபதியம்மாள் தன் போராட்டத்தை மார்ச் 19, 1988 இல் தொடங்கினார். முன்னெச்சரிக்கையாக 'சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது எனக் கடிதம் எழுதி வைத்தார். பத்துப்பிள்ளைகளுக்கு, தாயார் இவர். நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணாநோன்பு இருந்தார்.

இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும் இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 1988 சித்திரை 19 நாள் அன்று உயிர் நீத்தார்.

அவரது மரணம் பொறி தட்டி சமூக எழுச்சியாக மாறிவிடக் கூடாது என்பதில் இந்திய இராணுவ அதிகாரிகள் கவனமாக இருந்தார்கள். அன்னையின் இறுதி யாத்திரை நேரத்தில் கூட

ஊரடங்குச் சட்டமிட்டனர். ஆனால் அதையெல்லாம் உடைத்தெறிந்து அவருடைய இறுதி ஊர்வலத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதை நினைத்தால் இன்றும் ஆச்சரியமே ஏற்படுகிறது.

அன்று நடந்த அன்னை பூபதியின் இறுதி ஊர்வலம் அந்த மண்ணில் நின்ற இந்திய அரசுக்கு சில செய்திகளைக் கூறியது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழீழத்து நாட்டுப் பற்றாளர்களைச் சிங்கள அரசுகள் தொடர்ந்தும் கொலை செய்து வருவதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதற்குரிய காரணங்களையும் நாம் வரலாற்று ரீதியாகத் தர்க்கித்திருந்தோம். ‘மக்கள் எழுச்சிப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க வேண்டுமென்றால் அந்தப் போராட்டத்தைத் தாங்கி நிற்கும் நாட்டுப் பற்றாளர்களை நசுக்க வேண்டும்’ என்று அடக்கு முறையாளர்கள் தொடர்ந்து சிந்தித்தும் செயல்பட்டு வருவதையும் தமிழீழத்து நாட்டுப்பற்றாளர்கள் மீதான படுகொலைகள் நிரூபித்து நிற்கின்றன.

தமிழீழத் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அறப்போர் புரிந்த அன்னை பூபதி அவர்களின் நினைவு தினத்தை நாட்டுப் பற்றாளர் தினமாகத் தமிழீழத் தேசியத் தலைமை பிரகடனப்படுத்தியிருந்தது. அன்னை பூபதியின் நினைவு தினத்தை ‘தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாள்’ என்றும் நினைவு கூறப்படுகிறது

### தமிழீழத்தின் முதல் கடற்கரும்புலி

# மேஜர் காந்தரூபன்

**யோ**கராசா கோணேஸ்வரன் என்னும் இயற்பெயரைக் கொண்டமேஜர் காந்தரூபன் 1971 செப்டம்பர் 10 ஆம் நாள் பிறந்தான். சின்ன வயதுமுதல் பெரிய தாயுடன் கூடவே வல்வெட்டித்துறை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தான். தமிழீழவிடுதலைப் புலிகளின் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தான்.



இயக்கத்திற்குப் போய் கொஞ்சக் காலத்தில் பெரிய அறிவாளியாக இருந்தான். பெரியஅரசியல் மேதைகளைப் போல் விளக்கம் கொடுப்பான். அந்தளவுக்கு அவனை விடுதலைப் போராட்டம்தான் வளர்த்துவிட்டது.

1987 இன் ஆரம்பத்தில். அப்போது காந்தரூபன் தொண்டைமானாறு சிங்களப் படைமுகாமைச் சுற்றியிருந்த காவலரணில் கடமையில் இருந்தான். ஒருநாள் முகாமிலிருந்து சிங்களப் படையினர் வெளியேறியபோது சண்டை தொடங்கியது. அச்சண்டையின் ஒரு சர்ந்தப்பத்தில் எதிரியின் கையில் உயிருடன் பிடிபட்டுவிடக்கூடிய சூழ்நிலை உருவாகிய பொழுது காந்தரூபன் குப்பியைக் கடித்து விட்டான். ஆனால் அதிஷ்டவசமாக சக தோழர்களால் மீட்கப்பட்டு காப்பாற்றப்பட்டான்.

இருந்தபோதும், சயனைட் விஷம் காந்தரூபனின் உடலில் ஒரு உட்பாதிப்பை உண்டாக்கியிருந்தது. இந்த உட்பாதிப்பிற்கான பராமரிப்பு முறைகளில் அத்தியாவசியமானதாக

நிறை உணவு அருந்தவேண்டுமென மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

காந்தரூபனிற்கு அப்போது நிறை உணவு தேவைப்பட்டது. சுகவீனம் அடைகின்ற போராளிகளுக்கும் பால் கொடுக்க முடியும் எனக் கருதிய தலைவர் வெளியிலிருந்து பால் தரக்கூடிய நல்ல இனப் பசுஒன்றைகாட்டுக்குள் இருந்ததளத்திற்கு கொண்டு வருமாறு சொன்னார். பசு வந்துசேர்ந்தது. தலைவரின் துணைவியார் (மதிவதனி அண்ணி) ஒரு தாயைப்போல இருந்து பால் காய்ச்சிக் கொடுத்தார். அந்தப் பொழுதுகளிலெல்லாம் காந்தரூபன் நெஞ்சு நெகிழ்ந்து நிற்பான்.

1988, 1989 ஆம் ஆண்டுகாலம். இப்போது காந்தரூபன் தலைவர் அவர்களுக்குப் பக்கத்தில் மணலாற்றுக் காட்டில் நின்றான்.

ஒருநாள் அன்பு கலந்தமரியாதையோடு, காந்தரூபன் தலைவருக்குப் பக்கத்தில் வந்தான். பாசத்தோடு அவனை அழைத்து அருகில் இருத்திக் கதைத்தார் தலைவர். ‘‘அண்ணை.... என்னைக் கரும்புலிகளில் சேர்த்துக் கொள்ளுங்கோ’’ என்றான்.

தனது உள்ளத்துக்குள் உறைந்துகிடந்த இன்னொரு விருப்பத்தையும் அவன் தலைவரிடம் சொன்னான். தயவுசெய்து நீங்கள் அதைச் செய்யவேணும்... என்னைப்போல எத்தனையோ பெடியள் இந்த நாட்டில அநாதைகளாக வாழுறாங்கள்... அப்பா அம்மா இல்லாம சொந்தக்காரரின் ஆதரவில்லாமல் அலைஞ்சு திரியிறாங்கள். வாழ இடமில்லாமல் படிக்க வசதி இல்லாமல் எவ்வளவோ ஏக்கங்களோடையும் துன்பங்களோடையும் அவங்கள் இருப்பாங்கள் என்டிறதை நான் அனுபவித்ததில் கண்டனான் அண்ணை. நீங்கள் என்னை அன்போட கவனிச்சுப் பார்த்ததைப்போல அவங்களையும் கவனிக்க வேண்டும் என்றான்.

அவங்கள் எந்தக் குறையுமில்லாமல் வளரவும் நன்றாகப் படிக்கவும் வசதிசெய்து கொடுங்கோ. அவர்களுக்கென்று ஒரு இடத்தை அமைத்து அங்கு வைத்து அவர்களையெல்லாம் வளர்த்தெடுத்து அவர்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் கொடுத்து விடுங்கள் அண்ணை.... தலைவரின் இதயத்தை இது தொட்டது.

1990 ஆடி 10 ஆம் நாள் அன்று வல்வெட்டித்துறைக் கடலில் சிறீலங்காப் கடற்படைக் கப்பல் ’எடித்தாரா’ மீதான கரும்புலித் தாக்குதலில் முதாலாவது கடற்கரும்புலிகளில் கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோருடன் மேஜர் காந்தரூபனும் ஒருவராவார்.

காந்தரூபனின் வேண்டுகோள் தலைவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவனது வேண்டுகோளுக்கு அமைய 'காந்தரூபன் அறிவுச்சோலை' என்ற சிறுவர் இல்லம் 1993 நவம்பர் 13 ஆம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழத்தின் முதல் கடற்கரும்புலி

# கப்டன் வினோத்



**வே**லுப்பிள்ளை திலகராசா இயற்பெயரைக் கொண்ட கப்டன் வினோத் 1970 ஆவணி 19ம் நாள் அன்று பிறந்து வல்வெட்டித்துறை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தவன். இயல்பாகவே மற்றவர்களோடு நெருங்கிப் பழகி அவர்களை மகிழ்வில் ஆழ்த்தக்கூடிய சுபாவம் கொண்டிருந்தவன் வினோத்.

1988 ஆம் ஆண்டுக் காலப்பகுதி... வினோத்தின் வீட்டை இந்தியப் படைகள் அடிக்கடி சுற்றி வளைத்தனர். அவனைத் தேடி இந்திய சிப்பாய்கள் அங்கு பாய்வதும் வழமையாகி விட்டது. அந்த ஆபத்தான பொழுதுகளில் வீட்டுக் கூரைக்குள் ஏற்றி பெற்றோரால் அவன் மறைத்துக் காக்கப்படுவான்.

மேலேயிருந்து 'சயனைட்' குப்பியைப் பற்களுக்கிடையில் செருகிக்கொண்டு எதனையும் எதிர்பார்த்து நொடிகளை எண்ணிக் கொண்டிருப்பான் வினோத். இவ்வாறு ஓர் நாள் அதிகாலைப் பொழுதில் திடீரென வீட்டிற்குள் நுழைந்த இந்திய ராணுவத்திடம் வினோத் சர்ந்தப்பவசமாகச் சிக்கிக்கொள்ள நேர்ந்தது. வீட்டில் எல்லோரும் பார்த்து நிற்க துவைத்து எடுத்துவிட்டு அவர்கள் அவனை இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

இந்தியனிடம் பிடிபட்டு காங்கேசன்துறையில் இருக்கும்போதும்

குடும்பம் பார்க்கப் போகும்போதும் வீட்டில் தான் வைத்து விட்டுப் போன சாமான்களைப் பற்றித்தான் சொல்லுவான்.... ''அதுகளைப் பத்திரமா எடுத்துப் பெடியளிட்டை குடுத்து விடோணும் என்கிறதிலதான் அவன்ர கவனமெல்லாம் இருந்திருக்கிறது''.

இந்தியப்படை இங்கிருந்து வெளியேற்றப்பட்ட போது ஏனையவர்களுடன் வினோத்தும் விடுவிக்கப்பட்டான்.

கடற்கரும்புலியான இவர் 1990 ஆடி 10 ஆம் நாள் அன்று வல்வெட்டித்துறை கடலில் சிறீலங்கா கடற்படைக் கப்பல் ''எடித்தாரா'' மீதான கரும்புலித் தாக்குதலில் முதாலாவது கடற்கரும்புலிகளில் மேஜர் காந்தரூபன் கப்டன் கொலின்ஸ் ஆகியோருடன் கப்டன் வினோத்தும் ஒருவனாய் விரச்சாவடைந்தான்.

தமிழீழத்தின் முதல் கடற்கரும்புலி

# கப்டன் கொலின்



பர்ணாந்து சில்வஸ்டர் என்னும் இயற்பெயரைக் கொண்ட கப்டன் கொலின் 1969 வைகாசி 12 ம் நாள் அன்று பிறந்தான். நறுவிலிக்குளம், மன்னாரில் வாழ்ந்தான். விளையாட்டில் கெட்டிக்காரன். நல்லாப் படிப்பான். அவன் படித்துக் கொண்டிருந்த வேளை ஊரிலையும் சிங்கள இராணுவதினர் சுற்றி வளைத்து அங்கிருந்த பலரை பிடித்துக் கொண்டு போனார்கள்.

அதனால் அவனுக்கு சரியான கவலை, பல இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்லும்போதும் இராணுவத்தின் கையில் பிடிபட்டு சாவதைவிட ஒரு இராணுவத்தினைத் தானும் சுட்டுட்டுச் சாகலாம் என்று சொல்லுவான். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டு ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தான்.

அவன் பிறந்து வளர்ந்தது மன்னார் மாவட்டத்தின் நறுவிலிக்குளம் என்னும் கிராமத்தில். இவனது பெற்றோர் ஏதிலியாய் இருந்தார்கள் .

ஊருக்கு வந்தபோது தான் படித்த பாடசாலை, பழகிய இடங்கள் எங்கும் சென்றான். கூடித்திரிந்த நண்பர்களுடன் பாசத்தோடு கதைத்தான். இவன் விடுமுறை முடிந்து செல்வதற்கு முதல் நாள் தாயைப் பார்த்து, அம்மா.... நான் இயக்க வேலையாக ஒரு இடத்திற்கு போக இருக்கிறன். இது முக்கியமான

வேளை, இந்த வேலையின் உழைப்பு வீட்டிற்கு வராது, அது நாட்டிற்கு மட்டும்தான் என்று சொன்னான். அப்போது அவனது பெற்றோர் அதனை பெரிதாக கருதவில்லை.

அவனோடு படித்த கூடித்திரிந்த நண்பர்களிடம் 'நாட்டுக்காகச் சாக ஒருக்காலும் பயப்படக்கூடாது' கடற்கரும்புலி கப்டன் கொலின்ஸ் கூறியிருக்கின்றான்.

1990 ஆடி 07 ஆம் நாள் அன்று வல்வெட்டித்துறைக் கடலில் சிறீலங்கா கடற்படைக் கப்பல் 'எடித்தாரா' மீதான கரும்புலித் தாக்குதலில் முதலாவது கடற்கரும்புலிகளில் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத் ஆகியோருடன் ஒருவனாய் வீரச்சாவடைந்தார்

இந்த 21 வயது இளைஞன் கரும்புலி கொலின்ஸ். தன் சாவினால் இனத்திற்குச் சாதித்தது என்ன என்பதை சரியாக உணர வேண்டின் அவன் தன்னைத் தானே தற்கொடையாக்கிய முன்னைய நாட்களை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கரும்புலியாகி வீரம் விளைந்த வடகடலின் நீரிலும் காற்றிலும், கலந்து வாழ்கிறான். எனவேதான் இவனது தாய் தனது துயரைத் துடைக்க பேரக் குழந்தைக்கு (மூத்த மகளின் மகனுக்கு) ''கொலின்'' என்று பெயரிட்டு அழைக்கிறார். அந்த அழியாத பெயர் இவர்களுக்கு ஓர் ஆறுதலையும் துணிவின் உறுதிப்பாட்டையும் தந்து நிற்பதை அந்த வீட்டாருடன் உரையாடக்கிடைத்த போது உணர முடிந்தது.

## தளராத துணிவின் வங்கக் கடலில் வீரகாவியம்

# கேணல் கிட்டு



**ச**தாசிவம் கிருஸ்ணகுமார் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் வெங்கிட்டு எனப் பெயர் மாற்றம் பெற்று, பின்னர் கேணல் கிட்டு என தோழர்களால் செல்லமாக அழைக்கப்பட்டார். இவர் இலங்கையின் வல்வெட்டித்துறையில் 1960 சனவரி 2 ஆம் நாள் அன்று சதாசிவம், ராஜலட்சுமி அவர்களுக்கு மகனாகப் பிறந்தார்.

இவரது தந்தைக்கு வல்வெட்டித்துறையில் ஒரு அச்சகம் இருந்தது. இவருடையத் தாயார் யாழ்ப்பாணத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்னும் அரசியல் கட்சியின் மகளிர் பிரிவின் தலைவராக இருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் இராணுவப் பயிற்சி பெற்றார். 1983 ஏப்ரல் 7 ஆம் நாள் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியில் கிட்டு இரண்டாவது பொறுப்பாளராக நிலையுயர்த்தப்பட்டார்.

உள்ளூராட்சித் தேர்தலைப் பகிஸ்கரிக்கும் பொருட்டு யாழ்ப்பாணம், கந்தர்மடம் வாக்குச்சாவடியில் இராணுவம் மீது நடத்தப்பட்ட தாக்குதல், ஜூலை 23 ஆம் நாள் இராணுவ வாகனங்கள் மீது நடத்தப்பட்ட திருநெல்வேலிக் கண்ணி வெடித்தாக்குதல் என்பனவற்றிலும் கலந்து கொண்டார்.

1983 இன் இறுதிக் காலத்தில் இந்தியாவுக்குப் பயிற்சிக்காகச் சென்ற

இயக்கத்தின் முதல் குழுவில் கிட்டு இடம் பெற்றார். பயிற்சியை முடித்து தமிழீழம் வந்த கிட்டு 1984 மார்ச் 2 இல் நடைபெற்ற குருநகர் இராணுவமுகாம் தாக்குதல் உட்பட்ட பல்வேறு தாக்குதல்களில் முக்கிய பங்கு வகித்து நெறிப்படுத்தினார்.

யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கேப்டன் பண்டிதர் 1985 ஜனவரி 9 இல் போரினால் மரணமடைய அவரின் இடத்திற்கு கிட்டு நியமிக்கப்பட்டார். யாழ். மாவட்டத் தளபதி ஆனவுடன் யாழ். காவல் நிலையத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று நடத்தி, அங்கிருந்த பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினார்.

விடுதலைப் புலிகளால் மன்னாரில் வைத்துச் சிறைபிடிக்கப்பட்ட இரு சிங்களச் சிப்பாய்களின் விடுவிப்பு தொடர்பாக 1986 நவம்பர் 10 ஆம் நாள் சிங்கள இராணுவத் தளபதியான கேணல் ஆனந்த வீரசேகரா, கப்டன் கொத்தலாவை ஆகியோரை தனது இடத்திற்கு அழைத்துச் சந்தித்ததன் மூலம் கிட்டு என்ற பெயர் சிங்கள மக்கள் மத்தியிலும் பிரபல்யம் அடைந்தது.

1987 மார்ச் இறுதியில் தேசத்துரோகி ஒருவனின் கைக்குண்டுத் தாக்குதலினால் தனது இடதுகாலை இழந்த கிட்டு தனது மனஉறுதியால் முன்னைய வேகத்துடனும், திடகாத்திரத்துடனும் விடுதலைப் போருக்கு வலுச்சேர்ப்பவராக வளர்ந்து வந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்தில் தனது சிகிச்சைக்காக இந்தியா சென்றார் கிட்டு. கிட்டுவை இந்திய அரசு வீட்டுக்காவலிலும், சென்னை மத்திய சிறையிலும் கைதியாக அடைத்து வைத்திருந்தது. இந்திய அரசு அவரை தமிழீழத்தில் விடுதலை செய்தது.

1989இல் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு கொழும்பு சென்ற குழுவில் அங்கம் வகித்த கிட்டு விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளராக அங்கிருந்தபடியே லண்டனுக்குப் பயணமானார். கிட்டு லண்டனில் வாழ்ந்த காலத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழரிடையே போராட்ட உணர்வையும், நம்பிக்கையையும் ஊட்டினார்.

1991 ஆம் ஆண்டு கொழும்பில் யுத்த நிறுத்த காலத்தில் தனது காதலியான சிந்தியாவை திருமணம் செய்து கொண்டார். சிந்தியா ஒரு மருத்துவக் கல்வி மாணவி ஆவார். இவர்களுக்கு குழந்தைகள் இல்லை.

கேணல் கிட்டு தேசியத் தலைவரால் அதிகம் நேசிக்கப்பட்டவர். அவரின் அன்பை அனுபவித்தவர். தலைவரின் இலட்சியத்திற்கு தோள் கொடுத்து அவரின் மனதோடு ஒன்றித்து வாழ்ந்தவர்.

அதனால்தான், தமிழீழத் தேசியத் தலைவர் ‘‘கிட்டுவை ஆழமாக நேசித்தேன், தம்பியாக, தளபதியாக, எனது சுமை களைத் தாங்கும் உற்ற தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப்பற்றுணர்வில் ஒன்றித்து, போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில் ஒருவரை யொருவர் ஆழமாக இனங்கண்ட புரிந்துணர்வில் வளர்த்த நேயம் அது’’ என கேணல் கிட்டுவிற்கும் தமக்கும் இடையே இருந்த பாசப் பிணைப்பினை வெளிப்படுத்துகிறார்.

கிட்டு எந்தளவிற்கு தலைவரின் மனதில் இடம்பிடித்தாரோ அதேயளவு தமிழீழ மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கின்றார். எந்தக் காலத்திலும் மறக்கமுடியாத அவரின் நினைவுகளோடு இன்று தமிழீழம் நிமிர்ந்து நிற்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து ஆழப்பதிக்கப்பட்ட கிட்டுவின் வரலாற்றுத் தடங்கள் அழிக்க முடியாத பெரும் பதிவாக பரிணமித்து, தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

1993 தை 16 ஆம் நாள் அன்று வங்கக்கடலிலே தீயுடன் சங்கமித்த கேணல் கிட்டு உட்பட பத்து போராளிகளின் வங்கக் கடலின் நடுவே அந்த தியாக வேள்வித் தீ எரிந்து அணைந்து. ஆனால், தமிழ் மக்களின் மனங்கள் அதை நினைத்து நினைத்து இன்னும் எரிந்துகொண்டேயிருக்கின்றன. கேணல் கிட்டுவும், உட்பட லெப். கேணல் குட்டிசிறி, மேஜர். வேலன் / மலரவன், கடற்புலி கப்டன் குணசீலன் / குணராஜ், கடற்புலி கப்டன் றொசான், கடற்புலி கப்டன் நாயகன், கடற்புலி கப்டன் ஜீவா, கடற்புலி லெப். தூயவன், கடற்புலி லெப். நல்லவன், கடற்புலி லெப். அமுதன், ஆகியோர் குவேக்கர்ஸ் இன் சமாதானச் செய்தியுடன் சர்வதேச கடற்பரப்பினூடாக எம்.வி அகத் என்ற கப்பலில் தமிழீழம் திரும்புகையில் இந்தியக் கடற்படையால் சுற்றி வளைக்கப்பட்ட போது கப்பலை வெடிக்க வைத்து கொல்லப்பட்டார். தோழர்களும் தீயோடு தீயாகி, வங்கக் கடலில் சங்கமித்த அந்தச் சம்பவம் சரித்திரம் மறக்காத ஒரு சாவு மட்டுமல்ல, அது எங்கள் நெஞ்சங்களை நீங்க மறுக்கும் நெடும் அலையாகி, நினைவெங்கும் நிலைபெற்று விட்டதொன்று.

கெரில்லா அமைப்பாக இயங்கிய அந்த நாட்களில், சிறியரக ஆயுதங்களைக்கொண்டு பெரும் சாதனைகளை நிலைநாட்டிய அந்த ஒப்பற்ற வீரனின் பெயரிலே, இன்று தமிழீழ தாயகத்தில் உருவாக்கப்பட்டுள்ள கனரக ஆயுதங்களைக் கொண்ட மிகப்பெரிய படையணி தனது சாதனைகளால் உலகத்தை வியக்கவைக்கின்றது.

தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் எவராலும் நிராகரிக்க முடியாத பெரும் வடிவம் எடுத்ததில் கிட்டுவின் பங்கு இன்றியமையாதது. உலகெங்கும் சிதறிவாழ்ந்த தமிழ் மக்களை ஒருங்கிணைத்து, தமிழீழ விடுதலையை நோக்கி அவர்களை அணிதிரட்டுவதில் கிட்டு வெற்றி கண்டார் என்றே சொல்லவேண்டும்

போரியல் நுணுக்கமும் போரிடும் திறனும் கொண்ட கேணல் கிட்டு பீரங்கிப் படையணி எண்ணிலடங்கா சமர்க்களங்களில் ஈட்டிய பெரும் வெற்றிகள் மூலம், தனது சாதனைத் தடங்களை தொடர்ந்தும் பதித்துக்கொண்டிருக்கின்றது. நவீன போரியற்கலையில் தமிழனின் தேசியப்படை முன்னேறிச் செல்வதற்கு கிட்டுவின் கனவும் ஒரு காரணம்.

ஊடகங்களில் தமிழரின் உண்மையான முகம் வெளியில் தெரியவேண்டும் என்பதில் கிட்டு அதிக அக்கறை காட்டினார். தமிழினத்தின் நியாயப் போராட்டங்களை பயங்கரவாதப்படுத்தி உலகெங்கும் பொய்யுரைக்கும் சிறீலங்கா அரச ஊடகங்களையும் அவற்றைச் சார்ந்துநிற்கும் சர்வதேச ஊடகங்களையும் கடந்து, உண்மையான செய்திகள் உலகெங்கும் தெரிவிக்கப்படவேண்டும் என்பதே அவர் கொண்டிருந்த எண்ணமாகும்

தமிழீழத்தின் முதல் பெண் கடற்கரும்புலி

# கப்டன் அங்கயற்கண்ணி



அங்கயற்கண்ணி என்னும் இயக்கப் பெயர் கொண்ட துரைசிங்கம் புஸ்பகலா 1973 மே 10 ஆம் நாள் அன்று பிறந்தாள். இளம்வயதில் தன்னை விடுதலைப் புலியாக்கியவள். அன்று அவளுள் மறைந்திருந்த ஆளுமை வெளிவந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளில் முக்கிய உறுப்பினராக இருந்து செயல்பட்டவள்.

கடற்புலிகள் மகளிர் படையணியின் மூன்றாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்த அங்கயற்கண்ணியிடம் இயல்பாகவே ஆளுமைத் தன்மை இருந்தது. ஆரம்பத்திலிருந்து அவள் குழுத் தலைவியாக இருந்து வந்தாள்.. வரலாற்றுப் புகழ் மிக்க தவளை நடவடிக்கையின்போது லெப்.கேணல் பாமாவின் குழுவில் ஒருவராகக் கடற்கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தாள்.

விளையாட்டில் இவள் திறனுடன் விளங்கினாள். கடற்புலிகளின் பெண்-ஆண் போராளிகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டி ஒன்றில் முதலாவதாக வந்தாள்.

எமது மக்கள் ஸ்ரீலங்காக் கடற்படையின் தாக்குதலுக்கு அஞ்சி, எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடி வருவதும் அனுதாபத்துடன் அந்த மக்களின் நிலையைப் பற்றித் தமக்குள் பேசிக்கொண்டார்கள். அந்த நிமிடத்திலேயே மனதளவில் அவள் ஒரு கரும்புலியானாள். சிறிலங்காக் கடற்படையின் கப்பல் ஒன்றைக்

கரும்புலித் தாக்குதல் மூலம் அழிக்கவேண்டும் என்ற எண்ணம் அப்போதுதான் அவளுள் ஆழ வேரோடியிருக்க வேண்டும்.

சரியாக எட்டு மணித்தியாலமும் இருபத்தேழு நிமிடங்களும் அங்கயற்கண்ணி பதினேழு கடல் மைல்களை (ஏறத்தாழ முப்பத்தைந்து கிலோ மீற்றர்கள்) நீந்திக் கடந்துவிட்டாள். பொறுப்பாளர்களுக்கு அவள்மேல் என்னவென்று சொல்லமுடியாத ஒரு பிரியம். தான் ஒரு கரும்புலியாகிப் போக விரும்புவதைத் தலைவருக்குத் தெரியப்படுத்தினாள்.

கடற்கரும்புலிகளுக்குரிய பயிற்சியில் ஈடுபடத் தொடங்கிய நாளிலிருந்து அவள் அந்தக் கடுமையான பயிற்சிகளில் மிகத் திறமையாக ஈடுபட்டது எல்லோருக்குமே திருப்தியைத் தந்தது. கொடுக்கப்படும் இலக்கை அவளால் சரியாகத் தாக்கமுடியும் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

அங்கயற்கண்ணியை கடற்கரை வரை சிலர் வழியனுப்ப, அதன் பின்னரும் விடாது சில போராளிகள் அவளுடனேயே நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வழியனுப்ப, தன் இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவு வரை வந்து பிரியாவிடை கொடுத்தனர் சக போராளிகள். தூரத்தே அவளது அசைவுகள் தெரியும் தூரம் வரை அதன் பின்னரும் கண்கள் வலிக்க வலிக்க வெறும் அலைகளை உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்து விட்டு ஏனையவர்கள் திரும்பினார்கள்.

இலக்கை அடிக்காமல் நான் திரும்பமாட்டேன் என்று சொல்லி விட்டு அங்கயற்கண்ணி விடைபெற்றாள். காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நாற்பத்தைந்து அடி ஆழங்கொண்ட நீர்ப்பரப்பில் நிலை கொண்டிருந்த வடபகுதித் தலைமையகக் கப்பலை யாராலுமே தாக்கமுடியாது என்பதில் எந்தக் கடற்படை அதிகாரிக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

ஆறாயிரத்து முந்நூறு தொன் எடையைக் கொள்ளக்கூடியதும் 326.04 அடி நீளமும், 51.02 அடி அகலமும் கொண்டதும் அதி சக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்டதுமான நீரில் மிதக்கும், நடமாடும் தலைமையகக் கடற்படைக் கப்பலை ஒரு தனி மனிதனால் அழிக்க முடியும் என்று அவர்கள் கனவில் கூட நினைத்திருக்கவில்லை என்பது பரிபூரண உண்மை.

1994 ஆவணி 16 ஆம் நாள் அன்று அதிகாலை 12.35 மணியளவில், காத்துக்கொண்டிருந்த போராளிகளின் செவியில் பெரும் அதிர்வு. எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உறங்கிக் கொண்டிருந்த மக்களின் செவிகளிலே கூட அந்த ஓசை கேட்டதென்றால்

காங்கேசன்துறையில் நின்றிருந்த இராணுவத்தினரைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

காங்கேசன்துறை துறைமுகத்திற்குள் ஊடுருவி அங்கு தரித்து நின்ற கண்காணிப்புக் கப்பலைத் தகர்த்த முதற் பெண் கடற்கரும்புலி கடற்பரப்பில் காற்றோடு கலந்த கப்டன் அங்கயற்கண்ணி தன்னையும் சரித்திரமாக்கினாள்.

ஒவ்வொரு போராளியினது குருதிச் சுற்றோட்டத்துடனும் கலந்துகொண்டு ஆழ் மனதிலே அழுத்தமாகப் பதிந்துகொண்டாள். இன்னும் இன்னும் கோடிக்கணக்கான நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் பேசப்படப் போகும் வரலாறாக ஆனாள்.

முதல் பெண் தரை கரும்புலி

# மேஜர் யாழினி



**வ**வுனியா சேமன் மடுவில் 1971 ஆம் ஆண்டு மாசி ஐந்தாம் நாள் பிறந்தாள் சுப்புரமணியம் ராகினி என இயற்பெயரைக் கொண்டு பத்துப் பிள்ளைகளை பெற்றடுத்த இவள் தந்தையார், ஒரு விவசாய குடும்பத்தை சார்ந்தவர். இராணுவ ஆக்கிரமிப்பு இவர்களது குடும்பத்திற்கு பெரும் தும்பியலைக் கொடுத்தது.

இவளது மூத்த சகோதரி தர்சினி என்ற பெயருடன் மகளிரின் முதலாவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்து 1987 ஆம் ஆண்டு வீரச்சாவை தழுவிக்கொண்டாள். அதன் பின்னர் 1991 ம் ஆண்டு யாழினி விடுதலைப் புலியாக தன்னையும் இணைத்துக் கொண்டாள்.

இயக்கத்தில் இணைந்த யாழினி 20 ஆம் பயிற்சி முகாமில் அடிப்படை பயிற்சி முடித்து ஒளிக்கலைப் பிரிவில் தனது பணியைத் தொடங்கியிருந்தாள். கலை உணர்வு இவளிடம் இயல்வாகவே இருந்தது. நன்றாக ஓவியங்கள் வரையும் ஆற்றல் இருந்தது, அறிவுசார் புத்தகங்களை வாசித்து வந்தமையால் எல்லோருக்கும் அறிவுரை கூறிக் கொண்டிருப்பாள்.

இயற்கையுடன் ஒன்றிய வாழ்வியல் ஏதாவது புதுமையைச் செய்யத் தூண்டியது. இரண்டு வருடங்கள் விசேட வேவுப் பிரிவில் வேவுப்பணியில் நின்று கட்டைக்காடு, பத்தமேனி, பூநகரி போன்ற சமர்களுக்கான வேவுப் பணியைச் செய்திருந்தாள்.

அதன் பின் 1996 ஆம் ஆண்டு கரும்புலிகள் அணியில் தன்னை இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தாள். தலைமையின் அனுமதி கிடைத்ததும் கரும்புலி பயிற்சியைத் தொடங்கினாள். கடுமையான பயிற்சி எந்தவொரு ஆயுதமாக இருந்தாலும் அதை இலகுவில் இயக்கப் பழகிகொள்ளும் திறன் கொண்டிருந்தாள்.

ஆண் போராளிகளுக்குப் போட்டியாகவே தனது அணிப் போராளிகளையும் மிகவும் துணிச்சல் மிக்கவர்களாக வளர்த்தெடுத்தாள். கலகலப்பு இல்லாத பொறுப்புவாய்ந்த நேர்மையான போராளி.

எப்போதும் எதையும் தட்டிக்கேட்கும் இயல்பு கொண்டிவள். ஆண்போராளிகளின் துணையின்றி பெண் போராளிகள் தனித்து எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இவளது ஆழ்மனதில் இருந்தது.

மணலாற்றில் அரசபடைகளின் கஜபார இராணுவ நடவடிக்கையை முறியடிக்க அமைத்த சண்டைக்களம் இவளது முதற்களம். அந்தச் சண்டையின்போது அவள் மணலாற்றுக் காட்டிலே நின்றாள். ஆரம்பப்பயிற்சி ஆரம்பித்து ஏழு நாட்கள்தான் முடிவுற்ற நிலையில் இவர்களுக்கு காவும் குழுவேலை கொடுக்கப்பட்டது. இறுதிநேரச் சண்டை எதிர்பார்த்ததைவிட அமர்க்களமாக நடந்ததால் அதுவே இவளுக்கு பெரிய அனுபவமாக இருந்தது.

மணலாற்றிலிருந்து புகைப்படப்பிரிவிற்குவந்து புகைப்படக் கலையைக் கற்றுக்கொண்டிருந்த போதுதான் கரும்புலியாகப் போகவேண்டும் என்பதே அவளின் மூச்சாகிப்போனது. அங்கிருந்தபடியே மாதத்திற்கு குறைந்தது ஒருதடவையாவது தலைவருக்குக் கடிதம் எழுதுவாள். அதன்படி அவர் கரும்புலியாகத் தெரிவுசெய்யப்பட்டு வேவுப்பயிற்சி அளிக்கப்பட்டு வேவுகளில் ஈடுபட்டாள்.

ஒருமுறை இயக்கச்சிப்பகுதியில் வேவு எடுக்கச்சென்ற சமயத்தில் நாரிப்பகுதியில் அவருக்குப் பலமான காயம். அந்தக் காயத்தினால் சிறிதுகாலம் நாரிப்பகுதியில் உணர்வின்றி இருந்தாள். அந்த நாட்களிலும் கரும்புலியாகப்போய் சாதிக்கவேண்டும் என்ற உறுதிமட்டும் குறையவில்லை.

''வேவு நான் போய் எடுத்துவாறன்'' என்று உறுதியளித்தபடி யாழினி போயிருந்தாள். சொன்னபடியே பகல்போல நிலவு எறிந்த அந்த இரவில் மின்சார வெளிச்சங்களும் தேடொளியும் சேர்ந்து

இரவைப்பகலாக்க மண் அணை தாண்டி உட்சென்று அவள் எடுத்துவந்த வேவு அவள்மீது எல்லோருக்கும் அசையாத நம்பிக்கையைக் கொடுத்தது.

இலக்குக்குப் போகின்ற கடைசி நேரம்வரை அவளுக்குக் காய்ச்சல். இலக்குக்கான மாதிரிப் பயிற்சியையும் காய்ச்சலுடன்தான் செய்து முடித்தாள். விரைவாகத் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் நழுவிப்போய்விடுமோ என்ற ஆதங்கத்தில் தனது இயலாமையைக்கூட வெளிப்படுத்தாது இரவிரவாக கடுமையான மாதிரிப் பயிற்சிகளைச் செய்து முடித்த பின்பே தனது இலக்குக்குச் சென்றாள்.

''தற்செயலாய் இலக்கை அடையமுதல் அங்கே காயப்பட்டால் கூட குறோல் இழுத்தாவது இலக்குக்குப் போவன்'' என சொல்லிவிட்டுச் சென்ற கடைசி வார்த்தை. ''வெற்றி உறுதி'' என்ற பெயரில் எதிரியால் முன்னெடுக்கப்பட்ட சமரை முறியடிக்கும் முகமாக தாண்டிக்குளம் முகாமை தகர்த்தழிப்பதே இலக்காகக் கொண்டு 06-10-1997 அன்று ஜயசிக்குறுய் படைக்கு விழுந்த முதலாவது மரண அடியாக வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் அமைந்திருந்த 'ஜெயசிக்குறு' நடவடிக்கைப் படைகளின் விநியோக மையம் மீதான கரும்புலித் தாக்குதலில் தாண்டிக்குளம் தாக்குதல் அமைந்துவிட்டது.

இந்த தக்குதலில் கரும்புலி மேஜர் யாழினியுடன் மற்றும் கரும்புலி மேஜர் நிதன், கரும்புலி கப்டன் சாதுரியன், வீரகாவியமாகி இருந்தனர். முதல் பெண் தரைக் கரும்புலி என்ற பெருமையை எமது நாட்டில் நிலை நாட்டி வீட்டிற்கு இரண்டாவது மாவீரராக சாதனை படைத்தவள் முதல் பெண் தரைக் கரும்புலி என்ற இந்த பெருமைக்குரியவள் மேஜர் யாழினி.

*விழுதின் சுவடுகள்*

*தொடர்கிறது...*



## கப்டன் வாணன்

அருமையான குரல் வளம். கல்விச் சாலையில் நிகழ்ந்த அனைத்து நிகழ்வுகளையுமே ஆக்கிரமித்தான். அமோக வரவேற்பு. கவிதை, கட்டுரை என ஆளுமை பரந்தது. விளையாட்டுத் துறைகளிலும்தான் மகாசூரன். விளையாட்டுக்களில், மெய்வல்லுனர் போட்டிகளில் பரிசில்களைச் சான்றிதழ்களை அள்ளிக் குவித்தான்.

ஆயினும்...

இவ்வளவு மட்டுமே போதுமானதா? மனிதத்துவம் பூரணமெய்தியதன் குறியீடுதானா? இல்லை என்ற உண்மையை உறுத்திற்று. சுதந்திரம் அதுவே தன்மை என்பதை உணர்ந்து கொண்டான். மோகன்குமார் வாணனாகியதன் அடித்தளமிது. அவனது தினக்குறிப்பேடு இதையே கோடு காட்டுகிறது.

தினக்குறிப்பேடு...

அஃறினை வடிவம்தான், ஆனால் ஒருவனது ஆத்மாவின் உணர்வு வடிவம். அதனால் பேசவே செய்கிறது இவ்வழியே அவன் பகர்கிறான்!"

எம் இனம் பெற்ற சுதந்திரம் பெறுமதி வாய்ந்தது. அதை எதிரியிடம் விட்டுவிடலாமா? கூடாது எமது இனத்தின் சுதந்திரத்தை மீண்டும் பெற்றுவிட இறுதி மூச்சுவரை போராடுவோம்!

உரும்பிராய்...

வீரத்தின் விளை நிலம். உண்மைதான் தாயக விடுதலைக்காய் எத்தனையோ மாவீரர்களை ஈந்து நிற்கும் மண். இந்த மண் தான் கப்டன் வாணனுக்கும் தாய்மடி அவனது அன்பு, பாசமெல்லாம் அங்கு இழையோடிக் கிடந்தது.

ஆனால்,

வந்து நுழைந்தனர் அழையா விருந்தாளிகள். அவர்தம் அமைதிப்பணியின் சரித்திரச் சான்றுகளாய் விளங்கும் தினங்கள் எத்தனையோ அவற்றுள் ஒன்று.

21.10.1987

கருத்தை மூடிக்கொண்டு தமிழீழத்துட் புகுந்தவர்கள். கண்களை மூடிக்கொண்டு தமிழீழத்துட் புகுந்தவர்கள். கண்களை மூடிக்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குட் புகுந்தனர். துப்பாக்கிச் சன்னங்கள் துப்பித் தள்ளின. வைத்தியர்கள் தாதிமார்கள், ஊழியர், நோயாளிகள், பார்வையாளர்கள்.... ஏராளமான தமிழுயிர்கள் உறிஞ்சப்பட்டன! அவர்களுள் ஒருவராய்ச் சண்முகலிங்கம் ‘அம்புலன்ஸ்’ ஓட்டுனர் வாணனின் தந்தை.

இந்த அமைதிக்கான அமர்க்களத்துள் இவன், இவன் தம்பி சிக்கி நின்றனர். தம்பியின் கையிற் காயம். அவசரமாய்க் கட்டுப்போட்டான். அவனை அணைத்தபடி சரிந்து குவியும் சடலங்கட்குள் புகுந்து கொண்டான்.

வேறு வைத்தியர்கள், உயரதிகாரிகள் விரைந்து வந்தனர். எஞ்சியோரை மீட்க முனைந்தனர். இந்த ஆரவாரத்தைச் சாதகமாக்கினான். காயத்தின் வழிக் குருதிப் பெருக்கினாற் சோர்வுற்றிருந்த தம்பியைத் தோளிற் தூக்கினான். சுற்றுமதிலேறிக் குதித்து நல்லூரிற்கு வந்து சேர்ந்தான். அங்கு தம்பிக்கு மருந்து கட்டிக் கொண்டு தாயாரைச் சென்றடைந்தான்.

தந்தையின் மறைவு விழிகளைத் துளைத்துச் சென்ற கொடூரக் காட்சி பிஞ்சி மனத்தை வெகுவாய்த் தைத்துவிட்டது. சுதந்திரம் பற்றிய எண்ணங்கள் அவனுள் தூவத் தொடங்கின. போராட்டம் பற்றிய உணர்வு முளைவிடத் தொடங்கின.

அப்போதும்...

பத்தாம் ஆண்டு பயிலும் அப்பாவி மாணவனாய் இருந்த அவனை அந்நியப் படை, ஆக்கினைகள் அலைக் கழிந்தன. அடிக்கடி கைது செய்யப்பட்டான். அம்மா லோகநாயகியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. துணையை இழந்த பறவை தன் குஞ்சுகளையாயினும் காப்பாற்றத் துடித்தது. அது தாய்மையின் இயல்பே! ஒருவாறு பிள்ளைகளைக் கொழும்பிற்குக் கொண்டுபோய்ச் சேர்ந்தார். அம்மா நிம்மதிப் பெருமூச்சு. ஆனால் அன்னை நிலையிலிருந்து அந்நியப்பட்ட நிலை.... கொடுமையானதாய் இருந்தது. அவனுக்கு ஏற்றுக் கொள்ளவே மனம் ஒவ்வில்லை. என்னை யாழ்ப்பாணத்துக்கு

அனுப்பு.... அனுப்பு' என அம்மாவுக்கு ஒரே அரியண்டம். சண்டைகூடப் போட்டான். அவனைச் சமாதானப்படுத்த அம்மாவுக்குப் படாதபாடு ஒருவாறு தேற்றியாயிற்று.

அவனையறியா விதத்தில். அவனை வெளிநாட்டிற்கு அனுப்பி விடுவதற்கான ஏற்பாடுகள் நடந்தன. ஏதோ விதமாய் அறியவந்துவிட்டது. ஆத்திரமடைந்தான். அந்த விடுதியில் போத்தலொன்று கண்களில் தென்பட்டுவிட்டது. ஆவேசமாய் எடுத்தான் உடைத்தான் கையிற் பெரிதாய் எல்.ரீ.ரீ.ஈ. என எழுதினான். குருதி ஆறாய்க் கொட்டியது. ஆனால் மருத்துவரிடம் செல்வதோ ஆபத்து. இது எதிரிகள் சூழ்ந்த அந்நியமண்! அம்மா தன்னால் இயன்ற முதலுதவியளித்தாள். குருதிப் பெருக்கு கட்டுப்பட்டது.

தொடர்ந்தும் கொழும்பில் வைத்திருப்பது நல்லதல்ல. அம்மாவை அச்சம் கவ்வியது. தமிழகத்திற்கு அழைத்துச் சென்றார். சிகிச்சை நடந்தது. மெல்லக் காயம் ஆறிற்று. விடாப்பிடியாய் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டான்.

போராளிகளுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டான். ஆதரவாளனாகச் செயற்படத் தொடங்கினான். இராணுவ நடமாட்டங்களைக் கண்காணித்து தகவல்களைக் கொடுத்து வந்தான்.

இவ்வேளை,

இந்திய ஆளும் வர்க்கமானது தமிழீழத்தில் கற்க விரும்பிய பாடம் கற்று முடியும் தருவாயினையும் அடைந்தது. 'சுதந்திரத்தையே உயிர் மூச்சாய்க் கொண்ட ஒரு நாடு அது சின்னஞ் சிறுசாய் இருப்பினும் அதன் வீரஞ்செறிந்த எதிர்ப்பின் முன்னே வல்லரசு என்பது வெறும் புல்லே' என்ற உண்மையினைச் சுமந்தவாறு இந்தியப்படை பின்வாங்கிக் கொண்டது.

இடையே,

தாயகம் மீது தற்காலிகமாய் கவிந்திருந்த வசந்தத்தின் போது, இவனும் இவனது அண்ணனும் இணைந்து கொண்டனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் முழுநேர உறுப்பினர்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டனர்.

இருவரும் ஒன்றாகவே பயிற்சியெடுத்தனர். வாணன் உழவு இயந்திர விபத்தொன்றில் சிக்கிக் கொள்கிறான். ஒரு கை உடைந்துவிட்டது. சிகிச்சை சிறிது நாட்கள்தான். நீண்ட கால ஓய்வு என்றால் விடுதலை வீரனுக்கு அது சாவினிற்தான்' என்று கூறுமாப்போல் துள்ளியெழுந்து வந்தான். மீண்டும் பயிற்சியைத் தொடர்ந்தான்.

பயிற்சி நிறைவெய்தியதும் காவலரண் ஒன்றில் கடமை புரிகிற வேளைகளில் எதிரிப்படையினரின் நிலைமைகளைச் சென்று கண்காணிப்பான். ஆனால் கத்தி விளிம்பில் நடக்கிற இச்செயலின் ஆபத்து. அவனுக்கு பெரிதாய்ப்பட்டதில்லை. மகிழ்ச்சியைக் கொடுத்து. உற்சாக ஊக்கியாய் இருந்தது.

03.11.1990 அன்று நடாத்தப்பட்ட மாவிட்டபுரம் சிறீலங்காப்படை மினிகாம் தாக்குதலுக்கு முன் வேவு பார்க்கும் பணியினை இவன் ஏற்றிருந்தான். மிகச் சாதுரியமாகச் சென்று தகவல்களைத் திரட்டி ஒன்றும் மீதியின்றி தளபதியிடம் பகர்ந்தான். மேலதிக உறுதிப்பாட்டிற்காக தளபதியினால் அனுப்பப்பட்ட போராளிகளினால் கொண்டுவரப்பட்ட தகவல்களும் இவனுடையதை ஒத்து அச்சொட்டாகவே இருந்தது. வேவுக் கடமைகளிலும் இவன் ஆளுமை மிளிர்ந்தது.

இத்தாக்குதலுக்காக எதிரியின் நிலைகளை நோக்கி இவன் சகபோராளிகள் ஊர்ந்து முன்னேறி நிலையெடுக்கின்றனர். தளபதியின் கட்டளை பிறக்கிறது.. எதிர்பாராத் தாக்குதலில் எதிரிப்படையினர் நிலைகுலைந்து போயினர். நிதானிப்பதற்குள்ளாகக் குண்டுபட்டு வீழ்கின்றனர். எறிகணைகள், உலங்குவானூர்திகள் உக்கிரம் கொண்டு எமது நிலைகளைத் தாக்குகின்றன. குண்டு வீச்சு விமானங்கள் எமது முன்னேற்றத்தைத் தடுக்கப் பகீரதப்பிராயத்தனம் செய்கின்றன. ஆயினும் இவர்கள் எதிரிப்படையின் நிலைகளை அழித்தனர். மினி முகாமைக் கைப்பற்றினர். எதிரிப்படையினர் தமது ஆயுதங்களை வீசிவிட்டு, காயமுற்ற தமது சகாக்களைத் தூக்கிச் சுமந்தவாறு ஓட்டமெடுத்தனர். அவற்றையும் கைப்பற்றி எமது நிலைகளை நோக்கி மீள்கையில். எங்கிருந்தோ வந்ததொரு குண்டு இவன் உடலைப் பதம் பார்க்கின்றது. குருதியாறு நிலத்தை நனைக்கிறது. அவனது தினக்குறிப்பு வரிகள் குரலிலேயே நெஞ்சுள் ஒலிக்கிறது.

‘தமிழா, நீ பிறவி எடுத்தாலும் நீ பிறந்த மண்ணுக்காக ஒரு துளி இரத்தத்தைக் கொடுத்துவிட மறந்திடாதே. தமிழா...

மாவிட்டபுரம் மினிமுகாமைத் தகர்த்து வீரசாதனை புரிந்தவர்களில் ஒருவரான இவன் தனது விழுப்புண் ஆறமுன்னே அடுத்த சமர்க்களத்திற் குதித்தான். 19.12.1990 அன்று கட்டுவனில் சிறீலங்காப் படையினருடனான கடுஞ் சமர் முன்னேற முயல்கின்றனர் எதிரிப்படையினர். தடுத்து நிறுத்துவதில் இவனது துப்பாக்கியும் சுறுசுறுப்பாய்த் துரிதமாய் இயங்கியது.

05.02.1991 அன்று நடந்த தச்சன் காடு மினிமுகாம் தாக்குதலிலும் இவனது பங்கு அளப்பரியது.

சகதோழர்கள்மேல் இவன் காட்டுகிற கரிசனை அபாரம். அவர்களை வழிநடத்துகிற ஆற்றலை அவர்களே புகழ்ந்துரைப்பார்கள். இராணுவம் முன்னேறிவந்த ஒரு தடவை, இவனது குழுவைச் சேர்ந்த ஒருவன் அசட்டையாக எழுந்து நின்று அவதானித்தான். இவன் கண்டிப்பும் அன்பும் கலந்த தொனியிற் சொன்னான். 'எவ்வளவு கஸ்டத்தின் மத்தியில் ஒவ்வொரு போராளியையும் அண்ணை உருவாக்கி வைச்சிருக்கிறார். நீ என்னெண்டா சும்மா மண்டையைப் போடுகிறன் என்டு எழும்பி நிக்கிறாய். இந்தச் சிறுவயதிலேயே தலைமைத்துவத்திற்கு விசுவாசமிக்கவனாக, ஒவ்வொரு போராளியினதும் பெறுமதி உணர்வாகத் தன்னை நிலை நிறுத்தியிருந்தான். பங்கு பற்றிய அனைத்துத் தாக்குதலுமே மிக நிதானத்துடனும், திறமையாகவும் செயற்பட்டு தளபதிகளின் பாராட்டுதலுக்கும் அன்பிற்கும் பாத்திரமாகிவிட்டான்.

இவனைச் சார்ந்ததால் எத்துணை பெருமை அம்மாவுக்கு, கற்ற கல்விச் சாலைகளிற்கு..... இவனது தாயகத்தின் மீதான தணியாப்பற்று. சுதந்திரத்தின் மீதான தீராக் காதல் உறுதி அம்மாவின் சிந்தனையிலும் சிறிய கருத்துக்களை விதைத்துவிட்டது. தன் பிள்ளைகளுக்கு மட்டுமே அம்மா என்று குறுகி நிற்காது. 'எல்லாப் போராளிகளுக்குமே நான் அம்மா என்று எண்ணக் கூடிய உன்னத நிலைக்குத் தாயை உயர்த்திவிட்டான். மருத்துவ மனையிற் சிகிச்சை பெற்று வந்த எல்லாப் போராளிகளுமே அவரை 'அம்மா அம்மா' வாயும் மனம் நிறைய அழைப்பார்கள். தலையை வருடி. காற்று விசுக்கி, பாசத்தால் அவர்களைப் பராமரித்தார். வைத்தியர்களோ, பெற்றோரோ, சகோதரர்களோ சில நேரம் வரத்தவறிவிட்டாலும் இந்த அம்மா ஒருபோதும் வரத் தவறியதில்லை.

'மாவீரனின் தாய்' என்ற நியாயமான நிமிர்வு இந்த அம்மாவிடம் நிறைய இருந்தது. வாணன் வள்ளுவன் வாக்கைச் செழுமைப்படுத்தி ஈன்ற பொழுதிற் பெரிய துவக்கும் தன்மகன் மாவீரன் எனக் கேட்ட தாய்' என வளர்த்தெடுத்துவிட்டான்.

கல்விச்சாலைகள்...

எமது கல்விமான்களை உருவாக்குகின்றதே அன்றிக் கவரிமான்களை உருவாக்குவதில்லை என்பது பெரிய குறை. ஆயினும் நற் சிந்தனையால். பகுத்தறிவு கொண்ட தன்மான மறவர்கள் எம்மண்ணில் வாழவே செய்கின்றனர். அவர்கள் விடுதலை வீரர்கள்!

இவர்களுள் ஒருவனை தம் மாணவனாய்க் கொண்டதில் பெருமையடைகின்றன கல்விச் சாலைகள். ஆம்! வாணன் எமது பழைய மாணவன் என இறுமாந்து நிற்கின்றன உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயமும் உரும்பிராய் இந்துக் கல்லூரியும்.

24.11.1991 இது மிகத் தன்நலக் காரத் தினமோ? இத்துணை புகழ் பூத்த எம் வாணனைத் தன்னுடன் அழைத்துச் சென்று விட்டதே.

பாரிய வெடியோசைகள் வலி காமம் கிழக்கின் தலையில் வடிகின்றது. அந்தக் காலை இவ்வாறு தான் தொடங்கிற்று! இப்பிரதேசத்து ஈவினைப் பகுதி மண்ணின் இயல்பான செம்மை எம்மவர் குருதியால் மேலும் சிவப்பேறி.... மூவர் விதையாகின்றனர். எதிர்பாராத கந்தக வீச்சில் மாசுற்ற எம்சூழற் காற்று இவர் தம் இறுதி மூச்சால் தூய்மை பெறுகிறது. இந்த மூவரில் ஒருவன்தான் ....வாணன்!

ஓ..! கேட்கிறது உனது ஆத்ம ராகம்.

அது தான் உனது குறிப்பேடு'

வீரத்திற்கு வித்திட்ட தமிழா !

கோழைக்குக் குடை பிடிக்கலாமா?

கூடாது எமது இழப்புக்கள்.

இழப்பு அல்ல விடுதலை என்னும்

பயிருக்கு இடப்பட்ட உரமே !

எமது இலட்சியம் ஓங்குக !

உனது குறிப்பேடு, வெறும் கையேடல்ல. பின்தொடர்ந்து வரும் இளைய வீரர்களுக்காய், தாயக மக்களுக்காய் நீ எழுதி வைத்த மரண சாசனம். அது புனிதம் மிக்கது. ஏனெனில் உனது புகழுடம்பின் சட்டைப் பையிலிருந்து அதை நாம் எடுத்தபோது அதுவும் குருதியிற் குளிப்பாட்டப்பட்டிருந்தது.

அதன் உயிர்த் துடிப்பும், துடிப்புமிக்க வேதவாக்கியங்களை என் உதடுகள் உச்சரித்துக் கொண்டே இருக்கின்றன...

**- துஸ்யந்தன்**

நன்றி : களத்தில் இதழ்,

19.02.1993.

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **கப்டன்**

*இயக்கப் பெயர்:* **வாணன்**

*இயற்பெயர்: சண்கலிங்கம் மோகனகுமார்*

*பால்:* **ஆண்**

*முகவரி:* **உரும்பிராய் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **01.08.1973**

*வீரச்சாவு:* **24.11.1991**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம், ஈவினைப்பகுதியில் ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **கோப்பாய்**

*மேலதிக விபரம்:* **கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## மேஜர் முரளி

மரணத்தை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தினந்தோறும் மரணத்தை எதிர்பார்த்து பயந்து பயந்து அடிமையாய் வாழ்வதை வெறுப்பதனால் வீரமரணத்தை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கின்றோம். தேச விடுதலை நோக்கிய அர்த்தமுள்ள மரணங்கள் ஒவ்வொன்றுமே இந்த மண்ணின் ஒவ்வொரு அங்குலத்தையும் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது.

மேஜர் முரளியும் இப்படியானவர்களில் ஒருவனாக மரணித்து இன்று எல்லோர் மனங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அந்நிய தேசங்களில் தங்களின் வாழ்க்கையை ஆழப்படுத்தியவர்களிற்கும் அதற்காக முனைபவர்களுக்கும் இவனது வாழ்க்கை ஓர் ஆராய்ச்சிக்குரிய வரலாறு. முரளியின் வாழ்நாளில் சில ஆண்டுகள் வெளிநாடு ஒன்றிலே நகர்ந்து கொண்டிருந்தது. அந்த நாட்களில் சிங்களப் பேரினவாதம் தமிழின அழிப்பை விஸ்தரித்துக் கொண்டிருந்தது. தமிழர்களின் சமூக முன்னேற்றத்திற்கான ஒவ்வொரு துறைகளிலும் இனவாதம் தன் கோரப் பிடிகளை இறுக்கத் தொடங்கியது. இந்த நிகழ்வுகளின் பிரதிபலிப்புகள் அந்நிய தேசத்தில் இருந்த முரளியின் உணர்வுகளை ஆழப்பாதித்தன.

உரிமையை வேண்டி எம் உணர்வுகள் திரும்பாதவரை அடிமை வாழ்வை நாம் அங்கீகரித்தவர்களாவோம். என்ற யதார்த்த வடிவம் அவன் சிந்தனையில் உறைய, அவன் தன் தேசத்திற்கான கடமையினைச் செய்யத்தயாரானான். ஆரம்பத்தில் தான் இருந்த நாட்டில் இருந்தே தன் பணியினைத் தொடங்குகின்றான்.

சோசலிச ஜனநாயகக் குடியரசு என்று தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ள சிறீலங்காவின், தமிழர்களிற்கெதிரான

இனவெறி ஒடுக்குமுறைகளை அம்பலமாக்கும் பிரச்சார நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த முரளி. பின் தன்னை ஒரு முழுநேரப் போராளியாக்கி தான் பிறந்த மண்ணிலேயே தன் கடமைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அவாவுடன் இந்தியாவிற்கு போர்ப் பயிற்சியை பெறுவதற்காக வந்து சேர்ந்தான்.

அவன் நினைத்திருந்தால் இளமையான தன் நாட்களை அவன் ஏற்கனவே இருந்த அந்த வெளிநாட்டிலேயே களித்தும். உழைத்தும், தன் உறவுகளை அழைத்தும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் தான் சார்ந்த இனத்தின் கடமையினையும், இந்த மண்ணின் அவலத்தையும் மிதித்து வாழ்வதற்கு அவனது உணர்வுகள் இசையவில்லை.

இந்தியாவில் போர்ப்பயிற்சியினை முடித்துக் கொண்டு முரளி தமிழீழம் வந்து. தாயக மண்ணில் தேசவிடுதலைக்கான தன் பணிகளை ஆரம்பித்தான். ஆரம்பத்தில் முரளி மக்களுடன் அன்பான உறவுகளை வளர்த்து அதனூடாக இத் தேசத்தின் விடுதலையின் அவசியத்தையும் அதற்கான ஒவ்வொருவரின் கடமையினையும் தெளிவுபடுத்தும் பணியில் ஈடுபட்டு வந்தான்.

சிறீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்து வீதிகளில் ரோந்து வந்த அந்த நாட்களில்தான் இவனது அரசியல் வேலைகளும் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. இராணுவத்தினர் அங்கும், இங்கும் புலிகளைத்தேடி அலைந்து திரியும்போது அதற்குள் கிடைக்கும் இடைவெளிகளினூடு இவனது துவிச்சக்கர வண்டி நுழைந்து கொண்டு தன் பணியினை மேற்கொள்ளும். பொழுது புலர்ந்த நேரத்திலும். இரவின் நிசப்தம் நீடித்த வேளையிலும் முரளியின் துவிச்சக்கரவண்டி வாழைத்தோட்டங்கள்,செம்மண் வரப்புகள், குச்சொழுங்கைகள் ஊடாக தேசவிடுதலையின் சுமையினைத் தாங்கிச் செல்லும்.

பிரதேச ரீதியாக அரசியல் வேலைகளைச் செய்து வந்த முரளி 1985 ஆம் ஆண்டு கடைசிக் காலப்பகுதியில் தமிழீழத்தில் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் பொறுப்பினை ஏற்றான். மாணவர் மத்தியில் தனது பணிகளை ஆழப்படுத்திய முரளி, ஒவ்வொரு மாணவ உள்ளங்களுடனும் அன்பான முறையில், தோழமையுடன் பழகுவான். சிறிலங்கா இனவாத அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்வி ஒடுக்கு முறையால் தமிழ் மாணவ சமுதாயம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும், இதன் பாதிப்பினால் தமிழ்ச் சமூக பொருளாதாரத் துறைகளில் ஏற்படுத்தப்படும் தாக்கங்களையும் பற்றி தெளிவான முறையில் விளக்கங்கள் கூறுவான். இதன் மூலம் இந்த மாணவ சமுதாயம்

போராட்டத்துடன் இணைந்து நிற்க வேண்டியதன் அவசியத்தை ஆதாரபூர்வமாகவே எங்கள் ஒவ்வொருவரிற்கும் உணர்த்தி நின்றவன் மேஜர் முரளி.

மாணவர்கள், ஆசிரியர்கள், அறிவாளர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி 1986 ஆம் ஆண்டில், எம் மக்களின் எதிர்காலத்தை நோக்கி என்றவொரு பெரும் பொருட் கண்காட்சியை சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடாத்தியிருந்தான். இந்தப் பொருட் கண்காட்சி வெறும் கண்காட்சியாக மட்டும் அமைந்திருக்கவில்லை.

தமிழீழத் தேசமானது ஒரு பொருளாதார வளமற்ற நாடு என்று கூறித்திரிந்தவர்களிற்கு ஒரு ஆச்சரியக் குறியாக இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது. ஆம்! தமிழீழமானது தங்கு நிலை அற்ற பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பக் கூடிய அனைத்து வளங்களையும் கொண்டநாடு. இதில் சமூக, விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளும், துறை சார்ந்தவர்களும், ஏனைய மக்களும் தங்கள் அனைத்து வளங்களையும், ஆற்றலையும் தமிழீழ தேச விடுதலைக்காக அர்ப்பணிப்பார்களாயின் விரைவாக. சுயபொருளாதாரங் கொண்ட தமிழீழத்தை உருவாக்க முடியும் என்ற ஆதார பூர்வமான தெளிவான விளக்கத்தைக் கொடுப்பதாக இது இருந்தது.

எல்லா மாணவர்களினதும் நலன்களில் அக்கறை கொண்டவனான முரளி, அவர்களுக்கென கல்வி வளர்ச்சிக் கழகங்களை நிறுவியும், அவர்களிற்கான விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்தியும் வந்தான்.

முரளி அடிக்கடி கூறிக்கொள்வான், சிறீலங்காவின் இராணுவ இயந்திரங்கள் தமிழீழ மண்ணில் இருந்து அகற்றப்பட்டால்தான் தமிழீழம் தன் இறைமையுடன் மீண்டும் நிமிர்ந்து நிற்கும். தனது சொல்லுக்கேற்பவே முரளி பல இராணுவத் தாக்குதல்களிலும் பங்கு கொண்டான். 23.03.1987 இல் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய விடுதி மீது நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலிலும் தன்னை இணைத்துக் கொண்டான். இத் தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டபோது இவன் களத்திலே விழுப்புண்களை தனதாக்கிக் கொண்டான்.

அமைதி காக்கவென்று இங்கு வந்த இந்திய இராணுவம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க முயன்றது. இதன் மூலம் தமிழ்த்தேசிய இனத்தையே அழிக்க முயன்றபோது வெடித்த இந்திய – தமிழீழப் போரில் இவன் பல களங்களில் நின்று போராடினான். கோப்பாய் பகுதியால் முன்னேறிய இந்திய இராணுவத்தை எதிர்த்து நின்ற அணிக்கு இவன் தலைமை தாங்கிச் சண்டையிட்டான்.

இந்திய இராணுவம் குடாநாட்டினுள் தன் நடமாட்டத்தை தொடங்கிய பின்னும் முரளி இங்கு நின்று கொண்டே தன் போராட்டப் பணிகளை மேற்கொண்டிருந்தான். வழமைபோலவே அன்றும் அதிகாலை புலரத் தொடங்குகின்றது. ஆனால் 23.12.1987 அன்று மாறாக.... முரளியின் துவிச்சக்கரவண்டி ஓடித்திரிந்த அந்த வாழைத் தோட்டத்தின் செம்பன் பரப்புக்களில் இந்திய இராணுவம் சுற்றி நிற்கின்றது. சற்று நேரத்தின் பின் அமைதியான அந்தப் பொழுதுகள் துப்பாக்கி வேட்டொலிகளினால் அலங்கோலப் படுத்தப்படுகின்றது. ஆம் அங்கே முரளியும். அவனது தோழர்களும் இந்த மண்ணை முத்தமிடுவதற்கான தங்கள் இறுதி நேரத்தினைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். இந்நேரத்தின் முடிவில் இந்த மண் தன் விடுதலைக்காக இம் மாவீரர்களை எடுத்துக் கொள்கிறது.

நன்றி : களத்தில் இதழ் 06.03.1992

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **மேஜர்**

*இயக்கப் பெயர்:* **முரளி**

*இயற்பெயர்:* **வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **மேஜர் முரளி வீதி, ஆவரங்கால், யாழ்ப்பாணம்**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **10.06.1958**

*வீரச்சாவு:* **23.12.1987**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம், உரும்பிராயில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின்போது இடம்பெற்ற மோதலில் வீரச்சாவு.**



## ௨ ஆம் லெப்டினன்ட் சுரேந்தினி

வலிகாமத்தின் வடபகுதியில் அமைந்த அழகிய கிராமம்தான் இளவாலை. விவசாயிகளின் கை வண்ணத்ததில் பசுமை குறையாது செழிப்புடன் விளங்கியது. தமிழீழச் சுதந்திரப் போராட்டத்திற்குபெரும் உறுதுணையாக பல ஆண், பெண் போராளிகளைத் தந்து புகழ்பூத்த மண்ணது. அந்தமண்ணில் பிறந்ததாலோ என்னவோ ஜனந்தினியும் அச்சம் சிறிதும் இன்றி ஆயுதம் கரத்தில் ஏந்திகளம் பல கண்டு வீரச்சாவை புகழுடன் தழுவிக் கொண்டவள்.

சேர்ந்த பரமானந்தம் தம்பதிகளுக்கு மூன்றுச கோதரர்களுக்கு ஒரே ஒருஅன்புச் சகோதரியாக ஜனந்தினி மலர்ந்தாள். ஒரேயொரு பெண் குழந்தை என்று பெற்றோரும் இனத்தவர்களும் மிகச் செல்லமாக ஜனந்தினியை வளர்த்தார்கள். அவளை நல்லமுறையில் கற்பித்து ஆளாக்கவேண்டுமென பெற்றோர் பெருவிருப்புக் கொண்டனர். அவர்களின் விருப்பத்துக்கமைய தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை ஜனந்தினி ஆரம்பித்தாள். கல்வியில் அவள் கொண்டவிருப்பு அவளை ஆவலுடன் படிக்கத் தூண்டியது. ஒவ்வொரு வகுப்பிலும் தங்கு தடையின்றி சித்தியெய்தினாள். இவளின் கல்வித்திறமையை பார்க்க கொடுத்து வைக்காமல் தந்தையார் இவளது சிறுவயதிலிலேயே காலமாகிவிட தாயின் அன்பான அரவணைப்பில், அவள் கொடுத்த ஊக்கத்தில் கல்விப் பொதுத் தராதரச் சாதாரணப் பரீட்சையில் திறமைச் சித்திகள் பல பெற்று சித்தியெய்தினாள். உயர் வகுப்பை உன்னதமாகப் படித்துத் தேறிவிடவேண்டுமென உறுதியான எண்ணதுடன் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தவேளை அவளது எண்ணத்தைக் கலைத்தது சிறிலங்கா இராணுவத்தில் தமிழர் மீதான தாக்குதல்கள்.

சிங்கள இராணுவம் தமிழர்மீது கோரத் தாக்குதல்கள் மாத்திரம் மேற்கொள்ளவில்லை. ஒரு இனஅழிப்பையேமேற் கொண்டிருந்தனர். அத்தோடு தமிழரின் முன்னேற்றத்துக்கான கல்வியைத் திட்டமிட்டு அழிக்க முற்பட்டனர். அவர்களின் கொடூரத்தனமான குண்டுவீச்சுக்கு அடிக்கடி தமிழ்ப் பிள்ளைகள் படிக்கும் கல்விக் கூடங்கள் இலக்காகிச் சிதறின. இராணுவ நடவடிக்கைகளால் சேதமுறாத பள்ளிக்கூடங்களே தமிழ் மண்ணில் இல்லை என்று சொல்லலாம். கல்வியில் மேன்மை அடையவேண்டுமென பெருவிருப்புக் கொண்டிருந்த ஜனந்தினியின் மனதை இது பெரிதும் பாதித்தது. தமிழ் மக்களின் உயிரினும் மேலான பொக்கிசமான கல்வியைப் பயில வாய்ப்பில்லாத நிலையை உருவாக்கிய அந்த எதிரிமீது ஜனந்தினி உள்ளூரக் கோபம் கொண்டாள். கல்வி கல்விக்குத் தடையாய் இருக்கிற இந்தப் பேய்களை.... கோபத்தில் குமுறியவள் எதிரியை ஒழிக்க 1995 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அணியில் போராளியாக இணைந்து கொண்டாள். 30 ஆவது பயிற்சிமுகாமில் தனது ஆயுதப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டாள். பயிற்சியின் நுட்பங்களைமிக இலகுவாகப் புரிந்துகொண்டு பொறுப்பாளர்களின் நன் மதிப்பைபெற்றுக் கொண்டாள். பயிற்சி முடிந்து வெளியேறும்போது சுரேந்தினி என்னும் போராளியாக வெளிவந்தாள். பயிற்சிமுடிந்த பின் மற்றைய போராளிகளுடன் உயிர் காக்கும் சேவையான மருத்துவப் பகுதிக்கு அந்தத் துறையைப் பயில்வதற்காக அனுப்பப்பட்டாள். அந்த மருத்துவக் கல்லூரி பயிற்சியும் சுரேந்தினிக்குபெரும் அக மகிழ்வினைத் தந்தது. போருக்குப் பக்கபலமான பெரியசேவை மருத்துவச் சேவை. போரில் காயப்படும் போராளிகளின் உயிரைக் காப்பாற்றுவதும் குணமடையச் செய்துஎதிரியைஅழிக்கமீண்டும் களம் அனுப்பும் பாரிய பணியை மருத்துவ பிரிவுவல்லவா செய்து கொண்டிருக்கின்றது. அந்தச் சேவையில் விருப்புடன் செயலாற்றியதாலோ என்னவோ சுரேந்தினியின் முகம் எந்தநேரமும் சாந்தமாக அமைதியாக இருக்கும். சக போராளிகளுக்குளந் நேரமும் எந்தவித உதவி என்றாலும் சிறிதும் தயங்காமல் இன்முகத்துடன் செய்துமுடிப்பாள். கோபம் என்பதை இவளிடம் காணவேமுடியாது. மருத்துவத் துறையில் மிகவும் திறமையாகவும் கடமை உணர்வுடனும் செயற்பட்டாள்.

தான் மாத்திரம் திறமையாக இருந்தால் போதாதுமற்றவர்களும் திறமைசாலிகளாக வரவேண்டும் என்பதற்காகதான் கற்ற அறிவினை மற்றவர்களுக்கும் எடுத்து விளக்குவாள். தமிழர் வாழ்வைக் குலைத்து இனத்தின் குரல்வளையை முறுக்கி நறுக்கிவிடவென சிங்கள

இராணுவத்தால் சூரியக்கதிர் 01 என நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இரவுபகல் பாராது கண்விழித்த போராளிகளைக் காப்பாற்றுவதில் கடமை உணர்வில் ஈடுபட்டாள். அவளது சேவையைப் பெற்று எத்தனையோ போராளிகள் மீண்டும் களம் ஏறினார்கள். மருத்துவம் என்கின்ற அந்தப் புனிதசேவையில் அவள் தொடர்ந்து ஈடுபட்டாள். சூரியக்கதிர் 01 நடவடிக்கையை அடுத்து முல்லைச் சமர்க்களத்தில் அவளது மருத்துவப் பணிதொடர்ந்தது. போர்க்களத்திற்கு மிக அருகே அவள் பணிவிடம் அமைந்திருந்தது. எதிரியின் வெறிகொண்ட தாக்குதலுக்கு சுரேந்தினி குறியானாள். அவள் உடல் தளர்ந்தது. மெல்லமெல்ல மண்ணில் சரிந்தாள். தமிழர் தம் போர்க்காவியம் படைத்த முல்லைமண் அவள் உடலைத் தழுவிக் கொண்டது. அவள் மாவீரர் ஆனாள்.

இவளின் அன்பான நெருக்கமும் திறமையான செயற்பாடுகளும் இவளது சக போராளிகளுக்கு எந்நாளும் அவளை நினைவு கூரச் செய்யும். அவள் விட்டுச் சென்றப ாதையில் உறுதியுடன் விரையும் கால்கள் வெகுவிரைவில் தமிழீழம் வென்றெடுக்கும்.

நினைவுப்பகிர்வு: **போராளி**

நன்றி - களத்தில் இதழ் (17.06.1999).

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

நிலை: **2 ஆம் லெப்டினன்ட்**

இயக்கப் பெயர்: **சுரேந்தினி**

இயற்பெயர்: **பரமானந்தன் ஜனார்த்தனி**

பால்: **பெண்**

முகவரி: **முள்ளிப்பனை, இளவாலை, யாழ்ப்பாணம்.**

மாவட்டம்: **யாழ்ப்பாணம்**

வீரப்பிறப்பு: **17.09.1977**

வீரச்சாவு: **19.07.1996**

நிகழ்வு: **முல்லைத்தீவு படைத்தளம் மீதான ஓயாதஅலைகள் நடவடிக்கையின்போது வீரச்சாவு**

துயிலுமில்லம்:**கனகபுரம்**

மேலதிகவிபரம்: **கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## கப்டன் அஜித்தா

அடர்ந்தகாடு, பயிற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றனர் புதிய போராளிகள். பயிற்சிக்காக வழங்கப்படும் துப்பாக்கிகளை வைத்து விட்டு அசட்டையாக ஒரு நிமிடம் நின்றுவிட்டால் திரும்பிப்பார்க்க துப்பாக்கி இருக்காது. அநேகமாக எல்லோருக்கும் தெரியும். அஜித்தாக்கா தான் எடுத்திருப்பா என்று இன்று இந்தத் துப்பாக்கியில் இருக்கும் கவலையீனம் தான் நாளை எமது போராளிகள் உயிரைக் கொடுத்தெடுத்த துப்பாக்கிகளிலும் இருக்கும். அவர்களின்ரை உயிர்கள் தான் இந்தத் துப்பாக்கிகள். ஆனபடியால் அவற்றை எங்கட உயிரைவிட மேலாக நினைக்க வேண்டும். கவனமாக அவற்றை நேசித்தபடி வைத்திருக்க வேண்டும். என்று கூறித் திரும்பத் தருவா.

இந்தக் காலத்தில்தான் எங்களுடைய பாசறை அமைந்திருக்கும் பகுதி ஒரு சிறு அழகான குடியேற்றமாக அற்புதமான பூங்காவாக மாறிக்கொண்டிருந்தது. ஒரே பாதையைச் சுற்றி எமது வாசஸ்த் தலங்களாக சாக்குக் கொட்டில்கள். அத்தனைக் கொட்டில்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசமாக பளிச்சென்று ஒழுக்காக அமைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் ஒழுங்காக துப்பரவாக அடுக்கப்பட்டிருக்கும். வேலைகள் யாவும் நேர்த்தியாக செய்து முடிக்கப்பட்டிருக்கும். அல்லது சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கும். பார்த்த உடனேயே பட்டெண்டு சொல்லிவிடலாம் அது அஜித்தாவின் குழு என்று.

அந்த அளவிற்கு வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டுமென்றும், எந்தளவு கெதியாக வேலைகளைச் செய்கின்றோமோ அந்தளவிற்கு இயக்கத்தின் வளர்ச்சி, போராட்ட

வளர்ச்சி விரைவு பெறும் என்பதும், தரப்படுகின்ற வேலைகளை மகிழ்வுடன் ஏற்றுச் செய்யவேண்டும் என்பது அஜித்தாக்காவினுடைய விரிவுரைகளாக இருக்கும். விரிவுரைகளுக்கு மட்டுமல்ல அஜித்தா, அந்த விரிவுரைகளுக்கு விளக்க குறியீடாகவும் இருந்தவள்.

அஜித்தா இந்த போராட்டத்திற்குக் காலடி எடுத்து வைத்த காலகட்டம் வித்தியாசமானது. பெண்கள் தாமும், தமது குடும்பமும், வீட்டு வேலைகளும் தான் உலகம் என்று எண்ணியிருந்த சமூக அமைப்புக்குள் இருந்து அந்தத் தடைகளை உடைத்து வெளியேற வேண்டிய காலம்.

யாழ். மாவட்டத்திலிருந்து நேரடியாக ஆயுத பயிற்சிக்குப் பெண்கள் அனுப்பப்படவில்லை. ஆனாலும் இந்த சமூகத்தின் மாறுபட்ட பார்வைகளுக்கு மத்தியில் இந்தத் தேசத்திற்காக ஏதோ ஒரு வகையில் தன்னுடைய செயற்பாடுகள் அமையவேண்டும் என்பதனால் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினூடு தனது வேலைகளைச் செய்தாள்.

தொடர்ந்து கால கட்டத்தில் பெண்களுக்கான பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்டபோது அதில் அஜித்தாவும் ஒருத்தி. இயக்கத்தில் ஏற்கனவே ஒரு அண்ணா, மூடக்கொள்கையில் ஊறிப்போன சமுதாய அமைப்பு, அத்தகைய சூழலில் இருந்து அஜித்தா இயக்கத்துக்கு வந்தமை அவள் விடுதலையை எந்த அளவிற்கு நேசித்தாள் என்பதனைப் புலப்படுத்தும்.

ஒழுங்கான பயிற்சி அப்போது எந்த வேளையிலும் ஓட்டத்தில் அஜித்தாதான் முதல். பயிற்சியை முடித்து இந்த மண்ணில் இருந்து எதிரியை வீழ்த்தும் துப்பாக்கிகளில் தனது துப்பாக்கியும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று வந்தவள், ஆதிக்கம் அடிபணிய வைக்கும் ஒப்பந்தத்தைத் திணித்தது கண்டு குமுறினாள். எரிமலைகளுக்கு முன்னால் இந்த ஒப்பந்தம் எத்தனை நாளைக்கு நின்று பிடிக்கும்? சில மாதங்களின் பின்னால் எமது அனுமதியின்றி இந்த மண்ணில் எந்த அந்நியனும் நுழைய முடியாது. அப்படி நுழைய முடியுமென்றால் அது எமது பிணங்களுக்கு மேலாற்றான். என்று எமது பொறுப்பாளர் கூறி ‘இதற்கு நீங்கள் தயார் என்றால் எம்முடன் வாருங்கள்’ என்ற போது அஜித்தா சொல்லாமல் கொள்ளாமலே வாகனத்தில் ஏறிவிட்டாள்.

சண்டை ஆரம்பித்துவிட்டது. யாழ் மருத்துவபீடத்தில் இறக்கப்பட்ட இந்திய இராணுவம் அனைத்தும் சடலங்களாகச் சமைந்து போயின. இதில் பெண் போராளிக்குழுக்கள் பெரும் பங்கினை வகித்தனர். அங்கே சடசடத்த துப்பாக்கிகளில் அஜித்தாவின்

துப்பாக்கியும் ஒன்று. வீழ்த்தப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கையில் அவளுக்கும் பங்குண்டு. பலத்த எதிர்ப்புக்களுக்கும், இழப்புக்களுக்கும் மத்தியில் எமது மக்களின் உடல்களை ஏறி மிதித்தபடி அங்குல அங்குலமாக முன்னேறியது இந்திய இராணுவம். புற்றீசல் போல் புறப்பட்டவர்களைப் புலிப்படை பொசுக்கியது. ஆனைக்கோட்டை, தாவடி, தெல்லிப்பளை என இராணுவத்தை அஜித்தா எதிர்கொண்டாள். தெல்லிப்பளையில் இவளுக்கு மோசமான வயிற்றுளைவு. எழுந்து நடக்கவே முடியாது. திரும்பும் இடமெங்கும் ஆக்கிரமிப்பாளர்களின் துப்பாக்கிகள் குறி பார்த்தபடி. ஆனால் அவளின் உள்ளம் சோர்வடையவில்லை. விடுதலைக்கு மட்டும்தான் அங்கே இடம் கிடைத்தது.

அஜித்தாவைப் பொறுத்த வரையில் வித்தியாசமான கஷ்டங்கள் நிறைந்த - ஆனால் மகிழ்ச்சியான ஒரு புது வாழ்வை எதிர்கொண்டாள். அதுதான் அந்தக் காட்டு வாழ்க்கை. அங்கே எங்களுக்கு எல்லாமே நாங்கள்தான். எமது தேவைகள் எல்லாவற்றையும் நாமே தான் பூர்த்தி செய்யவேண்டும். உடுப்புத் தைப்பதிலிருந்து வெடிபொருட்கள், கண்ணிகள் உற்பத்தி செய்வது வரைக்கும் அஜித்தாவின் கை படிந்திருக்கும். அங்கிருந்த அனைத்துப் பெண் போராளிகளும் அணிந்திருந்தது அஜித்தா தைத்த உடுப்புத்தான். இரவு, பகல் என்ற எந்த வித்தியாசமும் அவளுக்கில்லை. அந்தளவிற்கு அவளின் கடமை உணர்வு அவளை ஆட்கொண்டிருந்தது.

அவளின் அண்ணன் பக்கத்தில் உள்ள முகாமுக்கு முக்கிய பொறுப்பாளராக இருந்தான். அவள் அதிகமாகக் கூறுவாள், அறியாமல் கூட நான் தவறு செய்யக் கூடாது. அப்படி தவறு செய்து விட்டால், நான் தண்டனை பெறும்போது அண்ணாவுக்கு அவமானம் என்று. எந்தப் பிள்ளையையும் அன்பாகத்தான் அணைப்பாள். ஆனால் கூடவே கண்டிப்பும், தவறுகளுக்கான தண்டனைகளை வழங்கிவிட்டு பின் கூப்பிட்டு ஆறுதலாக அந்தத் தவறுகள் இனிமேல் விடக்கூடாது என்றும், அதற்காகத்தான் தண்டனைகளைத் தந்தேன் என்றும் மிக நீண்ட விரிவுரை. ஆம்! அவள் மகளிர் படைப்பிரிவைப் பொறுத்தவரையில் ஒரு பேராசிரியர்தான். அன்று எல்லாம் வழமையாகத் தான் இருந்தது. ஆனால் அஜித்தா மட்டும் விம்முகின்றாள், ஆற்றமுடியாத அழுகை, எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. எல்லோருமே அப்படி அப்படியே உறைந்து போனார்கள். முகாமிலுள்ள அத்தனை பேரும் ஒன்று கூடிய ஒரு கருத்துப் பரிமாற்றத்தின் பின் மெல்ல எல்லோரும் அதிர்ந்தவர்களாய்... அஜித்தாவின் அண்ணாவிற்கு இயக்கக் கட்டுப்பாட்டு விதிகளை

மீறியமைக்காய்.... அதி உயர் தண்டனை. எந்த அண்ணனுக்காக தான் அறியாத தவறு ஒன்றுக்காகக் கூட தண்டனை பெறக்கூடாது என்று இருந்தாளோ, அந்த அண்ணா தெரிந்து விட்ட குற்றத்திற்காகத் தண்டனை! அவள் அழுததெல்லாம் அண்ணன் இயக்கத்தின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்து விட்டான் என்ற ஆத்திரத்தாலும், அவமானத்தாலும்தான். அந்தத் தண்டனையை தான் வழங்கப் போவதாகக் கேட்கிறாள். ஆனால் இயக்கம் மறுத்துவிட்டது. அவளின் விசுவாசத்திற்கு முன்னால் நாங்கள் விக்கித்துப் போனோம்.

அதற்குப் பின்னால் இந்தத் துரோகத்தினால் உள்ளுக்குள் வெகுவாகப் பாதிக்கப்பட்டாலும் எதுவுமே நடக்காததுபோல் அமைதியாகி விட்டாள். தொடர்ந்து தனது குழுவும் தன் வேலைகளுமாக முன்னையைவிட இன்னும் தூய்மையைப் பேணுபவளாக இருந்தாள்.

எமது மகளிர் படைப்பிரிவு புதிய போராளிகளை உருவாக்கி விரிவடைகின்றபோது ஒரு படையணி காட்டிற்குள் இருந்து நாட்டிற்குவர அதற்கு அஜித்தாவும் ஒரு குழுத் தலைவியாக வந்தாள்.

மூன்று வருடங்களுக்குப் பின்னால் பெற்றோரை இவள் சந்தித்தபோது இந்த நிகழ்வினை அவள் எப்படிச் சொன்னாள் என்பதெல்லாம் எமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் புரிகின்றது தாய்ப் பாசத்துக்கு முன்னால் அண்ணனின் நிலையினையைத் தங்கை சொல்லும் போது அவள் உள்ளம் பலவிதமான உணர்வுகளைச் சந்தித்திருக்கும் என்பதுதான்.

காட்டிற்குள் இருந்து நாட்டிற்கு வந்த கொஞ்சக் காலத்திற்குள்ளேயே வரலாற்று எதிரியுடன் மீண்டும் யுத்தத்தை நடத்தினோம். பலம் வாய்ந்த எதிரியும் பலம் வாய்ந்த கோட்டை மதில்களைச் சுற்றியும் முற்றுகை யுத்தம் நடாத்தினதில் ஒரு அணிக்கு அஜித்தாவின் தலைமை பொறுப்பேற்கின்றது.

அப்போதெல்லாம் ‘அவ்ரோ’ விமானமும், பொம்மர் விமானங்களும் குண்டுகளை வீச இன்னொரு விமானம் உணவுகளைப்போடும். இவற்றிற்கு மத்தியில் வீரசிங்கம் மண்டபத்தில் 5ஆவது மாடியில் அஜித்தா எல்.எம்.ஜி உடன் நிற்பாள். கோட்டைக்குள்ளே சில பார்சல்கள் விழ அதை எடுக்க ஓடி வரும் இராணுவத்தினர் அந்த இடத்திலேயே விறைத்து விடுவார்கள். கோட்டை முகாமைத் தாக்கி அழிக்கும் முயற்சி ஒன்றிலும் அவள் தலைமை ஏற்று குழுவுடன் சென்றாள். முற்றுகைப் போருக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவம் பின்பக்கத்தால் ஓடியது. கோட்டையில் இன்று புலிக்கொடி பறக்கிறது.

ஓய்விற்கும் அவளுக்கும் அவகாசம் இல்லை. பலாலி இராணுவம் வெளியேறியபோது குப்பிளான் கட்டுவான் பகுதிகளில் அவள் துப்பாக்கி முழங்கிறது. கட்டுவனில் எதிரியை மறித்து நிலைகளை அமைத்துக் காவல் கடமையைத் தொடர்ந்தாள்.

25 அல்லது 30 யார் தூரத்தில் இருக்கும் இராணுவ நிலைகளை அறிய வேண்டும். அவர்களின் நடமாட்டங்களை அறியவேண்டும். முகாம் பலப்படுத்தும் அல்லது விஸ்தரிக்கும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த வேலைகளின் போது அவள் முன்னால் சென்ற பின்பே பிள்ளைகள் பின்னால் செல்ல வேண்டும். எமது நிலைகளுக்கு முன்னால் சென்று அவர்களின் நிலைகளுக்குக் கிட்ட நின்று அவள் துப்பாக்கி சந்தமிடும். எந்தப்போராளியும் அவளுக்குத் தெரியாமல் முன்னால் போக முடியாது. அவளுக்குத் தெரிந்து அவள் நிற்கையில் தான் முன்னால் போக வேண்டும். இது அவளின் இறுக்கமான கட்டளை.

அஜித்தா என்றால் அனைவருக்கும் அன்பு நிறைந்த பயம். அவளின் நடத்தையில் அன்பும் கண்டிப்பும் நிறைந்திருக்கும். நாங்கள் ஒரு விடுதலை அமைப்பு. அதிலும் மிக மோசமான சமூக அழுத்தங்களில் இருந்து புறப்பட்டவர்களின் அடுத்த பரம்பரை எம்மைப்பார்த்து எமக்கு பின்னால் வரவேண்டும். ஆனபடியால் நாங்கள் ஒழுக்க சீலர்களாக, பண்பாடுள்ளவர்களாக, வீரமுள்ளவர்களாக, மொத்தத்தில் தனித்துவமுள்ளவர்களாக வளரவேண்டும். என்பன அவள் உதடுகள் அடிக்கடி உச்சரிக்கும் வசனங்கள்.

22.12.90 அன்று கட்டுவன் பகுதியில் இருந்த இவளது பக்கமாக இராணுவம் முன்னேறுகின்றது. ஒரு குழுவுடன் நின்ற இவளுக்குத் தகவல் வருகின்றது. மறுபக்கமாக எதிரி வெளியேறுகின்றான் என்று. ஓடி வந்து கட்டளையைப் பிறப்பித்து நிலை எடுத்து ஒவ்வொருவராகக் குறிபார்த்துச் சுடுகின்றாள். இந்தா ஒருத்தன்... ம் அடுத்தவன்... எண்ணி எண்ணி அவதானமாகத் தான்... எந்த நிலையிலும் பதற்றப்படாது. பரபரப்படையாது. நிலைமையை விளங்கி ரவைகள் வீண் போகாது அடிக்கவேண்டும். என்றவளின் துப்பாக்கி நிதானத்தை விட்டு மெல்லச் சரிகிறது. வீரத்தின் சாட்சியாய் நெஞ்சிலே குண்டினை ஏந்தியபடி குருதி கொப்பளிக்க அவள் சாய்கிறாள். ஆம்! எங்கோ இருந்து ஒரு கொடியவனின் குண்டு அவள் உடலில். அந்த சண்டையில் பெண் போராளிகள் பல ஆயுதங்களை எடுத்தார்கள். அவள் அடிக்கடி சொல்வாள் சண்டையில் நாங்கள் ஆயுதங்கள் எடுக்கவேண்டும். அப்பிடி நல்லா அடிபட வேண்டும்

என்று அப்படியே சண்டை பிடித்தார்கள்.

ஆனால் அந்த உணர்வினை ஊட்டியவள் அங்கே இல்லை. ஒரு உன்னதமான போராளியை நாம் இழந்தோம். ஒரு பேராசிரியரை மகளிர் படைப் பிரிவு இழந்தது. ஆனால் அவள் வளர்த்த பிள்ளைகள் அவளின் உணர்வைச் சுமந்து இன்று பல களங்களில். ...

நன்றி : களத்தில் இதழ்

*20.03.1992*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **கப்டன்**

*இயக்கப் பெயர்:* **அஜித்தா**

*இயற்பெயர்:* **சுகுணராணி கந்தையா**

*பால்:* **பெண்**

*முகவரி:* **சுகுணராணி விதி, அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **22.05.1968**

*வீரச்சாவு:* **22.12.1990**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம் கட்டுவனில் சிறிலங்கா படையினருடனான சமரில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **கொடிகாமம்**

*மேலதிக விபரம்:* **கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## லெப். கேணல் வேணு

கண்ணிவெடி தாக்குதல் நடந்ததாம். பத்து ஆமி செத்துப் போனாங்களாம். இரண்டு வரிகளில் இந்தச் செய்தி முடிந்துவிடும். ஆனால் இதனுடைய பெறுமதி, இதன் பரிமாணம் மிகப் பெரியது.

இதேவேளை கண்ணிவெடித் தயாரிப்புகளில் - முயற்சிகளில் நாம் இழந்துள்ள செல்வங்களின் பெறுமதியை நினைத்தால் கைதடி-அடம்பன்-நீராவியடி-வஞ்சியன்குளம்.... என்ன தவறு நடந்தது?

பெரும்பாலும் இதனைச் சொல்வதற்கு இதனுடன் சம்பந்தப்பட்ட எவருமே மிஞ்சுவதில்லை. இவ்வாறான சம்பவங்களில் ஒன்ற தான் மன்னாரை அதிரப்பண்ணிய வஞ்சியன் குளம் விபத்து. மன்னார் பராந்தியத் தளபதி லெப்டினன் கேணல் வேணு, மேஜர் குகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணி ஆகியோரை எம்மிடமிருந்து பறித்தெடுத்த சம்பவம் அது. பூநகரியிலிருந்து முள்ளிக்களம் வரையிலான அந்தப் பிராந்தியத்திலுள்ள மக்கள் அனைவருக்குமே இவர்கள் நன்கு பரிட்சயமானவர்கள். ஆகையால் இவர்களின் இழப்பு இப்பிராந்தியத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் எதிரொலித்தது.

இச்சம்பவத்தில எம்மால் இழக்கப்பட்டவர்களுள் ஒருவரான கப்டன் குட்டிமணி பேசாலையைச் சேர்ந்தவன். 1988ஆம் ஆண்டு இந்தியப் படையினரின் நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலத்தில் எம்முடன் இணைந்து கொண்டவன். பயிற்சி முடிந்ததும் வெடிகுண்டுகள் தயாரிக்கும் பிரிவில் பணிபுரிந்தான். கண்ணிவெடிகள் வைப்பதில் கைதேர்ந்தவன். இந்தக் காடும், வெளியும் எமக்கே சொந்தம் என்பதை மிதிவெடிகள் மூலம் இந்திய

இராணுவத்தினருக்கு உணர்த்திக் காட்டியவன். சொந்தக்காலுடன் வந்த இந்திய இராணுவத்தை செயற்கைக் காலுடன் அனுப்பி வைத்தவன்.

மேஜர் குகன், மேஜர் சயந்தன் இருவருமே 1985 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இயக்கத்துடன் இணைந்து கொண்டவர்கள். இவர்களில் குகன் மன்னார் பிராந்தியத்திற்கு அப்பாலும் அநேக போர்க்களங்களைக் கண்டவன். இந்திய இராணுவம் எமது மக்கள் மேல் போர் தொடுத்த போது, அதை யாழ்ப்பாணத்தில் பல களங்களில் எதிர்கொண்டவன். முதல் முதல் இந்தியப்படையை ஆயுதங்களுடன் சரணடையச் செய்த தாக்குதலிலும் பங்குபற்றியவன். கொண்டச்சி, கஜவத்தை, வஞ்சியன்குளம் என பல்வேறு இடங்களிலும் சிறீலங்காப் படையினருக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தியவன்.

ஒருமுறை இராணுவ நிலைகளை வேவு பார்க்கச் சென்ற போது இளைய தோழன் ஒருவனால் இவனது பிரத்தியேக ஆயுதம் இழக்கப்பட்டது. அந்தச் செய்தி மட்டும் தான் விசேட தளபதி சுபனைச் சந்தித்தது. அடிப்பட்ட புலியாகத் திரிந்த இவன் மிகவும் ஆபத்தான பகுதி ஒன்றில் இரவு நேரம் வந்து கொண்டிருந்த ஜீப் ஒன்றின் மீது தாக்குதல் தொடுத்து அவ்வண்டி எரிந்து கொண்டிருக்கையில் நாலுக்கு மேற்பட்ட ஆயுதங்களைக் கைப்பற்றி அவற்றுடன் சென்று தான் விசேட தளபதியைச் சந்தித்தான். இது தான் புலிகளுக்கேயுரிய பாரம் பரியம். இந்த வழிவழியாக வந்த சொத்து என்னிடமும் உள்ளது என்பதை நிரூபித்துக் காட்டியவன்.

உப்புக்குளத்தைச் சேர்ந்த மேஜர் சயந்தன் தளபதி வேணுவுடன் இணைந்து மருத்துவக்குழுவில் பணியாற்றியவன். அத்துடன் போர்க்களத்தில் பணியாற்றத் தகுதி படைத்த சாரதியுமாவான். நீண்ட காலமாக தொழில் முறையில் வைத்தியம் பார்க்கும் வைத்தியர்களே வியக்கும் வண்ணம் மருத்துவப் பணிகளை ஆற்றியவன். தம்பனையில் நிகழ்ந்த சண்டையில் காயமடைந்த போராளிகளைக் காப்பாற்றி வாகனத்தில் கொண்டு செல்லும்போது குண்டு வீச்சு விமானம் ஒன்று அந்த வாகனத்தைத் துரத்தித் துரத்திக் குண்டுகளைப் போட்டது. எனது வேகத்திற்கேற்ப குண்டு வீசுவதற்கு இனிமேல் தான் நீங்கள் பழகவேண்டும் என்ற செய்தியை உணர்த்தும் வகையில் மிக வேகமாக வாகனத்தைச் செலுத்தி வந்து அவர்களைக் காப்பாற்றியவன். ஆட்காட்டி வெளி இந்தப் பெயரைக் கேட்டாலே சிங்கள இராணுவத்திற்கு மூக்குச் சிவக்கும். பொதுவாக அடம்பனுக்கு அப்பாலுள்ள இடங்கள். அவர்கள் வரைபடத்திலும் உயர இருந்து விமான மூலமுமே பார்க்கவேண்டிய பகுதிகளாகும். இப்பகுதிக்குள் கால் வைக்க முனையும் ஒவ்வொரு கட்டத்திலும் அச் சம்பவத்திலும்

சம்பந்தப்பட்ட சிங்கள இராணுவத்தினர் வாழ் நாள் முழுவதும் மறக்க முடியாதபடியான தாக்குதல் நடக்கும். இங்கு தான் மன்னார்ப் பிராந்திய தளபதி வேணுவும் உருவானான்.

1984 ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைந்து கொண்ட இவன் மன்னார் தளபதியாக விளங்கிய லெப்.கேணல் ராதாவின் பயிற்சி முகாமில் உருவாகியவன். மன்னார் தீவினுள் சிறீலங்கா இராணுவம் எமது இரு போராளிகளைச் சுட்டபோது மன்னார் கோட்டைக்குப் பக்கத்தில் லெப்.கேணல் ராதாவின் தலைமையிலான அணி பதிலடி கொடுத்தது போல, 1988 ஆம் ஆண்டு அடம்பனில் எமது இரு போராளிகளைக் கைது செய்த சிறீலங்கா இராணுவம் அவர்களை இந்திய இராணுவத்திடம் கையளித்ததிற்குப் பதிலடி கொடுக்கத் தீர்மானித்தான். அடம்பன் முகாமுக்கு மிகக் கிட்டிய தூரத்தில் ஜீப்பில் வந்த சிறீலங்காப் படை உயர் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தி இராணுவ ரீதியில் பதிலடி கொடுத்தான்.

பயிற்சி முகாமில் இருந்து வெளி வரும்போது இவன் ஒரு வைத்தியனாகவே வந்தான். விஞ்ஞானப் பிரிவில் அவன் கற்ற கல்வி மருத்துவப் பயிற்சிகளை அவன் பெற்றுக் கொள்வதற்கு பெரிதும் உதவியது. இவன் பங்கு கொண்ட முதல் தாக்குதல் மன்னார் மாவட்டப் போராளிகளைப் பொறுத்த வரை மிக முக்கியமானதாகும். மன்னார்தீவினுள் அமைந்திருந்த இந்த மாவட்டத்தின் பிரதான பொலிஸ் நிலையத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இத் தாக்குதலின் போது காயமடைந்த போராளிகளுக்கு வைத்தியனாகச் சென்றான். அன்றிலிருந்து மன்னார் மாவட்டப் போராளிகளைப் பொறுத்தவரை அவனே டாக்டர். ஆனாலும் இடையிடையே கிடைக்கும் போர்க்களங்களிலும் தனது முத்திரையைப் பதிக்க இவன் தவறவில்லை.

17.01.1986 அன்று நாயாற்று வெளியில் அப்போதைய மன்னார் மாவட்டத் தளபதியான லெப்.கேணல் விக்ரரைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினரைக் கண்டால் சந்தியில் வழிமறித்துத் தாக்கிய குழுவில் இவனும் ஒருவனாக இருந்தான். பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற நிலையில் ஓடிய இராணுவம் நீண்ட காலத்துக்கு அந்தப் பக்கத்தையே நினைக்காமலிருந்தது. பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் போன்ற மிகப் பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பலத்த போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியிலேயே மன்னார் அடம்பன் போன்ற வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டும்.

இவனோ அந்த நிலையை மாற்றி மக்களைத் தேடி மருத்துவம் செய்யும் மருத்துவனானான். ஆட்காட்டி வெளியில் வைத்திய நிலையம் ஒன்றினை நிறுவி அப் பகுதி மக்களின் அன்புக்குப் பாத்திரமானான். இரவு – பகல் எந்த நேரமானாலும் பொதுமக்களுக்கோ, போராளிகளுக்கோ வேணுதான் டாக்டர்.

இக்காலத்தில் மக்களிடையே மிகவும் பிரபலமானவன் வேணு. அவர்களோடு அவன் பழகிய விதம். மக்களை அரவணைத்துச் செல்லும் பாங்கு என்பனதான். குடும்பத்தவர் எவருமே இந்த மண்ணில் இல்லாத நிலையில் இவன் மறைந்த போது உனக்குச் சொந்தங்கள் நிறைய உண்டு எனக் கூறிற்று. பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தி வரண்ட பூமியாம் மன்னாரைத் தம் கண்ணீரால் ஈரமாக்கினர் அப்பகுதி மக்கள்.

07.11.1989 அன்ற வில்பத்துக் காட்டில் பச்சைப் புலிகள் எனப்படும் சிறீலங்காப் படையினர் மேற் கொண்ட தாக்குதலை இவன் முறியடித்த விதம் சாதனைக்குரியதாகும். பெட்டியுடன் இணைக்கப்பட்ட உழவு இயந்திரத்தில் தனது தோழர்கள் 14 பேருடன் பயணமாகிக் கொண்டிருந்தான் இவன். அப்போது மறைந்திருந்த சிறீலங்காப் படையினர் இவர்கள் மேல் தாக்குதல் தொடுத்தனர். பாதுகாப்பான நிலைகளில் இராணுவத்தினர். பாதகமான நிலையில் போராளிகள். ஆனாலும் இவன் எதிர்த் தாக்குதல் தொடுத்தான். சண்டையை எமக்குச் சாதகமாக மாற்றினான். அதனால், உயிரிழந்த தமது சகா ஒருவனைக் கூட விட்டு விட்டு சிறீலங்காப் படை தப்பியோடியது. உயிரிழந்த இராணுவத்தினது உடலுடன் ஒரு சில ஆயுதங்களையும் கைப்பற்றி வந்தான் இவன். இத் தாக்குதலில் ஈடுபட்ட அணிக்குத் தலைவனும் இவனே, வைத்தியனும் இவனே.

இந்திய இராணுவத்துடனான போர் நிகழ்ந்த காலப்பகுதி இவனை மன்னார் மாவட்டத்தின் எதிர்காலத் தளபதியாக இனங்காட்டியது. இயக்கத்தின் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் வல்லவன் இவன்.

1991ம் ஆம் ஆண்டு இவன் மன்னார் மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்றான். அக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் தமது திட்டங்களை சிறீலங்கா இராணுவத்தினருக்கு மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைமையை தோற்றுவித்தது .

அன்று அது ஒரு கொடிய நாள். ஏற்கனவே மிகப்பெரிய வெற்றிகளையெல்லாம் (60 இராணுவத்தினர் பலியான சம்பவம் உட்பட) எமக்குத் தந்த வஞ்சியன் குளத்தில் எமக்கு ஒரு சோகம்

காத்திருந்தது. சிறந்த தளபதி திறமையான மருத்துவன் - மன்னார் மக்களின் அன்புக்குப் பாத்திரமான வேணுவை இழந்தோம்.

அவனுடன், மேஜர் சயந்தன், மேஜர் குகன், கப்டன் குட்டி மணி என்று நால்வரை எங்கள் நான்கு கண்மணிகளை வெடி மருந்து விபத்தில் நாம் இழந்தோம்.

**- சுரேஸ்**

*நன்றி : களத்தில் இதழ்,*

*17.04.1992.*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப்.கேணல்**

*இயக்கப் பெயர்:* **வேணு**

*இயற்பெயர்:* **பிரான்சிஸ் றொபேட் சேவியர்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **ஆண்டான்குளம், அடம்பன் மன்னார்.**

*மாவட்டம்:* **மன்னார்**

*வீரப்பிறப்பு:* **19.10.1964**

*வீரச்சாவு:* **06.01.1992**

*நிகழ்வு:* **மன்னார், நறுவிலிக்குளத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **ஆட்காட்டிவெளி**

*மேலதிக விபரம்:* **ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## லெப். மாதவன்

அன்பின் மாதவனண்ணா இப்போது நான் 'ஓ மரணித்த வீரனே! உன் சீருடைகளை எனக்குத்தா' என்ற பாடலைக்கேட்பது இல்லை. அதை ரசிக்கக் கூடியளவுக்கு இருக்காது. 29-1-1991 அன்று கொடுவாமடுவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்புறப்படும் போது நீங்கள் நடந்து கொண்டவிதம் கண்ணில் தோன்றும். உங்களது ட்றவலிங்பாக், புகைப்பட அல்பம், சேர்ட ஜீன்ஸ் எல்லாவற்றையுமே ஒவ்வொருக்கும் ஒவ்வொன்றாக பகிர்ந்து கொடுத்தீர்கள். நீங்கள் அணிந்திருந்த ஆடைகள் மட்டுமே எஞ்சியிருந்தன. ஏன் அப்படிச் செய்தீர்கள்? உங்களது வீரச்சாவுத் திகதி இதுதான் என்பது உங்களுக்கு எப்படி இவ்வளவு நிச்சயமாகத் தெரிந்தது?

அந்தத் தாக்குதலில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 11 பேர் படுகாயமடைந்தனர். நாம் பல றைபிள்களைக் கைப்பற்றினோம் என்றாலும் சோகத்துடன் தான் முகாம் திரும்பினோம். எமது தளபதி ஜோய் அண்ணா, நீங்கள் றோயல், தீபன் ஆகிய நால்வரையும் அல்லவா அத்தாக்குதலில் இழந்தோம். தாக்குதல் முடிந்து வந்ததும் உங்களது ஜீன்ஸ், சேர்ட் போன்றவற்றைப் பெற்றவர்கள் அவற்றைக் கையிலெடுத்துக் கொண்டு பட்ட வேதனை...

மரணித்த வீரனே! பாடலில் மரணித்தவனிடம் தான் அதைத் தருமாறு குறிப்பிடப்படுகிறது. ஆனால் நீங்களே மரணிக்கும் முன்னரே அவற்றைத் தந்துவிட்டுச் சென்றீர்கள். மரணித்த பின்னர் உங்கள் ஆயுதத்தை மட்டு மல்ல. அத்தாக்குதலில் எல்லோருக்கும் முன்னதாக நீங்கள் ஓடோடிச் சென்று கைப்பற்றிய ஆயுதத்தையும் தந்தீர்கள், இப்போது சொல்லுங்கள் அந்தப் பாடலை எப்படி ரசிப்பது?

உங்களுக்கு அன்றுதான் வீரச்சாவைச் சந்திப்பீர்கள் என்பது உறுதியாகத் தெரிந்தது. ஆனால் எமக்கு அப்படித் தெரியவில்லை. நான் இன்றைக்கு திரும்பி வாறேல்ல என்று சொன்னபோது வழக்கமாக எல்லாத் தாக்குதல்களுக்கும் போகும் போது சொல்வதைத்தான் சொல்கின்றீர்கள் என நினைத்தோம். வழக்கத்துக்கு மாறாக உங்களது உடைமைகளைக் கையளித்ததற்கு இப்படியொரு அர்த்தத்தை கற்பிக்கவில்லை. தாக்குதலுக்குப் போகவேண்டிய அவசரத்தில் அந்த மாதிரியான சிந்தனைக்கும் நேரம் கிடைக்கவில்லை. இதை நாம் அப்படி நினைக்காததற்கு இன்னுமொரு காரணம் இருந்தது. சாவுக்கே உங்களை நெருங்கப் பயம் எனத் திடமாக நாங்கள் நம்பினோம். வந்தாறுமூலையில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் கழுத்திலும், இடுப்பிலும் காயமுற்று இனி பிழைக்கவே முடியாது' என்றிருந்த நிலையிலும் தப்பினீர்கள். யாழ்ப்பாணத்திற்கு வைத்தியத்திற்கு அனுப்பப்பட்டு உங்கள் பழைய குரலை மட்டும் இழந்த நிலையில் திரும்பி வந்தீர்கள். அதனால் உங்களுக்கு இனிச் சாவே இல்லை என நம்பினோம். அப்படியெல்லாம் எமக்கு நம்பிக்கையூட்டிய நீங்கள் இந்தத் தாக்குதலில் மட்டும் ஏன்?

உங்களது காற்சட்டைப் பையினுள் கண்டெடுத்த உங்கள் வாழ்க்கையினைப் பற்றிய குறிப்புக்களை நான் வாசித்தேன். அதை நீங்கள் முடிக்கவில்லை. அதை நீங்கள் முடிக்கும் வரை அந்த ரவை (உங்களைச் சந்தித்த) காத்திருக்கவில்லை. தமிழினம் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. என்ற செய்தியைச் சொல்லும் உங்கள் வரலாற்றுக் குறிப்பினை எமது மக்களுக்குச் சொல்கின்றேன்.

எனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள்...

நான் எனது தாய் தந்தையுடன் இருக்கும் போது நடந்த துன்பங்கள்

நான் பிறந்த - இடம் மூதூரில் பின் கிளிவெட்டியில் சிறுவனாக இருந்தபோது.

1972 ஆம் ஆண்டு சிங்களம் தமிழ் என்ற (சேகுவரா) குழப்பத்தினால் நான் எனது தாய் தந்தையுடன் அகதிகளாக வந்தாறுமூலைக்கு வந்தோம். பின் சில வருடம் இருந்தேன். எனக்குச் சகோதரர்கள். 10 பேர் இதில் அக்கா இரண்டு பேர் எனக்கு அண்ணன் ஒருவர் தான். மற்றவர்கள் தம்பிமார் 6 பேர். எல்லோரும் ஒன்றாக இருக்கும் போது எனது அக்கா திருமணமானார். அதன் பின் அண்ணன் திருமணமாகி விட்டார். அதன் பிறகு 6 மாதத்தால் எனது அப்பா இறந்துவிட்டார். 3 மாதத்தால் எங்கள் ஊரில் கண்ணிவெடி நடந்தது.

அதில் எங்கள் வீடு எரிக்கப்பட்டது. நாங்கள் பின் அகதிகளாய் ஓடிச் சென்றோம். கொஞ்ச நாள் எங்கள் சேனை வாடியில் எனது தாயுடனும் சகோதரர்களுடனும் இருந்தேன்.

இருக்கும் வேளை எங்கள் எல்லோரையும் அண்ணன் தான் பார்த்து வந்தார். எங்களுக்காக எம் அண்ணன் சாமான் எடுக்க ஊருக்குச் சென்ற வேளை ஆமி அண்ணனைச் சுட்டு விட்டான். நாங்கள் கேள்விப்பட்டதும் கத்தினோம் கதறினோம்.

பின் என்ன செய்வது? நானும் எனது அடுத்த தம்பியும் அம்மாவைப் பார்த்து வந்தோம். நான் ஐந்தாம் வகுப்பில் பள்ளியை விட்டு விலகி நான் குருவிக்காவலுக்கு போனேன். ஒரு வருடம் நின்றேன். சம்பளம் எடுத்தேன். அம்மாவிடம் கொடுப்பேன். மற்ற தம்பிமாரையும் படிக்க வைக்கவேண்டும் என்று கஸ்ரப்பட்டு உழைத்தேன். வெள்ளாமை வெட்டுவேன், வரம்பு கட்டுவேன், இப்படி எல்லாம் மூன்று வருடம் இருந்தேன். எனக்கு அடுத்த தம்பி படித்துக் கொண்டிருந்தவன். பத்தாம் வகுப்புக்கு பிறகு அவனும் விலகி வேலைகள் செய்து கொண்டு திரிந்தான். எனக்கு உதவியாகத் திரியும் போது ஒரு வாடிக்கு வேலைக்குச் சென்றான். அந்த நேரம் சிவத்தப் பாலத்தை நோக்கி வந்த இந்திய இராணுவம் எனது தம்பியை பிடித்து வந்தது. சிவத்தப் பாலத்துக்கு அவ்விடத்தில் வைத்து வெட்டிக் கொன்றனர். அவ்விடத்தில் தாட்டனர். இந்திய வெறியர்கள் எனக்குத் தாங்க முடியாத வேதனை!

எனது அம்மா அப்பாவை நினைத்துக் கத்துவார். அண்ணனை நினைத்துக் கத்துவார். தம்பியை நினைத்துக் கத்துவார். என்னால் பார்க்க முடியாது. அம்மாவுடன் 5 தம்பிமார். 1 அக்கா. இவர்களை நான் விட்டுப்போட்டு 1989-08-10 ஆம் திகதி இயக்கத்தில் சேர்ந்தேன். நான் அம்பாறையில் நடந்த 7 ஆம் றெயினிங் பெச்சில் எடுத்தேன். மனோ மாஸ்டர் தலைமையில் றெயினிங் நடந்தது. எங்கள் றெயினிங் முடிந்ததும் கண்ணன் குறுப்பில் இருந்தேன். அதேவேளை எனது தாயார் ஒருவருடத்திற்கு பிறகு என்னைச் சந்தித்தார். மல்வத்தையில் வைத்து உங்களால் முடிக்கப்படாத அந்த வரலாற்றுக் குறிப்பு இவ்வாறுதான் அமைந்தது.

தமிழீழத்தின் எல்லைப்புறக் கிராமங்களில் ஒன்றாக மல்வத்தையில் கண்ணன் அண்ணாவின் குழுவில் ஒரு உறுப்பினராக இருக்கும் போது தான் மீண்டும் போர் தொடங்கியது. நீங்கள் கல்முனைப் பொலிஸ் நிலையம்? இராணுவ முகாம் என்பனவற்றின் மீது தாக்குதல் தொடுத்தீர்கள். உங்களது தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவத்தினர் உயிரிழந்த தங்கள் சகாக்களின் உடல்கள்,

ஆயுதங்களை என்பனவற்றைக் கைவிட்டு கடல் வழியாகத் தப்பிச் சென்றனர்.

தொடர்ந்து அட்டாளைச்சேனை, தன்னாமுனை ஆகிய பகுதிகளில் சிங்களப் படையினருக்குப் பாடம் புகட்டினீர்கள். கழுவங்கேணியில் நீங்கள் நடத்திய தாக்குதலில் குண்டுதுளைக்காத கவசங்களால் உங்கள் உயிரைக் காக்க முடியாது என்று அவர்களுக்கு புரியப்படுத்தினீர்கள்.

இக்காலகட்டத்தில் தான் நீங்கள் எங்களுக்கு அறிமுகமானீர்கள். ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் நீங்கள் மற்றவர்களும் அதேபோலவே இருக்க வேண்டுமென வலியுறுத்துவீர்கள். இவற்றுக்கு மாறாக யாராவது நடக்க முயன்றால் உங்களுக்குக் கெட்ட கோபம் வரும். முகாமில் நீங்கள் கவிதை இயற்றுவீர்கள், நீங்களே இயற்றிய பாடல்களை இசையமைத்துப் பாடுவீர்கள். அத்துடன் தேனிசை செல்லப்பாவின் பாடல் என்றால் உங்களுக்குப் பிடிக்கும்.

கொச்சத்தனமான அர்த்தம் கொண்ட பாடல்களைக் கேட்டு மந்தமாகியிருந்த எங்கள் செவிகளில் புரட்சியும், விடுதலையும் பாயலாயின. இந்த இனிமையான வாழ்க்கையில் இடையிடையே தாக்குதலுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் எங்களை உற்சாகமூட்டும். அதிலும் வடமுனைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்கள் மூன்றும் தனித்தனி வரலாறாயிற்றே எவ்வளவு ஆயுதங்களைக் கைப்பற்றினோம்? ஒவ்வொரு தாக்குதலின் முடிவிலும் சுமக்க முடியாத சுமைகளுடன் திரும்புவோம். பசி வயிற்றைப் பிடுங்கும். ஆனால் மனதில் நிறைவிருக்கும். கயிற்றின் உதவியுடன் ஆறுகளைக் கடப்பது முப்பதுக்கும் மேற்பட்ட மைல் தூரத்தை நடந்து வருவது. எதுவுமே துன்பமாயிராது எமக்கு உங்களது பகிடிகள் தான் இவற்றை மறைத்து வைத்துவிடுமே.

ஜோய் அண்ணாவின் தலைமையில் இடம் பெற்ற சித்தாண்டி பொலீஸ் நிலையத் தாக்குதல் பெற்ற வெற்றியில் எப்படியெல்லாம் சந்தோசப்பட்டோம். இன்னும் என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமென்று கூறினீர்கள்? அப்போதெல்லாம் நான் இல்லாத நிலையில் நீங்கள் தான் செய்யவேண்டும் என்று கூறவில்லையே?

உங்களை நாம் பிரிந்த அந்தக் கொடுவாமடுத் தாக்குதலில் தான் எப்படிச் செயற்பட்டீர்கள்? வேகமாக ஓடிச்சென்று எதிரியின் றைபிளைக் கைப்பற்றிக்கொண்டு திரும்பி ஓடி வரும்போது தான் ஆயுதங்களை எமக்குத் தந்த மரணித்த வீரனானீர்கள் நீங்கள்.

‘எங்கள் தோழர்களின் புதைகுழியில் மண் போட்டுச் செல்கின்றோம்’ இது தான் நீங்கள் அடிக்கடி விரும்பிப் படிக்கும், கேட்கும் பாடல். தொண்டையில் சூடுபட்டு உங்கள் குரல் எம்.ஜி.ஆரின் குரல்போல் வந்த பின்னரும் கூட அந்தப் பாட்டைப் பாடுவீர்கள். அதையெல்லாம் இன்று நினைக்கும் போது.... உங்களுக்கு மண்போடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. அத்தாக்குதலில் காயமடைந்திருந்ததனால் எனக்கு அந்தச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

நான் சுகமாகி மட்டக்களப்புக்கு வந்ததும் உங்கள் புதைகுழியிருக்கும் முகாமுக்கு வருவேன். அங்கு உங்கள் அபிமானப் பாடலான எங்கள் தோழர்களின் புதைகுழியில்’ என்ற பாடலைப் பாடமாட்டேன். நான் பாடப்போவது ’எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகின்றோம். என்ற பாடலைத் தான்.

**- வதன்**

*நன்றி : களத்தில் இதழ்*

*15.05.1992*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப்டினன்ட்**

*இயக்கப் பெயர்:* **மாதவன் (முருகமூர்த்தி)**

*இயற்பெயர்:* **யோகராசா யுகேந்திரன்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **மயிலாம்பாவெளி, தன்னாமுனை, மட்டக்களப்பு.**

*மாவட்டம்:* **மட்டக்களப்பு**

*வீரப்பிறப்பு:* **12.11.1972**

*வீரச்சாவு:* **29.11.1991**

*நிகழ்வு:* **மட்டக்களப்பு, கொடுவாமடுவில் சிறிலங்கா படையினர் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு.**



**மேஜர் டேவிட்**

**மேஜர் சசி (மாமா)**



சசி மாமா என்றால், வவுனியா மாவட்டத்தில் அறியாதவர்கள் எவருமே இல்லை. அந்த மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்குமே அவன் மாமா தான். அவர்கள் அனைவருமே அவனை விரும்பினார்கள். அந்த மண்ணின் இளைய வாரிசுகள் தான், சுசியாக இருந்தவனை சுசி மாமாவாக மாற்றிவிட்டார்கள்.

பாவற்குளம்தான் சுசி மாமா பிறந்த வளர்ந்த கிராமம், தமிழீழத்தின் எல்லைகளைத் தன் இருகைகளையும் நீட்டி வரையறுத்துக் கொண்டிருக்கும் பாவற்குளத்தையும், அதன் முன்பாக அதையே நம்பியிருக்கும் கிராமத்தையும். வயல் வெளிகளையும், அந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தன்னைவிட அதிகமாக நேசித்தான். சுசியும் அவர்களைப் போலத்தான். அந்த மண்ணுடன் தன்னை இறுகப் பிணைந்திருந்தான். பாவற்குளத்திற்கு அருகில் அதனை ஒட்டிக் கொண்டே இராசேந்திரங்குளம் எனும் கிராமம் உள்ளது. டேவிட் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன் சிறுவயதிலேயே டேவிட்டும் சுசியும், நண்பர்களாகவி விட்டார்கள். பள்ளிக்கூட வகுப்பறை ஒன்றில் முதன் முதலாக ஒருவரையொருவர் கண்டு கொண்டார்கள். மிக விரைவிலேயே அவர்கள் நண்பர்களாகி விட்டார்கள். அந்த வயதிலேயே ஓர் புரிந்துணர்வு உண்மையான அன்பை - பாசத்தைத் தங்கள் நெஞ்சங்களில் அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். ஒருவனை ஒரு நாளேனும் காணாவிடில் மற்றவன் சோர்ந்து விடுவான், கலங்கிவிடுவான்.

அவர்கள் வாழ்ந்த கிராமங்களின் எல்லையிடப்படாத வயல்வெளிகளும், வாய்க்கால்களில் பாய்ந்தோடும் குளத்துத் தண்ணீரும், காட்டின் கரைகளும் அந்த நண்பர்களின் அன்பை மேலும் வளர்த்தன. உரமூட்டி உறுதி சேர்த்தான். அவர்கள் இருவரும் ஒருவரில்

ஒருவர் மிகவும் அன்பு வைத்திருந்தனர். அதைப் போலத்தான் அந்த மண்ணில், அந்த வயல் வெளிகளில், காட்டுத்தரைகளில், ஏன் எல்லாவற்றிலுமே அவர்கள் மிகவும் பற்று வைத்திருந்தனர்.

எல்லைப்புறத் தமிழ்க் கிராமங்கள் அனைத்திலும் நடந்த மாதிரியே பாவற்குளத்திலும் நடந்தது. முதலில் சில சிங்களவர்கள் வயற்கரையோரங்களில், காட்டுக் கரைகளில் குடி வந்தனர். பின்பு அகலக் கால்களை வைக்கத் தொடங்கினர். காடு ஒரு பக்கமாக அழிக்கப்படத் தொடங்கியது. மறுபக்கமாகத் தமிழர் கிராமங்கள் அபகரிக்கப்படத் தொடங்கின. குடியேற்றத்தின் மூலம் சிங்களச் சனத்தொகை அதிகரிக்கத் தொடங்கியது.

காலப்போக்கில் சிங்களக் காடையர்களின் அடாவடித் தனங்கள் அதிகரித்தன. தமிழர்களுடனான சில கலகங்கள் வந்தன. தமிழர்கள் கடுமையாக எதிர்த்த பொழுதெல்லாம். சிங்களக் காடையர்களுக்குத் துணையாக சிறிலங்காவின் காவற்துறையும் வந்தது. வலுவற்றவர்களின் எதிர்ப்பு கொடிய ஆயுதங்களுக்கு முன் என்ன செய்யமுடியும் ?

பாவற்குளத்தைச் சுற்றி சிங்களக் குடியேற்றக் கிராமங்கள் புதிதுபுதிதாக எழுந்து கொண்டிருந்தன. சிங்கள அரசு இயந்திரம் கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டித் தமிழர் நிலங்களில் சிங்களவர்களைக் குடியமர்த்திக் கொண்டிருந்தது.

சிங்களவர்களின் ஆக்கிரமிப்பும், இராணுவ அடக்கு முறையும் அந்தப் பகுதி எங்கும் தலைவிரித்தாடின. சுகியும் டேவிட்டும் இப்போது இளைஞர்களாக இருந்தார்கள். அதற்குள் தான் அந்த எல்லையோரப் பகுதியில் எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன. பாவற்குளத்தில் சிங்களப் பாடசாலை ஒன்று இருந்தது. சிங்கள அரசின் நிர்வாக அதிகாரிகள் இருந்தனர். பாவற்குளத்தின் நீர்ப்பாங்கில் பெருமளவு, சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. எது எப்படியோ, அந்த எல்லையோரத் தமிழ்க் கிராமங்களில் அனுமதி அழிக்கப்பட்டிருந்தது.

'எங்கள் மண் மீட்கப்பட வேண்டும்' இந்த நினைவே அங்கு வாழ்ந்த அனைவரின் நெஞ்சிலும் பற்றிக் கொண்டது. சுசி மாமா தான் முதலில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டான். இரகசியமாக இயங்கிய அந்த நேரத்து இயக்க நடைமுறையின் படி, அவன் டேவிட்டுக்குச் சொல்லாமல் - அவனுக்குத் தெரியப்படுத்தாமலேயே சென்று விட்டான்.

டேவிட் தனித்துப் போனான். அவனுக்கு எல்லாமே வெறுமையாக இருந்தது. அவர்கள் சேர்ந்து திரிந்த வயல் வெளிகள்,

கிராமத்து வீதிகள், வாய்க்கால் தண்ணீர் எல்லாமே அவனுக்கு வெறுமையாகத் தெரிந்தன. ஆனால் அதுவே அவனில் ஒரு புதிய சிந்தனையோட்டத்தை வளர்த்தது.

'எங்கட கிராமம் மீட்கப்பட வேண்டும். அது ஒரு தனி மனிதனின் உணர்வு தான். ஆனால் அது ஒட்டுமொத்த சமூகத்தின் நலனாக இருந்தது. தாயகத்தின் நலனாகவும் இருந்தது. சில நாட்களின் பின்பு டேவிட்டும் போராட்டத்தில் கலந்து கொண்டான்.

அந்த நேரங்களில் தான்......

பாவற்குளம், இராசேந்திரங்குளம், உட்பட அதன் அயற் கிராமங்கள் அனைத்திலிருந்தும் தமிழர்கள் ஆயுத முனையில் அடித்து விரட்டப்பட்டனர். எதை எடுப்பது? எதை விட்டுச் செல்வது? தங்கள் இதயங்களை, நினைவுகளை விட்டு விட்டு வெறும் மனிதக் கூடுகள் இடம்பெயர்ந்தன.

சசி மாமாவின் தந்தை நாட்டுப் பற்று நிறைந்த மனிதர். அந்த மனிதரும், அவரைப் போல இன்னும் சிலரும் தங்கள் வாழ்விடத்தை விட்டு விலக விரும்பமின்றி அந்த மண்ணிலேயே தொடர்ந்து நின்றார்கள். ஆனால், ஓர் இரவில் சுற்றி வளைத்த சிங்களத் துப்பாக்கிகள் அந்த மனிதர்களை இரக்கமற்றுக் கொன்றன. சிங்களவர்களின் நில ஆக்கிரமிப்புக்குத் தடையாக நின்ற அந்த மனிதர்கள் அரச படைகளால் அழிக்கப்பட்டனர்.

காலங்கள் சென்றன. வவுனியா மாவட்டத்தில் வெடியோசை எங்கு கேட்டாலும் அங்கு மாமா நிற்பான். அருகிலேயே டேவிட்டும் நிற்பான். எல்லாச் சண்டைக் களங்களிலுமே இருவரின் துப்பாக்கிகளும் இலக்குத் தவறாமல் எதிரிகளை விழுத்தின. அவர்கள் சில நேரங்களில் ஆட்கள் அற்றுப் போன தங்கள் கிராமங்களிலும் அலைந்தனர். ஆனால் இப்போது, அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருந்தன. துணைக்குத் தோழர்கள் இருந்தனர்.

சசி மாமா அனைத்துத் தோழர்களின் மனதிலும் மிக விரைவிலேயே இடம் பிடித்துக் கொண்டான். 'சசி மாமா நிக்கிறான்' அந்த நினைவே அவன் தோழர்களுக்கு ஓர் ஆன்ம பலத்தைக் கொடுத்தது. சண்டைக் களங்களில் அசையாத உறுதியுடன் நின்று கொண்டு, மிக இலகுவான செயல் ஒன்றைச் செய்பவன் போன்று வழி நடத்தும் அவனைப் பார்க்க, வியப்பாக இருக்கும். ஒரு முறை, சண்டைக்கு அவர்கள் தயாராகி விட்டார்கள். இன்னும் சில மணி நேரங்களில் குருமண் காட்டில் இராணுவக் காவலரண் ஒன்று இல்லாமல் போகும் - இந்த மண்ணின் விடிவிற்குப் போராடத் தேவையான ஆயுதங்கள் எங்கள் கைகளில் தவழும். ஆனால் அந்த

நேரத்தில், 'சசி மாமாவின் அம்மா இறந்துவிட்டாள்' என் செய்திகள் கிடைக்கிறது.

ஒரு புறம் தன்னை இந்த மண்ணிற்குத் தந்து அன்பையும், பாசத்தையும் கொட்டி வளர்த்த அம்மா அவனுக்காக எரியாமற் காத்துக் கிடந்தாள்

மறுபுறம், இந்த மண்ணின் வாழ்விற்குத் தேவையான ஆயுதங்கள்...

டேவிட்டுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. அசைவற்றுப் போய் ஒரு மரத்துடன் இருந்துவிட்டான். சுசி மாமாவோ ஒரு முடிவுக்கு வந்திருந்தான். அன்று குருமண் காட்டில் இராணுவக் காவலரண் ஒன்று சிதறியது. ஆயுதங்கள் புலிகளின் கைகளில்... அதன் பின்பே மாமா தன் தாயின் உடலைப் பார்க்கப் போனான். ஒரு புலிவீரன் தாயைவிட தாய் நிலத்தை அதிகமாக நேசிக்கிறான். என்பதற்கு, மாமா ஒரு விளக்கமாக நின்றான்.

அன்று...,

சசி மாமாவும் டேவிட்டும் வேறு வேறு இடங்களில் நின்றனர். காலை நேரம்.

'இண்டைக்கு எங்கட ஊருக்குப் போறன்' என்று, டேவிட்டுக்கு மாமா வோக்கி டோக்கியில் அறிவித்தான். அவர்கள் நெடுகவும் போய் வந்து, எதிரிகளைச் சந்தித்துச் சண்டையிட்ட இடங்கள் தான். ஆனால் டேவிட் அதைப்பற்றிப் பெரிதாக எண்ணவில்லை.

'சரி போயிட்டு வா. வந்து விசயங்களைச் சொல்லு' என்றான்.

மாமாவும் அவனது தோழர்களும் பாவற்குளம் கிராமத்திற்குள் கால் வைத்தார்கள். அந்த மண்ணில் மிதித்ததுமே அவன் புதுவேகம் வந்தது போல, உற்சாகமாய் இருந்தான். சிறு வயது தொடக்கம் அவன் பழகிய மரங்களும், மேடுகளும், பள்ளங்களும் அவனுக்கு இப்போது வழி சொல்லின. அவர்கள் நடந்தார்கள். தமிழர்களின் குடியிருப்புக்கள் அழிந்து போய் புதர் மண்டிப்போய்க் கிடந்தன. தூரத்தில் - தமிழர் நிலங்களில் நின்ற சிங்களவர்களின் கல்வீடுகளும் பாடசாலைகளும் தெளிவாகத் தெரிந்தன.

ஒரு மண் மேட்டின் மேல் மாமா நின்றான். முன்னால் மாமரம் ஒன்று சிதைந்து போன நிலையிலும், இன்னமும் உயிர்ப்புடன் நின்றது.

'இது தான் என்ர வீடு. இந்த வீட்டுக்குள்தான் நான் சின்னவனாகத் தவழ்ந்ததும், பெரியவனாக வளர்ந்ததும்.

சசி மாமாவின் வார்த்தைகள் அவனது கிராமத்தின் காற்றில் கலக்கும் முன்னமே, பற்றைகள் எங்கும் பதுங்கியிருந்த இராணுவ வெறியர்களின் துப்பாக்கிகள் இயக்கத் தொடங்கின. அவர்கள் நிலை எடுப்பதற்கு முன்பே மாமாவிற்குச் சூடு விழுந்தது. அவன் பிறந்து வளர்ந்த வீட்டின் மடியிலேயே. அவனது தந்தை மாதிரியே அவனும் உயிரற்று விழுந்தான். அடுத்தது குமாருக்கு... எஞ்சி நின்ற தோழர்களின் துப்பாக்கிகள் எதிரிகளை நோக்கி இயங்கின. அவர்கள் ஐந்து பேர் தான் நின்றார்கள். எதிரிகளிலோ பலர் இருந்தனர். ஆனாலும் மாமாவையும் குமாரையும் தூக்கிக் கொண்டே மற்றைய தோழர்கள் பின் வாங்கி வந்தார்கள்.

சண்டைக்குச் சென்ற தோழர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் தோள்களில் இருவர்....முகாமில் இருந்த அனைத்துத் தோழர்களும் எழுந்து ஓடினார்கள். நெஞ்சத்தில் இனத்தெரியாத தவிப்பு.... யார்.. ? டேவிட்டும் ஓடினான்.

சசி மாமாவின் உடல்...அவனால் தாங்கமுடியவில்லை. நம்பவும் முடியவில்லை. அழுதான். இயன்றவரை அழுதான். வளர்ந்தவன் தான். நீண்ட போராட்ட வாழ்வில் அடிக்கடி இழப்புக்களைச் சந்தித்தவன் தான். ஆனாலும் கண்ணீர் அவனுக்குக் கட்டுப்பட மறுத்தது. டேவிட் மட்டுமல்ல எல்லாத் தோழர்களுமே, ஏன் அந்த மண்ணே அன்று கண்ணீரால் நனைந்து போனது.

சசி மாமாவின் பிரிவைத் தாங்க முடியாமல் டேவிட் தவித்தான். அவனுக்கு கிராமத்திற்குப் போக வேண்டும் போல் இருந்தது. அவர்கள் இருவரும் சேர்ந்து திரிந்த வயல் வெளிகள். முன்பொரு காலத்தில் தண்ணீர் புரண்டு பாய்ந்த வாய்க்கால்கள். தற்போது இராணுவ முகாமாய் மாறியிருக்கும் பாடசாலை எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் போலவும் இருந்தது.

'சுசி மாமாவின் இழப்பைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்றால், எங்காவது இராணுவத்தினருக்கு நல்லதொரு அடி கொடுக்கவேண்டும்.

அவன் முடிவெடுத்துக் கொண்டான். நீண்ட காலமாகத் தான் பாதுகாத்து வைத்திருந்த சுசி மாமாவின் படத்தைத் தன் தோழன் ஒருவனிடம் கொடுத்தான். அந்தப் படம் எப்பவோ நீண்ட நாட்களுக்கு முன்பு எடுத்தது. ஆனாலும் சசி மாமா அதில் தெளிவாக இருந்தான்.

'இந்தப் படத்தைப் பெரிசாக்கி சுசிக்குச் சுவரொட்டி அடியுங்கோ.

அவன் சொல்லிவிட்டு ஏதோ சிந்தனையில் சிறிது நேரம் இருந்தான். 'ஆனா..... இதைப் பார்க்கிறதிற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்குமோ தெரியவில்லை.'

அவன் சிரிக்க முயன்று தோற்றுப் போய்த் திரும்பி நடந்தான். டேவிட் தன் தோழர்களுடன் சண்டைக்குப் புறப்பட்டான். சிப்பிக்குளம் - சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இன்னொரு தமிழ்க் கிராமம். சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக மீண்டும் ஓர் சண்டை இப்போது டேவிட்டின் தலைமையில் நடந்தது.

அந்தச் சண்டையின் பின்பு – தோழர்கள் முகாமிற்கு திரும்பிக் கொண்டு இருந்தார்கள். அவர்களின் கைகளில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இருந்தன.

ஆனால், அவர்களில் ஒருவன் டேவிட்டின் உடலையும் சுமந்து வந்தான்.

**- ஜெயம்**

*நன்றி : களத்தில் இதழ்*

*29.05.1992*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **மேஜர்**

*இயக்கப் பெயர்:* **சுசி மாமா**

*இயற்பெயர்:* **பரமநாதன் சிதம்பர்நாதன்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **01 ஆம் படிவம், பாவற்குளம், திருகோணமலை.**

*மாவட்டம்:* **திருகோணமலை**

*வீரப்பிறப்பு:* **18.04.1964**

*வீரச்சாவு:* **28.08.1991**

*நிகழ்வு:* **பாவற்குளம் ஆவரம்துலாவில் சிறிலங்கா படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **ஈச்சங்குளம்**

*மேலதிக விபரம்:* **ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **மேஜர்**

*இயக்கப் பெயர்:* **டேவிற் (செழியன்)**

*இயற்பெயர்:* **கார்த்திகேசு செல்வகுமார்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **இராஜேந்திரகுளம், வவுனியா.**

*மாவட்டம்:* **வவுனியா**

*வீரப்பிறப்பு:* **30.05.1964**

*வீரச்சாவு:* **19.09.1991**

*நிகழ்வு:* **வவுனியா, செட்டிகுளத்தில் சிறிலங்கா படையினருடனான சமரில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **ஈச்சங்குளம்**

*மேலதிக விபரம்:* **ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் (கோப்பாய் நினைவுக்கல்) விதைக்கப்பட்டுள்ளது.**



## கப்டன் மாஸ்ரர்

தமிழகத்தில் அமைந்துள்ள புலிகளின் 6 ஆவது பயிற்சிப் பாசறையில் ஒரு நாள் 'சாப்பிட வரட்டாம்!' என்று சொல்லிக் கொண்டே வந்தான் மாஸ்டர். தனித்தனியாக அமைக்கப்பட்டிருந்த கொட்டில்கள் ஒவ்வொன்றையும் எட்டிப் பார்த்துச் சொன்னபடியே சென்று கொண்டிருந்தான். அங்கு தான் பயிற்சிக்கென வந்த போராளிகள் அனைவரும் தங்கியிருந்தனர். வழக்கத்தில் மணியோசை மூலமே சாப்பிட வருமாறு அழைப்பார்கள். இன்று மணியின் வேலையை மாஸ்ரர் செய்கிறானே என்று எண்ணினாலும் எல்லோரும் அவரவர் சாப்பாட்டுக் கோப்பையை எடுத்தபடி வரிசையாக நிற்கத் தொடங்கினார். மாஸ்ரருக்கும் மனதிற்குள் சிரிப்பு எல்லோரையும் தான் பேய்க்காட்டி விட்டதாக.

அந்த முகாமிற்கு சமைப்பதற்கெனச் சென்ற போராளிகளுக்கு ஆச்சரியமாக இருந்தது. நாங்கள் மணியோசை எழுப்பவில்லையே? ஏன் இவர்கள் வரிசையாக நிற்கின்றார்கள்? பொன்னம்மான் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார். இது மாஸ்ரரின் வேலை தான் என்று தெரிந்து விட்டது. எல்லோரையும் அப்படியே நிற்கச் சொல்லிவிட்டு ‘இன்னும் சாப்பாடு தயாராகவில்லை’ என்று ஒவ்வொருவராக கூப்பிட்டுச் சொல் என்று கட்டளை பிறப்பித்து விட்டார். அந்த முகாமில் மொத்தம் 329பேர். தன்னைத் தவிர்த்து மிகுதி 328 பேருக்கும் தனித்தனியாக சொல்ல வேண்டிய நிலைமை. ஆரம்பத்தில் இதைச் சொல்வது சுவரஸ்சியமாகத்தான் இருந்தது எனினும் போகப்போக சொல்லமுடியாதபடி களைத்துவிட்டான். இறுதிக்கட்டத்தில் அழுகையே வரும் நிலைமை ஏற்பட்டது அவனுக்கு. இப்படியான ஒரு கலகலப்பான பேர்வழியாகத் தான் தன்னை இனங்காட்டிக் கொண்டான் மாஸ்ரர். அந்த முகாமில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சி

ஒன்றில் இவன் நீக்ரோ போல வேடமிட்டு ஆடியதும் இவனுடன் பயிற்சி எடுத்த போராளிகளால் மறக்கப்படமுடியாத சம்பவங்களாகும்.

நடுத்தரக் குடும்பத்தை விட சற்று வசதியான குடும்பம். 1977 ஆம் ஆண்டு வரை இவன் கொழும்பிலேயே கல்வி கற்றான். அக்காலகட்டத்தில் கொழும்பிலிருந்து புறப்பட்ட அகதிக் கப்பல்கள் ஏனையோரைப் போலவே இவனுக்கு சொந்த மண்ணை இனம்காட்டின. கப்பலில் வந்தோரில் அனேகர் தாம் அகதி என்ற நினைப்புடன் வந்தனர். பத்து வயது சிறுவனாக இருந்த இவனோ போராளியாவதற்குரிய விதையை நெஞ்சில் சுமந்தவனாக வந்து சேர்ந்தான்.

1983 ஆம் ஆண்டுக் கலவரத்தை தொடர்ந்து போராளிகளாவதற்கான அழைப்புகள் எங்கும் நிறைந்து காணப்பட்டன. சம்மதமென்றால் உடனே அடுத்த வண்டியில் (படகு) அனுப்பத்தயாராக பல இயக்கங்கள். ஆனாலும் இவன் வடிகட்டல் முறையில் போராளிகளை உள்வாங்கும் புலிகள் அமைப்பிலேயே இணைந்து கொள்ளவிரும்பினான். கப்டன் லாலா ரஞ்சன், லெப்.கந்தன், சொக்கன் போன்ற போராளிகளுடன் இணைந்து செயற்பட்டான். பகுதி நேர உறுப்பினராக இவன் செயற்பட்டு விட்டு வீடு திரும்பும் ஒவ்வொரு நாளும் இவனது பெயரைச் சொல்லி ஒவ்வொரு தும்புக்கட்டை முறியும். அந்தச் சந்தர்ப்பத்தில் இவன், தான் அகதியாக வந்ததை நினைத்துக் கொள்வான். அந்தநிலை தனது குடும்பத்தினருக்கும் தனது இனத்திற்கும் ஏற்படக்கூடாது என்பதற்காக அதைத் தாங்கிக் கொண்டான். வீட்டில் விழும் அடிகள் முழுநேர உறுப்பினராகத் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு இயக்கத்தினரை நச்சரிக்கவைக்கும். எனினும் மேலும் சோதித்துப் பார்க்க விரும்பிய அவர்கள். இவனை மாதக்கணக்காக ஒரு வீட்டில் தனியறையில் விட்டு மறைவாக இருந்து கொள் என்று சொன்னார்கள். இவன் பொறுமை இழந்து போகின்றானா என்று பார்க்கவே இந்த ஏற்பாடு. இவனது வீட்டிலிருந்து அரை மைல் தூரத்திலேயே இவன் தங்க வைக்கப்பட்டிருந்தும் இவன் பொறுமையிழந்து செல்லவில்லை. எனவே பயிற்சிக்கு அனுப்பப்பட்டான்.

பயிற்சி முடிந்ததும் இவன் மருத்துவப் பயிற்சி பெறும் குழுவில் சேர்க்கப்பட்டான். 1984 ஆம் ஆண்டு இயக்கத்தில் சேர்ந்த இவன் 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படும்வரை தமிழகத்திலேயே தங்கியிருந்தான். போர்க்களத்தில் நிற்பதே இவனுக்கு பிரியமானது. எனினும் அக்காலகட்டத்தில் இவனுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. போரில் காயமடைந்து வரும்

போராளிகளை இவன் பராமரிக்கும் முறை - இவனது தேவையை மருத்துவக்குழுவிற்கு உணர்த்தியது. அதனால் இவன் தமிழகத்திலையே தங்கியிருக்க நேர்ந்தது. இக்காலகட்டத்தில் மிக முக்கியமான அறுவைச் சிகிச்சைகளுக்கு இவனே உதவியாளனாக அழைக்கப்பட்டான். சத்திர சிகிச்சை நிபுணர்கள் இவனது ஆர்வத்தையும் கடமை உணர்வையும் மெச்சினர். இவன் குழந்தைகளில் மிகவும் பிரியமானவன். குழந்தைகள் தன்னில் பிரியமாக இருக்குமாறும் நடந்துகொள்வான். இவனது மருத்துவமனையைச் சூழ இருந்த குழந்தைகள்தான் இவனது மருமக்கள்- நண்பர்கள்- உறவினர்கள். அதனால் தான் இன்று மாஸ்ரர் என்ற பெயரைச் சொன்னாலே கண்கலங்குகின்றனர் அப்பகுதி மக்கள்.

எப்படியோ தாய் மண்ணை மிதிக்கப் பாக்கியம் கிடைத்தது. எனினும் இந்தியப்படையினரின் போக்கு மாஸ்டர் மீண்டும் தமிழகத்தில் தங்கியிருக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இந்தியப் படையினருடனான போரில் காயமடைந்தவர்கள் மாஸ்ரரின் பராமரிப்பில் தான் மீண்டும் சுகமடைந்தனர். அக்காலத்தில் மேலதிக சிகிச்சைக்காக ஒரு போராளியை வேறோர் இடத்துக்கு கொண்டு செல்ல வேண்டியிருந்ததால் மதுரையிலும் சென்னையிலும் கைது செய்யப்பட்டவர்களில் இவன் அடங்கவில்லை. பின்னர் இவன் தமிழகத்திலிருந்து வன்னிக்காடு நோக்கிச் சென்றான்.

இதைத் தொடர்ந்து மிகவும் நெருக்கடியான காலகட்டம். மிகவும் பாரிய காயங்களொன்றாலும் தமிழகத்துக்குக் கொண்டு செல்லமுடியாது. எனினும் அந்தக் குறையை பெருமளவு நிவர்த்தி செய்தவன் இவனே. மதுரையில் இவன் அக்கறையுடன் பழகிய மருத்துவம் பயிற்சி போராளிகளுக்குப் பெரிதும் பயன்பட்டது. தானாகவே முயற்சியெடுத்து இவன் செய்யும் சிகிச்சைகள் நீண்டகால அனுபவம் மிக்க மருத்துவர்களையே மூக்கில் விரல் வைக்க வைத்தது. நாளடைவில் மருத்துவக் குழுவினர்க்கு பயிற்சியளிப்பவனாகவும் மாறினான். விடுதலை உணர்வோடு அவர்களை உருவாக்குவது – மருத்துவக் குழுவிலுள்ளோரின் பொறுப்புக்களை உணர்த்துவது - திட்டமிட்ட செயற்பாடு எல்லாம் தனிப்பாணியாக இருந்தன. நாளடைவில் இவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவக் குழுவிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டான்.

சிறிலங்காப் படைகளுடன் மீண்டும் போர் தொடங்கிய பின்னர் முல்லைத்தீவு முகாமை முற்றுகையிட்டு நிகழ்ந்த போர், மாங்குளம் இராணுவமுகாம் மீதான தாக்குதல் என்பனவற்றில் இவன் நித்திரையை மறந்து பணியாற்றினான். மிகக்குறைந்த அடிப்படை

வசதிகளே இருந்தும் ஒரு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் உணர்வினை போராளிகளுக்கு ஏற்படுத்தினான். மருத்துவக் குழுவின் தேவை கருதி மீண்டும் தமிழகத்துக்கு பிரயாணம் மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவனுக்கு 10.01.1991 அன்று தமிழகத்திலிருந்து மருந்துப் பொருட்களுடன் இவன் படகில் வந்து கொண்டிருந்தான். அப்படகைக் கண்ட சிறிலங்கா கடற்படையினர் இவர்களைத் துரத்தினர். படகு பத்திரமாக நெடுந்தீவுக் கரையை வந்தடைந்தது. அவசர அவசரமாக மருந்துப் பொருட்களை இறக்கினான். அவற்றைப் பத்திரப்படுத்தினான். அச்சமயத்தில் கடற்படையினர் இவர்களை நோக்கித் தாக்குதல் தொடுத்தனர். மாஸ்ரர் எதிர்த் தாக்குதல் தொடுத்தான். பலபேரின் உயிர்களைக் காத்த மாஸ்ரரின் உயிரைக் காப்பாற்றுமளவுக்கு அன்றைய நிலைமை இருக்கவில்லை. இயற்கையோடு போராடி அழுது கொண்டிருக்கும் நெடுந்தீவு மக்கள் இவனுக்காகவும் அழுதனர்.

1977 இல் கொழும்பிலிருந்து இடம் பெயர்ந்து வந்திருந்தாலும் 1983 இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டோரைக் கண்டிருந்தாலும் 1984 செப்டம்பர் 1 ஆம் திகதி நடந்த சம்பவங்களே இவனை மிகவும் பாதித்திருந்தன. அன்று பருத்தித்துறை நவீன சந்தையிலுள்ள கடைகள் சிறிலங்கா பொலிஸ் படையினரால் தீக்கிரையாக்கப்பட்டன. காந்திசிலை உடைக்கப்பட்டது. தாயக மண்ணிலேயே தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவன் கல்வி கற்ற ஹாட்லிக் கல்லூரியே தீக்கிரையாக்கப்பட்டது. 3 பிரதான கட்டடங்கள், இரசாயன ஆய்வு கூடம் சுமார் 7500க்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகம் எல்லாமும் தீக்கிரையாக்கப்பட்டன. அப்போது சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபராக உருத்திரா ராஜசிங்கம் என்ற தமிழரே இருந்தார். அவர் இதனை விசாரணை செய்யலாம் என சிறிலங்கா அரசு கூறியது.

விசாரணைகள், ஆணைக்குழுக்கள் பற்றிய செய்திகள் சிறிலங்காப் படையினரைப் பொறுத்தவரை கடலை சுற்றத் தான் பயன்படும். 1977 இல் இனக்கலவரம் பற்றிய சன்சோனி கமிசன் 1979 இல் இன்பம், செல்வம் முதலானோரின் மரணம் பற்றி லலித் அத்துலத் முதலி தலைமையிலான தெரிவுக்குழு, 1981 இல் யாழ்ப்பாண நூலகம், கூட்டணி காரியாலயம், ஈழநாடு காரியாலயம் போன்றவை தீக்கிரையாக்கப்பட்டன. தொடர்பான லயனல் பெர்னாண்டோ தலைமையிலான கமிசன், 1985 இல் திம்புப் பேச்சு வார்த்தை நடந்த சமயம் வவுனியாவில் சிறிலங்காப் படையினரால் நூற்றுக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டது பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட பிரிகேடியர் மனோமடவல தலைமையிலான

ஆணைக்குழு, கடந்த வருடம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எம். எஸ்.எவ் குழுவினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் பற்றி அமைக்கப்பட்ட விசாரணைக்குழு, 1991 யூன் 11 இல் கொக்கட்டிச் சோலையில் சிறிலங்காப் படையினரால் ஏற்படுத்தப்பட்ட மரணங்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் இன்னோரன்ன கமிசன்கள், விசாரணைகள் எல்லாம் முடிவில் சிறிலங்காப் படையினரின் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளினவேயொழிய வேறெதுவும் உருப்படியாக நடக்கவில்லை. ஆனால் கீறல் விழுந்த, இசைத்தட்டுப் போல ஒரு விசயத்தை மட்டுமே சொல்லின. இனிமேல் இந்த மாதிரிச் சம்பவம் நடக்காமல் பார்க்கவேண்டும் என்பதே அது.

சிறிலங்கா அரசு இவற்றை எப்படி நோக்குகின்றதோ -1977 ஆம் ஆண்டுக் கலவரங்கள், 1984 ஆம் ஆண்டுக் சம்பவங்கள் ஒரு மாஸ்ரரை உருவாக்கியது போல, எம் மக்கள் மீதான படுகொலைகள் கமிசன்களில் நம்பிக்கை வைக்காத புதிய ஒரு போராட்ட பரம்பரையை உருவாக்குகின்றன. அந்தப் பரம்பரை சொல்லும் செய்தி ‘இனிமேல் இப்படியான நிகழ்வுகள் நடக்காமலிருக்க எமது இருப்பை உறுதி செய்யத்தான் இப்போராட்டம்.’

நன்றி : களத்தில் இதழ், 21.08.1992.

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **கப்டன்**

*இயக்கப் பெயர்:* **மெடின் மாஸ்ரர்**

*இயற்பெயர்:* **யோகநாதன் பிரதாபன்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **19.12.1967**

*வீரச்சாவு:* **10.01.1991**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம், நெடுந்தீவில் கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **எள்ளங்குளம்**

*மேலதிக விபரம்:* **எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



**கப்டன் யேசுதாஸ்**

**லெப். நந்தன்**



புலிகளின் காட்டு முகாம்.

அன்சாரினதும், யேசுதாசினதும் உடல்கள் வைக்கப்பட்டிருந்தன. சண்டையின் களைப்பு, தம் தோழர்களை இழந்துவிட்ட மனதின் தாக்கம், வெளிக் காவல் நிலையங்களிலிருந்த தோழர்களைத் தவிர அனைவருமே இருந்த இந்த இடத்தில் தூங்கிவிட்டார்கள்.

இந்தியர்களின் கண்களுக்குத் தென்படக்கூடாது என்ற முடிவுடன், குப்பி விளக்கொன்று மங்கிய ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. அந்த விளக்கொளியில்... யேசுதாசின் கறுத்த அழகிய முகத்தைப் பார்த்தபடியே... கலைந்து கிடந்த அவனது தலையைத் தடவியபடியே... நந்தன் இருந்தான்.

அவனது தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. இடை இடையே குலுங்கிக் குலுங்கி அழுதான். பெரிதாகச் சத்தமிட்டு அழ விரும்பியும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான் போலும்! மெல்லிய முனகல் சத்தம் இடை இடையே கேட்டு அடங்கியது.

மனிதர்களின் சிலர் இழப்புக்களை ஏற்றுக் கொண்டு அதனைத் தாங்கிக் கொள்ளும் மனப் பக்குவத்தைப் பெற்றுக் கொண்டாலும், அவர்களை அசைத்துப் பார்க்கும் சம்பவங்களும் நடந்து கொண்டு தானே இருக்கின்றன.

நந்தனால் இந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியுமா...? இல்லை. முடியாது..... அவனால் முடியாது...

யேசுதாஸ் பிறந்த பிற்பாடு நாட்கணக்கு மாதக்கணக்கு எல்லாம் பார்த்தால், சரியாக இரண்டு வருடத்திற்குப் பின்பு நந்தனைத் தாயார் பெற்றெடுத்தாள். நிறம், முகம், சிரிப்பு எதிலுமே வித்தியாசம்

இல்லை. ஆனால் சின்னவன் நந்தன் சிறிது குழப்படிக்காரனாக இருந்தான்.

அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் அன்பைக் காட்டிக் கொண்டு அடிபட்டுக் கடிபட்டு ஒன்றாகவே வளர்ந்தார்கள். பாடசாலைக்குச் செல்லுகையிலும், வயலில் காவலுக்கு நிற்கையிலும், அந்திசாயும் நேரங்களில் பட்டிகளை ஓட்டி வருகையிலும், ஏன் முத்த அண்ணனுக்குப் பயந்தபடியே ஆற்று நீரில் பாய்ந்து விளையாடுகையிலும், அவர்கள் சேர்ந்தே இருந்தார்கள்.

நந்தன் அந்த இளவயதிலேயே அண்ணனில் உயிரை வைத்திருந்தான். உண்மையில் அது எவ்வளவு இனிமையான நாட்கள். அவர்கள் வயலுக்கு இரவுக் காவலுக்குச் செல்வார்கள். இருட்டு.... நீர் நிறைந்த வயல்களின் வரம்புகளில் விசயங்கள் ஏதாவது கிடக்கலாம். அந்த நினைவு வந்தவுடனேயே அவன் அண்ணனை நிறுத்தி விட்டு, முன்னால் பாய்ந்தோடுவான்.

ஏதாவது கடிக்கிறதா இருந்தா அது என்னைக் கடிக்கட்டும் எனத் தனக்குள் முணுமுணுப்பான்.

வீட்டிலும் அப்படித்தான் தனக்கென தனியாக எதையுமே எடான். எல்லாமுமே அண்ணனுக்கும் வேண்டும். அல்லது அது அவனுக்கும் வேண்டாம். அம்மா மட்டும் உள்ளுக்குள் மகிழ்ச்சியோடு ஏசுவாள். அவனுக்கு அண்ணனின் பைத்தியம் பிடிச்சிருக்கு.

அந்த சிறு வயது நாட்கள் தான் எவ்வளவு விரைவாகக் கடந்து போயின. வளர்ந்த பின்பும் தோற்றத்தில் அவர்களிடையே பெரிதாக எந்த வித்தியாசமும் இல்லை. ஆனால் குணவியல்புகளில் நிறையவே வேறுபட்டார்கள்.

யேசுதாஸ் உணர்ச்சிக்கு ஆட்படுவதைத் தவிர்த்தான். பேச்சுக்களைத் தவிர்த்து எப்போதும் அமைதியாக இருந்தான். சில நேரங்களில் மட்டும் மிக அருமையாகக் கோபப்பட்டான்.

நந்தனோ அதிகமாக உணர்ச்சி வசப்பட்டவனாகவும், கோபப்பட்டவனாகவும் இருந்தான். சில நேரங்களில் மட்டும் அண்ணனுக்குச் சொந்தமான அமைதிக்கு அடிபணிந்து இருந்தான்.

சின்ன வயதில் தோன்றிய வயல் வெளிப் பழக்கம் இனிமையான குரல் இருவருக்கும் சொந்தமானதாக இருந்தது. அதிலும் பாருங்கள் ஒரு வேறுபாட்டை, யேசுதாஸ் எப்போதுமே அமைதியான இதயத்தை வருடும் சோகப் பாடல்களையே பாடினான். நந்தனோ உற்சாகம் நிறைந்த மகிழ்ச்சியான பாடல்களை விரும்பி அடிக்கடி பாடினான்.

வன்னியில் அந்த எல்லையோரக் கிராமங்களின் அமைதிதான் எவ்வளவு விரைவாக அழிந்து போனது!

டொலர், கென்ற் பண்ணைகளிலிருந்த தமிழர்களை விரட்டி விட்டு சிங்களக் காடையர்கள் குடி புகுந்தனர். தொடர்ந்தும்.... நாவலர் பண்ணை, தனிக்கல்லு எனத் தமிழர் கிராமங்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. வேறொரு புறத்தால் காடுகள் அழிக்கப்படத் தொடங்கின.

தமிழர் கிராமங்களில் வயல் வெளிப் பாடல்களுக்கு நடுவே, காடழிக்கும் இயந்திரங்களின் கொடூர ஓசையும் கலந்து கொள்ளத் தொடங்கியது.

அந்த நாட்களில்தான், மார்கழி மாதத்தின் மழைத்தூறல் விழுந்து கொண்டிருந்ததோர் மாலைநேரம், யேசுதாஸ் கிராமத்தை விட்டு வெளியேறிச் சென்றான். புலிகளின் ஆறாவது பயிற்சி முகாம்.

பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த புதியவர்களில் யேசுதாசும் ஒருவன். இனிமையான அவனது குரலைக் கேட்ட யாரோ, அவனுக்கு யேசுதாஸ் என்ற தென்னிந்தியப் பாடகரின் பெயரை வைத்து விட்டார்கள்.

அண்ணன் சென்றதன் பின்பு நந்தனால் தனித்து இருக்க முடியவில்லை. அதிகமாக நண்பர்களை நாடினான் அவர்களின் அர்த்தமற்ற வாழ்க்கை அவனுக்கு வெறுப்பாக இருந்தது.

இதனிடையே ஓதியமலையிலும், பட்டிக்குடியிருப்பிலும் மிகப் பெரும் இனப்படுகொலைகள் நடந்து முடிந்தன. அந்தப் பழந் தமிழ்க் கிராமத்தவர்கள் சிங்கள வன்முறையாளர்களால் விரட்டப் பட்டிருந்தார்கள். சிங்களக் காடையர்களின் வெறிச் செயல்களுக்கு அயல் கிராமமான கற்குளமும் உள்ளாகியது.

சிங்களக் காடையர்கள் அடிக்கடி கிராமங்களில் நுழைந்தார்கள். நெற்கதிர்கள் பூத்துக் குலுங்கும் பொழுது வயல் நிலங்கள் எரிந்தன. கைக்கெட்டும் கிராமத்துக் குடிசைகள் எரிந்து சாம்பாராகும். இந்த நிலையில்தான் தாய் மண்ணை நேசிக்கும் எவனால் தான் போராட்டத்திலிருந்து ஒதுங்கி வாழ முடியும்?

சில நாட்களில் நந்தனும் புலிகளுடன் இணைந்து கொண்டான். பயிற்சியை முடித்த பின்பு வன்னி மண்ணுக்கு வந்த யேசுதாஸ் மேஜர் தாடிபாலாவின் குழுவில் ஒருவனாக நின்று சிறிலங்கா இராணுவத்தினருக்கு எதிராகப் போரிட்டான். எம்.16 சுரிகுழல் துப்பாக்கியை இயக்குவதில் அவன் மிகவும் வல்லவனாக இருந்தான். குறி இலகுவில் தவறுவதில்லை. முதலாவது சூட்டில் எதிரி ஒருவன் விழுந்தே இருப்பான்.

அமைதி என்ற போர்வையில் இந்தியர்கள் வந்து சேர்ந்த சில நாட்களின் பின்பு, முகாம் ஒன்றில் தற்செயலாகச் சந்தித்துக் கொண்ட நந்தனும், யேசுதாசும் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

குடும்பத்தின் நிலையைக் கருத்தில் எடுத்து அம்மாவின் ஆறுதலுக்காக நந்தன் வீட்டில் நிற்பதென்றும், யேசுதாஸ் இயக்கத்தில் தொடர்ந்து இயங்குவதென்றும் தீர்மானித்துக் கொண்டார்கள். கிராமத்தில் நின்றாலும் நந்தன் புலிகளின் அரசியல் வேலைகளில் முழுமையாகவே செயற்பட்டுக் கொண்டிருந்தான். அத்துடன் பட்டிக்குடியிருப்பு பாடசாலையில் சேவை அடிப்படையில் இயங்கும் ஆசிரியராகவும் இருந்தான்.

இந்தியர்களின் வேடம் மிக விரைவாகவே அம்பலப்பட்டு இந்தியப் படைகளுக்கெதிரான போரில் தமிழீழம் குதித்தது. வீட்டில் நின்ற நந்தன் இந்தியப்படையினருடன் மோதல் தொடங்கியவுடன், இயக்கத்தில் மீண்டும் இணைந்துகொண்டான். சண்டைகள் இப்போது அதிகமாகவும் கடுமையாகவும் இருந்தன. அந்தச் சகோதரர்கள் இருவரும் அவர்கள் பிறந்து வளர்ந்து விளையாடிய மண்மடியிலேயே, துப்பாக்கிகளும் தோழர்களுமாக எதிரியைத் தேடி அலைந்து திரிந்தார்கள்.

நந்தன் இப்போதும் அப்படித்தான், அண்ணனுக்கு முன்பாக மிக வேகமாக நடப்பான், வருகின்ற ஆபத்து எதுவாக இருந்தாலும் அது முதலில் என்னைத் தாக்கட்டும் என்று, அவன் மனம் சொல்லும், யேசுதாசோ எதையும் வெளிக்காட்டமாட்டான். இரவுகளில் மட்டும் அவனுக்குப் பிடித்தமான அந்தச் சோகப் பாடல்களை மெதுவாக முணுமுணுப்பான்.

இப்படித்தான் இன்று காலையும் அவர்கள் எல்லோரும் ஒன்றாகப் புறப்பட்டார்கள். சண்டை கடுமையாகவே இருந்தது. எதிரி இருப்புக் கொண்டிருந்த அந்தச் சிறிய முகாமின் வாசலில் யேசுதாஸ் விழுந்தான். அவனது உடலை எடுத்துக் கொண்டு பின் வாங்கிய பொழுது, வேறொரு தோழன் அன்சாரின் உடலையும் சுமந்து வந்தான். அன்று இரவு முழுவதும் நந்தன் தூங்கவில்லை. மறுநாள், அவனது அண்ணாவையும் அவனது தோழனையும் புதைத்து விட்டு வந்த பின்பும் அவன் தூங்கவுமில்லை, சாப்பிடவுமில்லை, ஏன்.....? அதிகமாக ஒருவருடனும் கதைக்கக் கூட இல்லை.

நாட்கள் சென்றன. சூழ்நிலைகளும், மாறிக்கொண்டிருந்தன. நந்தனோ தளராத உறுதியுடன் போராடிக் கொண்டிருந்தான். எதிரியோ இழப்புக்களைக் கண்டு போராளிகள் அஞ்சி ஒடுங்கி

போய்விடுவார்கள் என நினைக்கின்றான். ஆனால் புலிகளோ, அதனாலேயே உறுதி கொள்ளுகிறார்கள். வெற்றியைப் பெறவேண்டும் என்ற ஓர்மத்துடன் போராடுகின்றார்கள்.

ஆனால், நந்தனில் புதிய மாற்றம் ஒன்று இருக்கத்தான் செய்தது. அவனது அண்ணனுக்குச் சொந்தமான அமைதியான அந்தச் சோகம் நிறைந்த பாடல்களை, அவன் இப்போது முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

இந்தியர்கள் வெளியேறினார்கள். சமாதானம் பேசிக்கொண்டிருந்த சிங்களப் பேரினவாதம், தன் கொடூர முகத்தைக் காட்டத் தொடங்கியது. மீண்டும் நாடெங்கும் சிங்களச் சிப்பாய்களை எதிர்த்துப் புலிகள் போரிட்டார்கள்.

நந்தனும் ஒரு புலி வீரனாக சண்டைக் களங்களில் நின்று செயற்பட்டான். மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து சிங்களப் படைகள் வெளியேற முயன்ற ஒரு நாள்.... தோழர்களுடன் நந்தனும் சண்டையிட்டுக் கொண்டிருந்தான். ஆக்கிரமிப்பாளர்களின் ஒவ்வொரு அசைவிற்கும் போராளிகள் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அன்றைய சண்டையின் முடிவில் நந்தனும்....

இப்போதும் அந்தக் காடு..... அவர்களின் கல்லறைகள்... எங்குமே அவர்கள்...... இப்போதும் அங்கு சென்று பாருங்கள் அவர்களின் அந்த இனிய சோகம் நிறைந்த பாடல்கள், காற்றில் மிதந்து நெஞ்சை அழுத்தும்.

நன்றி : களத்தில் இதழ், 07.08.1992.

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

நிலை: **கப்டன்**

இயக்கப் பெயர்: **யேசுதாஸ்**

இயற்பெயர்: **வீரகத்தி விக்கினேஸ்வரன்**

பால்: **ஆண்**

முகவரி: **கற்குளம், நெடுங்கேணி, மணலாறு.**

மாவட்டம்: **முல்லைத்தீவு**

வீரப்பிறப்பு: **01.10.1965**

வீரச்சாவு: **29.07.1989**

நிகழ்வு: **முல்லைத்தீவு, 3 ஆம் கட்டையில் இந்தியப்படையினர் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு**

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **லெப்**

*இயக்கப் பெயர்:* **நந்தன்**

*இயற்பெயர்:* **வீரகத்தி இராஜேந்திரம்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **நெடுங்கேணி, மணலாறு.**

**மாவட்டம்: முல்லைத்தீவு**

*வீரப்பிறப்பு:* **06.01.1969**

*வீரச்சாவு:* **17.07.1990**

*நிகழ்வு:* **முல்லைத்தீவு, மாங்குளத்தில் சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற நேரடிச் சமரின்போது வீரச்சாவு**



## வீரவேங்கை கீதா

1987 இல் இந்திய இராணுவம் எம் மண்ணில் காலடி வைத்த வேளையில், புலிகளைச் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தனர். புலிகளோடு மக்களை இனங்காண முடியாத இராணுவத்தினர் மக்களை வயது வேறுபாடு இன்று கொன்று குவிக்கும் பணியில் வீடு வீடாகச் சோதனையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்திய இராணுவத்தின் முற்றுகைக்குட்பட்ட ஒரு பிரதேசமான தெல்லிப்பளை பகுதியிலிருந்து மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் 13 வயது நிரம்பியவளான தர்சினி என்ற இளம் பெண் தனது பெற்றோருடன் அப்பகுதியிலேயே இருந்தாள்.

விடுதலைப் போரிலே ஊரிய உள்ளங்கள் உயிர்த்துடிப்புடன் போராடிக் கொண்டிருக்கும் எமது சொந்த மண்ணில் வாழ்வது என்றால் சுதந்திரமாக வாழவேண்டும். இல்லையேல் சாகவேண்டும். என்ற சிந்தனையே ஊறி இருக்கின்றது.

ஒரு முறை சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இந்திய இராணுவம் தர்சினியின் சகோதரனை 'பயங்கரவாதி' என்ற முத்திரையுடன் கைது செய்து காங்கேசன் துறை தடுப்புமுகாமில் வைத்து மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதை செய்தது. சகோதரனைப் பார்க்கவென தாயுடன் தர்சினியும் சென்றாள். தமையனின் உடலில் சித்திரவதையின் தடயங்களைக் கண்ட தர்சினியின் கண்கள் கலங்குகின்றன. தமையனிடம் 'அண்ணா இவங்களை நான் துவக்கு எடுத்துச் சுடாமல் விடமாட்டேன்' என்று உறுதியுடன் கூறுகிறாள். சகோதரனின் கண்களும் கலங்குகின்றன.

இரு உடன் பிறப்புக்களுடன் கடைசிப் பிள்ளையாகப் பிறந்த தர்சினி மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டாள். கடுமையான போராட்ட சூழலில் வளர்ந்தால். இவளது இயல்பு வித்தியாசமானதாக இருந்தது. அச்சமின்றித் துணிவுடன் வாதாடும் திறனும், கல்வியிலும், கலைகளிலும், ஆர்வத்துடன் கற்கும் திறமையும், வீட்டிற்கு வருவோரை உபசரிக்கும் நற்பண்பும் உடையவளாக இருந்தாள்.

தர்சினியின் வீட்டிற்கு போராளிகளும் ஆதரவாளர்களும் வருவதை அறிந்த இந்தியப் படையினர், ஈபிஆர்எல்எப்-இன் உதவியுடன் சுற்றி வளைத்தபோது ஆதரவாளரான நிர்மலன் என்ற தமையனின் நண்பனை இவளின் வீட்டில் வைத்து இவளுக்கு முன்னாலேயே சுட்டுக்கொன்றனர். தர்சினியின் ஒன்றுவிட்ட சகோதரனுடன் தானும் ஒரு சகோதரனைப் போலவே பாசமுடன் பழகி போராட்ட உணர்வினைத் தர்சினிக்கு உணர்த்தியதில் இவனுக்கும் பங்குண்டு. இராணுவத்தினர் சுட்டபோது நேரே கண்டதில் அது தர்சினியின் இதயத்தில் ஆழமாகப் பதிந்தது. இந்தச் சம்பவங்கள் பிஞ்சு உள்ளத்தில் தானும் போராடப் போகவேண்டும் என்ற எண்ணத்தை மேலும் உறுதிபெறச் செய்தது.

இந்திய இராணுவத்தின் கொடுமைகள் முடிவடைந்ததும் மீண்டும் சிறிலங்காப் படையினரின் அனர்த்தங்கள் ஆரம்பித்தன. புலிகளுடன் நேருக்கு நேர் சண்டை போடமுடியாத சிங்களப் படையினர் குண்டு வீச்சு விமானங்கள் மூலம் தாக்குதலைத் தீவிரப்படுத்தினர். புலிகளை அழிப்பதாகக் கூறிய இலங்கை அரசு குடிமனைகள் மீதும், பாடசாலைகள், ஆலயங்கள் போன்றவற்றின் மீதும் தாக்குதலை நடத்தியது. இந்த வேளையில், தர்சினி வீட்டிலிருந்து குண்டு வீச்சு மத்தியிலும் காங்கேசன்துறைப் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த போராளிகளுக்குத் தினமும் உணவு தயாரித்துச் சென்று கொடுத்துவிட்டு வருவாள். ஒருமுறை உணவுடன் சென்ற தர்சினி திரும்பி வீட்டிற்கு வரவில்லை. தந்தையார் போராளியின் முகாமிற்கு தேடிச்சென்ற போது வரமறுத்துவிட்டாள். ஆனால் போராளிகள் இவளைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். போராட்ட உணர்வு இதயத்தில் வலுக்கொண்ட இவள் வீட்டில் தந்தையுடனும், சகோதரனுடனும் தான் இயக்கத்திற்குப் போகப் போகிறேன் என்று வாதாடுவாள்.

சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல்கள் வான், தரை, கடல் வழியாக ஆரம்பித்தன. யாழ் கோட்டையில் மும்முரமாக சண்டை நடந்து கொண்டிருந்தது. புலிகள் சளைக்காது வீரத்துடன் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். நாளுக்கு நாள் மக்களின் உடமைகளும்

உயிர்களும் சிறிலங்காப் படையின் குண்டு வீச்சுக்களால் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வீட்டிலிருந்த தர்சினிக்கு தினமும் பத்திரிகைகளை வாசிக்கும் பொழுதும் செய்திகளைக் கேட்கும் பொழுதும் போராடப் போகவேண்டும் என்ற உணர்வு புயலடிக்கத் தொடங்கியது. தர்சினி 1998-08-15 அன்று விடுதலையை நோக்கிய பாதையில் காலடி வைத்தாள் வயதிலே சிறியவளான தர்சினி விடுதலைப் பாதையில் இணையும் போது தந்தைக்கு 'நாட்டு நிலைமையை யோசியுங்கள்' என்று எழுதிய கடிதத்தை இங்கு முழுமையாகப் பிரசுரிக்கின்றோம்.

அப்பா,

நான் இயக்கத்திற்குப் போக ஆசை கொண்டுள்ளேன். இந்த ஆசையை நிறைவேற்ற உங்கள் ஒத்தாசை வேண்டும். இதைப் பற்றி நீங்கள் தப்பாக நினைக்க வேண்டாம். பேனா ஏந்திய கைகள் இன்று துப்பாக்கி ஏந்துகின்றன. என்று ஆச்சரியப்படலாம். ஆனால் நீங்கள் அன்று படிப்பை விட்டுவிட்டு ஆமி வேலையில் சேர்ந்தீர்கள். இப்போது புரிகின்றது முதலில் நாட்டு நிலைமையை யோசியுங்கள். இன்று சிங்களவர்கள் கூட ஒரு சிறுவன் தனது மதிய உணவு நிதியை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒதுக்குகிறான். நடக்க எடுக்க முடியாத கிழவர்கள் கூட ஆயுதம் ஏந்திய வண்ணம் நிற்கின்றார்கள். அவர்கள் அன்று 66, 72, 83, 87 இவ்வாறு ஆண்டாண்டு காலமாக எம்மை அழிந்து ஆட்சி செய்ய முனைகின்றார்கள். ஏன் நாம் அப்படி முனையக்கூடாது?' அண்ணன் காட்டிய வழியில் தம்பி செல்கின்றான். அதுபோல அக்காள் காட்டிய வழியில் நானும் போகின்றேன்' வீணாகத் தேடி அலைய வேண்டாம். தமிழீழம் கிடைக்கும் வரை போராடியே தீருவோம்.

எத்தனை எத்தனை
கொடுமைகள் இங்கே
இனியும் இருப்பது மடமை என்றே
இன்றே குதிப்போம்
போர்க்களத்தில்
அடிமை வாழ்வு எத்தனை காலம்
விடிவு காண புறப்படுவோம்
புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்.

தனது கல்வியை இடையில் நிறுத்திவிட்டு சுதந்திர மண்ணில் தான் கல்வியைத் தொடர முடியும். அதற்குள் விடியலின் பாதையிலே புரட்சிக் கல்வியை தொடரப் போவதாக தந்தையின் சேட்டினுள்

கடிதத்தை வைத்துவிட்டு அக்காவின் வழியை பின் பற்றி விடியலைக் காணப் புறப்பட்டாள்.

பயிற்சி முகாமுக்கு அனுப்பப்பட்டாள் தர்சினி. அங்கு கீதா என்ற பெயருடன் பயிற்சியினைப் பெற்றாள். தனக்குப் பயிற்சியின் போது வழங்கப்பட்ட பணிகளை மிகவும் சுறுசுறுப்புடன் செய்து முடிப்பாள். அமைதியான தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் விழிகளின் வீரத்தின் உறுதியையும் விடுதலையுணர்வையும் நிதானமாகச் சிந்தித்து திட்டங்களை வகுப்பதிலும் கீதா திறமையாக செயற்பட்டாள். பயிற்சிகளை விரைவாகவும் உற்சாகமாகவும் செய்து முடிப்பாள். தனக்கு பொறுப்பாளராக உள்ளவர்களின் கட்டளைகளை ஏற்று அதன்படி நடப்பாள்.

எல்லாப் போராளிகளுடனும் அன்பாகப் பழகுவாள், இவளது உயிர் நண்பியாக தவச்செல்வி என் போராளி இருந்தாள். இருவரும் ஒரே பயிற்சி முகாமிலே பயிற்சி எடுத்தவர்கள். எந்த விடயத்திலும் ஒற்றுமையாகவும் போட்டியாகவும் செயற்படுவார்கள். இருவருக்குமிடையில் பொறாமை என்பது கிடையாது. பயிற்சியின் போது விளையாட்டுப் போட்டிகள் எல்லாக் குழுக்களுக்கிடையிலும் இடம்பெற்றது. அப்போது இருவருக்கும் இடையில் கடும் போட்டி, ஆனாலும் கீதாவே முதலிடங்களைப் பெற்றாள்.

கலை நிகழ்ச்சிகளில் ஆர்வமுடைய கீதா பயிற்சியின் ஓய்வு நாட்களில் நிகழ்ச்சி இடம்பெறும் போது தனது கலைத் திறனையும் பாடல்களையும் இனிமையாக வெளிப்படுத்துவான்.

பயிற்சி முடிவடைந்ததும் இவள் 15 பேர் கொண்ட குழுவிற்குப் பொறுப்பாளராக தெரிவு செய்யப்பட்டாள். வயதில் சிறியவளாக இருந்தாலும் தனக்குரிய வேலைகளை பொறுப்புடன் ஏற்றுப் பிள்ளைகளுக்கு எந்த நேரம் என்ன வேண்டுமோ அதனைக் கேட்டு நிறைவேற்றுவாள், அறிவுரைகள் கூறி நல்வழிப்படுத்துவாள்.

இவர்களது பயிற்சி முடிந்த நேரத்தில் காரைநகர் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் படையினருடன் மோதல்கள் ஆரம்பமாகின. இந்த மோதலின் போது மகளிர் படைப்பிரிவும் பங்கு கொண்ட போது கீதாவும் கலந்து கொண்டாள்.

பின்னர் விசேட பயிற்சிக்கென அழைக்கப்பட்டுப் பயிற்சி முகாமிற்கு சென்ற போது இவளைப் பார்க்கவென முதல் தடவையாக பெற்றோரும் சகோதரனும் வந்தார்கள். ஆனால் கீதாவோ தன்னைப் போலவே வெளிமாட்டத்தைச் சேர்ந்த பல போராளிகள் பெற்றோரைக் காணாது இருக்கிறார்கள். நானும் அவர்களைப் போல ஒரு போராளி.

நான் மட்டும் பார்த்துக் கதைக்க மற்றப் பிள்ளைகளுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே, அவர்களுக்கும் பாசம் இருக்கும் தானே என்ற நினைப்புடன் பாசத்தின் பிணைப்பு அழுத்தினாலும் பெற்றோரைச் சந்திக்க மறுத்துவிட்டாள். கீதாவைப் பார்க்காமலே பெற்றோர் வீடு திரும்பினார்கள்.

எமது இயக்கத்தில் இருக்கும் இவளுடைய அக்காவையும் தான் ஒருமுறையும் இயக்கத்தில் சேர்ந்தபின் பார்க்கவில்லை எனக் கூறுவாள்.

மீண்டும் போர் ஆரம்பமாகியது. மன்னாரில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா அரச படையின் கெடுபிடிகள் அதிகரிக்க மக்கள் அகதிகளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. உடைமைகள் உயிர்கள் அழிக்கப்பட்டதுடன் பெண்கள் கோரமான முறையில் பாலியல் வன்முறைகளிற்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அத்துடன் புலிகளின் காவல் அரண்களை கைப்பற்றப் போகின்றோம் என்று கூறி முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்துப் புலிகள் பாரிய தாக்குலை நடத்தத் தொடங்கினர்.

17.06.1991 அன்று மன்னாரில் நடைபெற்றுக் கொண்டிருந்த தாக்குதலில் பங்கு கொள்ள மகளிர் படையணியினர் செல்வதற்கு தயாராகினார்கள். வாகனத்தில் ஏறியதும் எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகின்றோம் என்று பாடத் தொடங்கினர். வாகனம் எதிரிகளின் மறைவிடத்தை நோக்கி விரையத் தொடங்கியது. சிறிது தூரம் சென்றதும் யார் இந்த சண்டையில் முதலில் சாகிறது என்ற பேச்சு எழுந்தது. அப்போது கீதா நான் தான் முதலில் சாவேன் என்ற கூறினாள். நான் தான் முதலில் சாவேன் என்று மகிழ்ச்சியுடன் கூறியதைக் கேட்டு மௌனமாகின்றனர். வவுனியாப் பகுதியில் சண்டை மிகவும் தீவிரமாக இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றது. சிறிலங்கா படையின் குண்டு வீச்சு விமானங்களின் கண்மூடித் தனமான தாக்குதலின் மத்தியில் புலிகள் இராணுவத்தினரை முன்னேற விடாது பதில் தாக்குதலை நடாத்தியபடி முன்னேறிச் செல்கின்றனர். இந்த வேளையில் கீதாவின் அணியினர் வந்த வாகனம் வவுனியா குருக்களூர் பகுதியை அடைந்ததும் பழுதடைந்து விட்டது. அவர்கள் கால் நடையாக விட்டிறங்கி கால்நடையாக சண்டை நடக்கும் இடத்தை நோக்கி விரைகின்றனர். அப்போது இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இவர்கள் செல்லும் திசையை நோக்கி வட்டமிட்டு குண்டு வீச்சுக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. இதனைக் கவனித்த கீதா தன் தோழிகளிடம் பாதுகாப்பு நிலை எடுக்குமாறு கூறுகின்றாள்.

அந்த நேரம் விரைவாக வந்த குண்டு வீச்சு விமானங்கள் இரண்டும் பாதுகாப்பு நிலை கொண்டிருந்த இடத்திற்கருகில் பதிந்து சென்றது. அப்பகுதி முழுவதும் ஒரே புகைமண்டலமாக இருந்தது. கீதாவும் அவளுடன் இருந்த மூன்று தோழிகளும் வவுனியா மண்ணிலே சாவுடன் சங்கமமாகின்றனர்.

இறுதி மூச்சுவரை இலட்சிய தாகத்திற்காகவே, களத்தில் போராடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இவ்வேங்கைகளின் கனவுகளை நனவாகக் விடியலைக் காண பல்லாயிரக்கணக்கானோர் அணிவகுத்து நிற்பார்கள். எமது மண்மீட்கப்படும் வரை துப்பாக்கிகள் தூங்கப்போவதில்லை.

நன்றி : களத்தில் இதழ்

*18.09.1992*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **வீரவேங்கை**

*இயக்கப் பெயர்:* **கீதா**

*இயற்பெயர்:* **தர்சினி திருச்செல்வம்**

*பால்:* **பெண்**

*முகவரி:* **அம்பனை, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **17.10.1975**

*வீரச்சாவு:* **17.06.1991**

*நிகழ்வு:* **வவுனியா குருக்களூரில் சிறிலங்கா படையினருடனான சமரில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **கோப்பாய்**

*மேலதிக விபரம்:* **கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**

## மேஜர் வீமன்



தென் ஆசியாவின் வரலாற்றுப் போக்கை மாற்றியதில் மணலாற்று மண்ணுக்கு தனியிடமுண்டு. இந்தியப் படையுடன் இங்கு நடந்த போர்கள் பாரம்பரிய யுத்தங்களையெல்லாம் கேள்விக்குறியதாக்கிற்று. இந்திய இராணுவத்தில் சிறப்புமிக்கதாகக் கருதப்பட்ட படைப்பிரிவுகளெல்லாம் தமது பெருமையை இழந்தன. இங்கு நடந்த வியப்பூட்டும் அனுபவங்களை இந்திய இராணுவத் தளபதிகள் நூல் வடிவில் வெளியிடுகின்றனர். மற்றும் பல வரலாற்று ஆய்வாளர்கள் இதனை ஆய்வு செய்து கொண்டிருக்கின்றனர். அமைதிப்படையில் கடமையாற்றி உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கவேண்டும். என்ற இந்திய அரசு உத்தரவிடும் அளவுக்கு இந்தியப் படையின் இழப்பு இருந்தது.

இந்தப் பெருமை மிக்க போரில் கலந்து கொண்ட ஒரு அணியை வழி நடத்தியவன் தான் வீமன். இவன் மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். அங்கேயே பயிற்சியும் பெற்றவன். சொல்லப்படும் விடையத்தை இலகுவாக புரிந்து கொள்பவன். யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குரும்பசிட்டி மினிமுகாம் தாக்குதல் உட்பட பல தாக்குதலில் கலந்து கொண்டவன். யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருடனான போர்களில் பங்குபற்றிய பின் மணலாற்றில் இவனது பணி தொடர்ந்தது.

1988 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் நாள் மணலாற்றில் இந்தியப் படையினருடனான போர் ஆரம்பித்தது. காலை 5.15க்கு ஆரம்பித்த இந்தச் சண்டையில் பிற்பகல் 4.00 மணிவரை இந்தச் சண்டையில் கலந்து கொண்ட எவருமே அந்த இடத்தை விட்டு

விலகவே இல்லை. வேறொரு முகாமிலிருந்த வீமன் சண்டை தொடங்கிய பத்து நிமிடத்துக்குள் ஜி.3 துப்பாக்கியுடன் அங்கு நின்றான். அவனைப் பொறுத்தவரை சண்டை செய்வதற்கு இது நல்ல சந்தர்ப்பம். அதனால் மகிழ்ச்சியுடன் கத்திக்கத்திச் சண்டை போட்டான். அன்றிலிருந்து இந்தியப்படை இந்த மண்ணை விட்டுப் போகும் வரை அவனது இந்தச் சுபாவம் மாறவில்லை.

அந்த இடைக்காலத்தில் மணலாற்று மண்ணில் நடந்த அனுபவங்கள் மறக்கமுடியாதவை. ஒரு காலத்தில் உடுப்புக்கு கூட தட்டுப்பாடு இருந்தது. காயப்படுவோருக்கு வைத்தியம் செய்வதற்குரிய சூழ்நிலை இல்லை. ஒவ்வொரு போராளியும் தமது நெருங்கிய நண்பர்களை இழந்திருந்தனர். ஆனாலும் எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையானாலும் இவனது கலகலப்பான போக்கை மாற்றமுடியவில்லை.

எந்த நேரமும் இந்தியப்படை வரலாம் என்பதால் உணவைச் சேமிப்பதில் வெகு அவதானமாக இருக்கவேண்டியிருந்தது. அவற்றை உருமறைப்புச் செய்வதில் மரங்கள் கூட பெரும் பங்கு வகித்தன. இந்தியாவின் சுதந்திர தினத்தையொட்டி இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்ட கவியரங்கு ஒன்றில் வன்னிக் காட்டு மரங்கள் கூட காட்டிக் கொடுக்காது என்று குறிப்பிடுமளவிற்கு எமது மண் உயிர்ந்து நின்றது. ஒரு நாள் இவன் மரத்தில் சிறாம்பிகட்டி உணவைச் சேமிக்கும் போது கையை விட்டுவிட்டு நிக்கின்றேன் பார் என்ற தனது நண்பனிடம் கூறியபோது மரத்திலிருந்து தவறிவிழுந்தான். அதனால் படுக்கையிலேயே கிடக்கவேண்டிய நிலை. முற்றுகையென்றால் இவனையும் படுக்கையுடன் கொண்டுபோக வேண்டும். அந்த நிலையிலும் இவனது கலகலப்பு மாறவில்லை. அதுதான் அவனது தனித்துவம்.

குணமடைந்து மீண்டும் களத்துக்கு திரும்பினான். இளைய தலைமுறைப் போராளிகளை வழிநடத்தினான். திட்டமிட்டு செயலாற்றுவதில் திறமையிருந்ததோ அதேயளவுக்கு ஒரு போராளியின் மனதை அறிந்து செயற்படும் ஆற்றலுமிருந்தது. போராளிகளின் இன்ப துன்பத்தில் பங்கு கொள்வான். மீண்டும் அவர்களைத் தட்டிக்கொடுத்து புதுத் தெம்புடன் அவர்களைப் போராட வைப்பான். பொதுவாக இவனது முகாம் எப்போதும் மகிழ்ச்சியுடன் காணப்படும். இந்திய ஜவான்களெல்லாம் மரண பயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில் இவனது முகாமில் அடிக்கடி கலை நிகழ்ச்சிகள் நடக்கும். சனி, ஞாயிறு தினங்களில் விளையாட்டுக்கள் இடம்பெறும். அந்த முகாமில் ஒரு மரை, ஒரு கரடி என்பற்றுடன் ஒரு கருங்குரங்கையும் வளர்த்தான். அது

ஒரு அபூர்வ ஆற்றல் மிக்கது. இவனைப் போலவே அது எல்லோரும் எப்போதும் சந்தோசமாகவும், ஒற்றுமையாகவும் இருக்க வேண்டுமென்று விரும்பியது. யாருக்காவது ஒருவர் அடித்தால் அடிப்பவரை அது கையைப்பிடித்துத் தடுக்கும். இருவரும் ஒற்றுமையாக இருப்பதைக் கண்டாலே அதற்குத் திருப்தியேற்படும். புதிதாக அந்த முகாமுக்கு வருபவர்கள் இதனைப் பார்த்து வியப்பார்கள்.

காட்டிற்குள் சென்ற புதிதில் திசையறிகருவி மூலம் காட்டை இனங்காண்பதில் வல்லவர்களாக இருந்தவர்களில் இவனும் ஒருவன்.

மரணத்தின் வாசலைச் சந்தித்தது போன்ற மிகப் பயங்கரமான முற்றுகைக்குள் எதிரிப்படையை மிகக்கிட்டிய தூரத்தில் இனங்கண்ட சம்பவங்களெல்லாம் ஏராளம். அப்போதெல்லாம் திசையறிகருவியின் துணையுடன் போராளிகளை பத்திரமான இடங்களுக்குக் கொண்டு சென்றிருக்கின்றான்.

சிறிலங்காப் படையினருடனான போர் மீண்டும் ஆரம்பித்த பின் இவன் மாங்குளம் முகாம் மீதான முற்றுகை, காரைநகர் சிறிலங்காப் படையினருடனான மோதல் முந்திரிகைக்குளத்தில் சிறிலங்காப் படையினரின் மினி முகாம் மீதான தாக்குதல் போன்ற பல தாக்குதல்களில் பங்கேற்றான். அக் காலங்களில் இவனுடன் தாக்குதல்களில் கலந்து கொண்டோர் அதனை ஒரு இனிய நினைவுகளாகவே குறிப்பிடுகின்றனர். ஒவ்வொரு சம்பவத்திலும் இவன் நடந்து கொண்ட விதம் தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்காக இவன் என்னென்ன விதத்தில் செயற்பட்டான் என்றெல்லாம் கதை கதையாகக் கூறுகின்றனர். நீந்தத் தெரியாதோரை கயிற்றில் கட்டி நீந்த விட்டது...... தமக்கு நண்டு சுட்டுக் கொடுத்தது. இளநீர் பறித்துக் கொடுத்தது...... பொதுவாக போர்ச் சூழலில் இருக்கும் உணர்வே இருக்கவில்லை. அவர்களுக்கு அக்காலங்களில் ஒரு விடுமுறையைக் கழிக்கும் உணர்வே இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். போர்க்களத்தில் எதிரியைக் காட்டிவிட்டு சுட்டு வீழ்த்தியதை நினைத்து வியக்கின்றனர்.

இவ்வளவு ஆற்றல் மிக்க போராளியை 15.07.1991 இல் தொடங்கிய மணலாற்றுப் போரில் இழந்தோம். இப்போருக்கு முன்னதாக இராணுவத்தினரின் உளவுப் பிரிவொன்றுடன் மோதல் நிகழ்ந்தது. எனவே நடைபெறவிருக்கும் முற்றுகையை முறியடிக்க திட்டங்கள் தீட்டினான் இவன். ‘எங்கட காட்டுக்கை வந்திட்டுப் போறதெண்டா, சேட்டையா?..... நல்ல அடி குடுத்துக்கலைக்க வேணும்’ என்று கூறி விட்டு போராளிகளை தயார் படுத்தினான். மிகக் கடுமையான மோதல் நிகழ்ந்தது. தொடர்ச்சியான இந்த முற்றுகையில்

ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு செல்லும் வழியில் மறைந்திருந்த படையினர் தாக்கினர். அந்தப்போரின் போதே வீமன் இந்த மண்ணைப் பிரிந்தான். உயிர்பிரியும்வரை அந்த மோதலுக்குத் தலைமை தாங்கினான். இவனுடன் இன்னும் 12 போராளிகள் அச்சம்பவத்தில் வீரச்சாவடைந்தனர். இவனால் வழிநடத்தப்பட்ட போராளிகள் அந்தப் பாரிய முற்றுகையை முறியடித்தனர்.

இவனது உடல் இறுதி ஊர்வலத்துக்கு வந்தபோது மில்லரின் நினைவு தினக் கூட்டத்தில் இவன் ஆற்றிய உரையே மக்களுக்கு நினைவுக்கு வந்தது. எங்கள் தாயகபூமியில் சிங்களக் குடியேற்றத்தை முறியடிக்க அணிதிரள வேண்டுமென்று உணர்வு பூர்வமாக ஆற்றிய உரை அது. போராளிகள் இவனது கலகலப்பு, திட்டமிடும் ஆற்றல் போன்ற வற்றை நினைத்து புத்துணர்வு பெறுகின்றனர். அவர்களுக்கு இவன் கடைசியாகச் சொன்னது இன்று சொன்னது போல் இருக்கிறது.

'எங்கடை காட்டுக்கை வந்திட்டுப் போறதெண்டா சேட்டையா... நல்ல அடி குடுத்துக் கலைக்க வேணும்' ஆம் இந்தக் காடுகள், கடல்கள், வயல்கள் எல்லாமே எங்களுடையவை. இதை இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள் அவர்கள்.

**- இலக்கியன்**

நன்றி : களத்தில் இதழ், 02.101992.

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

நிலை: **மேஜர்**

இயக்கப் பெயர்: **வீமன்**

இயற்பெயர்: **உ. சோலை விக்னேஸ்வரன்**

பால்: **ஆண்**

முகவரி: **அடம்பன், மன்னார்.**

மாவட்டம்: **மன்னார்**

வீரப்பிறப்பு: **11.10.1966**

வீரச்சாவு: **16.07.1991**

நிகழ்வு: **மணலாற்றில் எமது முகாமை நோக்கிவந்த சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவு**

துயிலுமில்லம்: **ஆட்காட்டிவெளி**

மேலதிக விபரம்: **ஆட்காட்டிவெளிமாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## மேஜர் அழகன்

அழகன் வீரச்சாவடைந்து விட்டான். இதயத்தை ஊடுருவி அசைத்து ஆட்டிப் பார்க்கும் செய்தி.

அவன் சிரித்த முகத்துடன் அலையும் வீதிகள் வெறிச்சோடிப் போய்க் கிடந்தன.

'உண்மையாகவா' அவ் வீதிகளின் வழியே அவனைப் பார்த்தாலும் அழகன் மாமா என்று மகிழ்ச்சியுடன் கையசைக்கும் சின்னஞ்சிறுசுகள் ஏக்கத்துடன் நின்றனர்.

ஈழநாதத்தின் வாசல்... அவர்கள் அனைவரும் அழுதபடி..... அவர்களால் இவனின் இழப்பை எப்படித் தாங்கமுடியும்? முடியாது. அழட்டும் நன்றாக அழட்டும். இதயத்தின் ஈரம் காயும் மட்டும் அழட்டும்.

போராளிகளின் உடல்களைப் பக்குவப்படுத்தும் இடம்.

அழகன் கட்டிலில் படுத்துக் கிடந்தான். வழமை மாதிரியே கைகளை அகலப் போட்டபடி சாதுவான சிரிப்புடன்.... அவன் சாவைச் சந்தித்துவிட்டானா? யார் சொன்னது? அவனது வயிற்றில் இருந்த சிறிய காயத்தால் இரத்தம் கூட வழியாத நிலையில்..... அவன் சாவை அணைத்துவிட்டானா?

'அழகன் டே..... அழகன்....' தோழனொருவன் அவனது கன்னத்தில் தட்டிவிட்டு அழுதான். காற்றில் கலந்த சோகம் உலகின் அசைவுகளை அப்படியே நிறுத்தியிருந்தன.

இவனது இழப்பை வீதிகளில் நின்று கையசைக்கும் அந்தச் சின்னஞ் சிறுசுகளும் இவனை அன்புடன் நேசித்த இந்த தேசத்தின் மக்களும். சிறிய விபத்தொன்றில் இவனது தம்பியை முன்னமே

இழந்துவிட்ட இவனது தாயும், தந்தையும், தங்கள் சகோதரனில் உயிரையே வைத்திருக்கும் சகோதரிகளும் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகின்றார்கள்.

அதைவிட இவனுக்காகவே காத்திருக்கும் இவனின் அவள்..... இவனின் இழப்பை எப்படி......?

அவள் மட்டுமா? எத்தனை வேலையென்றாலும் அழகனைத் தேடும் இவனது தோழர்கள்....

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது?

அழகன்!

முல்லை மண்ணின் குழந்தைகளில் அவனும் ஒருவன். அந்த மண்ணின் உயிரில் கலந்து அங்கு வாழும் மக்களின் இதயங்களில் குடிசை கட்டி வாழ்ந்தவன். தண்ணீரூற்றுப் பகுதிக்கு அரசியல் வேலை செய்வதற்கு வரும் பொழுது அழகன் சின்னப் போராளி இவனுக்கு அழகன் என்ற பொருத்தமான பெயரை யார் வைத்தார்கள்? இந்தக் கேள்வியை அந்தக் கிராமத்தில் யார் தான் கேட்கவில்லை.

'இந்தத் தேசம் விடுதலை பெற வேண்டும்' என்று அந்தக் கிராமங்களில் இந்தக் குயில் குரலெடுத்துப் பாடத் தொடங்கியது. ஒரு வருடம் கடந்த பொழுது அழகன் அந்தக் கிராமத்தின் செல்லக் குழந்தையாக மாறிவிட்டான். அவனுக்குப் பின்னால் 'சுதந்திரம் எங்கள் உயிர் மூச்சு' என்று கொண்டே அப்பகுதி மக்கள் அணிவகுத்து நின்றனர்.

அந்த இனிய நாட்கள் தான் எப்படிப்பட்டதென்று பாருங்களேன்!

ஒரு மிதி வண்டியில் மடித்துக் கட்டாத சாரத்துடன் நிற்கும் அழகனை பார்த்து 'அழகன் மாமா..... போட்டு வாறம்' என்று கொண்டே பாடசாலை செல்லும் சிறுவர் கூட்டம். காலையில் கடக்கும். சிறிது நேரம் சென்ற பின் 'தம்பி மத்தியானம் சாப்பாட்டுக்கு வாடா' என்று இவனது கன்னத்தை தடவிவிட்டுச் செல்லும் அம்மாமார். மாலையில் 'தம்பி, தலைவர் என்ன சொல்கிறார்' என்றபடியே அரசியல் கதைக்கும் அப்புமார். நேரம் என்று பாராமல் இவன் சொல்வதைச் செய்து கொண்டு திரிந்த இளைஞர்கள் என்று அழகன் யாரோடு தான் கலக்கவில்லை!

இராணுவ நடமாட்டம் அதிகமான நெருக்கடி மிகுந்த அந்த நாட்களில் அந்தக் கிராமங்களில் அழகன் விடுதலைப் பயிரை வளர்க்க முயன்றான். அந்நேரந்தான் அவர்களுக்குள் அன்பு முளைவிட்டது.

அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தை கவிந்திருந்த போர் மேகங்களின் விளைவாக நாவற்குழி இராணுவ முகாம் காவல் நிலைகளுக்கு அழகன் மாற்றப்பட்டான். காவல் நிலைகளின் ஒரு தொகுதிக்கு பொறுப்பாக இருந்த மேஜர் தாடி பாலாவின் குழுவில் அவனும் ஒருவனாக இருந்தான்.

அங்கும் பாலாவினதும் மற்றைய தோழர்களினது அன்புக்கும் அவன் விரைவிலேயே ஆளாகிப் போனான். பாலாவிற்கு அழகன் எப்போதும் அருகில் இருக்கவேண்டும். என்ற உணர்வு இதயத்தில் ஊறிப்போய் விட்டது.

அந்தப் போராளிகள் சிங்களப் படைகள் எந்த முனையால் முன்னேற முயன்றாலும் அங்கு நின்றனர். ஆக்கிரமிப்புவாதிகளின் முயற்சிகளை முடியடித்து அந்த மண்ணைக் காத்தனர். அப்போதெல்லாம் அழகன் ஓர் எறிகணை செலுத்தியை வைத்திருந்து சண்டையிட்டான்.

இந்திய இலங்கை ஒப்பந்தமும் அதைத் தொடர்ந்து ஒரு போர் நிறுத்தக் காலமும் வந்தபொழுது அழகனை மாத்தையா அண்ணை தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார். இந்தியர்களுடனான போர் தொடங்கும் வரைக்கும் பல்வேறுபட்ட அரசியல் வேலைகளை அழகன் செய்து கொண்டிருந்தான்.

இந்தியர்களுடனான போர் தமிழீழமெங்கும் எழுந்தபொழுது பல்வேறு பகுதிகளிலும் நின்று அழகன் போராடினான். அன்னிய ஆக்கிரமிப்புவாதிகளின் அராஜகத்திற்கு இந்தத் தேசம் அடிபணிந்து போகாது என இந்த மண் நிமிர்ந்து நின்று போராடியது. தென்மராட்சிப் பகுதியில் நின்று செயற்பட்ட அழகன் அதன் பின்பு வன்னிக்கு வரவழைக்கப்பட்டான்.

வன்னியில் மேஜர் தாடிபாலாவின் அணியில் ஒருவனாக நின்று போராட்டக் களத்தில் செயற்பட்டான். அக்காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக தொடங்கப்பட்ட பயிற்சி முகாம் ஒன்றின் பயிற்சி ஆசிரியராக அழகன் நியமிக்கப்பட்டான். இந்தியர்கள் இம்மண் மீது ஓர் போரினைத் தொடுத்த பின்பு தமிழீழ மண்ணில் நடத்தப்பட்ட புலிகளின் முதலாவது பயிற்சி முகாம் அதாகத்தான் இருந்தது.

அதன் பின்பாக வன்னிக் காடொன்றில் இயங்கிய அரசியல் தலைமையகத்திற்கு அழகன் மாற்றப்பட்டான். அந்த முகாமின் வெளித் தொடர்புகளைக் கவனிக்கும் பொறுப்பு அவனுடையதாக இருந்தது. அந்நேரங்களில் அக்காட்டு முகாமிலிருந்து வெளியிடப்பட்ட 'உணர்வு' 'சுதந்திரப் பறவைகள்' ஆகிய சஞ்சிகைகள் வெளிவரத் தேவையான

கல்லச்சுத்தாள், மை போன்றவற்றைக் கொள்வனவு செய்து கொடுக்கும் பொறுப்பு அழகனிடம் இருந்தது.

அதன் தொடராகத்தான் இந்தியர்கள் வெளியேறத் தொடங்கியதும் ஈழநாதம் பத்திரிகையை நடத்தவேண்டிய பொறுப்பு அழகனிடம் ஒப்படைக்கப்பட்டது. உண்மையில் சொல்வதாக இருந்தால் என்ன? ஈழநாதம் முதலாவது இதழ் வெளிவந்த பொழுது குடாநாட்டின் பல இடங்களில் இந்தியர்கள் இருந்து கொண்டு தான் இருந்தார்கள்.

வன்னிமக்களால் அன்போடு ‘எங்கட அழகன்’ என்று அழைக்கப்பட்ட அவன் இப்போது ஈழநாதம் அழகனாக மாறியிருந்தான். பத்திரிகை உலகத்தில் புதியவனாய் புகுந்த அழகன் அதில் மிகவிரைவாகவே தேர்ச்சி பெற்றான்.

இரண்டு வருடங்கள் கடந்த பொழுது பத்திரிகை உலகில் சகல நுணுக்கங்களும் தெரிந்ததோர் சிறந்த நிர்வாகியாக அவன் மாறியிருந்தான். ஒரு சில வசதிவாய்ப்புகளுடன் தொடங்கிய ஈழநாதம் இன்று பெரியதொரு நிறுவனமாக மாறி நிற்கின்றது.

இப்போதெல்லாம் அழகன் சிறியவனல்ல.. தேர்ச்சி நிறைந்த நிர்வாகி எளிமையாக பெட்டிக் கடைகளிலும் பெரும் முதலாளி மார்களுக்கு முன்னாலும் இருந்து கதைப்பான். வியாபார உலகத்தின் அசைவுகளை அவன் கண்கள் நன்றாகவே அறியும்.

ஆனால் மறுகணம் போராளிகளுடன் போராளியாகவும் நிற்பான். ஆனையிறவில் நடக்கும் சமரில் காயமடையும் போராளிகளை குண்டு வீச்சு விமானங்களுக்கு இடையால் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் சாரதியாக மாறிப்போவான்

‘ஈழநாதம் அதன் வளர்ச்சி’ இதுவே அவனது பேச்சும் மூச்சுமாகப் போனது. எந்த நெருக்கடிகள் வந்தாலும் ஈழநாதம் வெளிவர வேண்டும். இது அவனது இதயத்தின் ஆவல். குடாநாடு எங்கும் குண்டுகள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தாலும் இயந்திரத்திற்கு அருகில் இவன் விழித்துக் கொண்டிருப்பான்.

ஈழநாதம் பணியாளர்களுக்கு அவன் ஓர் அண்ணன். அத்துடன் நிர்வாகப் பொறுப்பாளன். அவர்கன் ஓர் இனிய குடும்பம் விடுதலை உணர்வை விதைப்பது அவர்களின் கடமையாக இருந்தது.

அன்றும் அப்படித்தான் நடந்தது. புகைப்படம் எடுக்கும் தோழன் ஒருவனுடன் போர் முனைக்குச் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற அழகனுக்கு அருகாக வீழ்ந்த குண்டொன்றின் சிதறல் அழகனின்

வயிற்றில் தைத்தது அது சிறிய காயம் என்று தான் அவனும் அவனது தோழர்களும் நினைத்தார்கள். ஆனால்.... உடலின் உள்ளே அவனது உயிரை இவ்வளவு வேகமாகக் குடிக்கும் ஆழமான காயம் இருந்ததை யாரும் அறியவில்லை.

அழகன் சாவைச் சந்தித்துவிட்டானாம். யார் இந்தச் செய்தியை நம்புவார்கள்?

அழகனைச் சுமந்துகொண்டு அந்த வீதிகளில் வேகமாக ஓடும் அந்தச் சிவப்பு நிற வண்டி இன்றும் அவனைச் சுமந்துகொண்டு துயரத்தோடு மெதுவாக.........

இரவுகளில் அழகன் படுத்துறங்கும் ஈழநாதத்தின் முன் மண்டபம் அதில் இன்றும் அழகன் படுத்திருக்கிறான். அவன் சிரித்த முகத்தைப் பார்த்து மகிழ்பவர்கள் எல்லாம் இன்று கண்ணீரோடு.....

அழகா! உன் கண்களை அகல விரித்து ஒரு தரம் பார். உன்னைச் சுற்றி நின்று அழுபவர்கள் யார்?

அம்மா.... அப்பா உன் உறவுகள் மட்டுமா... உன் காதலியும் தோழர்களும் ஏன் இந்தத் தேசமும் உனக்காக கண்ணீர் வடிக்கிறார்கள்...

*நன்றி : களத்தில் இதழ், 13.11.1992.*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **மேஜர்**

*இயக்கப் பெயர்:* **அழகன்**

*இயற்பெயர்:* **செல்வராசா இளங்கோ**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **கல்வியல், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **13.04.1966**

*வீரச்சாவு:* **29.06.1992**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம் கட்டைக்காட்டில் சிறிலங்கா படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **கொடிகாமம்**

*மேலதிக விபரம்:* **கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## மேஜர் தாரணி

எங்கள் தாரணியை எல்லோரும் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும். இவள் சின்ன வயதிலேயே பெரிய பொறுப்பினைச் சுமந்து நின்றாள். எமது தேசம் விடுதலை பெற வேண்டும் என்று துடித்தவள். கூடவே சகல நிலைகளிலும் பெண்கள் முன்னேற்றமடையவேண்டும் சகல அடக்குமுறைகளையும் தகர்த்தெறிந்து எமது தேசத்தின் வாழ்வில் அவர்களும் சமமாக மதிக்கப்படவேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவள்.

இவள் வீரச்சாவு அடைந்து ஒரு வருடத்திற்கு மேற்சென்றும், அவளைத் தெரிந்தவர்களுக்கு, அவளை நேசித்தவர்களுக்கு அவளின் மறைவு இன்று தான். இந்த நிமிடந்தான் நடந்தது போன்ற ஏக்கம், அந்த உணர்வு. அவர்களுக்கே சொந்தமாகிப் போன ஒன்று.

அவள் எங்களுடன் இல்லை. என்ற அந்த உணர்வு ஒவ்வொரு நிமிடமும் நெஞ்சைத் தாக்க, தாரணி இந்த நேரம் இல்லாமல் போய்விட்டாளே.... என்றும், அவள் இருந்தால் இப்படி, இப்படித்தான் இருந்திருப்பாள் என்றும். எங்களுக்குச் சந்தோசம் கவலை வருகின்ற நேரங்களில் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கத்தான் எங்களால் முடிகின்றது.

அவளது இழப்பை மறக்க நினைத்தும் மறக்க முடியாமல். அவளது நினைவுகளுடன் ஒன்றிப்போய் அவளது கனவைச் சுமந்து கொண்டு அவளது பிள்ளைகள் இன்றும் என்றும்...

விடுதலைப்புலிகளின் மகளிர் படையணியின் முதலாவது பயிற்சி முகாமிலே இவள் இணைந்து பயிற்சி பெற்றாள். பயிற்சி முகாமிலே மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்டிருந்த தாரணி,

எந்தக் கடினமான பயிற்சியையோ அன்றி வேலையையோ செய்து முடிக்கக் கூடிய அளவுக்கு மனவுறுதி படைத்தவளாகவும் இருந்தாள்.

இந்திய மண்ணில் பயிற்சியை முடித்துக் கொண்டு வந்த பின் மகளிர் படையணியினர் முதுல் முதல் பங்கு கொண்ட மன்னார். அடம்பன் நேரடி மோதலில் மிகவும் திறமையாகச் செயற்பட்டாள். இச் சண்டையின் போது இவளது கையில் சிறிய காயமேற்பட்டது.

இதேபோன்று இந்திய இராணுவம் எம்மண்ணில் காலடி வைக்கும்வரை சிறிலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற பல சண்டைகளிலே தாரணி பங்கு கொண்டு தன் ஆற்றலை வெளிப்படுத்தினாள். இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருக்குலைந்து. இந்திய இராணுவத்துக்கு எதிரான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டபோது உலகின் வல்லரசு ஒன்றுடன் மோதி என்ன செய்யமுடியும் என்று பலர் திகைத்து நின்றபோது மிகவும் மனோவலிமையுடன் நின்று போரிட்டவள்.

இந்திய இராணுவத்துடன் குடா நாட்டுக்குள் நடந்த பல மோதல்களிலும், வன்னி மணலாறு போன்ற இடங்களில் நடந்த பல மோதல்களிலும் இவள் பங்கு கொண்டிருந்தாள்.

மணலாற்றுக் காட்டுக்குள் இருக்கும் எந்த மரங்களுடன் பேசிப் பார்த்தாலும் அவை ஒவ்வொன்றும் தரணியைப் பற்றி கதை கதையாகக் கூறும் ஒவ்வொரு நாளும் காட்டுக்குள் அவள் நடந்த தூரம் மிக அதிகம். இந்திய இராணுவத்தால் சுற்றி முற்றுகையிடப்பட்ட அந்தக்காட்டுக்குள் எங்கோ ஒரு மூலையிலிருந்து தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருவதற்கு இவளும் இவளது தோழர்களும் பட்ட கஸ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்த நேரத்தில் தான் பெண்கள் துணிந்து இயங்க வேண்டும். அவர்கள் சுயமாகச் செயற்பட வேண்டும் என்று அனைத்து நிகழ்வுகளிலும் பெண்கள் தனித்துச் செயற்பட விடப்பட்டபொழுது மிகவும் ஆர்வத்துடனும் சுறுசுறுப்புடனும் செயற்பட்டாள்.

இவளுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகள் எவ்வளவு கடினமானதாக இருந்த பொழுதிலும் கூட அதைச் சிரித்துக் கொண்டே செய்து முடிப்பாள். அவளுடன் இருந்தவர்களையும் அவ்வாறே செய்யப் பழக்கினாள்.

இக்கால கட்டத்தில் புதிய பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்டபோது இவள்தான் கூடுதலாகப் பிள்ளைகளைக் கூட்டிச் சென்று பொருட்களை எடுத்துவருவாள். இப்படித் தான் ஒரு நாள் இவள் பிள்ளைகளுடன் பொருட்கள் எடுத்து வந்துகொண்டிருந்த

போது பெரிய யானை ஒன்று வழிமறித்தபடி நின்றது. உடனே அவள் துப்பாக்கியால் சுட்டு யானையைக் கலைத்து விட்டாள்.

தாரணி இப்படித்தான் என்ன பிரச்சனை என்றாலும் யோசித்துக் கொண்டு நிற்காமல் உடனே துணிந்து முடிவெடுத்து விடுவாள்.

காட்டுக்குள் இருந்தபோது மிகவும் திறமையாகக் கண்ணிவெடி வைக்கக்கூடிய தாரணி, எந்தக் கடினமான பயிற்சியையும் வேலையையும் செய்யக்கூடிய தாரணி, திறமையாக சண்டை பிடிக்கக் கூடிய தாரணி இப்படித்தான் அவளை எல்லோருக்கும் தெரியும்.

மிகவும் அமைதியாக இருந்த தாரணி கலகலப்பானவளா மாறியது இந்தக் காட்டுக்குள் தான். அவள் இருக்கும் இடத்தில் எந்த நேரமும் சிரிப்புச் சத்தம் கேட்கும். என்ன கவலையுடன் இருந்தாலும் அவர்களைத் தனது கதையால் சிரிக்க வைப்பாள். இதனால் தாரணியின் தோழிகள் எப்போதும் அவளைச் செல்லமாக மாமி என்று கூப்பிட்டார்கள். அவளுடன் அந்தக்காட்டில் இருக்காதவர்களுக்குப் பெரிய ஆச்சரியம், தாரணியா இப்படிக் கதைக்கிறாள் பகிடி விடுகிறாள் என்று.

அவளுடன் நெருக்கமாகப் பழகாதவர்கள், அவள் தலையைச் சிலுப்பிக் கொண்டு கதைக்கும் விதத்தைப் பார்த்து ‘சரியான முரடு’ என்று சொல்லுவார்கள். அவள் கதைப்பதைப் பார்த்தால் முரடு மாதிரித்தான் இருக்கும். அந்த முரட்டுத் தனமான கதைக்குப் பின்னால் இருக்கும் அவளது ஈரமான இதயத்தை அவளுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டுமே தெரியும்.

எந்த இடத்திலும் சரியானதைச் சரியென்று வாதிடும் துணிவு மிக்கவள். ஏதாவது வேலை என்றால் ‘முஜயும்’ அல்லது ‘முடியாது’ என்று மட்டுமே சொல்லுவாள். ‘செய்து பார்ப்போம்’ என்று ஒரு போதும் சொன்னதே கிடையாது. அதனால்தான் அவளால் பல இடங்களில் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் உறுதியாக நிற்க முடிந்தது.

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டுப்போன பின், மீண்டும் இலங்கை இராணுவத்துடனான சண்டை தொடங்கிய போது பல தாக்குதல்களிலும் பங்கு கொண்டாள். கோட்டை இராணுவ முகாம் எமது முற்றுகையில் இருந்தபோதும். பின்னர் பலாலியைச் சுற்றியுள்ள மகளிர் படையணியின் காவலரண்களுக்கும் இவள் பொறுப்பாக இருந்தாள்.

பலாலியைச் சுற்றியுள்ள ஒவ்வொரு குச்சொழுங்கைகளுக்கும் இவளைத் தெரியும். இவள் இங்கு எழும்பாமல் தூங்கிய இரவுகளை

விரல் விட்டு எண்ணலாம். இரவு எந்த நேரத்திலும் பிள்ளைகளின் நிலைகளுக்கு முன்னால் வெடிச்சத்தம் கேட்டால் இவள் அடுத்த நிமிடம் அந்த இடத்தில் நிற்பாள்.

நாங்கள் தனியாக நின்று அடிபட வேண்டும் என்ற கனவைச் சுமந்து கொண்டு பலாலி மண்ணைச் சுற்றிச் சுற்றித் திரிந்தவள். அந்த நினைவுடனேயே அந்த மண்ணிலேயே விதையாகிப் போனாள்.

தான் உயிருடன் இருக்கும் வரை பெண் போராளிகளை நிற்கும் பக்கத்தால் இராணுவம் வெளியேறினால், ஆண் போராளிகளை அந்த இடத்திற்கு வந்து அடிபடவிட மாட்டாள். நாங்கள் தனியாகத் தான் நின்று அடிபட வேண்டும் என்று சொல்லிச் சொல்லியே போராளிகளை வளர்த்தவள். இன்று அவர்கள் தனித்து நின்று அடிபடும்போது அவர்களுடைய உணர்வுகளுடன் சேர்ந்து நிற்கிறாள்.

அந்த நாள் எமது நினைவுகளில் என்றுமே மறக்க முடியாமல் போய்விட்டது. 1991 ஜனவரி 23 ஆம் திகதி அதிகாலை 3.00 மணிக்குச் செய்தி வருகின்றது. ‘தாரணி அக்காவுக்குக் காயம் வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கின்றோம்’ என்று.

‘தாரணி காய்ச்சல், தலையிடி யென்றால் கூடத் தாங்க மாட்டாள். காயத்தை என்னெண்டு தாங்கப்போறாளோ? இப்படித் தான் எங்களால் நினைக்க முடிந்தது. எங்களின் தாரணி எங்களை விட்டு இவ்வளவு வேகமாகப் போவாள் என்று யாருமே நினைக்கவில்லை.

வைத்தியசாலையில் ஒவ்வொரு பகுதியாகப் போய் ‘தாரணியை எங்க விட்டிருக்குது, தாரணியை எங்க விட்டிருக்குது’ என்று கேட்டால் ஒருவருக்குமே தெரியவில்லை. அப்பொழுதுதான் மெல்ல மெல்ல உண்மை தெரியத் தொடங்கியது. எங்கள் தாரணிக்கு நாங்கள் விரும்பாத, நாங்கள் நினைக்காத ஒன்று நடந்துவிட்டது என்று அவளைப் பற்றி நாங்கள் நிறைய நம்பிக்கைகளை வைத்திருந்தோம். எல்லாமே ஒரு கொஞ்ச நேரத்துக்குள் கனவாகப் போனதை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவள் வீரச்சாவடைந்த செய்தி முதலில் அவளது பிள்ளைகளுக்குத் தெரியாது. ‘தாரணியக்காவுக்கு சின்னக் காயமாம். அவ எங்களை விட்டுட்டு அங்கை நிக்க மாட்டா. எப்படியும் ரெண்டு மூன்டு நாளுக்குள்ள திரும்பி வந்து விடுவா’ என்ற தான் கூறிக்கொண்டு இருந்தார்கள். ‘உங்கடை தாரணியக்கா ,உங்கடை இடத்துக்கு வரேலாத அளவு தூரத்திற்குப் போய் விட்டா’ என்று பின்னேரம் மெதுமெதுவாகச் சொல்லப்பட்டது. இப்பொழுதும் அவளது பிள்ளைகளது

அழுகையொலி, மறக்க முடியாது காதுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அவளால் வளர்க்கப்பட்ட அவளது பிள்ளைகள் இன்றும் அவளது பெயரைச் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு சண்டைக்கும் போவதற்கு ஆயத்தப்படுத்தும் போதும். 'எங்கட தாரணியக்கா இப்ப உயிரோட இருந்திருந்தால்.....' இதற்குப் பிறகு அவர்கள் வாயால் எதுவும் சொல்வதில்லை. ஏனென்றால் அவர்கள் சொல்ல வருவது அவர்களது முகத்திலும் பெருமூச்சிலும் நிறைந்திருக்கும்.

'நாங்கள் தனிய நின்டு அடிபடவேணும்' என்ற இவளது கனவை எங்கள் செயல்களினூடாக நனவாக்கி வருகின்றோம்...

**- துளசி**

*நன்றி : களத்தில் இதழ்*

*25.12.1992*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **மேஜர்**

*இயக்கப் பெயர்:* **தாரணி**

*இயற்பெயர்:* **மதிவதனி சுப்பிரமணியம்**

*பால்:* **பெண்**

*முகவரி:* **அத்தாய், பூநகரி, கிளிநொச்சி.**

*மாவட்டம்:* **கிளிநொச்சி**

*வீரப்பிறப்பு:* **20.02.1968**

*வீரச்சாவு:* **23.01.1991**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம் கட்டுவனில் சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற சமரின்போது எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **முள்ளியவளை**

*மேலதிக விபரம்:* **முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## வீரவேங்கை கல்கத் - கிரிசாந்த்

சென்ற ஆண்டு மணலாற்றில் நடந்த வரலாற்றுப் போரில் வீரச்சாவடைந்த இரு நூறுக்கும் அதிகமான வேங்கைகளில் ஒருவன்தான் வீர வேங்கை கல்கத். இவனைக் கல்கத் என்று கூறுவதை விட கிரிசாந்த் என்றே அநேகமான போராளிகள் அழைப்பர். ஏனெனில் கிரிசாந்த் என்ற பெயரில்தான் இவன் முதன் முதல் இயக்கத்தில் அறிமுகமானவன்.

கிரிசாந்த் 1990 ஆம் ஆண்டு தைமாதம் எமது இயக்கத்துடன் தன்னை முற்றாக இணைத்துக் கொண்டான். யாழ் புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு ரவீந்திராதேவி தம்பதிகளின் மூத்த புதல்வன். இவனது இயற்பெயர் மதனரூபன், பழம் என்று தான் வீட்டில் அழைப்பார்கள். இவனுக்கு இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் உண்டு. கிரிசாந்த் யாழ். மத்திய கல்லூரி மாணவன். ஆனாலும் பள்ளிப் பிராயத்திலே பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு காலத்தின் தேவை கருதி களத்திற்கு வந்தவன்.

வீட்டிலே தலைமகன். தாய் தந்தையரின் மிகுந்த கட்டுப்பாட்டின் கீழ் வளர்ந்தவன். வெளி உலகத்தை நன்கு அறியாதவன். வயதில் சிறியவன். ஆனாலும் குறும்புத்தனம் இவனிடம் மிகுதியாகக் காணப்பட்டது. இயக்கத்திற்கு வருவதற்கு சில நாட்களுக்கு முன்பு கூட இவனது குறும்புத்தனத்தால் தான் இவனது தம்பியின் கை உடைந்தது. ஆனால் இச்சம்பவமே கிரிசாந்தின் குறும்புத்தனத்தைக் கட்டுப்படுத்த வழிகோலியது. ஆனாலும் இறுதிவரை முற்றாகக் குறையவில்லை.

கிரிசாந்த் வயதில் சிறியவன் தான். ஆனால் போராட்டத்தில் இவனது பங்களிப்பு பெரியது. சண்டையின் போது மருத்துவம் என்பது

அத்தியாவசியமானதும் மிக முக்கியமானதுமாகும். இந்த மருத்துவ சேவையைத் தான் கிரிசாந்த் செய்தான். மருத்துவ பணியுடன் மட்டும் இவனது பங்களிப்பு நிற்கவில்லை. சிறீலங்கா இராணுவத்திற்கெதிரான சில தாக்குதல் சம்பவங்களிலும் பங்கு கொண்டவன். முக்கியமாக ஆனையிறவு வரலாற்றுப் போரிலும் இவனது கைகள் துப்பாக்கி ஏந்தியது. குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் கலையுணர்வு இவனிடம் இயல்பாகவே காணப்பட்டது. இவன் சங்கீதம் கற்கவில்லைத்தான், ஆனாலும் இவனது குரல் இனிமையானது. சில வேளைகளில் நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி சில பாடல்களைப் பாடுவான். அப்போது நாங்களே எங்களை மெய்மறப்பதுண்டு. அது மட்டுமல்ல. சித்திரங்கள் வரைவதிலும் கெட்டிக்காரன்.

கானகத்திலே மாவீரர் சிலரின் சமாதிக்கு மாபிள்களைக் கொண்டு பெயர் வரைந்துள்ளான். அதன் நுணுக்கத்தையும் அழகையும் பார்த்தால் இவனது கலைத்திறன் நன்கு புலப்படும். ஒரு உருவத்தைப் பார்த்தால் அதை அப்படியே கீறிவிடுவான். இவன் ஒரு போதும் சும்மா இருப்பதில்லை. வேலை இல்லாத வேளைகளில் ஏதாவது வரைந்து கொண்டு தான் இருப்பான். இயற்கைக் காட்சிகள் இவன் மனதைக் கொள்ளை கொண்டு விடுகின்றன போலும். அநேகமாக இவன் வரையும் படங்கள் எல்லாம் இயற்கைக் காட்சிகள் தான். தன் பெயரை எழுதினால் கூட அதற்கு பூக்களின் படங்களை வரைந்து அலங்கரிப்பான். இவற்றுடன் கைப்பணிப் பொருட்கள் கூட நன்றாகச் செய்வான்.

நாம் பாவனை செய்து கழித்து விடும் சேலைன் ரியூப், சேலைன் வயர் போன்றவற்றை எடுத்துச் சேர்ந்து மீன், பூ, பறவை போன்ற பொருட்களை மிகவும் அழகாகவும் நுட்பமாகவும் செய்து முடிப்பான். ஆனால் இவனிடம் ஒரு பழக்கம், எவராக இருந்தாலும் சரி தவறுகள் விட்டால் வெளிப்படையாகவே நேருக்கு நேர் கூறியோ கேட்டோ விடுவான். எதையும் மனதில் வைத்திருக்கும் பழக்கம் இவனிடம் கிடையாது. இதனால் சிலபேரின் கோபத்திற்குக் கூட ஆளானான். என்னதான் இருந்தாலும் இரக்க சுபாவம் இவனிடம் மிகுதியாகவே காணப்பட்டது. அத்துடன் இலட்சியத்திலும் உறுதியாகவே இருந்தான்.

கிரிசாந்திடம் இயக்கத்திற்கு வந்த பிறகும் குறும்புத்தனம் ஓரளவு இருக்கத்தான் செய்தது. ஆனால் எமது இயக்கத்தின் கட்டுபாடுகளுக்கு மிகவும் கட்டுப்பட்டவன். ஒரு முறை 1990 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நண்பன் ஒருவனின் சவாலுக்காக தனது

புதிய பல் தீட்டும் பிரசை சேற்றில் வீசி விட்டான். இதற்குத் தண்டனையாக எறிந்த பிரசை நூலில் கோர்த்து கழுத்தில் போட்டுக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. பின்பு 1991 ஆம் ஆண்டு தைப்பொங்கல் அன்றுதான் அந்தப் பிரஸ் அவனின் கழுத்தால் கழற்றப்பட்டது. இலட்சிய உறுதி கொண்ட கிரிசாந்த் பயிற்சி முடித்து சில மாதங்களின் பின் மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவில் மருத்துவக் கல்வியைப் பயின்றான். பின்பு சில முகாம்களிலும் சில சண்டைகளிலும் மருத்துவராகக் கடமை புரிந்தான். ஆ.க.வெ. தாக்குதலுக்கும் தாக்குதல் பிரிவில் ஒருவனாகச் சென்றான். பின்னர் மீண்டும் மணலாறு வந்து மருத்துவப் பணியைத் தொடர்ந்தான்.

கிரிசாந்த 1990 ஆம் ஆண்டு தை மாதம் எமது இயக்கத்திற்குச் சேர்ந்த காலத்திலிருந்து இறுதிக் காலம் வரையிலான காலப்பகுதியில் மூன்று மணித்தியாலங்கள் மட்டும் யாழ் நகரில் கழித்திருக்கிறான். அதுவும் காயமுற்ற போராளி ஒருவனை யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தபோதுதான். அவனது போராட்ட வாழ்க்கையில் மிகுதிக் காலம் முழுவதும் மணலாற்றுக் கானகத்திலேயே கழிந்தது. ஆனால் அவனுக்கு இறுதிவரை ஒரு ஆசை இருந்தது. தான் பிறந்து வளர்ந்த மண்ணையும் தன் உறவினர்களையும் ஒரு முறையாவது பார்க்கவேண்டும் என்று தான்..... இதை வெளிப்படுத்த 'யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன் சுவையூறும்' என்று பாட்டாகப் படிப்பான். ஆனால் கிரிசாந்த் கொண்ட இலட்சியம் குன்றிடாதவன். தமிழீழம் வென்றெடுக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் தீவிரமாகச் செயற்பட்டவன். கிரிசாந்த் இறுதிக்கட்டத்தில் களத்தில் நிற்கும் வேளையில் தான் அவன் தனது உறவினர்கள் சிலரைக் கண்டான்.

அவ்வுறவினர்கள் எமது அமைப்பின் சாள்ஸ் அன்ரனி விசேட படையணியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மூலம் வீட்டில் இருந்து ஒரு கடிதம் கூட அவனுக்குக் கிடைத்தது. அதில், 'உனது இலட்சியப் பாதைக்கு நாம் எவ்வகையிலும் தடையாக இருக்கமாட்டோம். ஆனால் தயவு செய்து ஒரு முறையாவது எம்மை வந்து பார்த்துவிட்டுச் செல். எம்மை விட்டு நீ பிரிந்து இரண்டு வருடங்களாகின்றன. உன்னை பார்க்க எமக்கு மிகுந்த ஆவலாகவும், ஆசையாகவும் உள்ளது. என்று இக்கருத்தை முதன்மையாகக் கொண்டு அவனது கடிதம் வரையப்பட்டு இருந்தது. ஆனாலும் களத்தில் நின்ற கல்கத்தின் மனம் தளரவில்லை. இலட்சியப் பற்றில் மேலும் வலுப்பெற்றான். உடனே அக்கடிதம் கொடுத்த உறவினரான போராளியிடம் கூறினான்.

'அம்மாவைக் காணும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தால் சொல்லுங்கோ' மணலாற்றில் ஒரு வரலாற்றுப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போரில் நானும் களத்தில் நிற்கிறேன். போர் முடிந்த பின் நான் உயிருடன் இருந்தால் நிச்சயம் உங்களை வந்து பார்ப்பேன் என்று சொல்லுங்கோ' என்று தீரத்துடன் சொன்னான். அந்த இளம் வீரவேங்கை கிரிசாந்த் என அழைக்கப்படும் கல்கத். இச்சம்பவம் களத்திலே போர் விமானங்களின் அகோரக் குண்டு வீச்சுகளுக்கும் பாரிய செல் தாக்குதல்களுக்கும் எதிரியிடமிருந்து பாய்ந்து வரும் துப்பாக்கி ரவைகளுக்கும் மத்தியில் தான் நடைபெற்றது.

கிரிசாந்த் இலட்சியத்தில் உறுதியாகத் தொடர்ந்தும் தன் பணியைச் செய்கின்றான். போர் முனையில் படுகாயமுற்றுக் கிடந்த போராளிகளை எடுத்து வந்து மருத்துவ சிகிச்சை செய்து எத்தனையோ போர் முனையிலே காயமுற்றுக் கிடந்த தன்னையும் விட வயதாலும் உருவத்தாலும் கூடிய போராளிகளைக்கூட தனது சிறிய தோளில் தனித்துத் தூக்கிவந்து மருத்துவ முதலுதவி புரிந்தான். போர் முனையில் காயமுற்றுக் கிடக்கும் போராளிகளைத் தூக்கும்போது அவர்களின் ஆயுதங்களை விடமாட்டான். அவ்வாயுதங்களை எடுத்து இயக்கி சில கணப்பொழுது எதிரியை அதிர வைத்துவிட்டுத் தான் வருவான். இவ்வாறு களத்திலே வேகத்துடனும், தீரத்துடனும் செயல்பட்டுக் கொண்டிருந்த கிரிசாந்த் போர் முனையிலேயே காயமுற்றுக் கிடந்த போராளி ஒருவனை தூக்கிவந்து மருத்துவ முதலுதவி செய்து கொண்டிருந்தபோது தான் எதிரியின் எறிகணையொன்று கிரிசாந்தின் அழகிய முகத்தைப் பதம் பார்த்தது.

அப்போது அந்த வீரவேங்கை மடிந்து வீழ்ந்தான். அவனைக் கையிலே தூக்கியெடுத்தபோது அவன் எழும்பவில்லை. குருதிதான் அவனது பச்சை உடைகளை சிவப்பு நிறமாக்கியது. அவனுக்கு மருத்துவ சிகிச்சை செய்யத்துடித்த நாம் ஏமாந்துவிட்டோம். அவன் வீரச்சாவடைந்து விட்டான். கிரிசாந்த் துயில் கொண்டிருந்தான் மாவீரனாக.

**- கவாஸ்கர்**

நன்றி : களத்தில் இதழ்

*05.02.1993*

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **வீரவேங்கை**

*இயக்கப் பெயர்:* **கிரிசாந்த் (கல்கத்)**

*இயற்பெயர்:* **மார்க்கண்டு மதனரூபன்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **புத்தூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **25.08.1976**

*வீரச்சாவு:* **16.09.1991**

*நிகழ்வு:* **மணலாற்றில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **கோப்பாய்**

*மேலதிக விபரம்:* **கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## கப்டன் மதியழகன்

தமிழ் மண்ணில் அமைதி காக்கவென்று பசுத்தோல் போர்த்திய நரிமாதிரி இந்திய கூலிப்பட்டாளம் புகுந்தது. பல அட்டூழியங்கள் புரிந்து அழிக்க வந்த படையாக மாறியது. தமிழீழ மக்களின் குருதி தமிழீழ மண்ணை சிவக்கச்செய்தது. இந்திய இராணுவத்துடன் புலிவீரர்கள் ஆவேசமாகப் போராடி இந்திய இராணுவத்தை திணறவும் திகைக்கவும் செய்தார்கள். இதற்கெனப்பலர் பல தியாகங்களைப் புரிந்தார்கள்.

இதனால் கொதிப்படைந்த இந்திய இராணுவம் தமிழீழ மக்களை வெறியாட்டம் ஆடியது. பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளானார்கள். இத்தனை கொடுமைகளையும் கண்டு துடித்தான் மகலன்.

மகலன் வடமராட்சி அல்வாய் என்னுமிடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். சொல்லப்போனால் இவர்கள் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. இவனுக்கு ஒரு அண்ணனும் இரண்டு தங்கைகளும் இருக்கின்றார்கள். இவன் இயக்கத்திற்குப் போவான் என்று அவன் வீட்டிலோ ஒருவரும் நினைத்திருக்கமாட்டார்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால் அவன் ஊரில்கூட ஒருவரும் எண்ணிப்பார்த்திருக்க மாட்டார்கள். அவன் அமைதியான அடக்கமான சுபாவம் கொண்டவன். அவன் படிப்பில் கூட கெட்டிக்காரன். அவனது வீட்டுப் பெயர் ரதீஸ்குமார்.

1988 ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைவதற்காக பல இந்திய இராணுவ முகாம்களுக்கு மத்தியிலும் மக்களோடு மக்களாக நிற்கும் புலிகளைக் கண்டு தன்னையும் இயக்கத்தில் இணைத்துக் கொள்ளும்படி கோரினான். ஆனால் அவர்கள் உடனடியாக

இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளமாட்டோம் எனத் தெரிவித்து விட்டனர். ஆனால் அவன் மனம் தளரவில்லை. அப்போதைய நெருக்கடியில் இயக்கத்திற்கெனப் பல உதவிகள் செய்தான். தன் செயற்பாடுகளின் மூலம் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொள்வதற்குத் தகுதியைப் பெற்றான்.

இவன் தன் தாயை தன் குடும்பத்தை எவ்வளவு நேசித்தானோ அவ்வளவிற்கு தன் மண்ணையும் நேசித்தான். 1989 ஆம் ஆண்டு தன்னைமுழுமையாக இயக்கத்துடன் இணைத்துக் கொண்டான். மணலாறு காட்டுக்கு இவன் பயிற்சிக்காக அனுப்பப்பட்டான். அங்கு இவனுக்கு மகலன் என்று பெயரும் சூட்டப்பட்டது.

உலகத்தை கடல் மூலம் சுற்றி சாதனை படைத்த மாலுமி ஒருவரான மகலனைப் போன்று இந்த மகலனும் எல்லாச் செயல்களிலும் சிறந்து விளங்கினான்.

பயிற்சி முகாமில் பயிற்சி எடுக்கும் போது நாளாந்தம் பொருட்கள் தூக்க வேண்டி வரும். அப்போது சில பாரமான பொருட்களை சிலர் தூக்க மாட்டார்கள். அப்படியான கஸ்டமான நேரத்திலும் கூட தன்தோழர்களுக்கு உதவுவது இவனது உயர்ந்த குணத்தைக்காட்டும். மற்றவர்கள் தூக்கமுடியாமல் இருந்த சாமான்களை இவன் மிக இலகுவாகத் தூக்குவான். தாங்கள் தாங்கள் தூக்கமுடியாத சாமான்களை இவன் தூக்குகிறானே தங்களுக்காக என்று மற்றவர்கள் இவனில் மிகுந்த அன்பு வைத்தனர்.

ஆனால் இவனோ யாரைக் கண்டாலும் அன்பாக சிரித்து கதைப்பதிலும், போராளிகளை இலகுவில் பழக்கம் பிடிப்பதிலும் இவனுக்கு நிகர் யார் இருக்கிறார்கள் என்று நான் யோசிப்பதுண்டு. இவன் எல்லோரிலும் பார்க்க வித்தியாசமானவன். மற்றவர்களுடைய துன்பத்திலும், இன்பத்திலும், கஸ்ரத்திலும் கலந்து கொள்வான். இவனோடு அன்பாக பழகியவர்கள் மகலன் அண்ணா சாப்பிட்டு விட்டாரா? அவர் சாப்பிடாமல் நாங்கள் சாப்பிட மாட்டோம் என்று அடம்பிடித்து சாப்பிடாமல் விட்டு விடுவார்கள். அவர்களது அன்புத் தொல்லை தாங்காமல் அவன் அவர்களுடன் சாப்பிட அமர்ந்து விடுவான். இவனோடு அவர்கள் அவ்வளவு பாசம்.

நான் இவருடன் பழகிய காலத்தில் இவரது சிரித்த அன்பான முகத்தைத் தவிர கோபமாக இருப்பதைக் காணவேயில்லை. நித்திரையில் கூட இவரது முகம் சாந்தமாகவே இருக்கும். பயிற்சி முகாமில் நடந்த நிகழ்ச்சிகளிலும் விளையாட்டுக்களிலும் பங்கு பற்றி பல பரிசில்களை வாங்கினான். இவன் நன்கு திறமையாகவும்

தண்டனை வாங்காமலும் இருந்ததினால் பயிற்சி மாஸ்ரர் மற்றவர்களுக்கு இவனை ஓர் உதாரணமாக அடிக்கடி சொல்லுவதுண்டு.

இந்திய இராணுவம் தமிழீழ மண்ணை விட்டு வெளியேறியதும் இவனது பணிகள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தன. இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்ததும் இவன் மோட்டார் எறிகணைப் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டான். அந்தப்பயிற்சியில் மிகவும் திறமையாக நடந்து கொண்டான். கொக்காவில் இராணுவ முகாம் தகர்ப்பிற்கு இவன் முக்கிய பங்குவகித்தான். பின்பு எல்.எம்.ஜி. பயிற்சி பெற வாய்ப்புக் கிடைத்தது. அதை மிகவும் திறமையாக முடித்துக் கொண்டான். இவனுக்கு எல்.எம்.ஜி. வழங்கப்பட்டது.

1991 ஆம் ஆண்டு யூலை மாதம் ஆனையிறவுப் பெரும் போர் தொடங்கியது. அந்தச் சண்டைக்கு மேஜர் ரெட்டி அண்ணாவின் குருப்பில் சென்றான். 11.07.1991 அன்று இரண்டாம் நாளாகத் தடை முகாம் மீது எம்மவர்கள் தாக்குதல் தொடுத்தார்கள். அந்தத் தாக்குதலில் எமது தரப்பில் இழப்பு கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. எமது அறுபத்திரண்டு தோழர்கள் வீரச்சாவெய்தினர். இதனால் அந்த முகாம் விட்டுப் பின்வாங்கவேண்டி இருந்தது.

இருப்பினும் வீரமரணம் அடைந்த தோழர்களின் உடல்களை மீட்டெடுப்பதில் மகலன் தீவிரமாக இருந்தான். எங்களுடன் உண்டு, ஒரே பாயில் படுத்து, ஒன்றாகவே பகிடி விட்ட தோழர்களல்லவா அவர்கள். அவர்கள் தமிழ் மண்ணிற்காகத் தம் உயிரை அர்ப்பணித்தவர்கள். இவர்கள் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்படவேண்டியவர்கள். அவர்களது உடலைக் கொலை வெறிகொண்ட சிங்களவன் தொடவிடலாமா? முடியாது. இதனால் மகலன் கடுமையாக இருந்தான். அதற்கேற்ப அடுத்த நாள் காலை வரை உறக்கமின்றி இந்தப் பணியிலேயே கண்ணும் கருத்துமாக நின்றான். 'மச்சான் டேய், இவன் சிங்களவனுக்கு எங்கட பொடியளுண்டை பொடியை தொட விடக்கூடாது.' என்று கடுமையாகச் சொன்னான். அவனது இந்த வார்த்தையில் உறுதி, நம்பிக்கை, தேசப்பற்று, போன்றவை நிறைந்து காணப்பட்டது. இந்த இவனது முக்கிய பங்கை அங்கு நின்ற எந்த ஒரு போராளியும் மறக்க மாட்டான்.

பின்னர் கடலால் தரையிறக்கப்பட்ட படையினரோடு கட்டைக்காடு பகுதியில் நடந்த சண்டையில் தனது பங்கை ஆற்றினான். 21.07.1991 அன்று கட்டைக்காட்டில் நூறு இராணுவத்தினரை ஊடறுத்துத் தாக்கியதில் (தமிழீழத்தில் முதல் தாக்குதல்) இவனது பங்கு முக்கியமானது. இதில் 90 இராணுத்தினர்

கொல்லப்பட்டனர். ஐம்பது நவீன ரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. இந்தச் சண்டையில் இவன் பங்கு மிக முக்கியமானது. பின்பு சுமார் ஒரு வருடத்தின் பின்னர் இதே பகுதியில் நடந்த பலவேகய இரண்டு இராணுவ நடவடிக்கையின் போது எதிரியுடன் மோதினான்.

இவனுக்குப் பின்பு மதியழகன் என்று பெயர் மாற்றப்பட்டது. இவனது திறைமைகளைக் கண்ட பொறுப்பாளர் இவனுக்கு பி.கே. எல்.எம்.ஜி. கொடுத்தார். இவன் தன்னுடைய ஆயுதத்தில் அதிக பற்று உள்ளவன். தனது சொத்தாகவே அதைக் கருதினான்.

மண்டலாய் பிள்ளையார் கோவிலடியில் நான்கு காவலரண்கள் தகர்க்கப்பட்டு பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். வரலாறு படைத்த கட்டைக்காடு ஆயுதக் கிடங்கு கைப்பற்றிய சண்டையிலும் பங்கு பற்றிச் சிறப்பாகச் செயற்பட்டான்.

எதிரியுடன் மோது போது மட்டுமல்ல வேலை செய்வதிலும் போட்டியாகவே செய்வான். ஒரு நாள் இவன் இரண்டு தோழர்களுடன் பங்கர் போட்டியாக வெட்டினான். முதலாவதாக இவனே வெட்டி முடித்தான். எந்த வேலையிலும் சுறுசுறுப்பாகவும், விரைவாகவும், மற்றவர் மனதைக் கவரக்கூடிய வகையிலும் செயல்படுவான்.

இதே வேளை தனது அனுபவங்களையும், தான் அறிந்த செய்திகளையும் மற்றவர்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்துவான். இதனால் இவனை அன்பாக இவனது தோழர்கள் மாஸ்ரர் என்று கேலி செய்வார்கள்.

09.11.1992 அன்று கிளாலிக் கடலில் பயணம் செய்ய வேண்டி வந்தது. அன்று இவன் தன் தோழர்களுடன் என்றுமில்லாதவாறு பகிடி விட்டுக் கொண்டிருந்தான். பின்பு படகில் ஏறும் போதும் சிரித்துக் கொண்டே ஏறினான். ஆனால் கடலில் சிறிது தூரம் சென்றதும் எதிரியின் படகு நெருங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது. அப்போது இவனது பி.கே.எல்.எம்.ஜி இயங்கியது. பக்கத்தில் நின்றவர்களும் தாக்கத் தொடங்கினார்கள். கூலிக்கு கும்மாளம் அடிக்க வந்த படையல்லவா? எதிரி பின் வாங்கினான். ஆனால் சுடுவதை நிறுத்தவில்லை. எங்கிருந்தோ வந்த எதிரியின் குண்டொன்று மதியழகனின் (மகலன்) தலையை பதம் பார்த்தது. அக்குண்டு மகலனை எம்மை விட்டுப் பிரித்தது. அவன் தனது மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் வீரச்சாவை ஏற்றுக் கொண்டான்.

மகலன் வீரச்சாவடைந்த செய்தியைக் கேட்ட எங்கள் மனம் ஒரு கணம் திக்குற்றது. மகலனின் வீரச்சாவை எங்கள் மனம் தாங்கிக்

கொள்ளாது தத்தளித்தது. மகலனின் வீரச்சாவு ஒரு முழு பால் நிலவை கருமுகில் மறைத்தது போன்ற ஒரு உணர்வு.

எனினும் அவனது கைப்பிடிக்குள் அடங்கியிருந்த பி.கே.எல்.எம்.ஜி மீண்டும் முழங்கும். தமிழீழம் என்று எமது தேசப்படம் குறிக்கப்படும் நாள் வரையில் அதன் முழக்கம் ஓயப்போவதில்லை.

தேசம் எரிகையில் சிவந்த கண்ணுடன்
பொங்கியே எழுந்தவன் -இவன்
பாசம் அழியாத தமிழீழத்தில் எதிரியின்
காலடியை அதிரவைத்தானே-மதியே
நீ சாகவில்லை ?- இல்லை
சரித்திரமாகி விட்டாய்.

**- சரவணன்**

நன்றி : களத்தில் இதழ்,

*05.03.1993*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

நிலை: **கப்டன்**

இயக்கப் பெயர்: **மதியழகன் (மகளன்)**

இயற்பெயர்: **நடராசா ரஜீஸ்குமார்**

பால்: **ஆண்**

முகவரி: **புதுக்கலட்டி, அல்வாய், பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.**

மாவட்டம்: **யாழ்ப்பாணம்**

வீரப்பிறப்பு: **16.07.1974**

வீரச்சாவு: **09.11.1992**

நிகழ்வு: **கிளிநொச்சி,, கிளாலிக் கடற்பரப்பில் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவு**

துயிலுமில்லம்: **எள்ளங்குளம்**

மேலதிக விபரம்: **எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**

## கப்டன் அன்பரசன் (அக்பர்)



மணலாற்றில் போராளிகளுக்கு அவன் நல்லவன், கெட்டிக்காரன், அடிபாடுகளில் மிகவும் திறமையாகச் செயற்படுவான். மெலிதான உடலாக அவனைப் பார்ப்பதற்குத் தெரிந்தாலும் சண்டைகளில் கட் பொசிசனில் எல்.எம்.ஜி.யைப் பிடித்தவண்ணம் சுட்டுக்கொண்டு முன்னேறி இராணுவத்தை வீழ்த்துவான். அவன்தான் எல்.எம்.ஜி. அக்பர்.

விடியலுக்கு முந்தியசாவுகள் விடுதலைப்புலிகள் வரலாற்றில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆம், இந்நிகழ்வுகளில்தான் மணலாற்றில் இன்று ஏ.கே.எல்.எம்.ஜி. அக்பரும் இணைந்து விட்டான். எங்கோ அவன் எம்மைவிட்டு தொலைதூரம் சென்று விட்டதாக ஓர் உணர்வு. போராட்டக்களங்களில் போராளிகளின் இழப்பால் துயருண்டு கனத்த இதயத்தில் இன்று இவனின் பிரிவு தனியிடத்தில். ஆனாலும் அம்மண்ணிலும் போராளிகள் மனதிலும் மணலாறு மாவட்ட மரங்களுக்கு அவனின் குறும்புத்தனங்களும், சந்தோச விளையாட்டுக்களும், களத்தில் சலனமின்றிச் செயற்படும் துடிப்பும் வீரத்தின் விளைவுகளும் நீங்காத நினைவுகளாய் பதிந்துவிட்டன. ஒரு போராளியின் இழப்பு ஒவ்வொரு போராளியின் மனத்திலும்தான் ஏதோ பறிகொடுக்கக் கூடாத ஒன்றை இழந்துவிட்டதாக அவர்களின் மாறாத தவிப்பின் வெளிப்பில் தெரியும். அதுபோலவே இன்று அக்பரின் இழப்பும்.

மட்டக்களப்பில் முற்கொட்டாஞ்சேனைக் கிராமம்தான் அக்பரின் பிறப்பிடம். சதீஸ்குமார் என்பது அவன் இயற்பெயர். சிங்களப்படைகள் மட்டக்களப்பு மண்ணில் செய்துவரும் கொடுமைகளுக்கு போராட்டமே சிறந்தது என முடிவுசெய்தான். அதனால்தான், எம்மக்களின் பாதுகாப்பை எம்மால் உறுதி

*செய்யமுடியும் என்றுணர்ந்தான். 1988 இன் ஆரம்பத்தில் இயக்கத்தில் இணைந்தான். அதே ஆண்டில் மூதூரில் விடுதலைப்புலிகளின் பத்தாவது முகாமில் பயிற்சிகளை முடித்து களத்தில் இறங்கினான்.*

*அக்காலப்பகுதியில், இந்தியப்படையுடன் விடுதலைப்புலிகள் போரிட்டுக் கொண்டிருந்தனர். அக்பரும் இந்தியப்படைகளுக்கு எதிரான சில தாக்குதல்களில் பங்கெடுத்துக்கொண்டான். பின் இந்தியப் படை ஈழ மண்ணைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கையில், தேசவிரோதிகளை அழிப்பதில் அக்பரும் ஈடுபட்டான். இதன் பின்புதான் 1989ம் ஆண்டில் புலிகளின் அணி ஒன்று மணலாறு மாவட்டத்திற்கு வந்தது. அதனுடன்தான் அக்பரும் மணலாற்று மண்ணில் தனது கால்களைப் பதித்தான். இத்துடன் இவனது செயற்பாடு மணலாற்றில் தொடர்ந்தது. அக்பர் ஏ.கேஎல்.எம்.ஜியுடன்தான் அதிகவிருப்பம் கொண்டவன்.*

*அவ்வாயுதத்தை துடைத்துத் துணியினால் எப்போதும் மூடிய வண்ணமே வைத்திருப்பான். அந்த எல்.எம்.ஜி. சண்டைகளில் தனது சந்தர்ப்பத்தை நிறைவேற்றத் தயங்குவதில்லை. அக்பர் மணலாறு மாவட்டத்திற்கு வந்த சில மாதங்களில் இந்தியப்படைகள் முற்றாக ஈழ மண்ணைவிட்டு வெளியேறின.*

*11.06.1990 இல் மீண்டும் இலங்கைப் படைகளுடன் இரண்டாம் ஈழப்போர் தொடங்கியது. அக்பரின் எல்.எம்.ஜிக்கும் வேலைகள் அதிகமாயின. இந்தியப் படைகளுக்கு மணலாற்றில் புலிகள் மறக்க முடியாத பாடம் புகட்டியதுடன் அங்குள்ள மரம்செடி கொடிகளும்கூட தங்களின் மண்மீதான ஆக்கிரமிப்பை உடைக்க பெரும் எதிர்ப்பைக் காட்டியன. தொட்ட இடமெல்லாம், கால்வைத்த இடமெல்லாம் வெடிகுண்டுகள். இந்தியப்படைகளின் கால்களும், உடல்களும் சிதற அதிர்ந்தன. உலகில் நான்காவது பெரியபடை 'பிச்சை வேண்டா, நாயைப்பிடி' என்ற அளவில் ஓடியது - இதனால் நிலைகுலைந்த இராணுவத்தினர் மணலாற்றில் புலிகள் இல்லை, பேய்கள்தான் வாழ்கின்றன என்று சொல்லும் அளவிற்கு மணலாற்று மண் தன் வரலாற்றை எழுதியது.*

*அன்று, ஒரே ஒரு பண்டாரவன்னியன் பிரிட்டிஷ் படைகலங்க மணலாற்று காடுகளில் உலாவந்தான். இன்று, ஆயிரமாயிரம் பண்டார வன்னியர்கள் இந்தியப் படைகளுக்கு சிம்ம சொப்பனமாக அக்காட்டில் எழுந்தனர். இவர்களின் பின்பு இன்று இலங்கைப் படைகளுக்கு பாடம் புகட்ட மணலாறு தன்னை தயார்படுத்தியது. இம்மண்வெறும் நிலமல்ல. தமிழீழத்தின் இருதயம் ஆகும். இதை நசுக்க முற்பட்ட சிங்கள இராணுவத்தினர் அடிக்கடி புலிகளின்*

துப்பாக்கிகளுக்கு இரையாகத் தொடங்கினர். அதில் அக்பரின் ஏ.கே.எல்.எம்.ஜியும் பங்கெடுத்தது. இவனது இயந்திரத் துப்பாக்கி காணாத மணலாற்று எல்லைப்புற முகாம்களே இல்லையென்று கூறுவதற்கேற்ப இவன் எல்லாத் தாக்குதல்களிலும் பங்கெடுத்தான். தினமும் சிங்கள இராணுத்தினர். இலங்கை அரசும், இவர்களை புலிகளின் மரணவலைக்குள் தள்ளிக்கொண்டே இருந்தது. இதைப் புரியாது பணத்திற்காகச் சண்டையிடும் இராணுவத்தினர் புலிகளின் விடுதலை உணர்விற்கும், உறுதிக்கும் முன்னே சிறுதூசிகளாகவே இருந்தனர்.

மணலாறு, ஒரு வளமான மண். இதை அபகரிக்க இலங்கை அரசு தனது படைகளின் உதவிகளுடன், தன் இனவெறிப் பாதங்களை அம்மண்ணில் படிப்படியாக பதித்து குடியேற்றங்களை நிறுவியது. இதை நிறுத்த புலிகள் திடசங்கற்பம் கொண்டனர். சிங்கள வெறியர்களை அடித்துத் துரத்தினர். அன்று இப்படிச் சிங்கள குடியேற்றவாசிகளை கதிகலங்க வைத்தவர்களில் நவம், லோறன்ஸ், சபா ஆகியோருடன் இன்னும் பல நூறு புலிகள் அம்மண்ணின் சுபீட்சத்திற்காய் போராடி தமிழீழ உணர்வுகளைத் தாங்கிய வண்ணம் தமிழீழ மண்ணின் விடிவுக்காய் சாவைஅணைக்கின்றனர்.

அக்பர் இம்மாவட்டத்தை சாராதவன் என்றாலும், எங்கென்றாலும், எம் ஈழமண்ணில் எவர் என்றாலும் தமிழ்மக்கள் ஆதலால் இம்மண்ணின் காவலாளியாகத்தான் அக்பரும் போராடினான். அக்பர் மணலாற்றில் கரையோர முகாம்களில் தங்கவே அதிகமாகவிரும்புவான் அப்படியான முகாம்களுக்கு அவனையும் போகும்படி தளபதி பணிப்பாராயின் மிகவும் சந்தோசத்துடன்தான், அங்கு போய்ச் சேருவான். அவன் புறப்படும் இடத்திலிருந்தே அங்குபோய்ச் செய்யவேண்டிய வேலைகளை மற்றைய போராளிகளுக்கு கூறுவான். அவ்வளவு கூடுதலான பிரியத்தை அம்முகாம்களில் வைத்திருப்பான். அதற்குக் காரணம் உண்டு.

கரையோர முகாம்களில் தென்னம்தோட்டங்கள் உள்ளன. இதனால், இளநீருக்கு பஞ்சம் இல்லை. கடல் குளிப்புக்கும் விளையாட்டுக்கும் குறைவில்லை. இரவோடு இரவாக கடல் ஓரங்களில் உள்ள பாறைகளின் வெடிப்புகளுக்குள் இருக்கும் நண்டுகளை டோச் லைட் வெளிச்சத்தில் ஊசிக்கம்பியால் குத்தி அவற்றைச் சேர்த்து வந்து, சமையல் செய்து, ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போராளிகளையும் எழுப்பி அவர்களுடன் சேர்ந்திருந்து உண்ணுவான். அதன் பின்பே அக்பர் நித்திரைக்குப் போவான். இதனால்தான், அம்முகாம்களில் அவன் தங்குவதற்கு

விரும்புவதுண்டு. உப்புவெளிகளில் மாலையான நேரத்தில் கிளித்தட்டு விளையாடுவதற்கு ஆட்களைச் சேர்த்தெடுப்பான். விளையாட்டு என்றால் முதலில் வருவது அவன்தான். எப்பொழுதும் எல்லோரிடமும் கலகலப்பாகவும் சிரிப்பூட்டும் கதைகளுடனுமே சேர்ந்திருப்பான். போராளிகள் இவனது பகிடிக்கதைகளைக் கேட்பதற்காகவே இவனுடன் கூடிவிடுவார்கள்.

இவன் கதைக்கும்போது எழும்சத்தம் உரலில் உலக்கைபோடும்போது எழும் ஓசையாகவே இருக்கும். இதை எங்களுடைய தளபதி அடிக்கடிகூறி அவனையும் எல்லோரையும் சிரிக்கவைப்பார். அவரின் அன்புடனும் அதேநேரம் கண்டிப்புடனுமே வளர்ந்த போராளிகளில் அக்பரும் ஒருவன். குறும்புத்தனங்களும் விளையாட்டுக்களும் எவ்வாறு உள்ளதோ அதேபோல்தான் வீரத்தில் சிறந்து விளங்கினான். இவன் மணலாற்றில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட மின்னல் தாக்குதல் நடவடிக்கையில்இருந்து, இன்னும் பல முகாம் தாக்குதல்களின்போதும் பலமுறைகள் காயப்பட்டவன். அதற்காக யாழ்ப்பாணம் சென்று காயங்கள் மாறியதும் மணலாற்றுக்கு வந்து சண்டையிடும் குழுவில் இணைந்து கொள்வான். இதுதான் அக்பரின் குணவியல்புகள்.

1992 இல் ஆரம்பத்தில் இவனுடைய பெற்றோர்கள் மட்டக்களப்பில் இருந்து எத்தனையோ கஸ்டங்களுக்கும் இராணுவத்தின் சோதனைகளுக்கு மத்தியில் வந்து இவனைப் பார்த்து விட்டுசென்றனர். ஆனால், மறுபடியும் மணலாற்றுக்கு அவர்கள் வந்தால் அவனை உயிருடன் பார்க்கமுடியாது. அவனுடைய கல்லறையைத்தான் பார்க்கமுடியும்.

ஆம், இன்று எங்களின் அக்பர் எங்களுடன் இல்லை. ‘மறுகா போவோம்,’ ‘மறுகா வாடா’ என்று மட்டக்களப்பு பாசையில் பகிடியாக கதைப்பதற்கு அக்பர் இன்றில்லை.

அவன் எம்மைவிட்டு பிரிந்து விண்ணில் வாழும் மாவீரர்களுடன் சேர்ந்துவிட்டான். ஆனால், அவனில்லாமல் எங்கள் முகாம்கள் அனைத்தும் வேதனையைத் தருகின்றன. எத்தனையோ தடவைகள் காயப்பட்டுத் தப்பியவன்.

24.08.1992 அன்று அலம்பில் முகாம் தகர்க்க சிரித்த முகத்துடன் சந்தோசமாகப் போனவன், மீண்டும் வரும்போது அவனையும் அவனது எல்.எம்.ஜியையும் அவன் தோழர்கள் தூக்கிய வண்ணம் முகாமிற்கு வந்தார்கள். அக்பர் வீரச்சாவடைந்து விட்டானாம். இந்தச் சண்டையில் நீ சாவாய் என்று அக்பரை பார்த்து ஒவ்வொரு சண்டையிலும் தளபதி பகிடியுடன் சொல்வார். ஆனால்,

மீண்டும் அவன் வருவான். ஆனால் இன்று உண்மையாகவே சாய்ந்து விட்டான். இவன் இழப்பு எல்லாப் போராளிகள் மனதிலும் வேதனையை ஏற்படுத்தியது. விடியலுக்காய் காத்திருந்தவன் புலரும் முன்பே சருகாகிவிட்டான்.

இன்று அவன் பிடுங்கித் தந்த இளநீர், சமைத்துத்தந்த நண்டுக்கறி, உப்புவெளிகளில் விளையாடிய விளையாட்டுக்கள், கடலில் நேரம்போவது தெரியாமல் நீந்தி விளையாடியது எல்லாம் மறக்க முடியாத நினைவுகளாகி விட்டன. இன்று மணலாறு மக்கள் தமது நிலத்தைப் பாதுகாக்க ஆயுதங்களை எடுத்துள்ளனர்.

புலிகளும் மக்களும் இன்று ஒன்றாகி காவல் காக்கின்றனர். இவர்கள் அக்பரின் கனவுகளுடன் அம்மண்ணின் விடிவுக்காய் களமாடி சாவை அணைத்த நூற்றுக்கணக்கான மாவீரர்களின் கனவுகளையும் சுமந்துகொண்டு விடியலின் பாதையில் விரைகின்றனர்.

கப்டன் அக்பரின் ஏ.கே.எல்.எம்.ஜி இதோ ஒருபோராளியின் கரத்தில் தவழ்கின்றது. ஆனால் அவனது நினைவுகள் மணலாற்று மண்ணிலும் மக்களிலும் மரம் செடிகொடிகளிலும் மறையாத தென்றலாய் தவழ்ந்து கொண்டிருக்கப் போகின்றது. மணலாற்று மண் தன்வரலாற்றில் அக்பரையும் அணைத்துக்கொண்டது.

**- சிந்தா**

*நன்றி : களத்தில் இதழ், 21.05.1993.*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **கப்டன்**

*இயக்கப்பெயர்:* **அன்பரசன் (அக்பர்)**

*இயற்பெயர்:* **திருச்செல்வம் சதீஸ்குமார்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **தேவபுரம், முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு.**

*மாவட்டம்:* **மட்டக்களப்பு**

*வீரப்பிறப்பு:* **01.07.1972**

*வீரச்சாவு:* **24.08.1992**

*நிகழ்வு:* **மணலாறு மணலாறு அளம்பில் சிறிலங்காபடை காவலரணை தாக்கியதில் வீரச்சாவு**



## லெப். சோமேஸ்

தமிழீழ விடுதலைப் புலிகளின் 10 ஆவது பயிற்சி முகாமின் (தமிழகத்தில்) பயிற்சியாளர்களிடையே சோமேஸ்தான் கதாநாயகன். அவனைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் காணப்படும். பயிற்சி முகாமுக்கு புதிதாக வரும் உறுப்பினர்கள் என்றாலும் சரி, அல்லது பயிற்சி முகாமைப் பார்வையிட வந்த வெளியாளர்கள் என்றாலும் சரி, ஒவ்வொருவருக்கும் ஏற்றமாதிரிக் கதைத்து இவன் முழுத் தகவல்களையும் திரட்டிவிடுவான். அதே வேளை அங்குள்ள நடைமுறைகள் பற்றியும் அவர்களுக்கு விளக்கம் அளித்துவிடுவான். அங்கு வருபவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் இவன்தான் தொடர்புப் பாலமாக விளங்குவான். ஏனெனில் பயிற்சி எடுக்கும்போது பயிற்சியாளர்கள் தேவையற்ற விதத்தில் எவருடனும் கதைக்க இயலாது. இதைவிட ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திலிருந்து வந்திருப்பவர்கள்.

ஒருவரை ஒருவர் அறிமுகமில்லாதவர்கள். ஆதலால் கதைக்கத் தயங்குவார்கள். ஆனால், சோமேசைப் பொறுத்தவரை அதெல்லாம் கிடையாது. பழகும் விதத்தினால் அவன் எல்லோருக்கும் பிடித்தவனாகி விடுவான். அதனால் அவன் கேட்கும் கேள்விகளுக்கு அவர்களால் பதில் சொல்லாமலிருக்க முடியாது.

சாப்பாடு நேரத்தில் இவனிடம் தான் மற்றைய பயிற்சியாளர்கள் விளக்கம் கேட்பார்கள். அவர்களுக்கு விளங்காதவற்றையும் மேலதிக விபரத்தையும் இவன்தான் விபரமாகப் புரியவைப்பான். அனைவரும் கூட்டமாக அமர்ந்திருக்க நடுநாயகமாக சோமேஸ் உட்கார்ந்திருப்பான். பகிடி விட்டபடி சுற்றிவர எல்லோரையும் அவதானித்துக் கொண்டே சாப்பாட்டைக் குழைப்பான். பின் கதைத்துக் கதைத்து குழைத்த சாப்பாட்டைக்

கொடுப்பான். அதே முகாமில் சமைத்த சாப்பாடு தான் தனியாக இருந்து இதைச் சாப்பிடும்போது இது பயிற்சிக் காலச் சாப்பாடு என்ற உணர்விருக்கும். ஆனால் சோமேஸ் கொடுக்கும்போது மட்டும் அது அமிர்தமாக இருக்கும். வீட்டில் சகோதரர்களுடன் கூட இருந்து அம்மா குழைத்துக் கொடுக்கச் சாப்பிடுவது போலிருக்கும். புதிதாக வருபவர்கள் கூச்சத்தினால் சாப்பிட மறுத்தால் இவன் 'நீ சாப்பிடாட்டி, நானும் சாப்பிட மாட்டேன்' என்று அடம்பிடித்து சாப்பிட வைப்பான். அடுத்த நாள் அவர்கள் தாங்களாகவே சோமேஸ் முன் ஆஜராகிவிடுவார்கள்.

பயிற்சியின் போது களைத்துப் போய் மைதானத்தை விட்டு வருபவர்களுக்கெல்லாம் சோமேசைக் கண்டவுடன் அக்களைப்பு பறந்துபோய்விடும். இவனது பகிடிகளையும், கதைகளையும் புது உற்சாகம் பிறந்துவிடும். பயிற்சி முடிந்ததும் அந்த முகாமின் முதல் பொறுப்பாளர்கள் முதல் அனைவரிடமும் ஒரே கேள்வியைத்தான் கேட்டார்கள். 'சோமேஸ் எங்கை போறான்' எல்லோருக்கும் தாங்கள் போகுமிடத்துக்கே சோமேஸ் வரவேண்டும் என்று ஒரு ஆசை, அவனிருந்தால் தான் எப்போதும் தாங்கள் உற்சாகமாக இருக்க முடியும் என்று நம்பினார்கள்.

ஒவ்வொரு பணிகள் கருதி முகாமிலிருந்து வெள்வேறு இடங்களுக்கு அனுப்பப்படும் போராளிகளைக் கைகளால் கட்டிப்பிடித்துக்க் கண்கள் கலங்க அனுப்பிய இவன், தானும் அவ்வாறு பிரிந்து சென்றான். அந்தக் காட்சிகள் அவனுடன் பழகிய எவராலும் மறக்க முடியாதவை.

எல்லோரிடமும் பழகும் விதம், விளக்கமளிக்கும் ஆற்றல் இவற்றைக் கருத்தில் கொண்டு, இவன் கோயம்புத்தூர் பகுதியில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பணிகளை மேற்கொள்வதற்கென தெரிவு செய்யப்பட்டான்.

மாணவர் இயக்கப் பணிகளை இவன் சிறப்பாக மேற்கொண்டான். அக்காலத்தில் இவனுடன் பழகிய கோயம்புத்தூர் மக்கள் என்றும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாளர்களாகவே விளங்குவர். எந்தத் தடைகளும் அவர்களின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஏனெனில். ஒரு போராளி எத்தகைய உயர்ந்த குணத்தைக் கொண்டிருப்பான். இந்தப் போராட்டம் எத்தனை உயரிய தியாகங்களினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதையெல்லாம் சோமேசுடன் பழகியும் அவன் சொல்லக் கேட்டும் உணர்ந்திருக்கின்றார்கள் அவர்கள்.

எதைத்தான் செய்தாலும் இவனுக்குத் தன் சொந்த மண்ணிலிருந்து போராடவேண்டும் என்பது தான் ஆசை. தாயகத்தைப் பற்றி வரும் செய்திகள், தொடர்ந்து அங்கேயிருக்க முடியாத மனநிலையைத் தோற்றுவித்தன. அதனால் 'நாட்டுக்குப் போகவேண்டும்' என்று வற்புறுத்திக் கொண்டேயிருந்தான். மாணவர் இயக்கப் பணிகளைச் செய்வதற்கு இவன் தான் பொறுத்தமான ஆள். ஆனாலும் இவனது நச்சரிப்புத் தாங்காமல் தமிழீழத்திற்கு அனுப்பும் பொருட்டுத் தமிழகக் கரையில் இருந்த முகாமிற்கு அனுப்பப்பட்டான். அங்கு சில காலம் பணியாற்றிய பின்னரே இவனுக்கு, தாயக மண்ணை மிதிக்கும் பாக்கியம் கிடைத்தது.

அந்தக்காலத்தில் சிறிலங்காப் படை இவனது சொந்தக் கிராமமான பலாலிப் பகுதி முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது. கள்ளக் குடியேற்றக்காரரை தடுக்கவென்று அமைக்கப்பட்ட இராணுவ முகாமினால் அந்த மண்ணின் பூர்வீகக் குடிமக்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இவன் இப்பகுதியைச் சேர்ந்தவனென்பதாலும் அப்பகுதியை நன்கு அறிந்தவனென்பதாலும் அப்பகுதியை வேவு பார்க்கும் குழுவில் இணைக்கப்பட்டான். தான் மழலையாய் நடைபயின்ற மண்ணில் உருண்டு புரண்டு விளையாடிய மண்ணில் இன்று ஒளித்து ஒளித்து போய் வேவு பார்க்கும் நிலை வந்துவிட்டதே என்று எண்ணி வருந்தினான். ஆனாலும் வரலாறு தனக்கு இட்டபணியைச் செய்யும் மனத்திருப்தி அவனுக்கு இருந்தது.

கட்டுவன் காவலரணில் இவன் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், 21.05.1987 அன்று சிறிலங்காப் படையினருடனான மோதலில் காயமடைந்தான். காலில் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் இருந்தபொழுது, இவனது அன்னை இவனைப் பார்க்கவந்தார். தான் முத்தமிட்டு வளர்த்த அந்தக்கால்கள் கட்டிலில் காயத்துடன் ஓய்வெடுப்பதைக் கண்டதும் துக்கம் தாளவில்லை. அதனால் 'தம்பி, நீ இவ்வளவு காலமும் இயக்கத்திற்கு வேலை செய்தது போதும், இனி வீட்டைவா. உனக்கு ஏழு பொம்பிளைச் சகோதரங்கள் இருக்கெல்லே, அதுகளுக்கு உழைக்க வேணும்தானை. வீட்டைவா' என்று கேட்டார். அவ்வளவு தான் இவன் சீறியெழுந்தான்.

தான் இருக்குமிடம் வைத்தியசாலை என்பதையும் மறந்தான். 'எல்லாத் தாய்மாரும் சண்டைக்குப் போ, எண்ட பிள்ளையள அனுப்புற நேரத்தில நீ வீட்டை வரச் சொல்லியோ கேக்கிறாய். நீயும் ஒரு தாயே? எங்கட இடமெல்லாம் ஆமிக்காரன் பிடிச்சு

வைச்சிருக்கிறான். இந்த நேரத்தில வீட்டை வரச் சொல்லிக் கேக்கிறாய். இஞ்சையிருந்து போ. இனிமேல் இதைப்பற்றிக் கதைச்சா, நான் வீட்டையே வரமாட்டன்' என்று கத்தினான். வேதனையுடன் தாய் அங்கிருந்து நகர்ந்தார்.

பெற்ற தாயை இவன் அப்படி பேசியதற்கு சில காரணங்கள் இருந்தன. முதலாவது இவன் காயப்படுவதற்கு முதல் நாள் தான் யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த ராதா சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவை எய்தியிருந்தார். அதுவும் இவன் காயப்பட்ட அதே கட்டுவன் பகுதியில், ஒரு தாயைப் போன்ற கவனிப்புடன் அவனை நேசித்த ராதாவை இழந்த ஆத்திரம் அவனுள் குமுறிக் கொண்டிருந்தது. ராதாவை இழந்த சோகத்தில் இருக்கையில் தனது தாயார் வந்து இப்படிக் கேட்டதை அவனால் பொறுக்க முடியவில்லை. அடுத்தது, அவனது காயத்தின் வேதனை. இவையிரண்டும் இல்லாவிட்டால் இவன் தனது வழமையான பாணியிலேயே சிரித்துக் கதைத்து தனது மறுப்பைத் தெரிவித்திருப்பான். ஏழ்மையான குடும்பச் சூழ்நிலை ஏழு சகோதரிகள், குடும்பத்தின் மீது அவனுக்குப் பாசமிருந்ததுதான். ஆனாலும் அதை விட தேசத்தின் மீதிருந்த பாசம் கூடுதலாக இருந்தது.

இந்திய இராணுவத்துடன் போர் ஆரம்பித்ததும் இவனுக்கு ஜி.பி.எம்.ஜி.யுடன் நின்று போரிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. குளப்பிட்டி, வட்டுக்கோட்டை, ஏழாலை போன்ற இடங்களில் இந்தியப் படையினர் இவனது அணியிடம் பேரிழப்பைச் சந்தித்தனர்.

இறுதியாக 04-08-1988 இல் நித்திகைக் குளத்தில் இந்திய இராணுவத்துடனான மோதலில் இவன் வீரச்சாவெய்தினான். நித்திகைக்குளத்தில் இருந்த எமது முகாமொன்றை கைப்பற்றிய இந்திய இராணுவம், அங்கிருந்து தாம் புறப்பட்ட முகாமிற்கு திரும்பிச் சென்றது. இவ்வாறு திரும்பிச் செல்லும் வழியில் அவர்களுக்கு விழுந்த அடி மீண்டும் அதே முகாமிற்குத்தான் வழிகாட்டியது. அதனால் திரும்ப அங்கேபோய் நின்று கொண்டு தமது அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானித்தனர். இந்நிலையில் 'நீ போனாலும் அடிப்போம், வந்தாலும் அடிப்போம்' என்று இந்திய இராணுவத்தினருக்க படிப்பிப்பதற்காக அந்த முகாம் மீது தாக்குதல் நடத்த தீர்மானித்தான் சோமேஸ். மிகவும் கிட்டிய தூரத்தில் தான் நின்று நடத்தப்போகும் அந்தத் தாக்குதல் எப்படி நடக்கப்போகிறது எ ன்பது அவனது மனத்திரையில் தெரிந்தது. அதனால் பத்துக் கைக்குண்டுகளுடனேயே சென்றான். அங்கிருந்த தனது அயற்கிராமத்தவனாகிய நெடுமாறனிடம் 'இந்தச் சண்டையில் நான்

செத்தா வீட்டுக்காரருக்கு அறிவிச்சிடடாப்பா? அவை இப்ப இடம்பெயர்ந்து விசுவமடுவில்தான் இருக்கினம். அது உனக்குத் தெரியும்தானை?' என்று கேட்டான். அவன் திட்டமிட்டபடியே சண்டை மிக மூர்க்கமாக நடைபெற்றது. பத்து கைக்குண்டுகளும் முடிந்த நிலையில் திரும்ப வந்து, மீண்டும் பல கைக்குண்டுகளை எடுத்துக் கொண்டு போய்ப் போரிட்டான் சோமேஸ். அவன் திட்டமிட்டபடியே போர் மிகவும் மூர்க்கமாக நடைபெற்றது. அந்தத் தாக்குதலில் எல்.எம்.ஜி. சுடுகுழல், பிறவுன் எல்.எம்.ஜி., சுடுகுழல், பல ரவைகள் இப்படியாக பல் ஆயுதங்கள் நமக்குக் கிடைத்தன. ஆனால். நாம் சோமேசை இழந்துபோனோம்.

பொது அறிவு சம்பந்தமான விடயங்களில் சந்தேகம் ஏற்படும்போது எமக்கு விளக்கமளிக்கம் சோமேஸ் எவர் தவறவிட்டாலும் நக்கீரன் பாணியில் அதே சமயம் அவர்களது மனம் கோணாமல் நகைச்சுவையாகவே அத்தவறைச் சுட்டிக்காட்டும் சோமேஸ் போராளிகளின் எந்தப் பிரச்சனையானாலும் தனக்கு அப்பால் போகாத நிலையில் தீர்த்துவைக்கும் சோமேஸ் - அந்த பத்தாவது முகாமின் கதாநாயகனான சோமேஸ்-கோயம்புத்தூர் மக்களின் மனதில் என்றும் நிறைந்திருக்கும் சோமேஸ் - இன்று இல்லை என்னும் போது எம்மால் நம்ப முடியாமலிருக்கிறது. இவனை நினைக்கும்போது மிகமுக்கிய சம்பவமொன்று நினைவிற்கு வருகிறது.

இந்தியப்படையுடன் போர் தொடங்கிய பின்னர், ஒவ்வொரு இடமாக இந்தியப்படை பிடித்து வந்தது. நாம் யாழ் மாவட்டத்தை விட்டு வன்னிக்காடுகளுக்கு போயிருந்தோம். தொடர்ச்சியான போர்க் களைப்பை ஏற்படுத்தியிருந்தவேளை அது. அடுத்து என்னென்ன நடக்குமோ என்ற நிலை. இதைப்பற்றிப் பலரும் பலவிதமாகக் கதைத்துக் கொண்டிருந்தனர். அப்போது சோமேஸ் சொன்னான்....' இனித்தான் இந்தியன் ஆமி வாங்கப்போறான். எப்படிக் காடு இருக்குதெண்டு படிக்கப்போறான், நாங்கள் இவனுக்குப் படிப்பிச்சுக்காட்டுவம். 'சோமேஸ் சொன்ன பாணி அனைவருக்கும் புது உற்சாகத்தை ஊட்டியது. உறுதியுடன் தோழிகளில் ஆயுதங்களை மாட்டிக் கொண்டனர். சோமேஸ் சொன்னதுபோலவே இந்திய இராணுவம் தமிழீழக் காடு எப்படி இருக்கின்றது. என்பதைப் படித்தது. அதற்காக நிறைய விலை கொடுத்தது. இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டகன்றதும் காட்டுக்குள்ளிருந்து மீண்டும் யாழ்குடாவை நோக்கி வந்தோம்.

வரும் வழியில் இவன்' இந்தியன் ஆமி இனித்தான் வாங்கப்போறான்' என்று கூறி எமக்கு உற்சாகமூட்டிய இடத்தைக்

கண்டோம். அன்றைய காட்சியை நினைக்கும் போது நெஞ்சு கனத்தது. அந்த இனிமை இனி இல்லைத்தான். ஆனால் நாம் சோர்வாக இருப்பது அவனுக்குப் பிடிக்காது. அதனால், மீண்டும் எமது துப்பாக்கியை சரிபார்த்தபடி வண்டியில ஏறினோம். அவன் பிறந்த இடமான பலாலியை பார்க்கவேண்டும் என்ற அவசரத்துடன் இப்போது, அவன் தனது தாய்க்குக் கூறிய வாசகம், நினைவுக்கு வருகிறது. 'இது எல்லாத் தாய்மாரும் சண்டைக்குப் போக என்று பிள்ளையளை அனுப்புற நேரம்.

**- செந்தாளன்**

*நன்றி : களத்தில் இதழ்*

*04.06.1993*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப்**

*இயக்கப் பெயர்:* **சோமேஸ்**

*இயற்பெயர்:* **நடராசா காந்தகுமார்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **பலாலி மத்தி. வசாவிளான், யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **16.03.1965**

*வீரச்சாவு:* **06.08.1988**

*நிகழ்வு:* **மணலாறு, மணலாறு நித்திகைக்குளம் பகுதியில் இந்தியப் படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **கொடிகாமம்**

*மேலதிக விபரம்:* **கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## வீரவேங்கை ஜஸ்மின்

பன்குளம் அழகான தமிழ்க் கிராமம் முக்காலமும் நீர் நிறைந்து நிற்கும் குளம். குளத்திற்கு கீழாகப் பரந்துவிரியும் வயல் நிலங்கள். வறுமைக்கு அங்கு என்ன வேலை?

தமிழ்ப் பகுதியான பன்குளத்திலும் சிங்களக் குடிகள் பரவத் தொடங்கின. காணி இல்லாத சிங்களவர்களுக்கு நிலம் வழங்க தமிழர் கிராமமான பன்குளத்திற்குள் சிங்கள அரசு இடம் கண்டுபிடித்தது.

தமிழர்களுக்கு நடுவில் சிங்களவர்களும் அங்கு குடியமர்த்தப்பட்டார்கள். பன்குளத்தில் நடுத்தர வசதிவாய்ப்புக்களைக் கொண்ட குடும்பமொன்றைச் சேர்ந்தவள்தான் ஜஸ்மின். அப்பா, அம்மா, அக்கா, அண்ணா என்ற சிறியவட்டத்தினுள் அவள் ஒருசிறுமி. வீடு அழகான கிராமத்தின் வீதிகள்,வயல்கள் எங்கள் சொந்தஊரில் நாங்கள் வாழ்கின்றோம். இந்த வாழ்வு நிரந்தரமானதென்றுதான் அங்கு எல்லோரும் நினைத்தார்கள்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழு. இலங்கை முழுமைக்குமான தேர்தல் முடிவுற்று ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு கட்டிலேறி இருந்தது. தமிழர்கள் தங்கள் தேசம் சிறீலங்காவிலிருந்து விலகிச் செல்வதற்காக வாக்களித்தார்கள். தமிழர்களின் ஒன்றிணைவைக் கண்ட சிங்கள ஆட்சியாளர்கள் சினம் கொண்டார்கள்.

நள்ளிரவு பன்குளம் கிராமம் தீப்பற்றி எரிந்தது. நெருப்பினூடாக சிங்களக் காடையர்கள் தமிழர்கள்மீது பாய்ந்தனர். அப்போதெல்லாம் ஜஸ்மீனுக்கு நான்கு வயதுதான் நிறைந்திருந்தது. கிராமம் தீப்பற்றி எரிந்ததும் அவளை அணைத்தபடி வயல்களிலும், காடுகளிலும் அம்மா ஓடியதும் அவளுக்கு சிலகாலம் நினைவலைகளில் நின்றன. பின்பு மறந்துபோனாள்.

எண்பத்தி மூன்று, அப்போது ஜஸ்மினுக்கு பத்துவயது. தந்தையை இழந்த பின், அவர்கள் நால்வரையும் வளர்க்க அம்மா போராடிக் கொண்டிருந்த காலம்.

அன்றும் அப்படித்தான், இரவு வானொலிச் செய்தியைத் தொடர்ந்து பன்குளம் சந்தியின் மத்தியில் தமிழர் கடைகளில் தீ எழுந்தது.

சிங்களக் காடையர்களின் வெறிக் கூச்சல்கள்... தமிழ் மக்களின் அவலக்குரல்... பன்குளம் கிராமத்தில் படர்ந்தது. இளைஞர்களில் சிலர் எதிர்த்தனர்.

ஆனால், காடையரின் துணைக்கு அரசகாவலர்களும், தமிழர்களின் இரத்தம் எங்கும் சிந்தியது. அம்மா ஜஸ்மினையும் இழுத்துக் கொண்டு காட்டுக்குள் ஓடினாள். பசியுடனும் பட்டினியுடனும் நாட்கள் கடந்தன. மீண்டும் கிராமத்திற்கு வந்தபோது எங்கும் சாம்பல் மேடுகள். பலரை அந்தமண் பறிகொடுத்திருந்தது.

ஜஸ்மின் சிறுமி அவளுக்கு எதுவும் விளங்கவில்லை. ஆனால், சிங்களவர்கள், சிங்கள அரசின் காவலர்கள் என்றால் வெப்பும், கோபமும் அந்த சின்னவயதிலே மனதில் குடிகொண்டுவிட்டது.

எண்பத்தி ஆறு இப்போது ஜஸ்மினுக்கு பதின்மூன்று வயது. பன்குளத்தில் சிங்களவரின் தொகை பெருகியிருந்தது. தமிழரின் நிலங்களும் வயல்களும் அடாத்தாகப் பறிக்கப்பட்டிருந்தன. அவை, இப்போது சிங்களவருக்கு சொந்தமாகி இருந்தன. இம்முறை தமிழர்கள்மீது சிங்களவர் பாய்ந்து ஓய்ந்தபொழுது ஜஸ்மின் நிலைமைகளை ஓரளவு புரிந்துகொண்டாள்.

சிந்தப்படும் இரத்தத்தினதும் கண்ணீரினதும் பெறுமதி அவளுக்கு நன்றாகவே விளங்கியது. அந்த மண்ணில் தமிழர்களின் வாழ்வு நிச்சயமற்றதொன்றாகிப் போனது. சிங்களவர் சினங்கொள்ளும் போதெல்லாம் தமிழர்கள் அழிந்தனர்.

இதற்கிடையில் ஜஸ்மினின் அண்ணன் புலிகளுடன் இணைந்து கொண்டான். அண்ணனை சில நிமிடம் காணாது விட்டாலும் தவிக்கும் அம்மா, அந்தச் செய்தியை கேட்டபின்பும் அமைதியாக இருந்தாள். சொல்லப் போனால், அவன் சென்றதை அவளும் விரும்பினாள்.

அவர்கள் வாழ்வதாக இருந்தால் போராடவேண்டும் அல்லது அழிந்துபோக வேண்டிவரும் என்பதை அம்மா அனுபவத்தில் தெரிந்திருந்தாள்.

அழிவுகள் அடாவடித்தனங்கள் இறுதியாக பன்குளத்திலிருந்து தமிழ் மக்கள் ஒரேயடியாக விரட்டப்பட்டனர். ஜஸ்மின் குடும்பத்தினருடன் ஆலங்கேணி கிராமத்தில் தங்கி இருந்தாள்.

1990 இந்தியப்படைவெளியேறிய சிலநாட்கள் கடந்திருந்தன. சிங்கள அரசு பேச்சுவார்த்தை என்று நாடகமாடிக் கொண்டிருந்தது. தமிழர்களின் சுதந்திர வாழ்வுக்கு தாயகத்தின் விடுதலை அவசியமானது என்பதை ஜஸ்மின் உணர்ந்துகொண்டாள். அவளும்,அவளின் தோழிகளில் சிலரும் கிராமத்திலிருந்து புறப்பட்டார்கள்.

ஜஸ்மின் அவளின் கைகளில் தேசத்தைமீட்பதற்கானஆயுதம். அவளும், அவளது கிராமத்தவர்களும் கண்டுவிட்டு ஓடிய அரசுகாவலர்களின் கைகளில் இருந்த ஆயுதம். இன்று அவளின் கைகளிலும் இருந்தது.

களங்களில் அவள் வீரமுடன் போரிட்டாள். சண்டை நடைபெறும் ஒவ்வொரு களத்திற்கும் போகவேண்டும் என்று அவாவி நின்றாள். சிறுவயது தொடக்கம் சிங்களவர்களின் அட்டூழியங்களையும், அடாவடித்தனங்களையும் காலத்திற்குக் காலம் அனுபவித்த அவளுக்குள் கடினமான போராட்டவாழ்க்கையை இலகுவாக எடுக்கும் மனவுறுதிகுடி கொண்டுவிட்டது. அதனால்தான் முகாமிலும் சண்டைகளின் போதும் அவளால் சிரித்துக் கொண்டு உலாவமுடிந்தது.

ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கையை புலிகள் தொடங்கியபோது, அதில் ஜஸ்மினும் ஒருத்தியாகக் கலந்து கொண்டாள். வெவ்வேறு, முனைகளால் ஆனையிறவுத்தளம் மீதான தாக்குதல்கள் ஆரம்பமாகின. தேவைப்படும் போதெல்லாம் ஜஸ்மினின் துப்பாக்கியும் எதிரிகளை அகற்றப் போராடியது.

அதேநேரம் திருகோணமலை காட்டுப்பகுதிக்குள் நடந்துகொண்டிருந்த புலிகளின் ஒரு அணிமீது இராணுவத்தினர் பதுங்கி இருந்து தாக்கினார்கள்.

ஜஸ்மினின் அண்ணன் சபேசன் அதில் காயமடைந்திருந்தான். சில நாட்களின் பின்பு யாழ். மாவட்டத்தின் ஒரு வைத்தியசாலையில் அவன் சேர்க்கப்பட்டிருந்தான். அவனைப் பார்ப்பதற்காக வன்னிப் பகுதியில் ஏதோ ஓர் அகதி முகாமில் தங்கியிருந்த அம்மா வந்திருந்தாள்.

மகனைப் பார்த்த பின் மகளைப் பார்க்க அவள் விரும்பினாள். சண்டை கடுமையாக நடந்து கொண்டிருந்தது. தாய் நிலத்தைக் காக்கும் போரிலிருந்து சிறுபொழுதென்றாலும் விலகிவர ஜஸ்மினால் முடியவில்லை.

உணவற்ற, உறக்கமற்ற நிலையில் ரவை மலைக்குள் நின்று அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஜஸ்மின் வழமைபோல் சிரித்தாள். மகிழ்ச்சியாக இருந்தாள். எதிரிகளைக் கண்டபோது மட்டும் ஆவேசத்துடன் போரிட்டாள்.

மகனைப் பார்த்துவிட்டு திரும்பியதாய் அகதிமுகாம் வாசலில் கால்வைத்தபொழுது, அவளுக்கு துயரம் நிறைந்த அந்தச் செய்தி கிடைத்தது.

ஜஸ்மின் வீரச்சாவடைந்து விட்டாள். மகளின் இழப்பு அம்மாவின் இதயத்தைச் சோகமாக அழுத்தினாலும் ஜஸ்மினின் உன்னதமான வாழ்வை நினைத்து அவளால் அழமுடியவில்லை. ஆனையிறவின் உப்புக்காற்று அவளின் வீரம் நிறைந்த வரலாற்றை என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் என்பது அம்மாவுக்கு நன்றாகவே தெரியும்..

**- தமிழன்**

*நன்றி : களத்தில் இதழ், 18.06.1993.*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **வீரவேங்கை**

*இயக்கப் பெயர்:* **ஜஸ்மின்**

*இயற்பெயர்:* **செல்வமலர் கோபாலப்பிள்ளை**

*பால்:* **பெண்**

*முகவரி:* **05 ஆம் வாய்க்கால், பன்குளம், திருகோணமலை.**

*மாவட்டம்:* **திருகோணமலை**

*வீரப்பிறப்பு:* **30.06.1973**

*வீரச்சாவு:* **27.07.1991**

*நிகழ்வு:* **கிளிநொச்சி, ஆனையிறவு மீதான ஆ.க.வெ.நடவடிக்கையில் தடைமுகாம் மீதான 2ஆவது தாக்குதலின்போது வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **கொடிகாமம்**

*மேலதிக விபரம்:* **கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## மேஜர் அகத்தியர்

புலேந்திரன் - குமரப்பா முதலான போராளிகள் இலங்கை - இந்திய கூட்டுச் சதிக்குப் பலியானதைத் தொடர்ந்து 'இனி யுத்த நிறுத்தம் இல்லை எனத் தலைவர் பிரபாகரன் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் ஒரு கண்ணிவெடித் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இலங்கை மக்களின் பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் இலங்கை இராணுவம், இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் உலாவருகையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது. இந்திய இராணுவத்தினரின் வாகனங்களைத் தவிர்த்து, இலங்கை இராணுவத்தைக் குறிவைத்து, மிகத் துல்லியமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என இலண்டன் பி.பி.சி. வர்ணித்தது. இந்த வர்ணனை அக்காலத்தில் பிரபலமாக இருந்தது.

இத்தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியும் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சருமான நிமால் டி சில்வாவுடன் ஒன்பது இராணுவத்தினதும் பலியாகினர். அவ்வளவு திறமையான இத் தாக்குதலை மேற்கொண்டவன்தான் மேஜர் அகத்தியர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி ஆறு எனச் சிறப்பாகக் குறிப்பிடப்படும் கோட்டைக் கல்லாறுப் பகுதியைச் சேர்ந்த இவன், 1984 ஆம் ஆண்டு புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டான். விடுதலைப் புலிகளின் ஐந்தாவது முகாமில் பயிற்சி பெற்றுக் கொண்ட இவன், மருத்துவக் குழுவினருக்கான விசேட பயிற்சியையும் மேலதிகமாகப் பெற்றுக் கொண்டான். மீண்டும் இந்த மண்ணில் அவன் மருத்துவனாகக் காலடி எடுத்து வைத்தாலும் திறமைமிக்க ஒரு போராட்ட வீரனாகவே இனங்காணப்பட்டான். அதனாலேதான், அபாயகரமான பகுதிகள் எனக் கருதப்படும் பகுதிகளில் நடத்த உத்தேசிக்கப்படும் தாக்குதல்கள் இவனிடம் ஒப்படைக்கப்பட்டன.

மட்டக்களப்பு-வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள வந்தாறுமூலை, அம்பலத்தடிச் சந்தி, எமது போராளிகளில் கணிசமானபேரைப் பலிகொண்ட இடமாகும். ஏனெனில் இப்பகுதியில் இருந்தே எமது பயிற்சி முகாம்களுக்கான உணவுப் பொருட்கள் விநியோகப்படுவதுண்டு. எனவே இப்பாதை மீது சிறீலங்காப் படையிருக்கு எப்போதுமே குறியிருக்கும். இப்பகுதியில் துப்பாக்கிச் சன்னத்தைக் காணாத சுவர்களே இல்லையெனலாம். ஆனால், இந்த அபாயகரமான பாதையில் சண்டையிடத்தான் இவனுக்கு விருப்பம். தன்னைப் போலவே ஏனைய போராளிகளையும் உருவாக்கினான். ஒரு கட்டுப்பாடான ஒழுக்கமான போராளியால்தான் ஒருசிறந்த தலைமையை அளிக்கமுடியும். எனவே கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பன போராளிகளுக்கு வேண்டும் என வலியுறுத்துவான்.

மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியைப் பற்றிப் போராளிகள் குறிப்பிடும் போது ''ஓடினா வெளி', விழுந்தா வெளி' என்று குறிப்பிடுவார்கள். அப்படியான இயற்கை அமைப்பைக் கொண்ட அந்தப் பிரதேசத்தின் பொறுப்பாளனாக இவன் நியமிக்கப்பட்ட காலத்தில், இவன் எவ்வாறு போராளிகளைக் காப்பாற்றினான் என்பதை அறியும் போது ஒவ்வொருவர் நெஞ்சும் புல்லரிக்கும்.

மட்டக்களப்பில் இருந்து வளைந்து நீண்டுவரும் அந்த வாவிக்கரையில், தொம்பலும் (சேறு) கன்னாப்பற்றைகளும் ஒட்டு என்று அழைக்கப்படும் தாவரங்களும் நிறைந்திருக்கும். இப்பகுதிக்குள் இடுப்பளவு தண்ணீருக்குள்ளும் அதற்குமேலும் இந்தப் பற்றைகளிடையே தடிகளினால் அரண் அமைத்து அவற்றையே முகாம் ஆக்கியிருந்தான். தேசத்துரோகிகள், எமதுகாற்றையே அசுத்தப்படுத்தும் வகையில் நிறைந்திருக்கும் இந்தியப் படையினர். இவர்களின் பார்வையில் படாது அந்த வயல்வெளிகளைக் கடந்துகுளிர், நுளம்புத் தொல்லைமிகுந்த இந்தநீர் நிலை. முகாம்களுக்குச் செல்வதென்றால் அதற்கு எவ்வளவு கவனம் தேவை. இந்த முகாம்களில் இருந்தே ஏனைய இடங்களுடன் தகவல் தொடர்பு எடுக்கவேண்டும். தொலைத் தொடர்புக் கருவிக்கு வேண்டிய பற்றரி கொண்டு செல்வதென்றால்கூட இலேசானதல்ல. ஆனால் இவன் அதையெல்லாம் செய்து காட்டினான். அங்கிருந்தே தாக்குதலுக்குத் திட்டமிட்டான். போராடினான். இதற்கான மக்கள் பலத்தையும் திரட்டினான்.

இதனால்தான் ‘புலிகளுக்கு குளிருக்கு போர்வையோ, உணவோ தேவையில்லை. ஆயுதங்களைக் கடலிற்குள் கூடப் புதைத்து வைத்தனர். இருட்டில் கூட அவற்றைத் தேடி எடுத்தனர் என இந்தியப்படை எம்மீதுபோர் தொடுத்த காலத்தில் அதற்குப் பொறுப்பாயிருந்த இந்தியப்படை அதிகாரி. பம்பாயில் வீக்லி இதழுக்கு பேட்டி அளித்தார்

இதேபோல வந்தாறுமூலைப் பகுதிக்கு அப்பால் முகாம்களை அமைக்கும் போது இயற்கையினைப் போராளிகளுக்கு அரணாக்கித் தந்தான். மலைகளுக்குப் பக்கத்தில் உள்ள குகைகளே பாதுகாப்பு அரண்கள். விமானக்குண்டு வீச்சின்போதும் எறிகணைத் தாக்குதல்களின் போதும் குகைக்குள்ளேயே தனது வாரிசுகளைப் பாதுகாத்தான். உணவைப் பெற்றுக்கொள்வதற்காக சுமார் 15 மைல் தூரம் நடந்துவரும்போது முன்னேசெல்வது இவன்தான். ஏனையோரைவிட கூடுதலான பாரம் சுமப்பதும் இவன்தான். ஆம்... போராட்டத்தினுள் உள்வாங்கப்படும் போராளிகளுக்கு இவன் புத்தகமாகத் திகழ்ந்தான்.

எமது தேசத்தைக் குடியேற்றத்தின் மூலம் அபகரிக்க முயலும் பேரினவாதிகளுக்கு, இவன் கனவிலும் பயமூட்டிக் கொண்டிருந்தான். இவனது தாக்குதல்கள் அவர்களைச் சொந்தப் பிரதேசங்களுக்கு ஓட வைத்தன. இந்திய இராணுவத்தினரின் காலத்தில் இவற்றைச் செய்வதென்பது சுலபமாக இருக்கவில்லை.

ஒருமுறை நீண்டதொலைவில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களின் இலக்குமீது தாக்குதல் தொடுத்துவிட்டு வந்துகொண்டிருந்தனர். இவனும் இவனது வாரிசுகளும், அனைவருக்கும் நல்ல பசி. சோர்ந்து வாடினார்கள். போராட என்று வெளிக்கிட்டால் எதையும் தாங்கிக் கொள்ளவேண்டும் என்று கூறி, அவர்களை ஒருவாறு சமாளித்துக் கூட்டிக் கொண்டு வந்தான். இதே நேரம் சிங்களப்படை கொடுத்த தகவலின்பேரில் இந்தியப்படை இவர்களைத் தொடர்ந்து கொண்டிருந்தது. இவர்கள் அவர்களைக் காணவில்லை.

அந்தளவுக்கு பசி, இவர்கள் கண்ணை மறைத்திருந்தது. முகாமுக்குச் சென்று அனைவரும் வாயில் உணவை வைத்ததுதான் தாமதம், இந்தியப்படையின் துப்பாக்கிவேட்டுக்கள் எல்லாவற்றையும் மறக்கவைத்தன. எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியேறி இந்தியப் படையை எதிர்க்க இன்னொரு பாதையில் காத்திருந்தனர். ஏனெனில் இது எமதுநாடு, நாம் ஓடமுடியாது. ஓட வேண்டியவர்கள் எல்லை தெரியாது. எம் மண்ணை மிதித்தார்களே, ஆனால் இந்தியர்கள் வரவேயில்லை. ஏனோ தெரியாது. அப்படியே போய்விட்டனர்.

அக்காலங்கள் மிகவேதனை நிறைந்தவை. பல இடங்களில் பாதுகாப்புக்காக இந்திமொழிபேசியே பாதையைக் கடக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தின. இந்தியை விரட்ட பலகட்டங்களில் இந்தி மாதிரி மொழியில் பேசினான் அகத்தியர்.

பின்னர் மட்டக்களப்புப் பிராந்தியத்தைவிட்டு, வன்னிக் காடுகளுக்கு நெருக்கமானான் இவன். அங்கும் பல தாக்குதல்களில் கலந்துகொண்டான். இறுதியில் முசல்குத்தியில், தேசவிரோதிகளின் மீதான தாக்குதல்களில் கப்டன் முரளி, இரண்டாவது லெப். அலெக்ஸ் ஆகியோருடன் விரச்சாவைத் தழுவிக் கொண்டான். இந்தத் தாக்குதலில் பல தேசத்துரோகிகள் உயிரிழந்தனர். வியட்னாமிலும், சிங்கராஜா காடுகளிலும் புரட்சிவாதிகள் மேற்கொண்ட தற்காப்பு முறைகளைத் தமிழீழத்தில் உருவாக்கிய இவன், என்றும் மறக்கப்பட முடியாதவன். அதைவிட ஒவ்வொரு வருடம் பிறக்கும் போதும் தமிழீழமக்கள் இவனை நினைவு கூறத் தவறமாட்டார்கள். ஏனெனில் இவன் வீரச்சாவெய்திய தினம் ஜனவரி -01

நன்றி : களத்தில் இதழ், 02.07.1993.

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

நிலை: **மேஜர்**

இயக்கப் பெயர்: **அகத்தியர்**

இயற்பெயர்: **செல்லத்துரை புவினேயராஜ்**

பால்: **ஆண்**

முகவரி: **கோட்டைக்கல்லாறு, மட்டக்களப்பு.**

மாவட்டம்: **மட்டக்களப்பு**

வீரப்பிறப்பு: **21.06.1967**

வீரச்சாவு: **01.01.1990**

நிகழ்வு: **முசல்குளத்தியில் புளொட் கும்பலின் முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு.**

துயிலுமில்லம்: **கொடிகாமம்**

மேலதிக விபரம்: **கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## வீரவேங்கை கெங்கா

விடுதலைப்புலிகள் இயக்க முகாம்கள் எல்லாமே ஒவ்வொரு குடும்பம் போன்றவை. ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவரை எவ்வளவுக்கு நேசிப்பார்களோ அதே போலத்தான் இங்கும் இருக்கும். அதைப் போலத்தான் சின்னச் சின்னப் பிரச்சினைகள் தோன்றும். பின்னர் சமாதானமாவார்கள். ஆனால் ஒரேயொரு பிரச்சினையில் மட்டும் இலகுவில் சமாதானம் தோன்றாது. அது தாக்குதல்களுக்கு தம்மைக் கூட்டிக் கொண்டு போகாமல் விடுவதால் வரும் பிரச்சினை. இந்த ஒரு விடயத்தில் மட்டும் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் குமுறுவார்கள். இந்த விடயத்தைக் கிளப்பும் ஒருவன் எந்த விளக்கத்தையும் கேட்கத் தயாரில்லாதவனாகவே இருப்பான். அவனது இதயத்தின் குமுறல் அடுத்த போர்க்களத்தில் துப்பாக்கியை இயக்கும் வரை ஓயாது.

இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவனாக இருந்த றெஜிக்குக் கூட இந்த மனோபாவம் இருந்தது. பயிற்சி எடுத்து முடிந்திருந்த காலத்தில் எந்த மோதலுக்குமே சந்தர்ப்பம் கிடைக்காமல் குமுறினான் அவன். அந்தக் காலத்தில் கிடைத்த சந்தர்ப்பங்களிலும், ஏனையோர்தான் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்டோரைவிட றெஜி வயதில் கூடியவன். இதைப் பார்க்கும் போது அவனுக்கு இன்னும் கோபம் வந்தது. ஒரு நாள் கோபத்துடன் கூறினான். 'நான் தலைவருக்குச் சொல்லப் போறன், எனக்குப் பென்சன் தாருங்கோ எண்டு. இவ்வளவு காலம் இயக்கத்தில் இருந்தும் இன்னும் சண்டைக்குப் போகாமல் இருந்திருந்து வயசும் ஏறிப்போச்சு. இந்தப் போக்கில் போனா 55 வயசிலையும் பீல்டுக்குப் போறது சந்தேகம். பேசாமல் பென்சன் கேட்டிட்டா நல்லது' என்றான். பின்னர் அவனது போராட்ட வாழ்க்கையில் கிடைத்த முதல் சந்தர்ப்பமான

ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது உள்ளே அவன் சென்ற வேகம் சண்டையிட்ட விதம் 'என்னை இத்தனை நாள் சண்டையிட அனுமதிக்காதது எத்தனை பெரிய தவறு' என்று கேட்பதைப் போல இருந்தது.

இயக்கத்தின் மூத்த உறுப்பினன் றெஜியாலேயே, தன்னை தாக்குலுக்கு அனுப்பாதற்கு விசேட காரணம் எதுவும் இல்லை என்பதை ஒப்புக் கொள்ள முடியவில்லையானால், முகாமில் எல்லோருக்கும் பிரியமானவனாக எல்லோருக்கும் சின்னவனாக இருந்த கெங்காவால் மட்டும் எப்படி அந்த நிலையைச் சகித்துக் கொள்ள முடியும்? அதுவும் நாம் வாழ்வதற்கான இது என்பதை எமக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் திருமலை மண்ணில் பிறந்த அவனால் - அவனைத் தவிர்த்து அவனது கண்ணுக்கு எதிரேயே ஏனையோர் சிறீலங்காப் படைகளுக்கு எதிரான தாக்குதலுக்காகப் புறப்படுவதை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? தாக்குதலுக்கு அவனைக் கூட்டிச் செல்லாத முகாம் பொறுப்பாளர் அவனது முகத்தில் சிரிப்பை எதிர்பார்ப்பதற்கு என்ன நியாயமுண்டு? சிரிக்காதது மட்டுமல்ல அவர்களுடன் கதைக்காமல் கோபம் போட்டும் விடுவான் கெங்கா. அவனைச் சமாதானப்படுத்துவதென்றால். மீண்டும் அந்த முகாம் பொறுப்பாளருடன் அவன் கதைக்கவேண்டுமென்றால் நிச்சயம் அடுத்த தாக்குதலில் பங்கு பற்ற அவன் அனுமதிக்கப்பட வேண்டும்.

1985 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இயக்கத்துடன் இணைந்து கொண்ட கெங்காவின் சொந்த இடம் திருமலை நகரிலிருந்து 16 மைல் தொலைவில் உள்ள கும்புப்பிட்டி என்ற கிராமமாகும். தந்தையை இழந்த இவனுக்குத் தாயைத் தவிர எந்தச் சொந்தமுமில்லை. அவனது உலகம் - குடும்பம் எல்லாமே இயக்கம்தான். அண்ணா - அக்கா - தம்பி- தங்கச்சி எல்லா உறவையும் அவன் இந்தப் போராட்டத்தை நேசித்தவர்களிடமே கண்டான். அதேபோல் பிறராலும் நேசிக்கப்பட்டான்.

இவனது கடின உழைப்பு, போராட்டத்தின் மீது இவன் கொண்ட பற்று என்பன ஏனையோருக்கு முன்மாதிரியாக இருந்தன. பன்குளம், தம்பலகாமம், சாம்பல்தீவுப் பகுதிகளில் சிறீலங்காப் படையின் மீது மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களின் வெற்றிக்கு இவனது கடினமான உழைப்பே காரணமாக இருந்திருக்கின்றது.

இவன் பங்கு பற்றிய தாக்குதல்களில் இரு தாக்குதல்கள் இவனுடன் பழகிய போராளிகளால் மறுக்கப்பட முடியாதவை. சிங்கள குடியேற்றத்தால் மொறவேவா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட

முதலைக்குளம் பகுதியில் சிறீலங்கா விமானப் படையினரின் ட்றக் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் அந்த மண்ணுக்குச் சொந்தம் இல்லாத வெத மாத்தயா என்ற ஆக்கிரமிப்பாளன் உட்பட 23 பேர் கொல்லப்பட்டனர்.

சிறீலங்காப் படையினரை முழுமனிதராகக் கணித்துப் பழக்கமில்லாத லங்கா புவத் இச்சம்பவத்தில் இரு உயர் அதிகாரிகள் உட்பட எட்டுப் படையினரும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது. கொல்லப்பட்டவர்களில் எயர்லீடர் கிஸல்பெக், எயர்லீடர் பெர்ணான்டோ, விமானப்படை தொழில் நுட்பவியலாளர்கள் ஜே.பி.ஜீ. பெர்ணான்டோ, பி.எம்.டீ.ஆர். வீரசிங்க, ஐ.எல்.இந்திரசாந்த மற்றும் ஆர்.டீ.கொட்டாச்சி, வீரசிங்க லாமசிறி, என்.ஏ.கே. லக்ஸ்மன, ஏ.ஜீ.பியதாச என்ற படைவீரர்களும், ககேணவத்த வெத மாத்தயா என்ற பொதுமகனும் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டது.

அத்துடன் தாக்குலுக்கு உள்ளாகிய ட்றக்கின் எஞ்சின் 100 மீற்றர் தூரத்தில் காணப்பட்டதாகவும், பலியான படைவீரர்களின் உடல்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரம் வரை சிதறுண்டு கிடந்ததாகவும் குறிப்பிட்டது.

அப்போதைய திருமலை மாவட்டப் பொறுப்பாளர் லெப்.கேணல் சந்தோசம் தலைமையில் நடைபெற்ற இத்தாக்குதல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இதேபோல குரங்குப் பாலத்தில் சிறீலங்காப் படையினர் மீது தாக்குதலில் இவன் செயற்பட்ட விதம் இவனுடன் பழகிய போராளிகளால் மறக்கப்பட முடியாததாகும். இத்தாக்குதலில் எப்படியும் தான் ஒரு ஆயுதத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற வைராக்கியம் இவனுள் எழுந்தது. சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்த துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியில் காயப்பட்டுக் கிடந்த சிறீலங்காப் படை வீரனை நோக்கி இவன் ஓடிய வேகம் - அவனது ஆயுதத்தை கைப்பற்றிக் கொண்டு வந்த திறமை - இவையெல்லாம் விவரிப்பதற்கு வார்த்தைகள் இல்லாத காட்சிகளாகும்.

ஒவ்வொரு தாக்குதலின் முடிவிலும் ‘கெங்கா இப்படிச் செய்தான்’ என்றெல்லாம் கதைத்துக் கொண்டிருக்கும் போராளிகள் 02-10-1986 இல் சாம்பல் தீவுப் பகுதியில் இடம்பெற்ற பாரிய இராணுவ முற்றுகையைப் பற்றி மட்டும் கதைப்பதில்லை. ஏனெனில் துக்கம் அவர்கள் வாயை அடைத்துக் கொள்ளும். அந்த முற்றுகையை

முறியடித்துக் கொண்டு திரும்பியவர்களில் இவனும் கப்டன் றொபினும் இடம்பெறவில்லை. கணவனை இழந்த நிலையில் தனது உடலில் உயிர் ஒட்டியிருப்பது இவனுக்காகத்தான் என்றிருந்த இவனது தாய்க்கு அவள் கேட்க விரும்பாத செய்தியைக் சொன்னார்கள் போராளிகள்.

*நன்றி : களத்தில் இதழ்*

***16.07.1993***

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **வீரவேங்கை**

*இயக்கப் பெயர்:* **கெங்கா**

*இயற்பெயர்:* **ஆனந்தராஜா சுந்தரராஜா**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **கும்புறுப்பிட்டி, திருகோணமலை.**

*மாவட்டம்:* **திருகோணமலை**

*வீரப்பிறப்பு:* **23.08.1967**

*வீரச்சாவு:* **02.10.1986**

*நிகழ்வு:* **திருகோணமலை திருமலை சாம்பல்தீவில் சிறிலங்கா படையினர் சுற்றிவளைத்தபோது சயனைற் உட்கொண்டு வீரச்சாவு**



## லெப். அன்பழகன்

ஒரு வெற்றிகரமான தாக்குதல் நடைபெற்றது என்பதைக் கேள்விப்படும்போது தமிழீழ மக்களின் உள்ளங்கள் வெற்றிக் களிப்பில் மூழ்குகின்றன. ஆனால் குறிப்பிட்ட தாக்குதலின் வெற்றிக்கு உயிர்நாடியாக இருந்தது வேவுப் பிரிவின் திறமைதான் என்ற விடயம் பெரும்பாலும் வெளிக் கொணரப்படுவதில்லை. அது போராளிகளுக்கு மட்டுமே தெரிந்த விடயம்.

ஒரு தாக்குதல் திட்டத்தை வகுப்பதற்கு வேவுப் பிரிவின் பங்கு மிக முக்கியமானது. எதிரி நிலை கொண்டுள்ள பூகோள சூழல் அந்நிலையின் கட்டமைப்பு, எதிரியின் ஆட்பலம், ஆயுத பலம் போன்ற சகல தகவல்களையும் வேவுப் பிரிவினரே சேகரித்துக் கொள்கின்றனர். அத்துடன் தாக்குதலுக்கான சாதக பாதக அம்சங்களையும் அவர்கள் கணிப்பீடு செய்கின்றனர் வேவுப் பிரிவினரின் இந்தத் தகவல்களின் அடிப்படையில்தான். தாக்குதல் திட்டம் வகுக்கப்படுகின்றது. ஆகவே ஒரு தாக்குதலின் வெற்றி வேவுப் பிரிவினரின் திறமையில் பெரும்பாலும் தங்கியிருக்கின்றது எனலாம்.

வேவு பார்க்கும் அணி மிகவும் ஆபத்துக்கள் நிறைந்தது. ஒரு சிறு அசைவு கூட எதிரிக்குப் தெரியாமல் நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் வேவுப் பணியில் ஈடுபடுபவர் தனது உயிரை இழக்க நேரிடும். அதே வேளை எதிரியும் தனது நடைமுறைகளை மாற்றிக் கொள்வான். அதற்கேற்றவாறு மிகவும் நிதானமாக, எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

எதிரியின் காவலரண்களுக்கு மிக அருகில் செல்லும் போது சில வேளை எதிரி நித்திரையாயிருப்பான். ஓசைப்படாமல் அவனது கனரக ஆயுதத்தைத் தூக்கி வரக் கூடியதாக இருக்கும். எதிரியின்

ஆயுதங்களைக் காணும் போது அதைத் தூக்குமாறு மனம் ஏவும். அந்த ஆயுதத்தினால் வீரச்சாவெய்திய நண்பர்களின் முகங்கள் நினைவுக்கு வரும், கை துருதுருக்கும் - ஆனால் இதையெல்லாம் வெல்லக்கூடிய மனப்பக்குவத்தை வேவுப்பணியில் ஈடுபடுபவன் பெற்றிருக்க வேண்டும்.

கயிற்றில் நடப்பது போன்ற இப்பணியில் ஈடுபட்டவர்களின் அன்பழகனும் ஒருவன். முகாமில் இவனைக் காணவில்லையென்றால் சந்தேகமில்லாமல் ஒரு முடிவுக்கு வரலாம். அதாவது எதிரியின் ஏதோ ஒரு நிலைக்கு அண்மையில் இவன் நின்று எதிரியின் நடமாட்டங்களைக் கவனிக்கின்றான் என்று. அவனைப் பொறுத்தவரை எந்நேரமும் அதுதான் சிந்தனை. தனது பொறுப்பு எத்தகையது என்பது அவனுக்கு மிக நன்றாகத் தெரியும்.

ஒரு சராசரி மனிதரை விட இவன் வேறுபட்டவன். ஏனெனில் இவனது அண்ணனான ஈசன் என்பவருக்கு மோசடிக் குற்றங்களுக்காக இயக்கத்தால் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தச் சம்பவம் நிச்சயம் இவனில் இரத்தத் துடிப்பை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் இனப்படு கொலைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் எமது இனத்தைப் பற்றிய துடிப்பு இவனில் மேலோங்கியிருந்தது.

ஆகவே தெளிவாக இருந்தான். இயக்கத்தைப் பொறுத்தவரை எல்லோருக்குமே ஒரே சட்டம், ஒரே நியாயம் என்று. ஆகவேதான் அண்ணன் மறைந்த ஓரிரு மாதங்களுக்குள் இயக்கத்தின் முழுநேர உறுப்பினனாக முடிந்தது.

கிளிநொச்சியிலுள்ள திருநகர் தான் இவனது பிறப்பிடம். இயற்பெயர் சசிக்குமார். கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 5 பாடங்களில் சித்தி எய்தியிருந்தான். கண்ணன் என்று செல்லமாக ஊர் மக்களால் அழைக்கப்பட்டான். இவன் 10-08-1990 அன்று இயக்கத்தில் சேர்ந்ததும் அன்பழகனாக உச்சரிக்கப்பட்டான். கிளிநொச்சியிலேயே பயிற்சியும் பெற்றான். அன்றிலிருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தினம் வரை கிளிநொச்சிக் காவலரண்களின் சுவாசம்தான் இவனுக்கு.

இவன் மிக அமைதியான சுபாவமுள்ளவன். அந்த சுபாவம் தான் வேவுப் பணியில் ஈடுபடும்போது பெரிதும் உதவியிருக்கின்றது. கடமைக்குச் செல்லும்போது இவனுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்களை ஒருமுறை சொன்னால் போதும் திரும்பவும் விளங்கப்படுத்தத் தேவையில்லை. சொல்லப்படும் விடயம் தொடர்பாக நூறு வீதம் இவனது புலன்கள் வேலை செய்யும், அதனால்

தளபதிகளின் நம்பிக்கைக்கு உரியவனாக இருந்தான். அதேபோல் பழகும் விதத்தினால் சக போராளிகளின் நன்மதிப்பைப் பெற்றவன் இவன்.

இவனது பணிக்கு உரைகல்லாக இருப்பது ஆனையிறவு தட்டுவன் கொட்டிப் பகுதியில் நிகழ்ந்த தாக்குதல். இத்தாக்குதலில் 22 காவலரண்கள் எம்மால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலுக்கு சிறந்த முறையில் வேவுப்பணிகளில் ஈடுபட்டதற்காகத் தலைவர் பிரபாகரனின் கரங்களால் இவனுக்குப் பரிசு கிடைத்தது. இவனது வாழ்வின் உச்சக்கட்ட ஆனந்தத்தைச் சந்தித்தது அன்று தான்.

மீண்டும் அதே பணி – ஒரு நாள் சுற்றுலா விடுதிப் பக்கமாக எதிர்பாராத விதத்தில் இவன் எதிரிகளைச் சந்திக்க நேர்ந்தது. இந்நிலையில் முந்திக் கொண்டவரே உயிர் வாழ முடியும். இவன் முந்திக் கொண்டான். இரு இராணுவத்தினர் அந்த இடத்தில் பலியாகினர். எல்லோரும் இவன் தப்பி வந்ததனை நினைத்து மகிழ்ச்சி அடைந்தபோது இவன் மட்டும் மகிழ்ச்சி அடையவில்லை. இந்தச் சந்திப்புத் தனது பணிகளைத் தடங்கலுறச் செய்ததாகவே கருதினான். ஆயினும் மனம் சோரவில்லை. அடுத்த தாக்குதலுக்குத் தயாரானான்.

அடுத்த தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டது. திகதியும் தீர்மானிக்கப்பட்டது. இத்தாக்குதலுக்கான பயிற்சியும் நடந்தது. இப்பயிற்சியின்போது இவனுக்குச் சிறிய காயமேற்பட்டது. காயத்தின் வேதனைகளுக்கிடையில் சிரித்தபடியே இவன் கூறினான், ‘எனக்கும் காயம் பட்டிட்டுது. நான் ரத்தம் சிந்திட்டன். ஆனபடியால் நாங்கள் கட்டாயம் இதில் வெல்லுவம்’ (ஏற்கனவே ஒரு தடவை இவன் காயப்பட்டவன். 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆனையிறவுப் பகுதியில் நடந்த மோதலில் வயிற்றில் காயமடைந்தான்)

தாக்குதலுக்கான கடைசிப் பணி - இறுதியாக ஒரு முறை உளவு பார்க்க வேண்டும். 30-08-1992 அன்று இரவு இவன் புறப்பட்டான். ‘றெக்கி சரியில்லாட்டி பெடியள் கூடச் செத்துப் போவாங்கள். அதற்காக நான் உள்ள போய்ப்பாத்திட்டு வாறன். கடைசி றெக்கி வடிவா எடுக்க வேணும்’ சொல்லி விட்டுப் புறப்பட்டு விட்டான். அப்போது தான் அவனைக் கடைசியாகப் பார்த்தது.

இலக்கத் தகடு கூட இல்லாமல் சயனைட்டுடன் மட்டுமே புறப்பட்டான். 30 ஆம் திகதி முடிந்து 31 ஆம் திகதியானது. இவன்

பணி மட்டும் முடியவில்லை. அதிகாலை 2.30 மணி, எதிரியின் முள்ளுக்கம்பியை நீக்கி உள்ளே, பட்... பட்... பட்...

அன்பழகனைப் பற்றிய செய்தி இவ்வாறுதான் எமக்குக் கிடைத்தது. அந்த உப்பு மண் சுமந்த மாவீரர்களின் பெயருள் இவனது பெயரும் இணைக்கப்பட்டது.

'நான் ரத்தம் சிந்தீட்டன் - ஆனபடியால் இதில் நாங்கள் வெல்லுவம்' என்ற இவன் வார்த்தை இந்தத் தேசமெங்கும் கேட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. தொடர்ந்து கிடைக்கும் இராணுவ வெற்றிகள் இவனது வார்த்தையை உறுதிப்படுத்துகின்றன.

*நன்றி : களத்தில் இதழ்*

*13.08.1993*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப்.**

*இயக்கப் பெயர்:* **அன்பழகன்**

*இயற்பெயர்:* **கந்தையா சசிக்குமார்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **திருநகர், கிளிநொச்சி.**

*மாவட்டம்:* **கிளிநொச்சி**

*வீரப்பிறப்பு:* **11.05.1973**

*வீரச்சாவு: 31.08.1992*

*நிகழ்வு:* **கிளிநொச்சி, ஆனையிறவு தட்டுவன்கொட்டியில் சிறிலங்கா படையினருடனான சமரில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **கனகபுரம்**

*மேலதிக விபரம்:* **கனகபுரம், மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## லெப். திலக்

இந்தியப்படை எமது மண்ணை ஆக்கிரமித்து பல அழிவுகளை செய்துகொண்டிருந்தகாலம். வீதிகள், ஒழுங்கைகள் எங்குபார்த்தாலும் வெறிநாய்களின் வேட்டை. அமைதிப்படை என்றுவந்து குழந்தைகள், பெண்கள் என்ற வேறுபாடு இன்றி தமிழீழ மண்ணை அழித்து அட்டகாசம் செய்து கொண்டிருந்த காலம். எமதுமக்களைக் காக்க என்று சொல்லி இந்த மண்ணுக்கு வந்தவர்கள் எமது மக்களையும் கலை, பண்பாட்டையும் அழிப்பதைக்கண்டு சிறுவர் முதல் பெண்கள்வரை எமது மண்ணைக்காக்க எழுந்தனர்.

சிறுவயதில் இருந்தே எந்தக்காரியத்தையும் துடுக்குடன் செய்யும் கிருஸ்ணவரதன் என்ற இயற்பெயர் கொண்ட இவன், கடலால் சூழப்பட்ட வல்வெட்டித்துறையில் ஆதிகோவிலடி என்னும் கிராமத்தில் சேதுலிங்கம் வள்ளியம்மா தம்பதிகளின் மூத்தமகனாக 10.09.1972 இல் பிறந்தான்.

இவன் 17.01.1989 இல் விடுதலைப்புலிகளுடன் தன்னை ஒருமுழுநேர உறுப்பினராக இணைத்துக்கொண்டான். விடுதலைப் புலிகளின் கானகப் பாசறைடியாக பல விடுதலைப்புலிகளை இந்த மண்ணில் உருவாக்கி விட்ட மணலாறு பயிற்சி முகாமில், பயிற்சி எடுப்பதற்காக அனுப்பப்பட்டான்.

இங்கு ‘திலக்’ என்ற பெயருடன் பயிற்சியை தொடங்கிய இவன் பயிற்சியில் மிகவும் கட்டுப்பாட்டுடனும், திறமையுடனும் நடந்துகொண்டான். இதனால் பல தடவைகள் முகாம் பொறுப்பாளராலும், பயிற்சி அளித்த ஆசிரியர்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டு வந்தான்.

எந்த வேலையைக் கொடுத்தாலும் முகமலர்வுடன் ஏற்று அதைச் செய்துமுடிப்பதில் இவனுக்கு நிகர் இவனேதான். காட்டுப்பகுதியில் உணவுப்பொருட்களில் இருந்து சகலவிதமான பொருட்களையும், தலையில் சுமந்தேசெல்லவே வண்டியநிலை. தூர இடங்களில் இருந்து பொருட்களை எடுத்து வருவதானால் பொறுப்பாளரால் தெரிவுசெய்யப்படும் குழு திலக்கின் குழுவாகவே இருக்கும்.

அவன், தான் சோர்வின்றி தனது குழுவில் உள்ளவர்களை எல்லாம் பாட்டாலும், பகிடிப்பேச்சாலும் சிரிக்கவைத்து வேலைகளைப் பிழையின்றிச் செய்யும் திறமையுடையவன். பயிற்சி முகாமில் நடைபெறுகின்ற கலைநிகழ்ச்சிகளில் திலக் இல்லாமல் இருக்காது. ஏதாவது ஒரு நிகழ்ச்சியிலேனும் அவன் பங்கு இருக்கும். அப்படி இல்லாவிட்டால் சகபோராளிகள் கட்டாயப்படுத்தி 'திலக் அண்ணை மேடையில் ஏறுங்கோ. ஒரு பாட்டென்றாலும் கட்டாயம் பாடவேண்டும்' என்பார்கள். அவர்களின் அன்புக்காகப் பாடுவான்.

இவனுடைய ஒவ்வொரு அசைவும் பேச்சும் ஒரு முழுமையான விடுதலைப் போராளிக்கு உரியனவாகவே இருக்கும். எப்போ எடுத்தாலும் தனது குழுவில் உள்ளவர்களிடம், 'மச்சான் சண்டைபிடிக்க வேணும், ஆமிக்கு நாம் யார் என்று காட்டவேணும்' என்று பேசிக்கொள்வான்.

பயிற்சிக்காலத்தில் இப்படி விடுதலை உணர்வுடன் இருந்து திலக் பயிற்சியை முடித்துவெளியேவந்தான். 'எமது வெற்றிக்குக் கடுமையான பயிற்சியும் மனவுறுதியும்தான் காரணம்' என்ற தலைவரின் கூற்றுக்கு அமைய, மேலும் பயிற்சி எடுக்க விரும்பிய இவனை, வயதில் சிறுவனாக இருந்தாலும் பயிற்சியின்போது காட்டிய திறமையையும், ஆர்வத்தையும் கண்டு மேலதிக பயிற்சிக்கும் இவன் அனுப்பி வைக்கப்பட்டான். அங்கும் இவன் முதன்மை மாணவனாக இருந்து பலபேரின் பாராட்டைப் பெற்றான்.

இப்பயிற்சியை முடித்து வெளியே வந்த நேரத்தில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து இன அழிப்பில் ஈடுபட்டுவந்த சிங்கள வெறியர்களின் முகாம்களை அழித்திட விடுதலைப்புலிகள் செயற்பட்டுவந்தனர். இதன் முதல்படியாக கொண்டச்சி படைமுகாம் தகர்ப்பு இடம்பெற்றது. இத்தாக்குதலில் திலக்கின் பங்கு அளப்பரியது. தாக்குதல் தொடங்கியது. ஒரு பக்கமாக நின்ற திலக் நின்ற அணி எதிரியின் முகாமுக்குள் புகுந்து அவனை அழிக்கவேண்டும் என்ற ஆதங்கத்தில் அவர்களது கரங்களில் இருந்த துப்பாக்கி நெருப்பைக் கக்கிய வண்ணம்

முன்னேறிச் சென்றது. திலக்கின் துப்பாக்கி மின்னலாகச் சுழன்றது. அதில் எதிரிகள் பலர் கண்முன்னே விழுந்தனர். முதலாவதாக இவன் சென்ற அணியே முகாமுக்குள் புகுந்தது. பலஆயுதங்களுடன் 'பவள்' கவசவாகனம் ஒன்றும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பரந்தன் பக்கமாக முன்னேற முயன்ற படையினர்மீது கடும்தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதில் இவன் காட்டிய வீரம் இவனோடு களம் சென்ற அனைத்துப் போராளிகளையும் ஒருகணம் சிந்திக்கவைத்தது. சண்டைமுடிந்து முகாம் திரும்பியதும் இங்குவராமல் தொடர்ந்து சண்டைசெய்து கொண்டிருந்திருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டே இருந்தான்.

சண்டைகளில் இவன் காட்டிய வீரமும் துணிச்சலும் எல்லோரையும் இவன் பக்கம் ஈர்த்தது. எல்லோருக்கும் முன்னுதாரணமாக, திலக் செயற்பட்டான். சண்டைக்கு போராளிகளைத் தெரிவு செய்யும்போது இவன்பெயர் இடம்பெறா விட்டால் எதற்கும் முகம் சுளிக்காத இவன், முகம் சுளிப்பான். யாருடனும் பேசமாட்டான்.

'இவ்வளவுபேரும் சண்டைக்கு போக நான் மட்டும் இங்கு நிற்பதா' என்று கூறிக் கொள்வான். இவனின் இந்தமாறுதலைப் பார்த்து இவனும் சண்டையணியில் சேர்த்துக் கொள்ளப்படுவான். இப்படித்தான் கொக்காவில் முகாம் தாக்குதலுக்கு சென்ற அணியில் இவன் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

அங்கும் இவன் காட்டியவீரம், எல்லோரும் இவன் போலவே இருக்கவேண்டும் என்ற எண்ணத்தை எல்லோரிடமும் தோற்றுவித்தது. வீரத்திலும் விவேகத்திலும் இலட்சியத்திலும் இவன் எப்படி இவ்வளவு திறன் பெற்றான், அதுதான் ஒவ்வொரு போராளியையும் தனது பிள்ளையாக வளர்க்கும் தலைவனின் கண்காணிப்பில் வளரும் விடுதலைப்புலிகளின் திறன்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மண்ணை ஏனைய பிரதேசங்களுடன் பிரித்து நிற்கும் 'ஆனையிறவு முகாம் முற்றுகை' ஆரம்பமானது. முற்றுகையின் முதல்கட்டமாக ஆனையிறவு உல்லாச விடுதி மினிமுகாம் விடுதலைப்புலிகளின் சில நிமிட தாக்குதலில் அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் திலக் காட்டிய வீரமும் விவேகமும் இவனுக்கே உரியது. சிலநிமிட நேரத்தில் முகாம் வீழ்ச்சி அடைந்ததென்றால், அதில் சென்ற அணிகள் எவ்வளவு வேகத்தில் தாக்கியிருப்பார்கள். இதனால் முகாமுக்குள் இருந்த எதிரிகள் பயப்பீதியால் ஆட்டம் கண்டார்கள். தமது உயிர்திரும்பாது என்னும் முடிவுக்கு வந்தனர்.

தமக்கு உதவிசெய்யும்படி படையினர், படைத்தளபதிகளிடம் உயிர்ப்பிச்சை வேண்டினர். இதன்காரணமாக முற்றுகையை முறியடிக்கவென்று கட்டைக்காட்டுப் பகுதியில் இராணுவம் தரையிறக்கப்பட்டது. 24 மணிநேரத்தில் முற்றுகையை முறியடிப்பதாகக் கூறிக்கொண்ட படையினர் 24 நாட்களுக்குமேல் போரிடவேண்டிய நிலை ஏற்பட்டது.

கடற்படைக் கப்பல்கள்மூலம் தரையிறக்கப்பட்ட படையினரை எதிர்கொள்ளப் போராளிகள் கட்டைக்காட்டுப் பகுதியை நோக்கி விரைந்தனர். மூண்டது கட்டைக்காட்டுப்போர். உல்லாச விடுதிப் பகுதியில் சண்டையில் நின்ற திலக், கட்டைக்காட்டுக்கு செல்ல விருப்பம்கொண்டு பொறுப்பாளரிடம் கேட்டபொழுது, இவன் ஆர்வத்தைக்கண்ட அவர் அங்கு சென்ற அணியுடன் இவனையும் அனுப்பிவைத்தார். அங்குலம் அங்குலமாக முன்னேறிவந்த படையினர் இவர்களின் கடும்எதிர்ப்பைக் கண்டு திணறினர்.

'போருக்கெல்லாம் தாய்ப்போர்' என்று கொக்கரித்தான் எதிரி. இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உண்டு என்று கூறும் அளவுக்கு திலக் போன்ற நிகரில்லாத வீரர்கள் போரிட்டார்கள். படையினர் முன்னேறிக்கொண்டு இருந்தநேரத்தில் இடையில் உட்சென்று தாக்குவதற்காக ஓர் அணி தெரிவுசெய்யப்பட்டது. அத்தாக்குதலில் திலக்கும் இடம் பெற்றான்.

உட்சென்று தாக்கும் தாக்குதல் தொடங்கியும் போராளிகளின் ஆயுதங்கள் தீப்பிழம்பாக உட்புகுந்தன. எதிரி திசைதெரியாமல் ஓடினான். எம்மவர்களின் குண்டுகள் எதிரியைச் சல்லடை போட்டன. பல படையினர் கொல்லப்பட்டு பல நவீனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் படையினரின் உடல்களும் கைப்பற்றப்பட்டன. இதில் திலக் காட்டிய வீரம் இன்றும் போராளிகள் மத்தியில் பேசப்படுகின்றது. இச்சண்டையின் பின்னரும் முன்னேறி வந்த படையினருக்கு எதிராக தொடர்ந்தும் போராடினான். 22.07.1991 அன்றும் தொடர்ந்து நடைபெற்ற மோதலில் எதிரியின் ரவைபட்டு வீரமரணத்தைத் தழுவிக்கொண்டான்.

இவன் கண்ட கனவை நனவாக்க இவன் சிந்திய செங்குருதியில் சிவந்த மண்ணில் செங்கொடியை ஏற்றிட ஆயிரமாயிரம் விடுதலை வேங்கைகள் உருவாகிக் கொண்டே உள்ளனர். வீரத்துக்கு உதாரணமான இந்தவீரனின் நினைவுகளும் அனைத்துப் போராளிகளின் இலட்சிய உணர்வுகளும் என்றும் எம்மோடு தொடர்ந்து வரும்.

*நன்றி : களத்தில் இதழ்*

*10.09.1993*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப்டினன்ட்**

*இயக்கப்பெயர்:* **திலக்**

*இயற்பெயர்:* **சேதுலிங்கம் கிருஸ்ணவரதன்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **10.09.1972**

*வீரச்சாவு:* **22.07.1991**

*நிகழ்வு:* **மட்டக்களப்பு, புல்லாவெளியிலிருந்து ஆனையிறவைநோக்கி முன்னேற முயன்ற சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **எள்ளங்குளம்**

*மேலதிகவிபரம்:* **எள்ளங்குளம், மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**

## மேஜர் அபயன்



சிவகுமாரின் சுபாவம் இப்படித் தான் அமைந்திருந்தது. அயலில் உள்ளவர்கள் யாராவது, 'தம்பி, ஒருக்கா கடைக்குப் போட்டு வாறியே'? 'ஓம்' காசையும் பையையும் வாங்கிக் கொண்டு புறப்பட்டு விடுவான். தெருவில் யாராவது ஒருவர் விபத்தில் சிக்கினாலோ, யாரும் விழுந்து கிடந்தாலோ அந்த இடத்தில் அவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சையளிப்பதுடன் மட்டும் நின்று விடுவதில்லை. அவர்களைக் கொண்டுபோய் வீட்டில் ஒப்படைப்பது வரை தானே நின்று செய்தால் தான் இவனுக்குத் திருப்தி.

இவன் மிகவும் அமைதியானவன். குடும்பத்தில் கூட, யாரையுமே தனக்காகச் சிரமப்படுத்த இவன் விரும்புவதில்லை. இப்படியான இவனுக்குள் பின்னாளில் ஒரு பூகம்பமே கிளர்ந்தெழும் என்று, யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

சரித்திரக் கதைகளைப் படிப்பதில் இவனுக்கு ஆர்வம் மிகுதி. 'தமிழரின் பெருமை எத்தகையது, தமிழரின் வீரம், புகழ் எங்கெல்லாம் பரவியிருந்தது..... இன்று ஏன் இப்படி....... இந்த நிலைமையை மாற்றியமைக்கும் காலம் பிறந்துள்ளது. அதில் நிச்சயம் நானும் ஒரு பங்காளனாய்....' இவ்வாறாக அவன் மனது அடித்துக் கூறியது. எண்ணங்கள் செயலை நோக்கித் தள்ளின. ஓட்டமென்றும் நீச்சலென்றும் தன்னைத் தயார்ப்படுத்தி வந்தான் இவன்.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் இந்தப் பூவைப் புயலாக மாற்றியது. தேடித்திரிந்தான் விடுதலைப் புலிகளைச் சந்திக்க. இவனது சொந்த இடம் தெல்லிப்பளை, அந்தக் காலத்தில் தடுக்கி விழுவதானால்கூட ஒரு 'புளொட்' உறுப்பினரின் மேல் தான் விழவேண்டும். அப்படியான நிலைமை இருந்தது தெல்லிப்பளையில்.

‘உம்’ என்று சொன்னால், படகுகளில் ஏற்றிக்கொண்டு இந்தியாவுக்குச் செல்ல எத்தனையோ இயக்கங்கள். ஆனாலும் இவனுக்குச் சம்மதமில்லை. வடிகட்டல் முறையில் போராளிகளை உள்வாங்கும் விடுதலைப் புலிகளை மட்டுமே பிடித்திருந்தது.

இவனுக்கும் மற்றும் சில நண்பர்களுக்கும் விடுதலைப் புலிகளின் தொடர்பும் கிடைத்தாயிற்று. எனினும், உள்வாங்குவதில் சலிக்க வைக்கும் தாமதம், தரப்படும் வேலைகளோ யானைப் பசிக்கு சோளப்பொறி போல. ‘எங்களாலும் நிறைய சாதிக்க முடியும். அதுவும் இப்போதே’ தீர்மானித்துவிட்டார்கள் அவர்கள். எங்கெங்கோ திரிந்து ’டைனமைற்றுக்குத்’ திரி வைத்து (பைப்பில்) குண்டுகள் செய்வது முதல், மேலும் சில விசயங்களைத் தெரிந்து கொண்டார்கள்.

1984 ஆம் ஆண்டு காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில், வெடிப்பொருள்களுக்குப் பாதுகாப்பாகச் சென்று கொண்டிருந்தனர். காவலர்கள். அவர்களிடம் 4 றிப்பீற்றர் துப்பாக்கிகளும் இருந்தன. அவற்றினையும் வெடிப்பொருட்களை வெடிக்கவைக்கும் கருவியையும் கைப்பற்றுவதற்காய் சிவகுமாரும் நண்பர்களும் காத்திருந்தனர். இவர்களிடம் இருந்ததோ ஒரேயொரு வேட்டைத் துப்பாக்கி, சில கைக்குண்டுகள் (கொளுத்தி எறிபவை).

‘ஜீப்’ மறிக்கப்பட்டது. கைக்குண்டுடன் சிவகுமார் - ஒருவன் துப்பாக்கியுடன் - மற்றவர்கள் பின்னால். நான்கு காவலர்களும் கைகளை உயர்த்திவிட்டனர். நான்கு றிப்பீற்றர்களும் இவர்கள் வசமாயிற்று. எக்ஸ்புளோடரையும் மற்றும் பொருட்களையும் கைப்பற்றிக் கொண்டு ஜீப்பிலே திரும்பிவிட்டனர்.

இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள் இயக்கக் கட்டுப்பாட்டை மீறிச் சுயமாக நடந்துள்ளார்கள். தவறுதான். ஆனால், இவர்களை நெறிப்படுத்த முடியும், அப்போது யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த கேணல் கிட்டு அவர்கள் இவ்வாறு தீர்மானித்தார்.

ஒரு விடயத்தில் வெற்றி. அது அவர்களை உற்சாகப்படுத்தியது. மேலும் கைக்குண்டுகளைச் செய்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்தது. சிவகுமாரின் உடலெங்கும் பாரதூரமான காயம் - நெஞ்சுப் பகுதியைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. இப்படியொரு நிலை வருமென்று எவருமே எதிர்பார்க்கவில்லை. சுமார் இருபது நாட்கள் - அதை இருபது வருடங்கள் என்று கூடச் சொல்லலாம். அப்படியான வேதனைகளை இவன் அனுபவித்தான். இவனது அண்ணன்தான் இப்போது இவனைப் பராமரித்து வந்தார். படையினரின் முற்றுகைகள் நிகழும்போது,

தம்பியைத் தூக்கிக் கொண்டு ஓடுவதும் வைத்தியம் செய்வதுமாக இந்த இருபது நாட்களும் கடந்தன. 'இயக்கத்திற்குக் கட்டுப்படாமல் நடந்ததால், இயக்கம் இவனைப் பொறுப்பெடுக்க மாட்டாது' என்று ஊரில் கதை உலாவியது, அப்படியானால் இவன் கதி? அச்சத்துடன் கடந்தன அந்த நாட்கள்.

விசயத்தைக் கேள்விப்பட்டார் கேணல் கிட்டு. 'அவன் இயக்கமில்லையெண்டு ஆர் சொன்னது? அவன் இயக்கந்தான்' என்றபடியே அவனை நோக்கி விரைந்தார் அவர். அப்போதுதான் உயிரே வந்தது அவனை நேசித்தவர்களுக்கு. அவனது நிலைமையைப் பார்த்ததும், 'ஏன் இந்த வேலை? என்னட்டக் கேட்டிருந்தா திறமான குண்டுகள் தந்திருப்பேனே....' என்று கூறி, அவனது பயத்தைப் போக்கி, உற்சாகப்படுத்தினார். வைத்தியத்திற்காக சிவகுமார் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டான். அங்குதான் அவன் அபயன் ஆனான். அவனுக்குப் பிடித்தமான 'பொன்னியின் செல்வன்' நாவலில் வரும் ஒரு பாத்திரம்தான் அபயன்.

மருத்துவத்தை எதிர்பார்த்துத் தமிழகம் சென்ற இவன், பிறருக்கு மருத்துவம் செய்யக்கூடியவனாக இந்த மண்ணிற்குத் திரும்பினான். இவனது சேவை மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியம் எதிர்பார்த்தது. 1987 ஆம் ஆண்டு சித்திரை மாதமளவில் இவன் மட்டக்களப்பு மண்ணில் கால்வைத்தான். அன்றிலிருந்து, 1992 ஆம் ஆண்டின் இறுதியில் வீரச்சாவடையும் வரை, மட்டக்களப்புப் பிராந்தியத்திலேயே இவன் பணிபுரிந்தான்.

மட்டக்களப்பில் இவனது முதல் அனுபவம் மறக்க முடியாததாக இருந்தது. சிவத்தப்பாலம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது அலுவலகத்தின் கீழ், ஏற்கனவே தீர்மானித்தபடி கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. ஒரு நாள் காலை 5.00 மணியளவில் முறக்கொட்டாஞ்சேனை, ஏறாவூர், கரடியனாறு ஆகிய மூன்று முகாம்களிலிருந்தும் புறப்பட்ட சிறீலங்காப் படையினர், இந்த அலுவலகத்தை முற்றுகையிட விரைந்தனர். இந்த முற்றுகையிலிருந்து போராளிகள் தப்பமுடியாதவாறு, பொத்தானை என்ற இடத்தில் உலங்கு வானூர்தி மூலம் படையினர் இறக்கப்பட்டிருந்தனர். சண்டை தொடங்கியது அலுவலகத்தை விட்டுப் போராளிகள் பின்வாங்கினர். வெற்றிகரமான முற்றுகை என நினைத்தவாறே படையினர் அலுவலகத்தைக் கைப்பற்றினர். இதேவேளை உலங்குவானூர்தி மூலம் இறக்கப்பட்ட படையினர் எமது முற்றுகைக்குள்ளாகினர். அங்கிருந்து அவர்கள் தப்புவதே பெரும் போராட்டமாகியது. பகல் 11.30 மணியளவில், எமது

அலுவலகத்தினுள் இருந்த கண்ணிவெடி வெடிக்கவைக்கப்பட்டது. அலுவலகம் தரைமட்டமாகியது. அதற்குள் தங்கியிருந்த விசேட அதிரடிப்படையின் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் கருணரத்னவும் மேலும் மூன்று படையினரும் பலியாகினர். இத்தாக்குதலில் கலந்து கொண்டவர்களில் அபயனும் ஒருவன். இம் முற்றுகைக்கு வந்த இன்னொரு அணியினர் மீது கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. சிறீலங்காப் படையினரது திட்டங்கள் தவிடுபொடியாகின. மொத்தம் 7 படையினர் கொல்லப்பட்டதாகவும் 9 படையினர் காயமடைந்ததாகவும் சிறீலங்காப் படையினர் ஒப்புக் கொண்டனர். அதன் பின் அந்த இடத்தைப்பற்றி படையினர் இவ்வாறு கூறினர். 'அது சிவத்தப் பாலம் இல்லே, ரத்தப் பாலம்'

1987 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்த காலத்தில், இவன் யாழ்ப்பாணம் வந்திருந்தான். அதுதான் யாழ்ப்பாணத்திற்கான இறுதிப் பயணம் என்று உணர்ந்திருந்தானோ என்னவோ உறவினர்கள், நண்பர்கள் என்று ஒருவரது வீட்டினையும் தவறவிடவில்லை இவன். அப்போது பொதுவாக எல்லாத் தாய்மாருக்கும் இருக்கும் எதிர் பார்ப்பே இருந்தது, இவனது அண்ணைக்கும். 'டேய்... எனக்கு கொள்ளி வைக்கிற கடமை இருக்கடா உனக்கு' என்றார். இவன் அமைதியாகச் சிரித்தான். 'ஏன் .... வேறை ஆரும் கொள்ளி வைச்சா இந்தக் கட்டை எரியாதோ?' பயணமாகிவிட்டான் மட்டக்களப்புக்கு. ஏனெனில் இந்தியப் படையுடன் போர் தொடங்கிவிட்டது. இனி யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க முடியாது. மட்டக்களப்பு இவனை எதிர்பார்க்கிறது.

அங்கு இவன் சென்ற நாளிலிருந்து, வீரச்சாவெய்திய நாளிற்கு இடைப்பட்ட இந்தக் காலத்தில், அவனிடமிருந்து வீட்டிற்கு வரும் கடிதங்களெல்லாம் 'நான் சுகம், வீட்டிற்கு வரும் போராளிகளை நன்கு கவனிக்கவும்' என்றே இருக்கும்.

இந்தியப் படையினருடனான போர் நிகழ்ந்த காலத்தில் அபயனின் போராட்டப் பங்களிப்பை, மட்டக்களப்பு போராளிகள் என்றுமே மறக்கமாட்டார்கள். எத்தனையோ முற்றுகைகள் - ஆனாலும் இவன் உறுதியாக இருந்தான்.

தொடர்ச்சியான முற்றுகைகள் போராளிகளைத் தளர்ச்சி கொள்ளச் செய்யும். அப்போதெல்லாம் இவன் உற்சாகப்படுத்துவான்.

'ஓராயிரம் ஆண்டுகள் ஆகட்டுமே....நாம்

பொறுமையின் பொருள்

மட்டும் விளங்கட்டுமே

வரும் காலமெல்லாம்

நம் பரம்பரைகள்......நாம்

அடிமையில்லை என்று

முழங்கட்டுமே'

இக் காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் மகா ஓயாப் பகுதியில் பயிற்சி முகாம் ஒன்றையும் அமைத்திருந்தான் இவன். அங்கு போராளிகளுக்கு அடிப்படைப் பயிற்சியினை மட்டுமே வழங்க முடிந்தது. துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிக்குப் போதிய ரவைகள் இருக்கவில்லை. பயிற்சியின் அடுத்த கட்டம், ஒரு முகாமைத் தாக்குவது எப்படியென்பது பற்றிய செயல்முறை விளக்கம் அது. அடுத்த நாள் நடைபெறவிருந்தது. ஆனால், அன்று அதிகாலையில் இந்திய படையினர் அந்த இடத்தை முற்றுகையிட்டனர்.

புதிய போராளிகள் - அனுபவ மில்லாதவர்கள் - எனினும், தான் கற்பித்த மாதிரியே அவர்களை நடக்கப் பண்ணினான். அங்கு நின்ற தோழன் ஒருவனிடம், அவர்களைக் கூட்டிக் கொண்டு ஆற்றின் வழியாக இறங்கித் தப்புமாறு கூறிவிட்டு, வேந்தன் என்ற போராளியுடன் இணைந்து இந்தியப் படையினரின் முன்னேற்றத்தைத் தடுத்துக் கொண்டிருந்தான். அபயன் சுட்டுக் கொண்டிருக்கும் போது வேந்தன் பின் வாங்குதல் - சுமார் 15 நிமிட நேரம் இச்சண்டை நீடித்தது. இதற்கிடையில், ஏனையவர்கள் தப்பிவிட்டனர். சண்டையின் இறுதியில், இறந்த தமது சகாக்களினது சடலங்களை மட்டும் தூக்கியவாறு இந்தியப்படை சென்றது.

அதன்பின் இவனது போராட்ட வாழ்வு தம்பிலுவில் - திருக்கோயில் பகுதியில் தொடர்ந்தது. ஒரு மருத்துவனாக - ஒரு தாதியாக – ஒரு போர் வீரனாக - குழுத் தலைவனாக இவனது வாழ்வு தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் றொபேட் என்ற போராளிக்கு கையில் கண்ணிவெடி வெடித்துவிட்டது. அப்போது மயக்க ஊசியும் இல்லை. தேவையான மருத்துவ கருவிகளும் இருக்கவில்லை. தொடர்ச்சியான முற்றுகைகளில் பலவற்றை இழந்தாயிற்று. எனவே றொபேட்டிடம், 'தம்பி! நோகுந்தன், என்ன செய்யிறது? சமாளி' என்று கூறிவிட்டு, கம்பி வெட்டும் கருவியினாலேயே சிதறிய விரல்களை வெட்டியெடுத்தான். அந்தக் காலத்தல் இவனது மருத்துவம் தான் எத்தனையோ போராளிகளின் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

இக்காலத்தில், அன்ரனி தலைமையில், வளத்தாப்பிட்டியில் மூன்று 'ஜீப்புகளில்' வந்த இந்தியப் படையினர் மீது

மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் உட்பட பல தாக்குதல்களில், இவன் பங்கு கொண்டான். இந்தியப் படை அம்பாறையை விட்டு வெளியேறியதும், திருக்கோயிலில் தேசவிரோதிகளின் முகாம் மீதான தாக்குதலில் பங்குபற்றினான். அப்போது அத்தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய அன்ரனி, 'எனக்கு ஏதாவது நடந்தா, அபயன் சொல்லுற மாதிரி நடவுங்கோ' என்று போராளிகளுக்கு அறிவுறுத்தினான். அத்தாக்குதல் மாபெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்தது. இந்தியப் படையினரின் திட்டங்கள் தோல்வியைத் தழுவின.

மேலும் பல தாக்குதல்கள் - அதிலும் நரிப்புல் தோட்டம் வழியாக வந்த தேசவிதோதிகளை, மிக குறைந்த எண்ணிக்கையான போராளிகளுடன் நின்று வெற்றிகொண்ட தாக்குதல் குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா அரசுடனான இரண்டாவது ஈழப்போர் தொடங்கியதும் இவன் களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தின் மீது தாக்குதல் தொடுத்தான். இந்தக் காவல் நிலையத்தினைக் கைப்பற்றியதும் ஏனைய போராளிகளிடம் கூறினான். '1984 ஆம் ஆண்டு இந்தப் பொலீஸ் ஸ்ரேசனை அடிக்க வந்து தான் பரமதேவாவையும் ரவியையும் இழந்தோம். இண்டைக்கு இதைக் கைப்பற்றிக் காட்டியிருக்கிறம்.'

தொடர்ந்து பல தாக்குதல்கள் - பல பொறுப்புக்கள், இப்போதெல்லாம் சிறீலங்காப் படையினர் தேடும் முக்கிய புள்ளிகளில் இவனும் ஒருவனாகி விட்டான். மட்டக்களப்பில் தேடப்படும் 12 பேரில் இவனது பெயரையும் சிறீலங்கா அரசு அறிவித்திருந்தது.

அப்போதெல்லாம் அங்குள்ள போராளிகள் இவனது குடும்பத்தைப் பற்றி விசாரிப்பார்கள். 'எனக்கு வீடும் இல்லை, சொந்தமும் இல்லை, எல்லாமே நீங்கள் தான்ரா' என்பான். முகாமில், போராளிகளுக்குத் தேவையான எல்லா உணவுவகைகளையும் தேடிக் கொடுப்பான். தான் மட்டும் மரக்கறி வகைகளையே உண்பான். கேட்டால், 'எனக்கு அதில் விருப்பமில்லை' என்பான். ஆனால், அவன் வீரச்சாவெய்தியதும் தான் ஒரு பார்ப்பனப் (பிராமணன்) பையன் என்பது அனைவருக்கும் தெரியவந்தது. தனக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களுக்குக் கூட இவன் இதைப் பற்றிக் கூறவில்லை.

அன்று விளாவெட்டுவானில் சிறீலங்காப் படையினர் தாக்கிய போது, இவனை நாம் இழந்தோம். ஆயினும், அங்குள்ள போராளிகளுக்கு இவன் பாடும் பாடல்கள் நினைவில் உள்ளன.

*‘வரும் காலமெல்லாம் நம் பரம்பரைகள் நாம் அடிமையில்லை என்று முழங்கட்டுமே!’*

**- கிறேக்**

*நன்றி: களத்தில் இதழ்*

***24.09.1993***

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **மேஜர்**

*இயக்கப் பெயர்:* **அபயன்**

*இயற்பெயர்:* **கிருஸ்ணமூர்த்தி சிவகுமார்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **தெல்லிப்பளை கிழக்கு, யாழ்ப்பாணம்**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **01.01.1961**

*வீரச்சாவு:* **01.12.1992**

*நிகழ்வு:* **மட்டக்களப்பு, மகிழவெட்டுவானில் சிறிலங்கா படையினர் பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலில் வீரச்சாவு.**



## லெப். நித்தி / புகழேந்தி

30.05.1992 காலை வழமைபோல் அகலவான் மீதிலிருந்து கதிரவன் பூமியில் ஆட்சியை ஆரம்பிக்கிறான். வீசும் தென்றல் காற்றும் வெடிகளாலும், குண்டுகளாலும் அனலாக வீசியது. அதுவும், வழமைபோலவே பட்சிகள் கூடுகளையும், குஞ்சுகளையும் விட்டுத்திணறி ஓடின. எமது மண்ணில் வாழ்ந்தமையால் சுதந்திரமும் நிம்மதியும் அவைகளுக்கும் இல்லை. ஆனால் வழமைக்கு மாறாக இன்னொன்று நண்பன் நித்தியுடன் நான் சந்தித்துப்பேசிய இறுதி வார்த்தைகளை நினைவுட் புகுத்துகிறது.

இறுதியாக 29.05.1992 அன்று மாலை ஆவரங்காலில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் இருவரும் சந்தித்தோம். பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடினோம். உனது புதிய பெயர் புகழேந்தி எனக் கூறினாய். நீ நாளை அடிபாட்டுக்குப் போவதாகக் கூறிவிட்டு 'இந்த அடிபாட்டில் நான் மண்டையைப் போட்டா என்னைப் பற்றி நீ எழுது' என்று வாய்ப்பேச்சாய் சொன்னாய் அது நிஜமாகிவிட்டதடா!

தெல்லிப்பளையில் எதிரியின் கால் பதிந்துள்ளதா நிலைமை எவ்வாறு இருக்கின்றது. என அறிவதற்காகத் தொலைத்தொடர்பு அறைக்குச் செல்கிறேன். அங்கு வானலையில் மிதந்து வந்த சோகக் காற்று நித்தியின் நிரந்தரப் பிரிவைத் தெரிவித்து விட்டுத் தன்வழியே பயணம் தொடர்ந்தது.

‘சோகக் காற்றே ஒரு கணம் நில் நித்தி சென்ற பாதையைச் சொல் அவன் வீரவரலாற்றை ஒரு முறை பகிர்ந்துவிடு’

நித்தி கட்டையான உருண்டையான, இறுக்கமான உடலமைப்பைக் கொண்ட இளம்புலி. இவன் முகத்தை வர்ணிப்பதை

விட இதயநாதத்தில் இசைந்து இருக்கும் பாட்டுவரி பொருத்தமாக இருக்குமென நினைக்கின்றேன்.

'பால்மணம் மாறாத பிஞ்சுகள் பிரபாகரன் வளர்க்கின்ற குஞ்சுகள்'

இளமை பொழியும் உடலமைப்பும் எதையும் இலகுவில் புரிந்து கொள்ளும் மதி நுட்பமும் கொண்டவன்.

கல்வி கற்கும் காலத்தில், விளையாட்டுத் துறையில் இவனது முத்திரை ஆழமாகப் பதிந்தமையால் பாடசாலையில் சகலருக்கும் இவன் அறிமுகமாகி இருந்தான்.

குடும்ப நிலைமையால் இவனது கல்வி தொடர வாய்ப்பின்றிப் போனது. சிறுவயதிலேயே தந்தையை இழந்த இவன் கல்வியை நிறுத்தி வியாபாரத்தில் இறங்கினான்.

இவ்வேளையில் 1990 இல் மீண்டும் ஈழயுத்தம் ஆரம்பமானது. எங்கும் குண்டுமழை, செல், எத்திசையிலும் அவல ஓலம், இடம்பெயர்வு விடுதலை வேண்டி இளம் வேங்கைகள் நித்தமும் களப்பலியாகினர்.

தாயக விடுதலையே தமிழரின் விடிவு என உணர்ந்து கொண்ட 'சம்புநாதன்' நித்தியாகத் தன்னை மாற்றி போரிலே புதுயுகம் படைக்கும் புலிகளின் கடின உழைப்பில் பங்கு கொண்டான்.

கோட்டையில் பதுங்கு குழி அமைத்தல், பண்ணை பாலத்துப் பக்கம் டயர்ப்பொயின்ற் அமைத்தல், இரவோடு இரவாக அமைக்கும் காவலரண்கள். காலை பொழியும் குண்டுமழையால் சிதைவுறும். ஆனாலும் அவை மறுநாள் இரவு இவனும் இவனது தோழர்களினதும் பங்களிப்பால் புத்துயிர் பெற்றுப் புதுப் பொலிவுடன் காணப்படும். நித்தமும் குண்டு மழை. இந்நிலை கோட்டையில் கொடி ஏறும்வரை நீடித்தது.

இவ்வேலையில் ஈடுபடும் வேளையில் எதிரியின் குண்டு இவன் கைச் சதைக்குட் குடிபுகுந்தது. எடுப்பதற்க வசதியில்லை. சில நாட்களின் பின் காயம் மாற மீண்டும் கோட்டைக் காவலரண்களில் மோட்டார் அணியுடன் இணைந்து இவனது செயற்பாடு எதிரியின் நடமாட்டத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இறுதியில் 26.09.1990 அன்று கோட்டையில் கொடி பறந்தது.

முதன் முதலில் இவனை நான் பயிற்சி முகாமில் சந்தித்தேன். மிகவும் கலகலப்பாக சக தோழர்களுடன் பழகும் இயல்பினன். பயிற்சிக்காக அணிபிரிக்கும் போது இவனது அணியில் நானும் ஒருவனானேன். பயிற்சியின் போது இவன் ஓட்டத்தில் தன்

திறமையைக் காட்டினான். ஓய்வு நேரங்களில் யாழ். கோட்டையின் நிகழ்வுகளை மற்றைய போராளிகளுடன் சுவைபடப் பகிர்ந்து கொள்வான். பயிற்சியின் போது ஒரு நாள் 'களத்தில் காத்தான்' சிந்து நடைக் கூத்து நடந்தது. இவன் அதை மிகவும் உன்னிப்பாகப் பார்த்து விட்டு மறுநாள் மாலை பயிற்சி முடிந்து ஓய்வாக இருந்த போது சக குழுத் தோழர்கள் புடைசூழ மிகவும் அபிநயமாக தமிழ்மாறன் பாட, ஆடிக்காட்டினான். இக்கூத்தைப் பயிற்சி முடியும் நாள் வரை வசனங்களை மாற்றி மாற்றி ஓய்வாக இருக்கும் போது பாடி ஆடி மகிழ்விப்பான். இன்று அந்த பாடல்களைக் கேட்கும் போது நித்தியின் உருவமும் ஆட்டமும் தான் என் மனத்திரையில் நிழலாகும்.

ஒரு நாள் காலை அனுமதி இன்றி மரத்தில் ஏறி இளநீர் பிடுங்கிவிட்டான். இதனைக் கண்ட பயிற்சி ஆசிரியர் இவனையும் இவனுடன் கூடச் சென்ற இளங்குமரன் குழுவிற்குப் பொறுப்பாக இருந்த என்னையும் அழைத்து ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு இளநீர், தேங்காய் தரப்பட்டு அன்றைய பயிற்சியை எடுக்கும்படி விடப்பட்டோம். இதற்காக நாம் வெட்கப்பட்டோம். இவனோ மாறாக எதுவும் நடவாதது போல பகிடி விட்டுக் கொண்டு திரிந்தான். ஆனால் தனது தவறை மனதார உணர்ந்து பின் கவலைப்படுவான். இவ்வாறான குறும்புத்தனங்களுக்குத் தனிப்பட்டியலே இவனுக்குண்டு.

பயிற்சி நிறைவு நாள் அன்று பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தோம். அதுதான் நாம் இறுதியாக ஒன்றாக மகிழ்ந்த நாள். ஒரு முறை அந்த நாளின் சுவையான செயலை வர்ணிக்க நித்தி இல்லையே.

மறுநாள் பூரண ஓய்வு. மாலை சகலரும் ஒன்று கூடினோம். நாளை தைப்பொங்கல் அன்று விளையாட்டுப் போட்டி வைப்பது பற்றி பயிற்சி ஆசிரியிரின் குரல் மட்டும் ஒலித்தது. அதனைத் தொடர்ந்து சகலரும் சம்மதம் தெரிவித்தார்கள். இவ்விளையாட்டுப் போட்டியில் மரதன் ஓட்டத்தில் முதலாவது பெயர் நித்தி. அவனுடன் ஐவர் ஓடினார்கள். அதில் தன் முத்திரையைப் பதித்தான். அதே போல் சில்லாலையில் அவனது பெயரைக் கேட்டால் மரதன் ஓட்டக்காரன் என்று கூறும் அளவுக்கு ஊரிலும் சாதனை நிலை நாட்டியுள்ளான்.

பயிற்சி முடிந்ததும், 'பிரிவு' என்ற கொடிய நிகழ்வு எமக்கு புதிய ஒன்றல்ல. அதனைக் கண்டு அஞ்சி ஓடுபவரும் நாமல்ல. சில பிரிவுகள் குறுகியவை சில நிரந்தரமானவை. இதனால் நாம் எமது இலட்சியத்தை வீச்சாக்கி விடுதலையை வென்றெடுக்கும் பாதையில் எமது துப்பாக்கி கனல்கக்கும். இலட்சியம் ஈடேறும்; நாளைய எமது சுதந்திர விடியலில் எல்லோரும் சங்கமிப்போம்.

நீண்ட இடைவேளைக்குப் பின்னர் 17.03.1991 அன்று நித்தியைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. சிலாவத்துறைக்குச் செல்லும் புலிவீரர்களுள் மிடுக்காக, ஆயுத பாணியாக மனச்சந்தோசத்துடன் செல்வது தெளிவாகத் தெரிந்தது. அவன் அருகில் சென்று மனத்திரையிலுள்ள சந்தோசமான பல விடயங்களை இருவரும் பகிர்ந்து கொண்டோம். விடைபெறும் வேளையில் மனச்சஞ்சலம். மீண்டும் கதைக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது தான்.

சிலாவத்துறையில் இருந்து வந்ததும். 01.04.1991 அன்று காரைநகர் தாக்குதலுக்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காகச் சென்ற குழுக்களில் நித்தியும் ஒருவன். காரைநகர் தாக்குதலில் முன்னேறிய படையுடனான தாக்குதலை மிகத்திறம்படச் செய்தான்.

அங்கு நிற்கும்போது ‘அண்ணை கோட்டையில் பட்ட காயத்தினால் கை சரியான வேதனையாக இருக்கு, கையினுள் இருக்கும் ரவுண்சை எடுத்தா சுகமாய் இருக்கும் என்றாலும் இந்த அடிபாட்டை முடித்துவிட்டுச் செய்வம்’ என்றான். அத் தாக்குதல் முடிந்த பின்னர் கையில் இருந்த ரவுண்சு எடுக்கப்பட்டதும் வைத்தியர் அவனைப் பார்த்து மூன்று மாதக் கட்டாய ஓய்வு எடுக்கும்படி கூறினார். அவ்வார்த்தை செவிடன் காதில ஊதிய சங்காகப் பயனற்றுப் போனது. காரணம் ‘ஓய்வு’ என்ற பதத்தை புலிவீரர்களால் ஜீரணிக்க முடியாது. அதற்கு நித்தி விதிவிலக்கில்லை.

18.04.1991 அன்று மன்னார் பரப்புக்கடந்தானில் பெரியளவில் ஓர் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது. இந்த நடவடிக்கையை முறியடிப்பதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து சென்ற படையணியில் நித்தியும் அடங்கியிருந்தான். இவனுடன் நான் பண்டிவிரிச்சானில் வைத்துக் கதைத்தபோது சிலாவத்துறை அனுபவங்களைக் கூறினான். பரப்புக்கடந்தானிலிருந்து எதிரி புறங்காட்ட, இவனது பங்களிப்புச் சிறந்த முறையில் இருந்தது.

10.07.1991 அன்று பெரியளவில் ஆனையிறவுப் படைத்தளம் தாக்குதலில் இவன் ‘பசிலன்’ அணியில் இருந்தான். எதிரியின் நிலைகளை அவதானித்துத் தாக்கினான். இதனால் முகாம் பெரும் சேதடைந்தது.. பசிலன் அணியின் தேவை குறைய இவன் மருத்துவப்பிரிவுக்கு அனுப்பப்பட்டான். மருத்துவப் பிரிவு என்பது இலகுவானது அல்ல. ஒரு புலிவீரனை உருவாக்குவதைவிட புலிவீரனைக் காப்பாற்றுவது புனிதபணி.

இவன் ஒரு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தான் அவ்வேளையில் நான் காயப்பட்டுச் சிகிச்சைக்காகச் சென்றிருந்தேன். காயத்தின் வேதனையை இவனது சந்திப்பு நீக்கியது. இவனது

பராமரிப்பைப் பார்த்த வைத்தியர்கள் பாராட்டிச் சொல்வதோடு அவன் மேலும் வளர்ச்சியடைய ஆவன செய்தார்கள்.

மருத்துவப் பிரிவில் நின்ற இவனுக்கு இவ்விடம் உயர்ந்ததாக இருக்கவில்லை. தளபதியிடம் யுத்தமுனைக்குச் செல்லும் அனுமதியைப் பெற்றான். இவனைத் தளபதி நன்கு அறிந்திருந்தமையால் கனரக ஆயுதங்களைக் கையாளும் பயிற்சிக்காக அனுப்பப்பட்டான். பயிற்சி முடிவில் ஜீ.பி.எம்.ஜீ. உடன் களம் புகுந்தான். ஆனையிறவு முகாம் தாக்க வைத்த முயற்சி முடியும் தருவாயில் வடக்கு கிழக்குப் பாலமாக அமையும் மணலாற்று மாவட்டத்தைக் கைப்பற்றும் நோக்குடன் 'மின்னல்' என்ற பெயரிட்டு பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். எமது போராளிகள் எதிர்த்தாக்குதல்களை நடத்தினார்கள். அதில் பங்குபற்றுவதற்காகச் சென்ற படையணியில் நித்தியும் ஒருவன். உணவு, நீர் பெரும் பிரச்சினையாக இருந்தும். இவன் மற்றைய போராளிகளுடன் சேர்ந்து எதிரியின் ஆக்கிரமிப்பைத் துப்பாக்கி முனையில் சந்தித்தான். எதிரியின் இராட்சதப் பறவைகள் குண்டு மழை பொழிந்தன.

எறிகணைகள் கூவின. காடு தீப்பற்றி எரிந்தது. எதிரிகள் கவசவாகனங்களின் உதவியுடன் முன்னேறிக் கொண்டிருந்த போது எமது படையணியின் அதிரடித் தாக்குதலினால் நிலை குலைந்து பின்வாங்கிச் சென்றனர். இத்தாக்குதலில் நித்தியின் பங்கு வியக்கத்தக்க வகையில் இருந்தது.

பலாலி முகாமைச் சுற்றியுள்ள மினி முகாம்கள், காவலரண்களை அழிக்கும் போது முழங்கும் ஜீ.பி.எம்.ஜீ. இவனுடைய தாகத்தான் இருக்கும். பல எதிரிகளை அழித்துத் தன் திறமை யைத் தொடர்ந்து காட்டினான்.

தெல்லிப்பளையில் எமது பகுதியை நோக்கிச் சரமாரியாகக் குண்டுமழை, செல்கள் குடிமனைகளை நோக்கி ஏவப்பட்டன. அன்று காலை விடிந்தது. ரவைகள் எமது காவலரண்களை நோக்கிப் பாயப் போர் மூண்டது. எதிரி எம்மண்ணில் குண்டுபட்டு மண்டியிட பெரும்படை, கனரக வாகனத்தின் உதவியுடன் முன்னேறியது. எப்படை மனோபலத்துடன் எதிர்கொண்டது. அதில் நித்தியும் ஒருவன். இவன் துப்பாக்கி எதிரியின் வரவைத் தடுத்து நிறுத்துவதில் பெரும் பங்கு வகித்துக் கொண்டிருந்தது.

இவ்வேளையில் எமது போராளி ஒருவன் குண்டுபட்டு முனகும் சத்தம் கேட்கிறது நித்தி தனது ஆயுதத்தைப் பாதுகாப்பாக அனுப்பி விட்டு அத்திசையை நோக்கி ஓடுகின்றான். சகபோராளிகள்

தடுக்கச் சகோதர பாசம் முன்னே அழைத்துச் செல்கின்றது. ஒருவனைத்தூக்க அவன் என்னை விடு அவனைத் தூக்கிச் செல் என்று காட்ட அவன் காட்டிய திசையை நோக்கி ஊர்ந்து செல்கிறான். அவ்விடம் எதிரியின் எல்லை. ஒருவாறாகச் சென்று தூக்கிவரும். போது என்னை விடு எனக் கூறியவன் நிரந்தரமாக விடைபெற்றிருந்தான்.

இருவரையும் தூக்கி எம்பக்கம் வரும் வேளையில் எதிரி இனம் கண்டு கொண்டான். சரமாரியாக அத்திசையை நோக்கி ரவை பாய்கிறது. நித்தி நிலை எடுத்து இருந்துவிட்டு ரவையின் ஓய்வின் பின் மீண்டும் தூக்கி வர முயலும்போது ரவை நித்தியின் உடலைப் பதம் பார்த்தது. எந்த மண்ணை நேசித்தானோ அந்தத் தாயக பூமி அவனை நிரந்தரமாக ஏற்றுக் கொண்டது.

நீண்டவரிசையில் அடுக்கிய பேழையில் உன்புகழ் உடல் நிம்மதியாக நிரந்தரமாகத் தூங்கிக் கொண்டிருந்தது. வழமையாகத் தூங்கும்போது சொல்லும் வார்த்தையை மட்டும் இன்று சொல்லவில்லை.

பயிற்சி முடிந்து இரவு தூங்கப் போகும் போது நித்தியில் குரல் ஒலிக்கும். நான் நித்திரையானால் எழுப்புவது கஸ்டம். ‘அலட்’ அடிச்சா சுருட்டிப்பிரட்டி எழுப்பிப் போடுங்கோ’ ஆனால் இன்று மாவீரர் வரிசையில் துயில் கொள்ளும் உன்னை நமது வெற்றி தட்டியெழுப்பும்.

**- கு. துசியந்தன்**

*நன்றி : களத்தில் இதழ், 27.08.1993.*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப்.**

*இயக்கப் பெயர்:* **நித்தி / புகழேந்தி**

*இயற்பெயர்:* **பொன்னுத்துரை மதனசிங்கம்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **அளவெட்டி வடக்கு, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **31.01.1964**

*வீரச்சாவு:* **30.05.1992**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம் வீமன்காமத்தில் சிறிலங்கா படையினருடனான சமரில் வீரச்சாவு**



## மேஜர் ஜொனி

எங்களால் என்றுமே மறக்க முடியாத அந்த இருள் சூழ்ந்த நாட்கள். இங்கே அமைதி தேடுகின்றோம் என வந்து அக்கிரமங்கள் புரிந்த இந்தியத் துப்பாக்கிகளின் ஆட்சிக் காலம்.

வன்னியில், கருப்பட்ட முறிப்பு என்ற சிற்றூர்ப் பொறுப்பாளனாக ஜொனி இருந்தான்.

ஒரு நாள் - அப்போதைய எமது பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருந்த மிதிவண்டியில் போய்க் கொண்டிருக்கிறான். அவன் சென்று கொண்டிருந்த பாதை, யாழ்ப்பாண பிரதான வீதி சந்திக்கின்ற மூலை. மிதிவண்டி வளைவில் திரும்பவும், பதுங்கியிருந்த இந்தியப் படையினர் அவன் மீது பாயவும் சரியாக இருந்தது.

எதிர்பாராத தாக்குதல் - கண்ணிமைப் பொழுதுக்குள் அவன் செயற்பட்டான். தன்னைப் பிடிக்க வந்த படையினர் மீது, மதிவண்டியைத் தூக்கி வீசினான், அருகில் பதுங்கியிருந்தவர்கள் மீது, கைக்குண்டுகளை வீசினான். தப்பி விடுகிறான் ஜொனி. இந்தச் சம்பவத்தில் இரண்டு இந்தியர்கள் கொல்லப்பட்டனர்.

இப்படியாக, அந்த ஊரில் ஜொனி அரசியல் வேலை செய்த நாட்களில் - அடிக்கடி இந்தியப் படையினரைச் சந்தித்திருக்கிறான். அவை ஒவ்வொன்றும் மயிர்க்கால்களை குத்தி நிமிர வைக்கும் சம்பவங்கள். அப்போதெல்லாம் அவன், ஒரு புலி வீரனுக்கே இருக்கக்கூடிய சாதுரியத்துடன் தப்பிவிடுவான்.

அந்த ஊரில் - மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில், கடினமான ஒரு சூழ்நிலைக்குள் நின்று அவன் போராட்டப் பணிகளை ஆற்ற வேண்டியிருந்தது. இந்தியப் படையினரும், இந்திய அடிவருடிகளும் எங்கும் நிறைந்திருந்த அந்த நாட்களில்

கிராமங்களிலோ, நகரங்களிலோ அரசியல் வேலை செய்வதென்பது ஒரு சுலபமான காரியமாக இருக்கவில்லை.

காடுகள், ஆறுகள், குளங்கள், வயல்வெளிகளினூடாக மைல்கணக்கான தூரங்களுக்கு, அவனது கால்கள் நடக்கும். தனது பொறுப்பாளர்களால் ஒப்படைக்கப்படும் வேலைத்திட்டங்களை இவ்வாறாக சிரமப்பட்டுத்தான் அவன் செவ்வனே செய்து முடிப்பான்.

கருப்பட்டமுறிப்பு என்ற அந்த ஊர், எங்களது போராளிகளின் அணிகள் பொருட்கள், ஆயுதங்கள், ஆவணங்கள் என்பவற்றோடு முக்கிய தகவல்களையும் பரிமாறுகின்ற பிரதான இடங்களுள் ஒன்றாக இருந்தது. போராட்டத்தின் 'பெறுமதி மிக்க' இவ்வகையான வேலைகளுக்காக, இந்த ஊருக்கு வருகின்ற போராளிகளை ஜொனி, மிகுந்த இடர்களுக்கு நடுவில் பாதுகாத்துப் பராமரித்திருக்கின்றான்.

இந்தியர்கள் வளைத்து நிற்கும்போதே, கிராமத்துக்குள் நுழைந்து, போராட்டக் கருத்துக்கள் அடங்கிய சுவரொட்டிகளை ஒட்டிவிட்டோ, பிரசுரங்களை விநியோகித்துவிட்டோ மிகச் சாதுரியமாகத் தப்பி, அவர்களின் முற்றுகைக்குள் இருந்து ஜொனி வெளியேறிய சம்பவங்கள் பல உண்டு.

மாணவர்கள், பெண்கள், தொழிலாளர்கள், புத்திஜீவிகள் என சமூகத்தின் எல்லா மட்டத்தினருக்குள்ளும் நுழைந்து, ஜொனி போராட்டக் கருத்துக்களை விதைத்தான். இதன் மூலம் - இளைஞர்களையும், பெண்களையும் பெருமளவில் போராட்டத்தோடு இணைத்தான்.

1989 ஆம் ஆண்டு எமது தேசம், மாவீரர் நாளை முதல் தடவையாக அனுட்டித்தபோது, கருப்பட்டமுறிப்புப் பகுதியில் அதனைச் சிறப்பாக நடத்தினான். தம்மை நோக்கி, இந்தியர்களின் துப்பாக்கி முனைகள் நீண்டிருந்தபோதும், அந்த மக்கள் உணர்வு பூர்வமாக அந்த நாளை அனுட்டித்தனர். அந்தளவுக்கு ஜொனி அவர்களோடு இரண்டறக் கலந்து, அவர்களைப் போராட்டத்தின்பால் ஈர்த்திருந்தான்.

அவனையும் தோழர்களையும் ஆபத்து நெருங்கி வந்த பல சந்தர்ப்பங்களில், அவன் நேசித்த இந்த மக்கள் தான் அவர்களுக்குக் கவசமாக நின்றிருக்கின்றார்கள்.

1990 இன் ஆரம்பம். இந்தியர்கள், எங்கள் தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். இவனது திறமையான செயற்பாடு காரணமாக, இவன் மல்லாவிப் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். போர் நின்றிருந்த அந்த

நாட்களில் மக்களிடையில், அரசியல் வேலைத் திட்டங்கள் வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டபோது, ஜொனி அவ் வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடித்தான்.

கிராம அபிவிருத்தி வேலைகள், சிறுவர்களுக்கு கல்வி வசதிகள் செய்தல், பெண்களுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் என இவனது செயற்பாடுகள் வளர்ந்தன. அந்த நாட்களில், சின்னக் குழந்தைகள் முதல் ஆச்சி, அப்பு வரை மக்கள் ஒவ்வொருவரோடும் இவன் நெருக்கமான உறவுகளை வளர்த்திருந்தான். அவர்களால் என்றுமே ஜொனியை மறந்துவிட முடியாத அளவுக்க அது இருந்தது.

1990 இன் நடுப்பகுதி. சிறீலங்காப் படையினருடன் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்தது. சண்டைக்குப் போக வேண்டும் என் ஜொனியின் ஆவலைப் பூர்த்திசெய்யும் களமாக, அது அமைந்தது.

மாங்குள இராணுவ முகாம் மீதான முதலாவது தாக்குதல் தொடுக்கப்பட்டது. எனினும், வெற்றியீட்ட முடியாமல் போய் விட்ட அந்தத் தாக்குதலின் போது. ஜொனி காலில் காயமடைந்தான்.

காயம் ஆறி, வட்டக்கச்சிப் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டுப் பணியாற்றிக் கொண்டிருந்தபோதும், என்றைக்காவது ஒரு நாள் இந்த முகாமை நிர்மூலமாக்கியே ஆகவேண்டும். என்ற வேட்கையே, அவனுள் விஸ்வரூபம் எடுத்திருந்தது. அந்த நாளும் வந்தது. இரண்டாவது தடவையாகவும், இறுதியானதாகவும் மாங்குளம் இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், ஜொனி பெரும் பங்காற்றினான். அந்தத் தாக்குதலின், வெற்றி ஜொனியைப் பூரிப்படைய வைத்தது.

இந்தத் தாக்குதல் முடிந்து சிறிறது காலத்தின் பின், அவனது நீண்ட நாள் கனவு நனவானது. அரசியல் வேலையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு, அவன் சமர் முனைக்கு அனுப்பப்பட்டான். அந்த நாட்களில் அவனைக் காண்கின்றபோது, ஓர் ஆத்ம திருப்தி அவன் முகத்தில் தெரிந்தது. ஒரு சின்னக் குழந்தை, மிக மிக ஆசையோடு எதிர்பார்த்த ஒரு பொருளை வாங்கிக் கொடுக்கும் போது, அக்குழந்தைக்கு ஏற்படும் மகிழ்வோடு அவன் சண்டைக் களங்களில் உலாவினான்.

எவ்வளவு ஆர்வத்தோடும், திறமையோடும் அவன் அரசியல்துறை வேலைகளைச் செய்தானோ, அதைவிட அதிக ஆர்வத்தோடு அவன் படைத்துறை வேலைகளில் ஈடுபட்டான். அரசியல் வேலைகளைச் செய்யும் போது, ஒரு சிற்றூர்ப் பொறுப்பாளனாக வளரும் அளவுக்கு அவனுள் இருந்த ஆற்றல், சண்டைகளின் போதும் வெளிப்படத் தவறவில்லை.

நீண்ட காலமாக அரசியல் வேலை செய்து கொண்டிருந்த அவனுக்கு, அந்தச் சண்டைக் களங்கள் புதிய உற்சாகத்தைக் கொடுத்தன. போர் அரங்கிலே ஒரு முன்னணிச் சண்டைக்காரனாக நின்று ..... ஓய்வின்றி, உறக்கமின்றி அவன் போரிட்டான்.

ஜொனி, 1969 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 19 ஆம் நாள் பிறந்தான்.

அப்பாவும், அம்மாவும் இவனுக்குச் செல்லமாக இட்ட பெயர் ஜெகதீஸ்வரன். குடும்பத்தில் 3 ஆண்களும், 4 பெண்களுமாக, 7 உடன்பிறப்புகளுக்குப் பின்பு, இவன் பிறந்தான். இவனுக்குப் பின்பு ஒரு தங்கை. எவருடனும் அதிகம் பேசாத சுபாவமுடைய ஜொனி, ஆடம்பர வாழ்வு முறைக்குப் புறம்பானவனாக இருந்தான்.

மீசாலை இவனது ஊர், வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற இவனுக்கு, சமூகத்தில் சேவை செய்ய வேண்டும் என்ற சிந்தனையும், ஆர்வமும் இயல்பாகவே இருந்தன. சின்ன வயதிலிருந்தே பொது வேலைகளில் ஈடுபடுபவன். மீசாலையின் புழுதி படிந்த தெருக்களில், வயல் நிலங்களில், தோட்ட வெளிகளில்... எங்கும் அவனது சேவை பரந்திருந்தது.

பாடசாலையில் கல்வியில் மட்டுமின்றி, விளையாட்டுத் துறையிலும் திறமை மிக்கவனாக ஜொனி இருந்தான். அங்கு மாணவர் தலைவனாக இருந்த அவன், திறமையான செயற்பாடுகளுக்காகப் பரிசுகளும் பெற்றிருக்கிறான்.

இந்திய இராணுவம், எமது தாயகத்தை ஆக்கிரமித்திருந்த அந்தக் காலம், இவனுள் ஒரு புயலையே வீசச் செய்தது. இயல்பாகவே, மக்களுக்காக வேலை செய்யவேண்டும் என்ற சுபாவம் உடையவனாக இருந்த ஜொனி, அன்றைய நெருக்கடியான நாட்களில் ஊரில்எமது போராளிகளுக்கு உற்ற துணையாக நின்றான்.

வீட்டாரிற்கும், வெளியாட்களுக்கும் தெரியாமல், மறைமுகமாக இயக்கத்திற்கு வேலை செய்து கொண்டிருந்த ஜொனி, 1989 இன் முற்பகுதியில் போராட்டத்தோடு தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டான்.

இரணைமடுவில் - வன்னியின் அடர்ந்த காடுகளின் நடுவில் - தனது பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய இவனுக்கு, எல்லாப் புலிவீரர்களுக்கும் இருப்பதைப் போல, சண்டைக்குப் போக வேண்டும் என்ற ஆசை இருந்தது.

ஆனாலும், இயக்கம் அரசியல் வேலைகளை வழங்கியபோது, திறமையுடன் அதனைச் செய்யத் தொடங்கினான். எங்கள் தேசத்தில்

1991 ஆம் ஆண்டின் சிறப்பான நிகழ்வு அதுதான். ஆனையிறவுப் பெருஞ்சமர்...

அந்த நீண்ட சண்டைகளின் போது, ஜொனி உயிர்த்துடிப்புடன் களங்களில் போரிட்டான். அந்தச் சமர்களின் இறுதி நாட்களில் ஒன்று ஒரு மாலை நேரம். ஐந்து மணிப்பொழுது.

எங்கள் காவலரணிற்கு வந்த ஜொனி, எம்மோடு மகிழ்ச்சியாகக் கதைத்துக் கொண்டிருந்தான். நீண்ட நேரம் அன்பான உரையாடல், நேரம் போனதே தெரியவில்லை. இருண்டுவிட்டதால் தனது காவலரணிற்குப் போவதற்காக எழுந்தான்.

தட்டுவன் கொட்டிப் பகுதியில் இவனது காவலரண்கள் இருந்தன. அப்பகுதியின் பொறுப்பாளனாகவும் இவன் தான் இருந்தான். எழுந்தவன், திருப்பிச் சொன்னான்......

'என்ர பொயின்ரைக் கடந்து ஆமி வாறதெண்டால், என்ர உடம்புக்கு மேலாலதான் வருவான்.' அவன் சொல்லிவிட்டுப் போன போது, நாங்கள் எவருமே அதைப் பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அன்று இரவு கடந்து, மறுநாள் விடிந்துவிட்டது. நேரம் ஓடியது. காலை 11 மணியை நெருங்கிய போது, விமானங்கள் இரைய குண்டுகள்..... அதிரடிச் சண்டை தொடங்கிவிட்டது.

ஜொனியின் காவலரண் பகுதியை நோக்கிப் படை நகர்ந்தது. வானிலிருந்து குண்டுகள் பொழிய, எறிகணைகள் கூவிவர, கனரக வாகனங்சகள் - கனரக ஆயுதங்கள் சகிதம் எதிரி மெல்ல மெல்ல முன்னேறினான். அது ஒரு கடுமையான மூர்க்கத்தனமான சண்டையாக இருந்தது. தங்களில் சிலர் பிணங்களாகச் சரிய, எதிரி அங்குலம் அங்குலமாக நகர்ந்து வந்தான். அந்த நீண்ட சண்டை முடிந்த போது..... எங்கள் ஜொனி..... வரவில்லை. இன்றுவரை அவன் வரவேயில்லை. முதல் நாள் அவன் எம்மிடம் அவன் சொல்லிவிட்டுப் போனதைப்போல.....

ஆனால், அவனோடு பழகிய அந்த இனிய நாட்களின் நினைவுகள், என்றும் எம்மோடு பசுமையாய் வாழும், இந்த இலட்சியப் பயணத்தில் அவனது நினைவுகள், எம்மோடு துணையாக வரும்.

நன்றி : களத்தில் இதழ்

22.10.1993

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **மேஜர்**

*இயக்கப் பெயர்:* **ஜொனி**

*இயற்பெயர்:* **நாகநாதி ஜெகதீஸ்வரர்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **மீசாலை வடக்கு, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* 19.08.1996

*வீரச்சாவு:* 07.07.1991

*நிகழ்வு:* **கிளிநொச்சி, ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேற முயன்ற படையினருடனான சமரில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **கொடிகாமம்**

*மேலதிக விபரம்:* **கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## கப்டன் சிறீமதி

அன்றைய நாள் மிகவும் சோகமாக விடிந்தது போலத் தோன்றியது. மனதில் ஏதேதோ நெருடல்கள். நெஞ்சம் கனத்தது. ஏனென்றே தெரியவில்லை. எதையோ இழந்துவிட்டது போல் தவிப்பு உண்டானது.

சக போராளிகள் இருவர் வந்தனர். இவர்கள் முகங்களிலும் சோகம். காரணத்தை அறிய மனம் துடித்தது.

'உங்கட றெயினிங் மாஸ்ரர் சிறீமதியல்லோ வீரச்சாவு'

'ஆ.....? சிறீமதியக்காவோ? எங்க'

'மணலாத்தில.........'

நான் அழவும் முடியாமல், கதைக்கவும் முடியாமல், வாயடைத்துப் போனேன்....

சிறீமதி.

உறுதியும், துணிச்சலும், தனக்கு கொடுக்கப்பட்ட வேலையைப் புரிந்து கொண்டு செயற்படக்கூடிய திடகாத்திரமான உள்ளமும் படைத்தவள் அவள்.

அல்லிப்பளையில், ஒரு நாள் மண்வெட்டி வாங்குவதற்காக வீடொன்றுக்குச் சென்றோம். எம்முடன் சிறீமதியும் வந்தாள். அங்கே எம்மை வரவேற்றவர் ஒரு வயோதிபத் தாய் - சுகவீனமுடையவர். இருந்தாலும், தன்னால் இயன்றளவுக்கு எம்மை உபசரித்து, தேநீர் தயாரித்துத் தந்தார். நாங்கள் தேநீரை ஆவலோடு பார்த்தவண்ணம் இருக்க, சிறீமதியோ ஓடிச் சென்று. அம்மாவிடம் இருந்து தேநீரை வாங்கி எல்லோருக்கும் பரிமாறத் தொடங்கினாள். தாயோடு

பிள்ளையாக, மக்களோடு மக்களாக ஒன்றுபடுகின்ற அந்தப் பண்பு அவளோடு கூடவே பிறந்தது.

இன்னொரு நாள்,

நாம் பதுங்குகுழி வெட்டிக் கொண்டிருந்தோம். எமக்கு உதவியாக மக்களும் சேர்ந்து வெட்டிக் கொண்டிருந்தார்கள். மதியமாகி வெகு நேரத்திற்குப் பின்னரும் உணவு வரவில்லை. எமக்கு உதவியாகப் பதுங்குகுழி வெட்டிக் கொண்டிருந்த மக்கள் பசியுடன் இருக்கின்றார்களே என்ற எண்ணம் மனதை உறுத்த, உணவு வரும் வழியைப் பார்த்துப் பார்த்துக் கண் பூத்துப்போன சிறீமதி, பக்கத்தில் ஒரு சைக்கிளை வாங்கிக் கொண்டு நாம் தங்கியிருந்த இடத்திற்குப் போனாள். அங்கே நின்ற ஏனைய போராளிகள் ஏதோ வேலையாக இருந்ததால் அவர்கள் உணவை எடுத்து வருவதற்குத் தாமதமாகி விட்டது.

வேகமாக வந்திறங்கிய சிறீமதியைக் கண்டதும், அவள் கோபமாக இருப்பது எல்லோருக்கும் விளங்கிவிட்டது. எல்லோரும் பதட்டத்துடன் இருந்தார்கள்.

‘ஏன் இவ்வளவு நேரமும் சாப்பாடு கொண்டு வரேல்லை? வேலை செய்யிற சனங்கள் பாவமல்லோ?’ என்று பொரிந்து தள்ளிவிட்டு, உணவை எடுத்துக் கொண்டு, போன வேகத்திலேயே திரும்பி வந்துவிட்டாள்.

இவளுக்கு இரண்டு ஆண் சகோதரர்களும், இரு சகோதரிகளும் இருக்கிறார்கள். அவளது சகோதரன் ஒருவர் எமது முழுநேர உறுப்பினராகக் கடமையாற்றுகிறார்.

இவள் தனது பாடசாலை நாட்களில் சக மாணவர்களினதும் ஆசிரியர்களினதும், மதிப்பைப் பெற்றிருந்தாள். படிப்பிலும், விளையாட்டிலும் கலை நிகழ்ச்சிகளிலும் முன்னணியில் திகழ்ந்தாள். தான் படித்த ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் பாடசாலை மாணவர் ஒன்றியத் தலைவியாகவும், அதே பாடசாலைச் சேர்ந்த மாணவர் அமைப்பு உறுப்பினர்களுக்கப் பொறுப்பாகவும் நியமிக்கப்பட்டாள். இவள் சமகால நிகழ்வுகளையும், அரச படைகளால் மக்கள் படுகின்ற அவலங்களையும் கலைப் படைப்புக்களினூடாக மக்களுக்குத் தெளிவுபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தாள். அத்தோடு பெண்களை விடுதலைப் புலிகள் மகளிர் படையணிக்காக அணிதிரட்டுவதிலும் ஈடுபட்டாள்.

இப்படியிருக்கும் போது, ஒரு நாள் தன் தாயிடம். ‘அம்மா, இன்னும் எவ்வளவு காலத்துக்கு இயக்கத்துக்கு ஆட்களை எடுக்கிற

வேலைகளையே செய்து கொண்டிருக்கிறது? இயக்கத்திலே சேரப்போறன்' என்று கேட்டாள், அந்த வீரத் தாயும் மறுப்பேதும் சொல்லாமல், மகளைக் கூட்டிச் சென்று எம்மவரோடு இணைத்து விட்டாள்.

எவராலும் அடக்கமுடியாத மதங்கொண்ட யானையைப் பிடித்துக் கட்டிய 'அரியாத்தை' பிறந்த முல்லைத்தீவு மண்ணிலேதான் சிறீமதியின் தாயும் பிறந்தவள் அல்லவா? அரியாத்தையின் வீரமும் உறுதியும் அவளிடமும் இருக்கத்தானே செய்யும்?

பயிற்சியை முடித்த சிறீமதி அரசியல் வேலைக்கென நியமிக்கப்பட்டு, மணலாற்றில் தனது வேலையைத் தொடங்கினாள். அப்போதுதான், தான் ஆயிரக்கணக்கான போராளிகளை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் அவளிடம் உண்டானது. அவனது எண்ணத்துக்கு ஏற்ப, அவளின் திறமையால் பயிற்சியாசிரியராக நியமிக்கப்பட்டாள்.

பதின்மூன்றாம் பயிற்சி முகாமுக்குத் துணையாசிரியராக இருந்த சிறீமதி, சிறீலங்கா இராணுவத்துக்கெதிரான எமது முதலாவது மரபுவழிப் போரான ஆகாயக் கடல் வெளித்தாக்குதலுக்கு உதவிக் குழுவாகச் சென்றாள். தனது பணியில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். இவள் மீது பொறாமை கொண்ட தடியொன்று இவளின் காலைப் பதம் பார்த்துவிட்டது. அந்தப் புண் நாளடைவில் பெரிதாகிவிட்டது. நடப்பதற்குக்கூடச் சிரமப்பட்டாள். இழுத்து இழுத்துத்தான் நடக்கமுடிந்தது. ஆனாலும் தளரவில்லை போர் ஒரு முடிவுக்கு வரும்வரை. தனது பணியைத் தொடர்ந்து செய்தாள்.

அங்கிருந்து திரும்பியதும் மீண்டும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பெண்களைப் புதிய போராளிகளாக மாற்றியமைத்தாள்.

ஒருமுறை,

எமக்குப் பயிற்சி நடந்துகொண்டிருந்தது. களைப்பு மிகுதியால் காவற் கடமையில் இருப்பவர்கள் தவிர, மற்றவர்கள் நித்திரைக்குச் சென்று விடுவார்கள். இரவில் சாப்பிடுவது பெரும்பாலும் குறைவு, உடல் அலுப்பால் உறங்கிவிடுவார்கள். எஞ்சுகின்ற உணவு கொட்டப்படும்.

இதைக்கண்ட பயிற்சி முகாம். பொறுப்பாளர் சிறீமதியைக் கூப்பிட்டார்.

'சீறிமதி, ஒருக்காப் போய் உன்ர பிள்ளையள் இருக்கிற அறையளுக்குப் பின்னாலை பார், எவ்வளவு சாப்பாடு

கொட்டிக்கிடக்குது எண்டு. நாளைக்கு முழுக்க அவையளுக்குச் சாப்பாடு குடுக்கக் கூடாது. அப்பத்தான் தெரியும் சாப்பாட்டின்ரை அருமை' என்று சொல்லிவிட்டார்.

மறுநாள் காலை,

பயிற்சியை முடித்துக்கொண்டு எல்லோரும் வரிசையில் இருக்கிறோம். எங்களிடம் வந்த சிறீமதி கண்டிப்பான தொனியில்,

'ஏன் பிள்ளையள் இவ்வளவு சாப்பாட்டையும் கொட்டியிருக்கிறியள்? இரவிலை ஏன் ஒரு தரும் சாப்பிடுறதில்லை? இப்படி இரவில சாப்பிடாம விட்டா விடிய என்னென்டு றெயினிங் எடுக்கிறது?' என்று தொடர்ந்து ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டு.

'இன்டைக்கு முழுக்க நீங்க ஒரு தரும் சாப்பிடக்கூடாது. அப்பத்தான் உங்களுக்குச் சாப்பாட்டின்ர அருமை தெரியும்' என்று சொல்லிப்போட்டுப் போய்விட்டாள். அன்று முழுவதும் எவருமே சாப்பிடவில்லை. இவளும் சாப்பிடவில்லைத்தான். நாங்களும் எவ்வளவோ கெஞ்சியும் இவள் சாப்பிடவில்லை. வழமைபோல் நாளாந்தப் பயிற்சியை முடிந்த பின் இரவு சாப்பிடாமல் படுத்த ஒவ்வொருவரையும் எழுப்பி, சாப்பிட வைத்து நாங்கள் சாப்பிட்ட பின்தான் அவள் சாப்பிட்டாள். அந்த நேரத்தில் அவளது உணர்வு, எங்களின் உணர்வுகள் எப்படி இருந்தனவென்று வார்த்தைகளால் சொல்வது கடினம். அன்னையின் அரவணைப்பில் உள்ளது போல், அதற்கும் மேலே மேலே... உணர்ந்தோம்.

'பிள்ளைகளைத் தண்டிக்க விரும்பாத சிறீமதி அடிக்கடி கூறுவது இதுதான்.

'பிள்ளையள், சும்மா சும்மா குழப்படி செய்து அநியாயமாப் பனிஸ்மென்ற வாங்காதேங்கோ.'

பயிற்சியை முடித்த பின்னர் எமது குழுக்களில் ஒரு பகுதி தொண்டைமானாறுக்குச் சென்றது. அதற்குத் தலைமை தாங்கியவள் சிறீமதிதான். அங்கிருந்து வளலாய் இராணுவ முகாமுக்குக் கடமையைச் செய்வதற்காகச் சென்று வருவோம்.

எந்த நேரமும் இராணுவம் முன்னேறலாம், சண்டை தொடங்கலாம் என்பதால் எதிரியை எதிர் பார்த்தே நின்றோம். அப்போது எங்களுக்குப் போர் அனுபவம் எதுவுமில்லை.

'பிள்ளையள், பயப்பிடக்கூடாது நல்லா அடிபடோணும். அதுக்காக மோட்டுத்தனமாய்ப் போய் மாட்டுப்படக்கூடாது.

கவனமாக நிதானமாக அடிபடோணும் என்ன?' என்ற இவளுடைய வார்த்தைகள் எம்மை உறுதியாக்கும். போருக்கத் தயார்ப்படுத்தும்.

இவளுடன் நாம் இல்லாவிட்டாலும், எம்மை எங்காவது காணும் பொழுது கூட எம்மில் கவனம் தான்.

'என்ன பிள்ளையள், இந்த உடுப்பின்ர நிறம்? ஒழுங்காத் துப்பரவா இருக்கிறதுக்கென்ன, ஆ?' என்று செல்லமாகக் கண்டிப்பாள்.

அப்போது,

எமது இதயபூமியை ஆக்கிரமிக்கும் நோக்குடன் சிறீலங்கா இராணுவத்தினர் மீண்டும் காட்டுக்குள் முன்னேற முயன்றனர்.

எதிரியுடன் மோத எமது படையணிகள் தயாராகிக் கொண்டிருந்தன. சிறீமதிக்கோ புதிய போராளிகளுக்குப் பயிற்சி கொடுக்குமாறு உத்தரவிடப்பட்டது. விடுவாளோ அவள்? மகளிர் படையணியின் தளபதியிடம் போய்ச் சண்டை பிடித்தாள்.

'என்னைச் சண்டைக்குப் போகவிடுங்கோ. போயிட்டு வந்து றெயினிங் குடுக்கிறன்' இறுதியில் சிறீமதியின் பிடிவாதந்தான் வென்றது. சண்டைக்குச் சென்றாள். போர்முனைக்குப் போகும்போது, மீண்டும் ஒரு புறநானூறு எழுந்தது. மகளிர் படையணியினர் பயணம் செய்த வாகனம் போகும் வழியில் சிறீமதியின் வீட்டு வாசலின் முன்னால் பழுதடைந்து நின்றுவிட்டது. வாகனத்தைத் திருத்துவதற்கு இவளது குடும்பத்தினர் உதவி செய்தனர்.

தமிழீழத்தின் வீரத்தாய்மாருள் ஒருத்தியும் சிறீமதியின் அன்னையுமான அந்த மாதர்குல மாணிக்கம்.

'நல்லாச் சண்டை பிடிச்சு, அவங்களை அடிச்சுத் துரத்திப்போட்டு வெற்றியோட வாங்கோ' என்று தன் மகள்களை ஆசீர்வதித்து, விடை கொடுத்தாள். தன் பெண் குழந்தைகளை ஒரு தாய் போருக்கு அனுப்பும் புறநானூறு ஒன்று அங்கே எழுதப்பட்டது. இது தான் இந்த மண்ணுக்கேயுரிய இயல்பு. வாகனம் மீண்டும் தன் பயணத்தைத் தொடர்ந்தது.

சிறீமதி திடீரென்று தன் மனதில் ஏதோ நினைத்தவளாய்... கண் கலங்க.... தனக்கருகில் இருந்த தோழியிடம் கூறுகிறாள்.

'நான் இயக்கத்துக்கு வந்ததற்கு ஒரு நாள் கூடக் கவலைப்படேல்ல. இப்ப அம்மா, அப்பா, சகோதரங்களையும் கண்டிட்டன். ஆனா உயிரையும் விடப் பெரிசென்டு தான் நினைக்கிற இந்த மண்ணையும், மக்களையும் காக்கவென்டு

வெளிக்கிட்டவரைத்தான் காணேல்ல. அது தான் எனக்கு இப்ப கவலையா இருக்கு.'

அவளின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

போர் முனையைப் படையணிகள் அடைந்துவிட்டன. சிறீமதி ஒரு குழுவுக்கு தலைமை தாங்கினாள். எதிரியிடமிருந்து எண்ணற்ற ரவைகளும் குண்டுகளும் எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தன.

' செல் குத்துறான், எல்லாரும் கவரில நின்று அடிபடுங்கோ'

'கவனமா ஒருத்தரையும் விடாமத் தூக்கிக்கொண்டு போங்கோ'

சிறீமதியின் குரல் முன்னணியில் நின்று வழி நடத்திக் கொண்டிருந்தது. எதிரியிடம் இருந்து வந்த எறிகணை ஒன்று தன்னிடம் இருந்து இவள் எல்லோரையும் தப்ப வைக்கிறாளே என்ற கோபத்தினாலோ என்னவோ, இவளது தலையைச் சீவிச் சென்றது.

ரீ81 துப்பாக்கியையும், வோக்கியையும் தனது இரு கைகளாலும் அணைத்துப் பிடித்தபடி, விழுந்த சிறீமதியின் வாயிலிருந்து....

'பிள்ளையள்'

என்ற ஒரு சொல் மாத்திரமே வந்தது என்று, அவளோடு களத்தில்நின்ற தோழிகள் விம்மலுடன் கூறினார்கள்.

முல்லைமண் பெற்றெடுத்த புதல்வியின் குருதியால், எமது இதயபூமி தன் வளத்துக்கு மேலும் உரம் சேர்த்துக் கொண்டது.

அவள் காவல் செய்த தொண்டைமானாற்றுக் கடலோ தனது அலைகளை உயர்த்தி.

'சிறீமதி எங்கே ? எங்கே ?' என்று தேடுகிறது.

இவளின் அக்கா மகன் தீபன், 'அன்ரி, அன்ரி' என்று, வீட்டுக்கு வரும் பெண் போராளிகளில் சிறீமதியைத் தேடுகிறான். அவள் வளர்த்தெடுத்த புதிய தலைமுறைகளோ அவளின் இலட்சியக் கனவுகளையும் ஆசைகளையும் சுமந்து போராடிக் கொண்டிருக்கின்றனர்.

**- உலகமங்கை**

நன்றி : களத்தில் இதழ்

14.01.1994

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **கப்டன்**

*இயக்கப் பெயர்:* **சிறீமதி**

*இயற்பெயர்:* **சிவகலா துரைராசசிங்கம்**

*பால்:* **பெண்**

*முகவரி:* **ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.**

*மாவட்டம்:* **முல்லைத்தீவு**

*வீரப்பிறப்பு:* **09.12.1970**

*வீரச்சாவு:* **23.03.1992**

*நிகழ்வு:* **மணலாற்றில் சிறிலங்கா படையினரின் கஜபார நடவடிக்கைகெதிரான 7 ஆம் நாள் சமரில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **முள்ளியவளை**

*மேலதிக விபரம்:* **முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## கப்டன் குவேணி

நீண்ட தூரம் வரை காடு மண்டிக்கிடந்தது. விரல்விட்டு எண்ணக்கூடிய குடிமனைகள். அதன் ஓரமாக பாம்பு போல் வளைந்து நெளிந்து போகும் அந்த புழுதி படர்ந்த வீதியோரத்தில், அந்த சிறிய கடை போராளிகளின் வரவை எதிர்பார்த்து அவர்களின் தாகம் தீர்ப்பதற்கு ஏங்கிக் கொண்டிருக்கும்.

அவர்களின் வரவைக் கண்டதும் அவளின் முகமலர்ச்சியைக் கூற முடியாது. அந்தக் கடைக்குள் சென்று ஓடி ஓடி தேநீர், அப்பம், பிட்டு... என்று அவள் நீட்டும் போது, அளவுக்கு மிஞ்சிய உபசரிப்பால் போராளிகள் செல்லமாகச் சினந்தாலும் ''சாப்பிடுங்கோ.... சாப்பிடுங்கோ....'' என்று நச்சரித்துக் கொண்டிருப்பாள். சிலவேளைகளில், ''வந்தால் நிம்மதியாகக் கதைக்கவும் விடுகிறியா?'' என அதட்டலும் நடக்கும்.

இந்தச் சிறியவள்தான் எமது சுதந்திர விடிவுக்காகத் தனது சிறுவயது முதல் அளப்பரிய வேலைகளைச் செய்து வந்தவள். இந்திய இராணுவத்தின் ஆதிக்க சுவடுகள் எமது சுதந்திர தேசத்தின் மூலை முடுக்கெல்லாம் பதிந்து இருந்த அந்த நேரத்தில்..... சாதாரண மக்கள் தும்முவதற்கும் இருமுவதற்கும்கூட பயந்த இரவுகளில், அந்தச் சிறிய கடைக்குள் எத்தனை இரவுகள் அவர்களுக்கு உணவு கொடுப்பதற்கு விழித்திருப்பாள்.

எத்தனை இரவுகள் ''ஆமி அங்க நிக்கிது, ஆமி இங்க நிக்குது. நீங்க வரவேண்டாம். உங்களுக்கு ஏதும் தேவையெண்டாச் சொல்லுங்கோ'' என்று அவள் பாதங்கள் காட்டுக்குள் ஓடியிருக்கும்.

இப்படிச் செயற்பட்டவள் தானும் பயிற்சி எடுத்து களத்துக்குப் போகவேணும் ஆமியோட சண்டை அப்போது பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளராக இருந்த 'சாம்' அண்ணையிடம் சென்று ''அண்ணை

என்னை றெயினிங்குக்கு அனுப்புங்கோ'' என்று விடாப்பிடியாய் நின்றாள். ''உனக்கு இங்கை நிறைய வேலையிருக்கு. இப்ப நீ போக ஏலாது'' என்று அவர் கூறிவிட்டார். அவருக்கு இவளை அப்போது பயிற்சிக்கு அனுப்புவதில் விருப்பமில்லை. ஏனெனில் இவளின் உதவி அவருக்குத் தேவைப்பட்டது. அத்தோடு இவளுக்கு அங்கு நிறைய வேலைகளும் இருந்தன. பிடிக்கவேண்டும் என்ற நெடுநாள் ஆசையால்,

இவள், ''சரி, எனக்கா போக வழி தெரியாது. நான் போய்க் காட்டுறன்'' என்று சவால் விட்டதுமல்லாமல் செயலிலும் காட்டினாள்.

அவர்களின் கடைக்கு வழமை போல அன்றும் அந்த அம்புலன்ஸ் வண்டி வந்தது. சாரதி வழமையாக அந்தக் கடையிற் சாப்பிடுபவன். அம்புலன்ஸ் அன்று வெறுமையாகத்தான் இருந்தது. சற்றுத்தூரம் சென்று, அம்புலன்ஸ் சாரதியிடம் ''அண்ணை, என்னை அந்தச் சந்தியிலை கொண்டுபோய் இறக்கி விடுறியளே'' என்றாள்.

''தங்கச்சி, இதிலை நோயாளியளை மட்டுந்தான் ஏத்தலாம்.'' என்று அவர் மறுத்துவிட, அவள் கெஞ்சிக் கூத்தாடி ஒருவாறு சம்மதிக்கச் செய்து ஏறிக்கொண்டாள். அந்தச் சின்னப்பறவை சுதந்திரத்தைத் தேடி வந்துவிட்டாள்.

அவளின் அன்றைய பயணம் பற்றித் தோழிகள் அடிக்கடி கேலி செய்வார்கள். ''குவேணி அவசர சிகிச்சைக்குத்தானே அம்புலன்சில் வந்தாய்''

''சும்மா போங்கோடி'' என தலையைச் சிலுப்பி சிரித்துக் கொள்வாள். குவேனி மன்னாரிலிருந்து முல்லைத்தீவு மகளிர் முகாமுக்கு வந்து சேர்ந்தாள். இவளுடன் இன்னும் இருபது பெண்பிள்ளைகள் வந்தனர். மறுநாள் குவேனியைவிட மற்றவர்கள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். விம்மி விம்மி அழத்தொடங்கினாள். ''என்ன ஆசையோடு நான் அங்கையிருந்து வந்தனான். என்னையும் பயிற்சிக்கு அனுப்புங்கோ''. அவளது அழுகையை அடக்கப் பொறுப்பாளர் பட்டபாடு.

பயிற்சி பெறாமலே முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிது காலம் அரசியல் வேலையில் ஈடுபட்டாள். குறுகிய காலத்திற்குள்ளேயே மக்கள் இதயங்களில் நிறைந்துவிட்டாள்.

அவள் குறும்புப் பார்வை, விரிந்த தெளிவான கண்கள், அந்தத் தலை சிலுப்பல், உறுதியான தீவிர செயற்பாடுகள், அவள் மக்கள் மேல் செலுத்தும் அன்பு இவையாவும் அவள் மக்கள் உள்ளங்களில் இன்றும் அழியா இடத்தைப் பெறுவதற்குக் காரணங்களாக இருந்தன.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அவள், பயிற்சிக்காக அனுப்பப்பட்டாள். நானும் அவளும் ஒன்றாகவே பயிற்சி பெற்றோம். என்நேரமும் என்பின்னால் ''அக்காச்சி, அக்காச்சி'' என குறும்புக் கதைகள் கூறிக் கொண்டே திரிவாள். பயிற்சியைச் திறம்படச் செய்தாள். மீண்டும் அரசியல் வேலைக்காகவே கூட்டிச் செல்லப்பட்டாள்.

''என்னக்காச்சி, பயிற்சி எடுத்திட்டு அடிபாட்டுக்கு போகலாம் எண்டு இருக்க, திரும்பவும் ஏத்திக்கொண்டு போயினம். எல்லாம் உங்களாலதான் நான் மறிக்கப்பட்டனான்'' எனப் பகிடியாக என்னை ஏசினாள்.

இதன் பின் அவள் அரசியல் வகுப்புக்காக அனுப்பப்படுகிறாள். குவேணிக்கு முப்பது பேர் கொண்ட குழு கொடுக்கப்பட்டது. குழு நடத்துவதிலும் படிப்பதிலும் தன் கவனத்தை முழுமையாகச் செலுத்தினாள். வாராவாரம் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாகவும் தலைமை தாங்கியும் நிற்பாள். எத்தனையோ தடவை இவளின் செயற்பாடுகளைக் கண்டு நான் பிரமித்ததுண்டு.

பயிற்சி முடிந்து போராளிகள் மாவட்டம் மாவட்டமாக வேலைகளுக்கு அனுப்பப்பட்டபோது இவளுக்கு மகளிர் முன்னணியின் நிதிப்பொறுப்பு வேலை ஒப்படைக்கப்பட்டது. எதிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பாள். அடிக்கடி பிள்ளைகள் காசு கேட்கும்போது ''இயக்கம் படும் கஸ்டம் எனக்குத்தான் தெரியும். இயக்கம் என்ன தண்ணியிலேயோ ஓடுது'' எனப் பகிடியாக உண்மை நிலையைக் கூறுவாள். இவள் இதைச் சொன்னதும் ''உன்னிடம் காசு வாங்கிறதைவிட நேரை நஞ்சித் அண்ணையிடம் வேண்டலாம் போல இருக்குது'' என்று தோழிகள் கூறுவார்கள்.

இவளுக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்ற ஆர்வம். ஆர்வம் மட்டுமல்ல செயல் வடிவிலும் காட்ட வேண்டும் என்று நினைப்பவள். பகல் முழுவதும் நிறைய வேலைகள் செய்துவிட்டு இரவு நேரத்தில் சென்று வாகனம் ஒட்டுவதற்கு பழகி வந்தாள்.

''மில்லர் அண்ணைக்கு அடுத்த பெண் கரும்புலி நான்தான்'' என்று அடிக்கடி கூறிக்கொள்வாள். சில நாட்கள் யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் நடாத்தப்பட்ட பொறியியல் வகுப்பிற்குச் சென்று வந்தாள். சிறிது ஓய்வாக இருக்கும் வேளையில் புகைப்படக்கலை பற்றிக் கேட்டுப் படித்துக் கொண்டிருப்பாள். இவ்வாறு பல துறைகளிலும் இவளுக்கு ஆர்வம் இருந்தது.

இந்த வேளையில் இவளிடம் ஒரு பழுதடைந்த பண்ணையைத் திருத்தி அமைக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. முழுமூச்சாக நின்று குறுகிய காலத்தில் அந்தப் பண்ணையை வளமானதாக மாற்றினாள். இந்தப் பண்ணை வேலையின் போது தான் ஒரு ஐயாவின் கதை மறக்க முடியாதது. குடும்பம் மிகவும் கஸ்டப்பட்டது. நாள் வேலை செய்து அந்தக் கூலியைக் கொண்டு தான் வயிற்றுப்பசி போக்கும் குடும்பம் அது. தொடர்ந்து ஒரு மாதம் வரை வேலை செய்தார் அந்த ஐயா. அவர் செலவாளி, அரைப்பங்கு சம்பளத்தைத்தான் வீட்டிற்குக் கொடுப்பார்.

ஒரு நாள் குவேணி அந்த ஐயா வீட்டிற்குப் போய் வந்து தனக்குள்ளேயே ஏசிக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் ஐயாவும் வந்து சேர்ந்தார். ''ஐயா இனி உங்களிடம் நான் பணம் தரமாட்டன். உங்கடை வீட்டிலைதான் கொண்டு போய்க் குடுப்பன். கொஞ்சமாவது யோசிக்கிறீங்களே ஐயா.'' ஐயாவை ஏதோ ஒரு உரிமையுடன் ஏசிக் கொண்டிருந்தாள். மரத்துக்குக் கீழ் இருந்து ஐயா அழுதுவிட்டார். ''எனக்குப் பிள்ளைபோல புத்தி கூறும் அளவிற்கு அப்பிள்ளையின் உணர்வைத்தான் நான் எண்ணிப் பார்க்கிறேன்.'' என ஐயா என்னிடம் அவள் ஏசிவிட்டுச் சென்றதும் சொன்னது என் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அன்றிலிருந்து அந்த ஐயாவில் ஒரு புதிய மாற்றம். குவேணியிடம் அந்த ஐயா பெருமதிப்பும் அளப்பரிய அன்பும் வைத்திருந்தார். குவேணியும் அடிக்கடி அவர் வீட்டிற்கு சென்று வருவாள். இந்த ஐயாவின் உள்ளம் அன்று அவள் மரணம் கேட்டு பண்ணை வாசலில் கிடந்து ''குவேணி! குவேணி!'' எனக் கூக்குரல் இட்டது இன்னும் என் கண்களில்... ஓ! அடுத்த வீட்டு அக்காவும் அவள் மரணம் கேட்டு இன்று குவேணி என்ற பெயரில் களத்தில்.....

தொடர்ந்து ஆனையிறவுப் போர் ஆரம்பமானது. இதற்கான சகல ஏற்பாடுகளும் முன்கூட்டியே நடைபெற்றது. வேறு வேலைகளுக்கு நின்றவர்களும் விசேட பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். இந்தவேளையில் குவேனிக்கு களத்தில் இருந்து விழுப்புண் அடைந்த போராளிகளுக்கு உணவு வழங்குவதும் பராமரிப்பதும் தொடர்பான வேலைகள் கொடுக்கப்பட்டது. சண்டை உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவளால் அமைதியாக நின்று வேலை செய்யமுடியவில்லை.

'' அக்கா நான் அடிபாட்டுக்குப் போகப் போறன். எவ்வளவு நாளைக்குத் தான் என்னைச் சோதிக்கப் போறியள்'' என அழுதாள். இவள் உணர்வை இனியும் கட்டுப்படுத்த முடியாது என்ற பொறுப்பாளர் ''குவேணி ஏறு. வாகனத்தில் அடிபாட்டுக்குப் போக'' குரல் கேட்டதும் தான் அவள் முகம் எப்படி மலர்ந்தது.

இவள் போய் ஒரு குழுவுடன் நிற்கின்றாள். அக்குழு கொய்யாத் தோட்டத்தில் நின்றது. அங்கு மகளிர் படைப்பிரிவுப் பொறுப்பாளர் குவேணியைக் கண்டுவிட்டார். ''இவள் ஏன் இங்கு வந்தாள்? குவேணி உனக்குத் தரப்பட்ட வேலையைச் செய்து விட்டாயா? சரி உடனே நீ திரும்பிப் போ'' என்று அவர் கூறிவிட்டார். எப்படி இருக்கும்? அழுகையை அடக்கிக் கொண்டு மீண்டும் தனது வேலையைச் செய்தாள். அது மட்டுமா? தோழிகள் ஒவ்வொருவரும் கேலி செய்யத் தொடங்கிவிட்டனர். ''கொய்யாத் தோட்டத்தைப் பார்த்தியா? இன்னொருத்தி ''எத்தினை ஆமியை விழுத்தினாய்'' என்றதும் ஓடி ஒளிந்திடுவாள்.

இதன் பின்னர் மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளராக இவள் அனுப்பப்பட்டாள். இச் சிறுவயதில் இப்பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டாலும் அதை திறமையாகச் செய்து வந்தாள். குறுகிய மாதங்களுக்குள் மாற்றம் ஏற்படுத்தித் திறமையாகச் செய்யவேண்டுமென்று துடித்தாள்.

அவள் ஓடித்திரிந்த அதே வீதி, அவள் எத்தனையோ இரவுகள் வைத்தகண் வாங்காமற் பார்த்திருந்த அதே வீதியில் மோட்டார் சைக்கிளிற் போய்க் கொண்டிருந்தாள். கடை முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருந்த தாய். அவளைக் கவனிக்கவில்லை. ஆனால் தம்பி குமணன் கண்டு விட்டு

''அம்மா குமுதாக்கா போறா'' என்று கூற தாய் ஓடிப்போய் வீதியைப் பார்த்தாள். மறைந்து விட்டாள் குவேணி. போனவள் திரும்பி இதால வருவாள் தானே என அந்தத் தாய் உள்ளம் காத்திருந்தது. ஆனால் அவளோ வேறு பாதையால் முகாம் திரும்பி விட்டாள். பாசத்தைவிட அவளின் கடமையுணர்வினை அம்மா புரிந்து கொண்டாள்.

மன்னார் மாவட்டத்திற்கு மகளிர் படையணி அடிபாட்டுக்குச் சென்றது. அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அவள் தான் வேலைகளுக்கிடையில் செய்து வந்தாள். அங்கு செல்லும்போது அவர்கள் வைத்திருக்கும் புதிய ஆயுதங்களைக் கையாள்வது பற்றியும் அறிந்து வருவாள்.

அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது மகளிர் படைப் பொறுப்பாளரிடம், ''அக்கா அங்கை அடிபாடு தொடங்கினால் நாங்களும் போகலாம் தானே'' எனக் கேட்டாள். அவர் சம்மதமாகப் தலையாட்டியதும் அவள் அடைந்த சந்தோசம்.

''எங்கடை இடத்திலை அடிபாடு வந்தால் அடிபடச் சொல்லியாச்சு'' என்று குழந்தை போலத் துள்ளிக் குதித்ததை

நினைத்தபோது, எங்குதான் நின்றாலும் அடிபட வேணும் என்ற அவளது இலக்கினை அறிய முடிந்தது.

இந்த நேரத்தில் மகளிர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் மேஜர் பாரதி அங்கு வந்தபோது, மகளிர் படையணியினரின் அடிபாட்டு இலக்குகளைச் சென்று பார்வையிடுவதற்கென இவர்கள் போய்க் கொண்டிருந்தபோது, எதிர்பாரத விதமாக எதிரியின் எல்லைக்குள் பிரவேசிக்க ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொள்கிறாள்.

குவேணி இன்று எம்முடன் இல்லை. ஜீரணிக்க முடியவில்லை. எல்லாப் போராளிகளின் வீரச்சாவுகளும் அப்படித் தான், எம்முடன் அவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பது போல....

அவளது முகாமில் தங்களது பிரச்சினைகளைக் கூறி அவளது அன்பு வார்த்தைகளாற் திருப்தியடைந்து செல்லும் அக்காமார், ஐயாமார், அவளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கடை குவேணி வரமாட்டாளா? இல்லை வருவார்கள், குவேணியைப் போன்ற ஆயிரமாயிரம் மாவீர்களின் கனவுகளைச் சுமந்து புதிய குவேணியாக......

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **கப்டன்**

*இயக்கப் பெயர்:* **குவேணி**

*இயற்பெயர்:* **நகுலேஸ்வரி இலட்சுமணன்**

*பால்:* **பெண்**

*முகவரி:* **முழங்காவில், கிளிநொச்சி.**

*மாவட்டம்:* **கிளிநொச்சி**

*வீரப்பிறப்பு:* **23.11.1972**

*வீரச்சாவு:* **07.06.1992**

*நிகழ்வு:* **மன்னார் சிறுநாவற்குளத்தில் வழிதவறி சிறிலங்காப் படைகாவலரண் அருகே சென்றபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **முழங்காவில்**

*மேலதிக விபரம்:* **முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## 2 ஆம் லெப். ரூபி

அடர்ந்த காடு அருகே வயல் வெளி, இடையே இரண்டாம் உலக மகாயுத்தத்தை நினைவு கூறும் குழிகள்(குளங்கள்), சுதந்திரமாக உலாவரும் மந்தை, மாட்டுக் கூட்டங்கள். இயற்கையை இரசித்து இனியகுரல் எழுப்பும் இனிய பட்சிக் கூட்டங்கள், மீனின் வரவை எதிர்பார்த்து தவம்செய்யும் நாரையினம் இவ்வாறு இயற்கை அழகை தன்னகத்தே கொண்ட அந்த சிறிய கிராமத்திலே ஓர் அழகான குடும்பம். அங்கே தோன்றிய சந்தோசம் ஏனோ நீண்ட நாட்கள் நிலைக்கவில்லை. மழைமேகம்போல் மறைந்துவிட்டது. தம்பையா, யோகம்மா தம்பதியருக்கு தவப்புதல்வர்கள் ஒன்பது பேர். பெண்களுள் மூத்தவளாகப் பிறந்தாள் செல்வராணி எனும் மழலை. தனது மழலை மொழியாலும், குழந்தை விளையாட்டாலும் குடும்பத்தையே மகிழவைத்தாள். செல்வராணியைச் செல்லமாக செல்வி என்றே அழைத்தனர். அவளின் பெற்றோர். ஆம், அவள் தான் ரூபி. 2 ஆம் லெப்பிடினன்ட் ரூபியாக தமிழீழ மண்ணுக்கு உரமானவள்.

முல்லைத்தீவினில் முத்தையன் கட்டு எனும் கிராமத்திலே பிறந்து தனது ஆரம்பக் கல்வியை அங்கேயே கற்று தனது இளமை உணர்வுகளை எல்லாம் சுமந்து கன்னியாக உலாவரும் வேளையிலே பெரும்புயல் ஒன்று அவள் வாழ்க்கையிலே வீசியது. அந்நியர் ஆட்சியிலே அதுவும் பிறநாட்டவன் வந்து எமது மண்ணில் அட்டூழியம் புரியும் வேளையிலே, அவளின் தம்பி எமது இயக்கத்தின் பகுதி நேர உறுப்பினர் ஆனான். அதனை அறிந்து எமது நாட்டின் தேசத்துரோகிகள் அவன் உயிருக்கு உலை வைக்கின்றனர். குடும்பத்தின் விளக்காக குடும்பத்தையே காக்கவேண்டியவன் துரோகிகளின் துரோகத்தனத்திற்கு தன் உயிரைக் கொடுக்கிறான்.

அண்ணனின் இந்நிலையைக் கண்ட தங்கை கொதித்தெழுகிறாள் புயலாக, மாறுகிறாள் புலியாக. புலியானவள் தான் ரூபியின் தங்கை, அதாவது நிவேத்திரா. தங்கையானவள் தமயனைக் கொன்றவனை அழிக்கப்புறப்பட்ட வேளையிலே ரூபியின் தங்கை அதாவது நிவேந்திராவின் அக்கா ராணி புறப்படுகின்றாள். புலியுடன் இணைய. ஆனால் மகளிர் படையினரோ தங்கை இருக்கும் போது நீர் ஏன் வருகிறீர் என மறுப்புத் தெரிவிக்கின்றனர். திரும்பவும் வீடு சென்று தங்கைக்கு ஏதாவது நடந்தால் வாரும் என்றும் கூறுகின்றனர். மனமின்றி வீட்டிற்குச் சென்றவள். தம்பியை இழந்து தங்கையை இயக்கத்திற்கு அனுப்பிவிட்டு அவளால் நிம்மதியாக இருக்க முடியாது. விரக்தி அடைந்த மனதுடன் தனது உயிரைத் தானே மாய்த்துக் கொள்கிறாள். பெற்றோரின் நிலையோ கவலைக்கிடம். மகனைப் பறிகொடுத்தனர். மகளும் இயக்கத்திற்குச் சென்றுவிட்டாள். மற்ற மகளும் இவ்வாறு செய்தாள். பெற்றவர்கள் நிலை என்னாவது? எனினும் மனவுறுதியுடன் முல்லைத்தீவில் இருந்து வரணி நோக்கி வருகின்றனர். பிள்ளைகளைப் பிரிந்தது ஓர்புறமும், பொருளாதாரக் கஸ்டம் மறுபுறமும் வாட்ட வேதனையில் வாழ்கின்றனர் அப்பெற்றோர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கும் வேளையிலேதான் அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. தன்னை முழுநேர உறுப்பினராக்க விரும்பி முகாம் நோக்கி வருகின்றாள். அவளை அணுகி விசாரித்த மகளிர் படைப்பிரிவினர் திரும்பி வீட்டிற்குப் போகும்படி அனுப்புகின்றனர். தங்கை இருக்கும்போது நீங்கள் ஏன் வரவேண்டும். தங்கைக்கு ஏதாவது நடந்தால் வாருங்கள் எனக் கூறுகின்றனர். ஆனால் அவள் வீட்டிற்குச் செல்ல மறுக்கின்றாள். அந்த மகளிர் படைப் பிரிவினரிடம் 'அக்கா நான் என்ன திரும்பிப் போகவோ வந்தேன், ஓர் குடும்பத்தில் இருவர் இருந்தால் என்ன? தமிழீழத்தில் எத்தனை பேர் ஒரே குடும்பத்தில் உள்ள சகோதரங்கள் இருக்கின்றார்கள். நான் மட்டும் ஏன் இருக்கக் கூடாது?' என்று கேட்கிறாள். 'அப்படி நான் திரும்பிப் போவதாயின் என் உயிரற்ற உடல் தான் செல்லும்' என்று கூறுகிறாள். மகளிர் படையினர் அவளின் தங்கை செய்ததை நினைத்து உடனே இயக்கத்தில் இணைக்கின்றனர். அவளின் உறுதியான வார்த்தையே அவளை இயக்கத்தில் இணைக்கிறது.

இதனை அறிந்த அவளின் தம்பிக்கு அக்காமார் இவ்வாறு செல்லும் போது நான் ஓர் இளைஞன் ஏன் வீட்டில் இருக்கவேண்டும். என்ற ஓர் புதிய கேள்வி உருவாகிறது. உடனே அவனும் தன்னை

இணைத்துக் கொள்கிறான். இயக்கமதில், அவன் தான் கட்டைக்காட்டினிலே கயவருடன் போரிட்டு விட்டு தமிழ் அன்னை மடி மீது துயில்கொள்ளும் வீரவேங்கை சதீஸ்.

இவ்வாறு இணைந்த செல்வராணி தன்னை ரூபி என மாற்றிக் கொள்கிறாள். அவள் அமைதியுடன் மிகுந்த கவனத்துடன் சகலதையும் அறிய வேண்டும் என்ற ஆர்வம் படைத்தவள். தன்னை மற்றவர் பிழையாக எண்ணக்கூடாது எனும் கொள்கை உடையவள். பயிற்சி நேரம் இவளுக்கு கால் உளுக்கிவிட்டது. ஓட முடியாது. எனினும் ஒருவாறு இழுத்திழுத்து ஓக்கொண்டிருக்கும் போது பயிற்சியாசிரியர் பார்த்துவிட்டார். உடனே ஆசிரியர் திலகா (கப்டன் திலகா) மறிக்கிறார்.... அதற்கு றூபி நான் நின்றாள் மற்றப் பிள்ளைகள் என்ன நினைப்பார்கள். எனத் தொடர்ந்து ஓட முயற்சிக்கிறாள். சொன்னால் நிற்பது தானே என மாஸ்ரர் கூற உடனே பணிந்து நிற்கிறாள். மண்ணை நோக்கியபடி குனிந்து செல்லும் அப்பெண் போராளி யாரென்றால் நிச்சயமாக றூபியாகத்தான் இருக்கவேண்டும். எனக் கூறி விடுவார்கள். எதனையும் தட்டிக் கேட்கும் சுபாவம் படைத்தவள். அதாவது சரியானது இது தான் என்றாள் யாரென்று பார்க்காது நீதிக்கு தலை வணக்கும் நற்பண்புண்டு.

அவள் பல களம் கண்டவள். பலாலி, கோட்டை, சிலாவத்துறை, காரைநகர், வவுனியா, கட்டைக்காடு, மணலாறு என்று எல்லா இடமும் அவளின் பங்களிப்பு உண்டு. எந்த இடத்திலும் சிறு பங்களிப்பாவது இருக்கவேண்டும். என்று துடியாய் துடித்து தன்னையும் இணைத்துக் கொள்வாள். அவள் செல்லும் களங்களிலெல்லாம் கூறுவாள், இவள்களாலே தானே என்ர தம்பியும், தங்கையும் இறந்தவர்கள் என்று ஆவேசமாகவே நின்று அடிபடுவாள். ஓர் முறை குழுத் தலைவியாக ஓர் முகாமில் இருக்கும் போது நான் ’அக்கா சாப்பிட வாருங்கள் என்றேன். ‘நீங்கள் போங்கள்’ நான் பிள்ளைகள் வந்தவுடன் வருகின்றேன்’ என்று கூறினாள். அப்போது அவளின் குரூப் பிள்ளைகள் குளிக்கச் சென்றிருந்தனர். இதிலிருந்து அவள் தனது குரூப்பில் எவ்வளவு கவனமானவள் என உணர்ந்து கொண்டேன். இன்னுமோர் முறை பதுங்குகுழி வெட்டிக் கொண்டிருக்கும் போது அவரின் பிள்ளைகள் ’வெட்ட வேண்டாம் அக்கா’ நாங்கள் வெட்டுகிறோம்’ என்றார்கள். உடனேயே அவள் ’ஏன் நான் வெட்டக் கூடாதா’ எனக் கேட்டுவிட்டு தொடர்ந்து வெட்டினாள். தான் வெட்டினாள் தானாம் பிள்ளைகள் சோர்வடையாமல் வெட்டுவார்களாம். தற்பெருமை எதுவுமின்றி அவள் காணப்பட்டாள்.

இன்னுமொன்று நினைவிற்கு வருகின்றது. என்னவென்றால் நானும் என்னுடன் இணைந்த சில போராளிகளும் சேர்ந்து, 'அக்கா நீங்கள் பயிற்சி ஆசிரியர் நிவேந்திரா அக்காவின் அக்காவா? அப்படி ஒரு அக்கா இருக்கிறா என்று தெரியும். ஆனால் அவ என்னுடைய தங்கை அல்ல' என மறுத்துவிட்டார். நாம் பலமுறை வற்புறுத்தியும் பதிலளிக்கவில்லை. பின்பு நாம் வேறுவழியாக அறிந்து அவவிடம் முழுவிபரம் கூறி 'நீங்கள் உண்மையில் நிவேந்திரா அக்காவின் அக்கா தான். ஏன் எங்களுக்குச் சுத்துகிறீர்கள்'? எனக் கேட்டதற்கு புன்சிரிப்புடன் அந்த இடத்தைவிட்டு அகன்றுவிட்டார்.

இவ்வாறு நாட்கள் கழிந்து கொண்டிருக்கும் வேளையில் தான் ஆனையிறவு மீதான தாக்குதலுக்கு பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பயிற்சி முடிந்து ஆனையிறவில் நிற்கும் அவளுக்கு கட்டைக்காட்டிற்கு வரும்படி அழைப்பு வருகிறது. கட்டைக் காட்டினிலே காவல் கடமையில் நிற்கும் போது அவளது தம்பி (அதாவது வீர வேங்கை சதீஸ்) அவளைக் காணுகிறான். பொறுப்பாளரின் அனுமதி பெற்று இருவரும் கதைக்கின்றனர். தேசத்தின் எல்லையில் பாசத்தின் பிணைப்புகள் அங்கே தெரிகிறது. ஒரு வருக்கொருவர் அறிவுரை, அதிலே 'தம்பி நீ நன்றாக அடிபட வேண்டும். பின்னுக்கு வரக்கூடாது. அதற்காக கவலையீனமாக காயப்படக்கூடாது' என்று அந்த அன்பு அக்கா கூறுகிறாள். ஏனெனில் அவள் ஓர் இயக்க உறுப்பினரையும் வீணாக இழக்கத் தயாரில்லை. 'அக்கா நீங்களும் கவனம்' எனக்கூறி விடைபெறுகின்றனர். அது தான் அவர்களின் கடைசிச் சந்திப்பும், அறிவுரையும் என்று இருவருமே என்னவில்லை. ஆனால் விதியானது கடுகளவும் பிசகாது தன் தொழிலைச் செய்கிறது.

சண்டை தொடங்கிவிட்டது. கட்டைக்காட்டில் தொடர்ந்து மோதல். பல போராளிகள் மண்ணின் மைந்தர்களாக மாறித் தமிழ் அன்னையின் மடிமீது ஆனந்தமாக அமைதியாக தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள். சண்டை ஓய்வுக்கு வரும் வேளையில் குழு பிரிக்கப்பட்டு திரும்பவும் போர் முனைக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் போது, 'ரூபி நீ போகவேண்டாம்' எனக் குழுத் தலைவி கூறுகின்றார். ஏன் என்பது போல் இருந்தது அவளின் பார்வை. பிரித்த குரூப்பை அனுப்பிவிட்டு அவளிடம் வந்த பொறுப்பாளர், 'உமக்கு அண்ணை தம்பி யாராவது இருக்கிறார்களா?' எனக் கேட்கிறார். கேட்டதும் 'ஏன்? தம்பிக்கு என்ன நடந்தது' என்றாள். அவளுக்கு ஒருவாறு சமாதானம் சொல்லி வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வரும்போது அந்தச் செய்தி அறிவிக்கப்படுகிறது.

‘தம்பியானவன் மண்ணுக்கு உரமாகி விட்டான்.’ உடனே அக்கா உறுதி பூணுகிறாள். தம்பியைக் கொன்றவன் தலை கொய்வது திண்ணமென்று.

வீட்டிற்கு வந்து வீட்டில் நடந்த கிரிகைகளை பார்த்து விட்டு இதெல்லாம் என்ன செய்கிறீர்கள் என்றும். அவன் சாகவில்லை. தமிழீழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். இவ்வாறான கடமை எல்லாம் தேவையில்லை அவனைக் கொன்றவனைக் கொல்வதே மேல் எனக் கூறுகிறாள். தம்பியைக் கொன்றவனை அவனின் நாற்பத்தைந்துக்கு இடையில் கொன்றுவிட்டு நானும் தம்பியுடன் இணைவேன் என்றாள். அதற்குச் சந்தர்ப்பம் பார்த்திருக்கும் வேளையில் தான்,

மின்னல் தாக்குதலென மணலாறு மாவட்டத்தில் ஆரம்பமாகியது. விடுமுறையில் நின்றாள் ரூபி. அப்போது பெற்றோர் அவளை மறிக்கின்றனர். ‘என்னை மறிக்க வேண்டாம். தம்பியின் நாற்பத்தைந்திற்கு என் பொடிதான் வரும்’ என்கின்றாள். அண்ணனுடன் முகாமுக்குச் சென்ற ரூபி ஏதோ ஒரு விதமாக மணலாற்றுக்குச் சென்றுவிட்டாள். அங்கே சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆம் அவள் கூறியது போலவே தம்பியின் நாற்பத்தைந்திற்கு அவளின் உயிரற்ற உடலைக் கொண்டு தங்கை சென்றாள். ஆம்! அவள் மரணத்திலும் வென்றுவிட்டாள். சொன்னதையே செய்தாள். செய்வதையே சொன்னாள். அவளின் சொல்லுக்கும் செயலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

2 ஆம் லெப்டினன்ட் ரூபி பலசாதனைகள் படைத்துவிட்டு பாசத்தையும் காட்டிவிட்டு தம்பியுடன் இணைந்து கொள்ள, ஏன் மற்றத் தம்பி தங்கைகளுடனும் இணைந்து கொள்ள தாய் நாட்டை நசுக்க வந்த கொடிய படையை தவிடுபொடியாக்கிவிட்டு வான் நோக்கிச் சென்றுவிட்டாள். ஆம், அவள் மண்ணிற்காக மடிந்து விட்டாள். ஆனால், அவள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வோம். மலரும் தமிழீழத்தில் அவள் புது மலராக மலர்வாள்.

- **யோகா**

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **2 ஆம் லெப்டினன்ட்**

*இயக்கப்பெயர்:* **ரூபி**

*இயற்பெயர்:* **செல்வராணி தம்பையா**

*பால்:* **பெண்**

*முகவரி:* **நாவற்காடு, கரம்பைக்குறிச்சி, வரணி, கொடிகாமம், யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **24.08.1964**

*வீரச்சாவு:* **23.09.1991**

*நிகழ்வு:* **மணலாற்றில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **கொடிகாமம்**

*மேலதிக விபரம்:* **கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## லெப். கேணல் சரா

*சரா...! சரா...!!*

அவனது முகத்தைக் கடைசியாக ஒருதரம் பார்க்கவேண்டும். எனக்கு இதயம் வெடித்துவிடும் போல இருந்தது. எங்கள் போராளிகளின் உடல்கள் துப்பரவுசெய்யும் இடம்.

'சராவின் உடல் வந்துவிட்டதா'? என்னை மாதிரிப் பலர் கேட்டுக் கொண்டு நின்றார்கள். உள்ளே போனேன். வீரமணமடைந்த எமதுபோராளிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கிடந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் முகங்களாக நான் தடவினேன். எனக்குப் பழக்கமான சராவின் முகத்தைக் காணவே இல்லை. ஆனால் அந்தத் தோழர்களின் முகங்களும் எனக்குப் பலகதைகளைச் சொல்லின.

பதினைந்து வயதிருக்கும், சற்றுநிறமான சுருள் சுருளான தலைமயிருடன் ஒரு போராளிமுகம் வாடிக் கிடந்தான். அவனது உயிரை அழைத்துச் சென்ற விமானக் குண்டு வயிற்றை ஆழமாகச் சிதைத்திருந்தது.

அவனைக் கடந்ததும்,

சின்னப் போராளி ஒருவன் தூங்கிக் கொண்டிருந்தான். கால் ஒன்றுதொடையில் ஆழமாகப் பிய்ந்திருந்தது. உடலைக் குறுக்காவும் ஒரு ரவை துளைத்திருந்தது. உயிர்பிரியும் போது இருந்த வேதனை அந்தச் சின்ன முகத்தில் படிந்துபோய்க் கிடந்தது.

அடுத்ததாக ஒரு போராளி, சப்பாத்துக்கூட கழட்டாமல் கிடந்தான். சீருடைகூட ஒழுங்காக இருந்தது. அவன் எப்படி மரணித்தான், முகத்தைத் திருப்பினேன் முகத்தின் ஒருபக்கம் கோறையாக இருந்தது.

இப்படிப் பலபோராளிகள்.....

இவர்களில் சிலரைச் சராவின் பயிற்சி முகாமில் பார்த்திருக்கிறேன். சிலநேரங்களில்,வேமாகச் செல்லும் வாகனமொன்றிற்குள் சிரித்தபடி செல்வதைக் கண்டிருக்கிறேன். அந்தத் தோழர்கள் தான் இன்று இப்படி......

இந்த மரணங்களை நன்றாகத் தெரிந்துகொண்டுதான், இவர்கள் துப்பாக்கிகளைத் தொட்டார்கள். போர் முனைகளிற்கு வெளிக்கிடும் போதும், வழியிலும் எதிரியை எதிர்த்து நின்று போராடும்பொழுதும் தமது மரணத்தைப் பற்றி இவர்கள் உணர்ந்துதான் இருந்தார்கள்.

ஆனாலும், இந்த இளவீரர்கள் உறுதியாக நின்று போராடினார்கள். இவர்களின் நெஞ்சங்களில் இருந்தெல்லாம் விடுதலை என்ற உணர்வு ஒன்றேதான். தன்னை இழந்து சுதந்திரத்திற்காகப் போராடும் மனவன்மையை இவர்களுக்குத் தந்தது நம்பிக்கைதான். தலைவர்மீது கொண்டநம்பிக்கை – தங்கள் இலட்சியம் நிச்சயம் வெல்லப்படும் என்ற நம்பிக்கை. இவைதான் இந்த இளைஞர்களை மலைபோன்ற மாவீரர்களாய் மாற்றிநிற்கிறது.

அந்த இடத்தின் ஒரு ஓரமாக,சிலர் ஒவ்வொரு உடலாகத் துப்பரவு செய்துகொண்டிருந்தார்கள். அந்த மனிதர்களின் முகங்கள் சோகமாக இருந்தன. அலங்கோலமாகக் கிடந்த போராளிகளின் உடல்களை ஒழுங்குபடுத்தி அடிமனதின் விருப்பத்தோடு உயிர் கொடுக்க அவர்கள் முயன்று கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே எடுத்து வைத்த சவப்பெட்டிகளில் அளவுக்கு ஏற்றமாதிரி அந்தப் போராளிகள் கிடத்தப்பட்டார்கள். சராவின் உடல் வரவே இல்லை.

ஒருமண் வீதியால் விழுந்து கடற்கரையில் ஏறுகின்றேன். அந்தச் சிறுகடல் கோபத்தில் அலைகளை அள்ளிவீச முடியாமல் தவித்து தளதளத்துக் கொண்டிருந்தது. இந்த வீதியால், இந்தக் கடலைப் பார்த்துக் கொண்டுதான் சரா அடிக்கடி போவது வழமை. என்னையும் இந்த வீதியால், சிலதடவைகள் அவன் நடாத்திய பயிற்சி முகாமிற்கு அழைத்துச் சென்றிருந்தான்.

இன்று, மக்ணீள், இந்தக் கடல், குன்றும் குழியுமாக இருக்கும் வீதி எல்லோருமே அவனை, இறுதியாக ஒருதரம் பார்க்க ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

வானம் இருண்டு திட்டுத் திட்டாகக் காணப்பட்டது. கருமேகங்கள் எங்கேயோ வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தன. அதில்

சராவை மாதிரியே ஒருமேகம். அவனது கறுப்பு, அவனுடன் இருக்கும் சாதுவான தாடி, பழகும் போதுவீசும் குளிர்மை......

அந்தமேகம் எனக்குக் கதைசொல்லத் தொடங்கியது.

நாங்கள் வெப்பமான மலைகளிற்குக் கீழ் வாழ்ந்த இனிமையான காலம். எமது பயிற்சி முகாமிற்கு சரா ஜேர்மனியிலிருந்து வந்திருந்தான். அந்தப் பயிற்சி முகாமின் வெப்பமான சூழ்நிலை, கடுமையான பயிற்சி எல்லாமாகச் சேர்ந்து அவனது வெளிநாட்டுத் தோற்றத்தை இலகுவாக மாற்றி ஒருகிராமப்புறத் தோற்றத்தைத் தந்துவிட்டது.

பொதுவாக பயிற்சி முகாம்களில் சிலர் மட்டும் தான் எல்லோராலும் அறியப்பட்டவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் ஏதோ ஒருதிறமை. அது நடிப்பாகவோ,விளையாட்டாகவோ இருக்கும். அப்படிஎல்லோராலும் அறியப்பட்டவர்களில் சராவும் ஒருவன்.

குழப்படிதான் அவனது திறமை.

எங்கள் பயிற்சிமுகாமின் பொறுப்பாளர் பொன்னம்மானின் கண்கள் எப்போதும் சராவைத் தான் சுற்றும். குளப்படிகளைச் செய்துவிட்டுஅவன் தப்பிவிடுவான் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

அந்தப் பயிற்சி முகாமின் இனிமையான கலகலப்புக் காரணங்களில் சராவும் ஒருவன். பயிற்சிமுடிந்தபின் நாங்கள் சிலர் முதன் முதலில் முகாமிலிருந்து பிரிந்துசென்றோம். அந்தச் சின்னப் பிரிவைத் தாங்கமுடியாமல் எல்லோருமே இயலுமட்டும் அழுது தீர்த்தோம். அப்போது நான் சராவைப் பார்த்தேன். கலங்கிய கண்களுடன் அவன் எனக்கு விடைதந்தான். அதன் பின்புமன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின் தான் சராவைப் பார்த்தேன். ஜி.3 துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தான். அவனது உயர்ந்த கம்பீரமான தோற்றத்திற்கு அது பொருத்தமாக இருந்தது.

மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலில் தான் செய்தவற்றைச் சொன்னான். யாழ்.பொலிஸ் நிலையத் தாக்குதலிலும் பங்கு பற்றியதாகக் கூறினான். காலங்கள் சென்றன. சரா கல்வியங்காடு, திருநெல்வேலிப் பகுதிகளுக்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அப்பகுதியில் சராவை, சராவின் செயற்பாடுகளை எல்லா மக்களுமே விரும்பினார்கள்.

அந்த நேரத்தில்தான், இந்தியப் படைகள் - தென்றலெனச் சொல்லிக் கொண்டுஎங்கள் தேசத்தில் புயலாகப் புகுந்தார்கள். இந்த மண்ணின்மீது தங்கள் கோரக் கரங்களை அகலவிரித்தனர்.

இந்திய வல்லாதிக்கத்திற்கெதிராகப் புலிகள் தொடுத்தபோரில் சரா முன்னிலையில் நின்று திறமையாகச் சண்டையிட்டான். ஒருமுறை இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிச் செல்லும் போது சராவின் கையில் ஆழமாக காயமேற்படுகிறது. அவன் சிகிச்சைக்காக தமிழகத்திற்குச் சென்றான். அங்கு வைத்து இந்திய அரசால் கைது செய்யப்பட்டான்.

இந்தியர்களின் சிறைகளில் இரு வருடங்களைக் கழித்த, பின் தமிழீழம் அவனை வரவேற்றது. சராவினது போராட்ட வாழ்க்கை தொடர்ந்தது.

சிறீலங்கா அரசுடனான போர் மீண்டும் தொடங்கிய பின் யாழ். கோட்டை இராணுவமுகாம் மீதான் முற்றுகைப் போரில் சராவும் ஒருவனாகக் கலந்துகொண்டான். கோட்டை வெற்றி கொள்ளப்பட்டதன் பின்பு புலிகளின், பயிற்சி முகாம்களிற்கான பொறுப்பாளராகச் செயற்பட்டான்.

ஆனையிறவு இராணுவத் தளம் மீதான முற்றுகைப் போர் ஆரம்பித்தவுடன் அப்போர் முனையில் ஒரு தளபதியாக சராவும் நின்றான். பழைய தடைமுகாம் இராணுவத்தினர்மீது ஒரு தாக்குதலைத் தொடுத்தோம். அந்தத் தாக்குதல் வெற்றியடையவில்லை. எல்லாமாக 63 போராளிகளை நாங்கள் இழந்திருந்தோம். சராவிற்கு காலில் காயம். வைத்தியசாலை வாசலில் நின்றான். நான் அவனைப் பார்ப்பதற்காகப் போயிருந்தேன். சின்னக் காயம்தான். பழையபடி போர் முனைக்குப் போகப் போவதாகச் சொன்னான்.

‘இழப்புக்கள் தான் அதிகம் போராட்டம் வளரும் பொழுது, போர் முனைகளும் பெரிதாக மாறும். இழப்புக்களும் அதிகமாகத் தான் இருக்கும். இதைத் தவிர்க்கமுடியாது’ என்றான். அந்தநேரத்தில் அவசரமாக வந்த வாகனம் ஒன்றில் ஏறி அவன் போர்க்களத்திற்குச் சென்றுவிட்டான்.

ஆனையிறவு முற்றுகையை முறியடிப்பதற்காகக் கடற்கரையில் இறக்கப்பட்ட இராணுவத்தினர் நெருப்புமழையைப் பொழிந்து கொண்டே முன்னேறத் தொடங்கினார்கள். இரவும் பகலும் வானத்தில் நீந்திய விமானங்கள் அங்குலம், அங்குலமாகக் குண்டுகளை விதைத்தன. கடலிலிருந்து நிலத்தை நோக்கி அலை அலையாகக் குண்டுகள் வந்துகொண்டிருந்தன. சிறீலங்காஅரசு இயந்திரங்கள் தங்கள் முழுப் பலத்தையும் திரட்டி வெளிக்காட்டியவாறு முன்னேறி வந்தார்கள்.

இந்த நிலையில், இரண்டாவது தடவையாக தடைமுகாம், இராணுவமுகாம் மீதான தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிட்டனர்.

கவச வாகனங்களின் உதவியுடன் எம்மவர்கள் முன்னேறுவதாக இருந்தது.

தாக்குதல் ஆரம்பமாகும் நேரம் எமது கவச வாகனம் நின்று புறப்படும் இடத்தில் நானும் நின்றேன். சரா வந்தான். என்னுடைய கன்னங்களைத் தடவினான். 'மச்சான் என்னுடைய நல்லபடம் வைத்திருக்கிறாயடா' என்று கேட்டான்.

'ஏன்' நான் விளங்காமல் கேட்டேன்.

'நான்தான் டோசர் கொண்டு போறன்' என்றான். பயிற்சி முகாமிலிருந்து நாங்கள் பிரியும்போது கலங்கிய கண்கள் இன்று மீண்டும் கலங்கியது.

ஆனால் இந்தப் பிரிவு.... நான் விழிகளைத் துடைக்க வேறபக்கம் திரும்பினேன். சரா இன்னொரு தோழனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

'எனது உடல் சிதையாமல் வந்தா, இந்தச் சீருடையைப் போடுங்கோ, இந்தப் புலிக்கொடியைப் போர்த்துங்கோ'.

இந்தச் சண்டையில் தப்பிவரும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு என்பது சராவிற்கு நன்றாகவே தெரியும். தங்கள் மரணத்தைத் தெரிந்து கொண்டு போர் முனைக்குச் செல்லும் உயர்ந்த மனிதர்களை இந்தமண் பிரசவித்திருக்கின்றது.

தாக்குதல் தொடங்கியது. துப்பாக்கி ரவைகளால் அரண்களை அமைத்தபடியே புலிகள் முன்னேறினார்கள். சராவின் வாகனமும் முன்னேறியது. ஒரு பீரங்கிக் குண்டு அந்த வாகனத்தில் பட்டு வெடித்தது.

சரா, அவனுடன் சேர்ந்துசென்ற குகதாஸ்.... தாக்குதல் தொடர்ந்தது. காலைவேளை வெற்றி இல்லாமல் எம்மவர்கள் பின்வாங்கினார்கள்.

சராவின் உடலை மீட்பதற்கு முடியாமலே போய்விட்டது. இரண்டுநாளின் பின் போர் முனையிலிருந்து வந்த ஒருதோழன், 'எங்கள் நிலைகளிற்கு முன்னால், இராணுவமுகாம் வேலிக்குப் பக்கத்தில் சரா அண்ணை கொண்டு சென்ற வாகனம் நிற்கிறது. காகங்கள் உள்ளே இறங்கி ஏறுது' எனச் சொன்னான்.

சராவை, காகங்கள்....

என்னால் வேதனையைத் தாங்க முடியாமலிருக்கிறது. என் முன்னாலிருக்கும் சாளரத்தின் வழியேபார்க்கிறேன். கோட்டை தெரிகிறது. சிதைந்து அழிந்து கொண்டிருக்கும் அந்த ஆக்கிரமிப்புச் சின்னத்தின் முன்னே இப்படித்தான் அகழியையும் உயர்ந்தகோட்டைக்

சுவரையும் தாண்டுவதற்காக எம்மவர்கள் பயன்படுத்திய கருவிகள் அப்படி அப்படியே கிடக்கிறது. மதிலில் ஏறுவதற்காகச் சாத்திய ஏணி மதிலுடன் விழுந்து கிடக்கிறது. சேற்று அகழியைத் தாண்டுவதற்காக அடுக்கிய பலகைகள் அப்படியே தாழாமல் கிடக்கின்றன. இவை எல்லாம் வீரம் நிறைந்த கடுமையான அந்த நாட்களை நினைவுபடுத்துகின்றன.

கோட்டை இராணுவமுகாம் மீதான் இரண்டாவது தாக்குதல் முயற்சி, அன்றும் சரா ஒரு கவசவாகனத்தை ஓட்டிச் சென்றான். முன்னேறிச் சென்ற அந்தவாகனம் பள்ளம் ஒன்றிற்குள் விழுந்து சரிந்தது. அன்றைய தாக்குதுலும் வெற்றியடையவில்லை. விடிந்தது. எங்கள் கண்களிற்கு முன்னால் வெட்டைவெளியில் எங்கள் தோழர்களின் உடல்கள் கிடந்தன. அவர்களின் மீதுகாகங்கள் இருக்க முயல்வதும் பறப்பதுமாக......

அந்த வேதனையான நினைவுகளை எண்ணியபடியே நிமிர்கிறேன். சிதைந்துபோன கோட்டையின் எஞ்சிய மதிற்சுவரால் எங்கள் போராளிகளில் சிலர் நடந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் கைகளில் இருக்கும் துப்பாக்கிகள் புது நம்பிக்கைகளை விதைத்துக் கொண்டிருந்தன.

சற்றுத் தள்ளி, காற்றில் தன் கைகளை வீசி புலிக்கொடி பறக்கிறது.

**- வவுனியா தினேஸ்**

நன்றி : களத்தில் இதழ், 01.04.1994.

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

நிலை: **லெப்.கேணல்**

இயக்கப் பெயர்: **சரா**

இயற்பெயர்: **சின்னத்துரை ஜீவராசா**

பால்: **ஆண்**

முகவரி: **சரா வீதி, கல்வியங்காடு,யாழ்ப்பாணம்**

மாவட்டம்: **யாழ்ப்பாணம்**

வீரப்பிறப்பு: **19.04.1962**

வீரச்சாவு: **27.07.1991**

நிகழ்வு: **கிளிநொச்சி ஆனையிறவு மீதான ஆ.க.வெ. நடவடிக்கையில் தடைமுகாம் மீதான 2 ஆவது தாக்குதலின்போது வீரச்சாவு.**



## லெப். மகிழினி

1991 இன் நடுப்பகுதி. பொன்னும் மணியும் கொழிக்கும் பூநகரி மண். சிங்கள அரசின் கூலிப்படைகளினால் முற்றுகைக்கு உள்ளாக்கப்படுகிறது.

நாகதேவன்துறை ஒரு கூட்டுப் படைத் தளமாக அமைக்கப்படுகிறது. ஈராண்டுகாலம் பூநகரி மண்ணையும் கிளாலிக் கடலையும் ஆட்சி புரிந்த கூலிப்படைகளின் உயிர்கள் ஈராண்டு காலம் முடிவதற்குள் அவர்களை விட்டுச் சென்றுவிட்டது.

அன்று எத்தனையோ அப்பாவி மக்களை கடலிலே வெட்டியும் சுட்டுக் கொன்றொழித்த அரக்கர் படை, எம் மண்ணிலே மண்ணோடு மண்ணாய் சங்கமம் ஆகிவிட்டது.

கிளாலிக் கடல் எங்கும் அந்தி வானத்தின் ஒளிக்கீற்று படும்போது இரத்த ஆறு பாய்வது போன்ற காட்சி, அன்று எம் மக்கள் மீது' நாம் அப்பாவி மக்கள்' என்று கூறியபோதும், இனவெறி பிடித்த அரக்கர் படை செய்த அட்டூழியங்கள் கண்முன்னே நிழலாய்த் தெரிகிறது.

இவற்றையெல்லாம் நினைக்கும் போது நெஞ்சு எரிமலையாய் வெடித்துவிடும் போன்று கொதிக்கிறது. எங்கிருந்தோ வந்த சில்லென்ற குளிர்காற்றுடன், 'நாகதேவன் துறை வேகப்படகுகள் நம் கையில் வீழ்ந்ததடா' என்ற பாடல் என்னைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

இப்பாடலைக் கேட்கும்போது இவ்வெற்றிக்குக் காரண கர்த்தாக்களான நானூற்று ஐம்பத்தெட்டு வீரமறவர்களின் வீரம் செறிந்த இலட்சியமும் தலைவனின் பாதையிலே தளராது போரிட்டு

வீரகாவியம் படைத்த வீரச்செம்மல்களின் திருமுகங்களும் எம் கண்முன்னே நிழலாடுகின்றன.

1993.11.11 அன்று புலர்கின்ற காலைப்பொழுதினிலே ஓர் செய்தி 'மகிழினி பூநகரிச் சமரில் மாவீரர் வரிசையிலே ஒருத்தி ஆகிவிட்டாளாம்'

மகிழினி! நானூற்று ஐம்பத்தெட்டு தியாகிகளில் நீயும் ஒருத்தி என்ற செய்தி என்னை உலுக்கத்தான் செய்தது. எம்முடன் ஈராண்டு காலம் உண்டு, உறங்கி, உலாவித் திரிந்த அவள் இனி வரப்போவதில்லை.

உன் வீரவதனம் என் கண்முன்னே நிழலுருவமாய் தெரிகிறது. பூநகரி மண்ணை மீட்போம் என்ற மன உறுதியுடன் எதிரியின் பாசறைக்குள் வழிகாட்டியாக நீ சென்று வீரச்செயல் புரிந்திட்ட கதைகேட்டு எம் நெஞ்சம் விம்மிப்புடைக்கின்றது.

10 ஆம் திகதி தாக்குதலுக்கான நாள். எம் பிரிவில் அனைவரது முகங்களிலும் ஏதோ ஒருவித அமைதி குடிகொண்டிருந்தது. மதியச் சாப்பாட்டுக்குப் பின் நாம் அனைவரும் ஒன்றுகூடி இருக்கும்போது, ஒவ்வொருவரும் ஒருவர், முகத்தை ஒருவர் ஏதோ புதியவர்களைப் பார்ப்பது போன்று பார்க்கிறார்கள்.

மகிழினி திடீரென்று 'என்னை எல்லோரும் வடிவாப் பாருங்கோ! ஏனென்டா நான் இந்தச் சண்டையில் மண்டையைப் போட்டுவிடுவன். நான் இந்தச் சண்டையில் வீரச்சாவு அடைந்தால் உயிருடன் திரும்பி வாற ஆக்கள் எனக்கு எழுதுங்கோ' என்றாள். அப்போது துளசிரா, மகிழினியைப் பார்த்து, 'நான் நிச்சயம் உயிருடன் திரும்பிவருவன். நான் உனக்கு வரலாறு எழுதுகிறன். நீ கவலைப்படாதே' என்றாள்.

அப்போது ஒரு தோழியைப் பார்த்து மகிழினி, 'ஒவ்வொருவரும் உங்களுக்கு விருப்பமான பாட்டுக்களை இப்ப பாடவேணும்' என்று கூறினாள். அப்போது துளசிரா 'மகிழினி, உனக்கு விருப்பமான பாட்டை முதலிலே பாடு. பிறகு ஒவ்வொருதரும் படிக்கிறம்' என்றாள்.

மகிழினி மறுப்பு எதுவும் கூறாமல், 'ஆராரோ பாடவந்தேனே. ஆவாரம் பூவின் செந்தேனே' என்ற பாடலைப் பாடினாள். முன்னர் என்றால், அவளுடைய குரலைக் கேட்டு எல்லோரும் சிரித்து இருப்போம். ஏனென்றால் சுருதி கூடிய பாடல்களை எல்லாம் அவளால் பாடமுடிவதில்லை. அடித்தொண்டையால் பாடும்போது கிணற்றுக்குள் இருந்து படிப்பது போன்றிருக்கும்.

‘நீங்கள் எல்லோரும் நான் வீரச்சாவடைந்தால் எங்கள் வீட்டுக்குப் போங்கோ. என்ர அம்மாவுக்கும், அம்மம்மாவுக்கும் ஆறுதல் சொல்லுங்கோ. அம்மம்மா தான் என்னில் நிறையப் பாசம். அவதான் நான் வீரச்சாவடைஞ்சா தாங்கிக் கொள்ளமாட்டா’ என்றாள்.

மன்னார் மாவட்டத்தில் பனங்கட்டிக்கொட்டு என்னும் கிராமத்தில் அருள்வாசகம் தம்பதிகளின் மூன்றாவது புத்திரியாகப் பிறந்தாள் மகிழினி. இவளுக்கு இரண்டு அண்ணன்மாரும் ஒரு தம்பியும் ஒரு தங்கையும் உண்டு. அவர்களில் இவளுடைய இரண்டாவது அண்ணன் இயக்கத்தில் இணைந்து கொண்டார். இவள் தன் அம்மம்மாவுடன் வளர்ந்து வரலானாள். தந்தை சுகவீனமுற்று இறந்தபின், 1990 இன் நடுப்பகுதியில் இயக்கத்தில் தன்னை முற்றுமுழுதாக இணைந்துக் கொண்டாள். மணலாற்றுக் காட்டில் பத்தாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்தாள். பயிற்சிப் பாசறையில் மிகவும் திறமையுடன் செயற்பட்டு சக தோழிகளின் மனதைக் கவர்ந்தாள்.

பயிற்சி முடிந்து வெளியே வந்த பின் கோட்டை முகாம் தகர்ப்பில் பங்குகொண்டு திறம்படச் செயற்பட்டாள். பின்பு பலாலியில் கட்டுவன் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்காப் படைகளின் காவலரண்களையும் இராணுவத்தின் செயற்பாடுகளையும் அவதானிக்கும் முகமாக, மகளிர் படைப்பிரிவிலிருந்து ஒரு பிரிவு அனுப்பப்பட்டது. அதில் அவளும் ஒருத்தியாகப் போனாள்.

ஆகாய, கடல், வெளிச்சமரிலும் திறம்படச் செயற்பட்டு, எல்லோராலும் திறமையாகப் பேசப்பட்டாள்.

1991 இன் நடுப்பகுதியிலே அவள் எங்கள் பிரிவில் இணைக்கப்பட்டாள். இதன் பின்பே அவளின் குணங்கள் எனக்கு முற்று முழுதாகத் தெரியவந்தது.

அவளை எல்லோரும் ‘பவள்’ என்றும், ‘செயின் புளொக்’ என்றும் செல்லமாக அழைப்பார்கள். அவளின் தோற்றமும் நடையும் பார்ப்போர் எல்லோரையும் சிரிப்புக்குள்ளாக்கும். யாராவது வேண்டுமென்றே ‘பவள்’ என்று கூப்பிட்டால் ஒன்றும் கூறாமல் சிரித்துவிட்டு சென்றுவிடுவாள்.

எங்கள் முகாமில் எங்களுக்கு கடுமையான பயிற்சி தரப்பட்டது. இவளுக்கு மழைக்காலங்களிலும், குளிர் காலங்களிலும் இழுப்பு வருவதுண்டு. அதனை அறிந்த பொறுப்பாளர் அவளை ‘நீ இனி பயிற்சிக்கு வரவேண்டாம்’ எனக்கூறியபோதும், அவள் கேட்கமாட்டாள். ‘பயிற்சி எடுத்தால் வேளைக்கு இழுப்பு மாறிவிடும்’ என்று கூறுவாள்.

ஒரு நாள் நான் மகிழினியைப் பார்த்து, ‘உன் அண்ணன் இயக்கத்திலையிருந்து விலகிவிட்டாராம்’ எனக் கூறினேன். தமையன் விலகிய செய்தியைக் கேட்டவள், ‘நான் இனி அண்ணனுடன் கதைக்கமாட்டன்.’ எனக் கூறினாள். ‘ஏன்?’ என்று கேட்டதற்கு, ‘நினைச்ச நேரம் இயக்கத்துக்கு வாறதுக்கும் நினைச்ச நேரம் விலகுறதுக்கும் இயக்கத்தை என்னென்டு நினைச்சார்?’ எனக் கூறியவளின் பார்வையிலே அவளின் மனவுறுதியையும், இயக்கத்தில் அவள் கொண்டுள்ள விசுவாசத்தையும் எல்லோரும் புரிந்து கொண்டோம்.

எங்கள் முகாமில் மகிழினியின் சமையல் முறை என்றால் எல்லோருக்கும் சந்தோசம். காரணம் அவள் தேநீர் தயாரித்தால் நாங்கள் எல்லோரும் இரண்டு கோப்பை தேநீர் குடிப்போம். அவ்வளவு சுவையாக இருக்கும். நாங்கள் சமைக்கும் போது கறிக்கு உப்புப் பார்ப்பது, புளிவிடுவது எல்லாம் அவள் தான். அத்துடன் எமக்கு ஏதாவது நல்ல சாப்பாடுகள் வந்தால், அதை எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டு பகிர்ந்து கொடுப்பதற்கு நிகர் அவளேதான். தான் உண்ணாவிட்டாலும் மற்றவர்களுக்கு உண்ணக் கிடக்க வேண்டும் என்ற மனம் படைத்தவள் மகிழினி.

ஒருமுறை, எங்கள் பிரிவைப் பதுங்கு குழி வெட்டும்படி கூறினார்கள். அப்போது ‘நான் சைற் எடுக்கிறன்’ என்று கூறி மிகவும் நன்றாக, சுத்தமாக கோடரியால் பக்கத்தை எடுத்தாள். எந்தவொரு வேலையையும் கடமை உணர்வோடு மிகவும் சுத்தமாகச் செய்யவேண்டும் என நினைப்பவள் மகிழினி. பத்து அடி ஆழம்வரை பதுங்கு குழி வெட்டிவிட்டோம். எங்கள் பொறுப்பாளர் இன்னும் இரண்டு அடி ஆழம்வரை வெட்டும்படி கூறினார். அப்போது மகிழினி ’நான் இனி கீழ இறங்கமாட்டன். மேலே நிண்டு மண் இழுக்கிறன்’ என்று கூறியவள், திடீரென்று பதுங்கு குழிக்குள் விழுந்துவிட்டாள். விழுந்தவள் ஏறமுடியாமல் தத்தளித்த காட்சியை இன்று நினைத்தாலும் சிரிப்பாய் வருகிறது.

எங்கள் பிள்ளைகளில் யாராவது ஒரு பிள்ளைக்குச் சுகவீனமென்றால், ஒரு தாயின் உணர்வோடு இரவு பகலென்று சிரமத்தைப் பாராது மருந்துகள் கொடுப்பதில் இருந்து உணவு கொடுத்து உடை துவைத்துக் கொடுப்பதுவரை மனச்சலிப்பின்றி செய்து முடிப்பாள்.

எங்கள் முகாமில் ஓர் நாள் ஒரு தோழியின் பிறந்த நாள். நாமெல்லோரும் குழுமி இருந்தோம். அப்போது பொறுப்பாளர் வந்து ’மகிழினியைக் காணவில்லை எங்கே?’ என்று கேட்டார்.

வெளியிலிருந்து, 'இங்கே நிற்கின்றேன்' என்று குரலைக் கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தோம். துப்பாக்கியுடனும் மேலதிக ரவைக்கூடு வைக்கும் உறையுடனும் நின்ற அவளைப் பார்த்த அனைவருக்கும் அவளின் கடமை உணர்வினை நினைக்க நெஞ்சம் புல்லரித்தது. நாமோ, 'இந்த இடத்தில் ஆமி வருவானா?' என்ற அசட்டுத்துணிவுடன் இருந்தோம். அவள் கூறினாள், 'எதிரி என்பவன் எப்போதும் எந்தக் கணமும எங்களைத் தாக்கி அழிக்கலாம். நாம் பகல் இரவென்று அசட்டையாக இருக்கக் கூடாது. அது எமக்கு அழிவையே ஏற்படுத்தும்' எனச் சிறு பிரசங்கமே செய்தாள்.

பாடசாலையில் நான்காம் வகுப்பு வரை கல்வி பயின்ற இவள் எமது பிரிவுக்கு வந்து புத்தகங்கள் படிப்பதிலும், செய்தித் தாள்கள் படிப்பதிலும் தான் தன் உலக அனுபவங்களை வளர்த்துக் கொண்டாள். இவளிடம் ஒரு சிறப்புத் தன்மை என்னவெனில், ஏதாவது ஒரு புத்தகத்தைப் படித்தால், அதை அப்படியே ஒரு வரியும் விடாமல் ஒப்புவிப்பாள்.

தோழி! உன்னைப் பற்றி வரலாறு எழுதும்படி நீ தோழி துளசிராவிடம் கூறினாய். ஆனால், இன்று துளசிராவுக்கே நாம் வரலாறு எழுதுகின்றோம். இது தான் எமது போராட்டம். விடியும் வரை இது தொடரும்.

**— கிருஸ்ணா**

நன்றி : களத்தில் இதழ், 27.05.1994

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

நிலை: **லெப்**

இயக்கப் பெயர்: **மகிழினி**

இயற்பெயர்: **அருள்வாசகம் சகாயபாமா**

பால்: **பெண்**

முகவரி: **மன்சூர், மட்டக்களப்பு.**

மாவட்டம்: **மட்டக்களப்பு**

வீரப்பிறப்பு: **30.04.1974** வீரச்சாவு: **11.11.1993**

நிகழ்வு: **கிளிநொச்சி பூநகரி - நாகதேவன்துறை படைத்தளம் மீதான தவளை நடவடிக்கையின்போது வீரச்சாவு**

துயிலுமில்லம்: **கனகபுரம்**

மேலதிக விபரம்: **கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## கப்டன் அக்கினோ

போராட்டம்..... இந்தச் சொல்லுக்குள் தான் எத்தனை விதமான உணர்ச்சி அலைகள் அடங்கி இருக்கின்றன.

குடும்பம் என்ற சிறிய பரப்புக்குள் சில மனிதர்கள், சில உணர்வுகளென்று வாழ்ந்த நாம் 'விடுதலை இயக்கம்' என்ற விரிந்த பரப்புக்குள் வந்ததால் எத்தனை விதமான உள்ளங்களை, சந்தோசங்களை, பிரிவுத்துயரங்களை வாழ்வின் உண்மைகளைக் கண்டு கொண்டிருக்கிறோம்.

எமது போரட்ட வாழ்வில் உன்னதமான உள்ளங்களோடு பழகும்போது சந்தோசப்படும் நாங்கள், பிரிவு என்று வருகின்ற போது அதிகமாகத் தாக்கப்படுவதென்னவோ உண்மைதான். கப்டன் அக்கினோவின் உள்ளம் கூட அந்த உன்னதமான உள்ளங்களில் ஒன்றுதான்.

மிகவும் வசதியான குடும்பம். வாழ்வில் பொருளாதாரக் கஸ்டங்களையோ, துன்பங்களையோ கண்டிராத செல்வந்தமான குடும்பச் சூழலின் கடைசிப்பிள்ளைதான் அக்கினோ

'நாங்கள் செல்லமாக வளந்தனாங்கள், போராட்டக் கஸ்ரங்களை எங்களால் தாங்க ஏலாது' என்று சொல்கின்றவர்களுக்கு அக்கினோ வாழ்ந்து காட்டி இருக்கின்றாள். விடுதலை உணர்வுக்கு முன்னால் வேறெந்தப் புற உலக உணர்வுகளும் தாக்குப்பிடிக்க முடியாது என நிரூபித்திருக்கின்றாள். ஏனென்றால்?

அக்கினோவும் ஒரு செல்லப்பிள்ளைதான். பாடசாலை நாட்களில் அக்கினோவைக் கண்டவர்கள். பழகியவர்கள் அக்கினோவைப் பற்றிக் கூறும் தகவல்கள். 'இவள் எப்படி இந்த வாழ்வை ஏற்றுக் கொண்டாள் என ஆச்சரியப்படவைக்கும்.

அக்கினோவின் எடுப்பான தோற்றம் அவளைப் பற்றிய பார்வையில் ஒரு தவறான கணிப்பைக் கொடுத்திருக்கலாம். ஏன்? நாம் கூட.

'இவள் எப்படி எல்லாப் போராளிகளோடும் ஏற்றத் தாழ்வின்றிப் பழகப் போகிறாள்?' என நினைத்ததுண்டு. ஆனால் பழகிய போது புரிந்தது. அவள் இதயத்தில் ஏற்றத் தாழ்வுக்கு இடமில்லை என்று.

அக்கினோவின் அப்பா தமிழீழத்தின் நேதாஜி மாமனிதர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் எங்கள் தலைவனின் கைக்கு இறுக்கமாக வலுவூட்டியவர்.

உண்மை தான் இப்படி ஒரு தந்தைக்குப் பிறந்த குழந்தைகள் எப்படி எங்கள் மண்ணை நேசிக்காமல் இருக்கமுடியும்? அக்கினோவின் அப்பா மட்டுமல்ல அவளது அக்கா கூட எங்கள் அமைப்பில் தான் இருக்கிறாள்.

தமிழீழம் தனது தலை சிறந்த பெண் போராளிகளில் ஒருத்தியை இழந்துவிட்டது. நாங்கள் ஓர் உயர்ந்த, உன்னதமான தோழியை இழந்துவிட்டோம். அந்தத் தோழியின் வீடோ அமைதியைப் பெற்றெடுத்து விட்டது. அந்த வீட்டின் படிகள் அனேகமான நாட்களில் சிங்கள, இந்திய சப்பாத்துக் கால்களையும், துப்பாக்கிக் காவல்களையுமே சந்தித்திருக்கின்றன.

அப்பாவின் தலைமறைவு வாழ்க்கைக் காலத்திலும் அப்பாவின் நிரந்தர மறைவின் பின்னான வாழ்க்கைக் காலத்திலும் அந்தத் துன்ப நிகழ்வுகளின் தாக்கம் அம்மாவை அதிகம் தாக்காது இருப்பதற்காக தனது கலகலப்பையே தாயின் கவசமாக்கினாள் அக்கினோ.

இன்று எல்லாத் துயரங்களையுமே அம்மா தனியாகச் சுமந்துகொண்டிருக்கிறாள்.

அக்கினோ எம்மோடு இருந்தபோது ஒரு நாள்,

'அப்பாவின்ரை படத்துக்கு இடதுபக்கம் என்ரை படமும் வலது பக்கம் அக்காவின்ரை படமும் வைக்க இடம் விடுங்கோ அம்மா' என்று தாயிடம் சொன்னதாகச் சொன்னாள்.

எங்களுடைய ஒவ்வொரு போராளிகளும் ஒன்றை ஆழமாக உணர்ந்திருக்கிறார்கள்.

என்றோ ஒரு நாள் அது இன்றோ.... நாளையோ.... அல்லது இன்னும் சில காலங்களில் பின்னோ இந்த மண்ணிற்கான மரணத்தை

நாம் சந்திப்போம் என்ற உண்மைதான் அது. அதனால்தான் என்னவோ, சண்டைக்குப் போக வேண்டும் என்று எல்லோரும் சண்டை பிடித்துக் கொள்கிறார்கள்.

அப்படித்தான் அக்கினோவும்.

சண்டி என்றதும் அவள் சந்தோசப்படுகின்ற கணங்களைத் தான் பார்த்திருக்கின்றோம்.

விடுதலைப்புலிகள் எல்லோருமே கூறுகின்ற, 'நல்லா அடிபட வேணும். நிறைய ஆயுதங்கள் எடுக்க வேணும் அதுக்குப் பிறகு தான் சாகவேணும் என்பதைத் தான் அக்கினோவும் சொல்லிக் கொண்டிருப்பாள்.

கட்டுவன் சந்தி இராணுவ மினி முகாம் முன்னால் இவள் காவல் நின்ற காலம்..... இவள் தன் குழுவின் இரண்டாவது பொறுப்பாளர் பலாலி இராணுவத்தினர் அடிக்கடி வெளியேற முற்படும் முக்கிய பாதைகளில் கட்டுவன் சந்தியும் ஒன்று, இந்த மினி முகாமிற்கு முன்னால் காவல் நிற்கும் எங்கள் குழுவில் அடிக்கடி உறுப்பினர்களை மாற்ற வேண்டிவரும். ஏனென்றால் அடிக்கடி தாக்குதல் நடக்கும்போதோ, அல்லது வெளியேறும்போதோ எம்மில் பல போராளிகள் வீழ்ந்திருப்பார்கள்,அல்லது காயப்பட்டிருப்பார்கள்.

அக்கினோ வருவதற்கு ஐந்து நாட்கள் முதல் தான் கட்டுவன் நிலையிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் மோதியதில் சுந்தரியுடன் எட்டுப் போராளிகள் வீரமரணமடைந்தனர். அக்கினோ சென்ற நான்கு நாட்களுக்குள் திரும்பவும் அந்த இடத்தில் இராணுவம் வெளியேறியது. கப்டன் சுந்தரி வீரச்சாவடைந்த தாக்குதலில் ஏற்பட்ட எமது தரப்பு இழப்பு அவளை உற்சாகப்படுத்தியிருந்தது போலும், ஆனால் அன்றைய சண்டை முடிவோ வேற மாதிரி இருந்தது. அன்று எதிரிகளை பின்வாங்கச் செய்ததில் அக்கினோவின் துப்பாக்கிக்கு அதிக பங்குண்டு.

அக்கினோவுக்கு கணிசமான ஆங்கில அறிவுண்டு. அத்தோடு எந்தத் துறையிலும் விடயங்களை கிரகிக்கும் ஆற்றலுண்டு. தான் பெற்றிருக்கும் அறிவினை சக போராளிகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு நிறையவே இருந்தது. அதனால்தான் பயிற்சி முகாமில் கூட கடும் பயிற்சிகளுக்கு நடுவேயும் அவள் இரவில் அவர்களுக்காக ஒரு மணிநேரம் ஒதுக்கி வைத்திருந்தாள்.

வவுனியாவில் இராணுவம் வெளியே வந்த காலத்தில் காட்டின் ஒரு பக்கத்தில் இவளின் குழுவும் நின்றது. திசை காட்டியை

(கொம்பாஸ்) எவ்வாறு படிக்கவேண்டும், என்று எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். எந்த நேரமும் வந்து விழுந்து வெடித்துக் கொண்டிருக்கும் செல்களுக்கும் நடுவே ஒரு இடத்தை குறி வைத்து திசை காட்டி மூலம் அந்த இடத்துக்குப் போய் வந்து, பின்னர் தனது குழுவினருக்கும் அவ்வாறே காட்டிக் கொடுத்து, போய் வரப் பழக்கினாள்.

காட்டிலே போர் நடக்கும் போது காடு மாற நேரிட்டால் அதுவே போராளிகளின் இழப்புக்கு மிகப் பெரிய காரணமாகிவிடும். போராளிகளின் இழப்பு ஒரு புறமும், இராணுவ முன்னேற்றம் மறுபுறமுமாகப் பாதகமான தாக்கங்களுக்கு, தான் காரணமாயிருக்கக் கூடாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

வவுனியாவில் இருந்து வந்தவுடன் ஆனையிறவுச் சண்டை ஆரம்பித்து விட்டது. வெட்ட வெளிகளில் இராணுவத்தினரை இறக்க விடாது காவல் செய்யும் பகுதியில் அவள் கடமையில் ஈடுபட்டிருந்தாள்.

அடுத்தடுத்துச் சண்டைகள். ஓய்வெடுக்க எமது போராளிகளுக்கு நேரமில்லை. குண்டுச் சத்தங்களுக்கும் குருதி வெள்ளத்துக்கும் நடுவே எங்கே நாங்கள் ஓய்வைத் தேடுவது? எப்படி ஓய்வெடுப்பது? முப்படைத் தாக்குதலுக்கும் முகம் கொடுத்தபடி முன்னேற வேண்டியவர்களாயிற்றே நாங்கள். களைப்பும் அலுப்பும் இருக்கத்தான் செய்யும். ஆனால் அவையே எங்களைக் கட்டுப் படுத்திவிட முடியுமா? நித்தரை என்பது எங்களை விட்டு நிரந்தரமாகவே வெளியேறிவிட்டால் என்னவென்று எண்ணுபவர்கள் நாங்கள். கண்ணுக்குள் நித்திரை சுழன்று கொண்டிருக்கும். அரைக் கண்ணில் ஆடி ஆடித் தான் நடந்தாலும் கண்மூடிவிட முடியுமா? கண் மூடக் கண் மூட எம் தேசம் காணாமல் போய் விடுமல்லவா? அதனால் தான்..... ஓய்வு இல்லாத தேசத்தின் எந்த எல்லையில் சண்டை நடந்தாலும் அங்கு எட்டி நடந்து கொண்டிருக்கின்றோம்.

ஆனையிறவுச் சண்டையின் வேகம் குறைய மணலாற்றில் சண்டை ஆரம்பித்துவிட்டது. அக்கினோவின் குழுவும் மணலாற்றிற்கு விரைகிறது. மணலாறு எங்கள் தேசத்தின் மையப்புள்ளி. மணலாற்றுக் காடு தான் எங்கள் தாய் வீடு. பிராந்துகளிடமிருந்து செட்டைக்குள்ளாய் எமை வளர்ந்த தாய்க் கோழி. பிராந்திய வல்லரசு ஒன்றை எமது பிரதேசத்திலிருந்து பின் வாங்கச் செய்யும் அளவிற்கு அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்திய இடம். அங்குலம் அங்குலமாக இந்திய இராணுவம் கால் பதித்து தேடியபோதும். தமிழீழத்தின் தலைவரை தக்க வைத்துக் காத்த பெருமை மணலாற்றிற்கு மட்டுமேதான் உண்டு.

குண்டுகளைத் தாங்கித் தாங்கியே மணலாற்றுக் காடு வலிமை பெற்றவிட்டது. உரிமைப்போர் அல்லவா.

உக்கிரமான சண்டைதான். காடு பற்றி எரிகின்றது. எங்கும் ஒரே புகை மண்டலம் தான். மணலாறு மண் அதிர்ந்து கொண்டே இருக்கின்றது. முதல்நாள் சண்டையின் போது அக்கினோ நின்ற பக்கம் இராணுவம் முன்னேறியது. அங்குல நிலம் கூட எதிரியை அசையவிடாத சண்டை. அக்கினோவின் குழுவில் இரண்டு போராளிகள் விழுந்துவிட்டார்கள். ஒரு உடல் கைப்பற்றக் கூடியதாக இருந்தது. ஆனால் அடுத்தது... எங்களுக்கும் அவர்களுக்குமிடையில்... அவர்களுக்கு மிக நெருக்கமாக.....

வீழ்ந்த போராளிகளின் உடல் களை மீட்பதற்காகவே புதிய போராளிகள் விழுகின்ற வரலாறுதானே எம் வரலாறு. போர் நிலைமை உடனுக்குடன் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். அக்கினோ அறிவிக்கின்றாள்.

'உடலை எடுப்பது கஸ்டம்தான் அக்கா. ஆனால் எப்படியும் நான் எடுப்பேன்"

தலை நிமிர்த்த முடியாதளவுக்கு தரையோடு தரையாக வரும் துப்பாக்கி சூடுகளுக்கு அடியில் ஊர்ந்து முன்னேறினாள். எப்படியோ உடலை எடுத்து விடுகின்றாள். அந்த இடத்தில் அனைவருக்கம் ஒரு உறுதி பிறக்கிறது கடைசிவரைக்கும் இச்சண்டையில் எந்த உடலும் எம்மால் கைவிடப்படக் கூடாது என்பதில் எல்லோரும் முனைப்பாக இருந்தோம்.

ஒத்துழைக்க மறுத்த காட்டுச் சூழலாலும், நித்திரையோ குளிப்போ இல்லாத கடமையின் இறுக்கத்தாலும் அநேகமான போராளிகளுக்கு காய்ச்சல் வந்துவிடுகின்றது. அக்கினோவுக்கும் காய்ச்சல் தான்.

காய்ச்சலுடன்தான் மணலாற்றுப் பகுதியில் மகளிர் பிரிவுக்கான மருந்து, உணவு, ரவை விநியோகங்களைப் பொறுப்பெடுத்துச் செய்து கொண்டிருந்தாள்.

இராணுவத்தினர் ஒரு பக்கமாக முன்னேற முயற்சிக்க, அக்கினோ அந்த இடத்துக்கு விரைந்து, போராளிகளுக்கு நிலைமையை விளங்கிக் கொண்டிருக்கும் போது அவளது அடுத்த குழு நின்ற பக்கமாக விமானம் பதிந்து எழுந்தது. நிலைமையை நேரில் பார்ப்பதற்காக அக்கினோ அந்த இடத்திற்கு ஓடினாள்.

இன்னொரு தடவை அந்த விமானம் பதிந்து எழுந்தது.

அக்கினோவின் தசைத்துணுக்குகளும், குருதித்துளிகளும் மணலாற்று மரங்களில் தெறித்தன. அக்கினோ போன்ற நூற்றுக் கணக்கானோரின் இறுதிக் கணங்களை அறிந்து கொண்ட அந்த மணலாற்றக் காடு இன்று மீட்கப்பட்டுவிட்டது. இந்தியப் போரின் பின் இது இரண்டாவது சண்டை, முன்னையை விட இப்போது உறுதியாய் நிற்கும். மணலாற்றுக் காடு இனி வரும் காலங்களில் இன்னும் உறுதியாக எழுந்து நிற்கும். ஏனென்றால் அதற்குத் தெரியும். தன்னுள் உறங்கும் எங்கள் நண்பர்களைப் பற்றி.

*நன்றி : களத்தில் இதழ்*

***24.07.1992***

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **கப்டன்**

*இயக்கப் பெயர்:* **அக்கினோ**

*இயற்பெயர்:* **கலைவாணி இராசரத்தினம்**

*பால்:* **பெண்**

*முகவரி:* **கைதடி, நுணாவில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **26.07.1968**

*வீரச்சாவு:* **08.09.1991**

*நிகழ்வு:* **மணலாற்றில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவு**



## கப்டன் ஈழமாறன் / தினேஸ்

இந்தப் போராட்டத்தில் இணையும்போதே இந்தமண்ணில் வாழும் எம் இனத்தின் உண்மையான வாழ்வுக்காக தமது உயிர்களை தியாகம் செய்வதை பெருமிதத்துடன் ஏற்றுக் கொள்பவர்கள்தான் விடுதலைப் போராளிகள். போராளிகளாகிய எமக்கு ஒன்றுமட்டும் தெரியும், இந்த மண்ணில் மக்களுக்காக மரணிக்கப் போகின்றவர்கள் என்று. ஒரு சண்டைக்கு களம்நோக்கி நாம் செல்லும்போது இதில் வருபவர்கள் யாரோ வீரச்சாவைத் தழுவப் போகின்றோம்,ஆனால் யார் என்பதுதான் தெரியாது. ஒவ்வொருபோராளியும் மனத்துள் நினைப்பான் அது நானாகத்தான் இருக்கவேண்டும் என்று.

எமது விடுதலைப் போராட்டம் எமதுபோராளிகளின் உயிர்த்தியாகத்தாலும், அர்ப்பணிப்பாலும் வளர்க்கப்பட்டுவருகின்றது. எம்மோடு ஒன்றாக இணைந்து வாழ்ந்தஎம் சக தோழர்களை சண்டை முடிந்துவரும்போது, அவர்களது உயிர் அற்ற உடலை தோளிலும் அவர்களது இலட்சியக் கனவை மனதிலும் சுமந்து கொண்டு வருவோம். இது எம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் வழமையான நிகழ்வுதான். ஒருசிலபோராளிகளின் வீரச்சாவுமிகவும் மனதைக் கசக்கிப் பிழிவதுண்டு. அந்தவகையில் என் மனதைவாட்டிய இலட்சியத்தில் மேலும் உறுதியேற்றிய வீரச்சாவுகளில் கப்டன் தினேசின் வீரச்சாவுச் செய்தியும் ஒன்றாகும். அந்தளவிற்கு இவனில் வீரமும் தியாக உணர்வும் விடுதலைப் பற்றும் ஆழமாக வேரூன்றிக் காணப்பட்டன.

தனது பயிற்சியை முடித்து வலிகாமக் கோட்டத்திலே பலாலி இராணுவமுகாமில் இருந்துவெளியேறும் இராணுவத்தினருடனான சண்டைகளில் பங்குகொண்டவன். எம் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடாத்த காவல் அரண்களில் கண்விழித்துக் காவல்

காத்தவன். காவல் அரண்களில் நிற்கும்போதுகூட வேறு இடங்களிலும் இராணுவம் வெளியேறும்போது தனது குழுவுடன் சென்று அங்கு வெளியேற முனையும் இராணுவத்தினரோடு சமராடியவன். இவனது சண்டைக்களங்கள் பல. ஆனையிறவு வரலாற்று யுத்தம் (ஆ.க.வெ), பலவேகய-02 என இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கை, மணலாற்றில் நடந்த பல தாக்குதல் நிகழ்வுகளிலும் பங்கு கொண்டவன். இச்சண்டைகளில் எல்லாம் இவனிடம் இருந்த வீரமும் யுத்ததந்திரங்களும் இவனை ஒரு நம்பிக்கைக்குரிய போராளியாக மாற்றியது. இதனால் இவனிடம் பலபோராளிகளை வழி நடத்தி சண்டைகளை வழிநடத்தும் ஆற்றலும் இருந்தது. இதனால் இவன் பெரிய ஒரு குழுவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டான்.

பூநகரி இராணுவகடற்படை கூட்டுத்தளம்மீது தாக்குதல் நடத்த எம் தலைவர் தீர்மானித்தார். அதற்கான ஆயத்த வேலைகளுக்கான பணிப்புரைகள் எமக்குவழங்கப்பட்டன. நாம் போராளிகளை ஒன்று திரட்டி சண்டைக்கான பயிற்சிகளில் ஈடுபட்டோம். இவன் ஒருமினி முகாமைக் கைப்பற்றும் குழுவிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டான். ஒருநாள் இவன் கடலில் நீந்தும் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும்போது திருக்கை மீன் முள்ளு ஒன்று இவனின் காலில் குத்தி விட்டது. இதனால் இவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தான். வைத்தியசாலையில் இருந்து கொண்டு ஒவ்வொரு நாளும் இவனைப் பார்வையிட நிற்கும் போராளிகளிடம், ''என்னை பயிற்சி எடுக்கும் இடத்திற்கு கொண்டு போய்விடுங்கோ. என்ர பொடியள் என்ன பாடோ தெரியாது (தனது குழு) எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை'' என்று அடம்பிடிப்பான். இவனது தொல்லை தாங்கமாட்டாமல் வைத்தியரிடம் கேட்டால், வைத்தியர் ''இவர் இன்னும் ஒரு கிழமைவரையில் வைத்தியசாலையில் இருக்க வேண்டும். விசம் இன்னும் இருக்கு. சிலபேர் இறந்துகூட இருக்கினம். விட வேண்டாம்'' என்று கூறுவார்கள். இப்படியே இரண்டொரு நாட்கள் கழிந்தன.

ஒருநாள் காலையில் ஒரு பொதுமகனின் சைக்கிளில் வைத்தியசாலையில் எவருக்கும் சொல்லாமல் வந்துவிட்டான். பின் இவனை திருப்பி அனுப்பி வைத்தியசாலையில் பதிந்துவிட்டு வரும்படி அனுப்பி பதிந்துவிட்டு வந்து தனது இயலாத காலுடன் தனது குழுவுடன் சேர்ந்து சண்டைக்கான பயிற்சியை எடுத்தான். எப்போது பார்த்தாலும் பயிற்சி இல்லாதநேரங்களில் தனது போராளிகளை ஒன்றாக வைத்து தனது முகாம் பற்றியும் பல சண்டை அனுபவங்கள் பற்றியும் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றியும் கதைத்துக்

கொண்டிருப்பான். எம்மைக் கண்டால் கதை நின்றுவிடும். அதனால் இவனது குட்டிக் கதாப்பிரசங்கத்தை நாம் ஒளிந்து இருந்துகேட்போம். அந்தநேரங்களில் எல்லாம் இவனது கடமையில் – தனது இலக்கில் – கொள்கையில் எவ்வளவு உறுதியாக இருக்கின்றான் என்பதை உணர்ந்துகொண்டேன்.

இவ்வாறான காலகட்டத்தில் தான் 'யாழ்தேவி' என்றபெயரில் ஒரு படையெடுப்பு நடக்கிறது. இந்தச் சண்டையிலும் தனது குழுவை வழி நடாத்தி இலங்கை இராணுவத்திற்கும் சிங்களதேசத்திற்கும் பெரிய ஒருதோல்வியை – இழப்பை எற்படுத்திய வரலாற்றுச் சமரில் தனது கடமையைத் திறம்படச் செய்தவன். இந்த வெற்றியில் இவனுக்குப் பெரியதொரு பங்குண்டு. தனது குழுவில் பலரை இழந்துவிட்ட நிலையிலும் ஓர் இரு போராளிகளோடுநின்று இறுதிவரை களத்தில் சமராடினான். தனது ஆயுதத்தின் ரவைகள் தீர்ந்ததும் வீரச்சாவடைந்த போராளியின் ஏ.கே. இலகு இயந்திரத் துப்பாக்கியுடன் நின்று எதிரிமீது தாக்குதல் தொடுத்து பல எதிரிகளை எம் மண்ணில் சாய்த்தான்.

இந்தச் சண்டையில் இவனது திறமையையும் வீரத்தையும் கண்முன்னே காட்டியபோது இவன் நிச்சயமாக இவனுக்குக் கொடுக்கப்பட்ட மினி முகாமை (பூநகரியில் உள்ளமுகாம்) கைப்பற்றுவான் என்ற அசைக்கமுடியாத ஒரு நம்பிக்கை என் மனதில் இருந்தது. நம்பிக்கையின் நட்சத்திரமாக இவன் விளங்கினான். பூநகரிச் சண்டைக்கான நகர்வுகளுக்கான ஆயத்த வேலைகளைச் செய்யும்போது ஒவ்வொரு போராளிகளினதும் சகல உடமைகளையும் தானே பார்வையிட்டு ஒழுங்குபடுத்திச் சரி செய்துகொண்டு இருந்தான். சூரியன் தன்னை மறைத்துக் கொள்கிறது. இயற்கையும் எமக்குபூமழை தூவி வழியனுப்புகின்றது. அந்தமழையில் நனைந்தபடி இரவோடு இரவாக இராணுவப் பிரதேசத்துக்குள்ளால் பலமணி நேர நடையின் பிற்பாடு எமக்குரிய முகாமில் இருந்து 1 கி.மீற்றர் தூரத்தில் நிற்கின்றோம். வேறு ஓர் இடத்தில் சண்டை தொடங்கிவிட்டது. உடனடியாக எமது இலக்குகளை நோக்கி வேகமாக நகரத் தொடங்குகின்றோம். குழுக்கள் பிரிந்துசெல்லும் இடத்தில் வைத்து அந்த அந்த இலக்குகளுக்கு குழுக்கள் பிரிந்து நகருகின்றன. இவைகள் அனைத்தும் ஒரு குறுகிய நிமிடநேரத்துக்குள் நடைபெறுகின்றன.

முன்னே சென்று கொண்டிருந்த தினேஸ் திரும்பி வந்து எனது கையைப் பிடித்து சத்தியம் செய்கிறான். அவனது சத்தியவாக்குக்குக் கட்டுப்பட்டு வோக்கியில் அவனைத் தொடர்பு கொண்டு நிலைமையைக் கேட்டபோது அவனிடம் இருந்து கடைசியாக கிடைத்தபதில், ''இன்னும் ஒரு நிமிடத்துக்குள் பிடித்துவிட்டு

உங்களுடன் கதைக்கிறன்'' என்ற வசனம் மட்டுமே. பெரிய வெடியோசைகள், எங்கு திரும்பினாலும் ஒரே பரா வெளிச்சக் குண்டுகள், இராணுவத்தினரின் லேசர் ரவைகள் தணல் தணலாகப் பறந்தன. ஒரு வாணவேடிக்கையே நடந்தது. பலமான துப்பாக்கிச் சண்டை ஒருவரை ஒருவர் எட்டிப் பிடிக்கும் தூரத்தில் வைத்து நடக்கிறது.

இவனைத் தொலைத் தொடர்புசாதனம் மூலம் தொடர்பு கொள்கிறேன். தொடர்பு இல்லை. சிறிதுநேரத்தில் போராளி அறிவிக்கின்றான். முகாம் எமது கட்டுப்பாட்டில் வந்துவிட்டதையும் தினேஸ் வீரச்சாவு என்ற செய்தியும் வருகின்றது. இவனோடு சேர்ந்து இன்னும் பலபோராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொள்கின்றனர். இவன் கடைசியாக வோக்கியில் சொன்ன வசனம் இன்னும் என் இதயத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. பெரிய ஒருவரலாற்றுச் சமரிலே இந்த மக்களுக்காக தன்னை அழித்ததன் மூலம் இன்று இதே மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். இவன் எம் இனம் வாழும்வரை வாழப்போகின்றான். இவனது வீரச்சாவு இவனது பேச்சையும் மூச்சையும் நிறுத்திக்கொண்டதே தவிர எம் மனங்களில் மக்களின் மனங்களில் இலட்சியத்தை இன்னும் வீச்சாக்கியுள்ளது.

*நினைவுப்பகிர்வு:* **வ.செல்வராசா,** *(யாழ். மாவட்டசிறப்புத் தளபதி)*

*நன்றி: களத்தில் இதழ் (25.02.1994).*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **கப்டன்**

*இயக்கப் பெயர்:* **ஈழமாறன் (தினேஸ்)**

*இயற்பெயர்:* **சுப்பிரமணியம் இந்திரகுமார்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **மாதகல், யாழ்ப்பாணம்**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* 05.05.1973 *வீரச்சாவு:* 11.11.1993

*நிகழ்வு:* **கிளிநொச்சி, பூநகரி - நாகதேவன்துறை கூட்டுப் படைத்தளம் மீதான தவளை நடவடிக்கையின்போது வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **கொடிகாமம்**

*மேலதிகவிபரம்:* **கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## கப்டன் ரஞ்சன் (லாலா)

'மக்கள் போராட்டம்' என்ற தமக்கே புரியாத சில தத்துவங்களைப் பேசுபவர்கள் தாங்கள் பேசுவது நடைமுறைக்கு சாத்தியமாகுமா என்பதைப் பற்றி யோசிக்காமல் அதை புலிகள் செய்கிறார்கள்.

ஆகவே கட்டாயம் அதைப் பிழைஎன்றுதான் சொல்ல வேண்டும்.

அப்படிச் சொன்னால் தான் நான் சிறந்த முறையில் அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கிறேன் என தங்கள் இயக்கம் நற்சான்றிதழ் வழங்கும் என நினைத்து எங்களைத் தவிர எல்லோரும் கெரில்லாப் போராட்டத்தை கிண்டல் செய்து வந்தகாலத்தில் நேரடியாக பொதுமக்கள் கலந்து கொள்ளும் இராணுவத்தாக்குதல் ஒன்றை நடைமுறையில் முதன் முதலாகநடைமுறைப்படுத்தியவன் ரஞ்சன்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத் தாக்குதல் மூலம் ''இதுவும் மக்கள் போராட்டம் தான் புரிந்துகொள்ளுங்கள்! '' எனபாடம் புகட்டியவன் ரஞ்சன்.

இன்று இந்தமக்கள் எழுச்சிகளைக் காணும் போது உனது தியாகங்கள் வீண் போகவில்லை நாளைய தமிழீழ வரலாற்றில் உனது பெயரில் இன்றைய சிறுவர்களால் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்றெல்லாம் உன்னிடம் சொல்லவேண்டும் போல இருக்கும், கண்ணெதிரே நீ  இல்லாவிட்டாலும் என் எண்ணங்களை என் உள்ளத்தில் நிறைந்திருக்கும் உன்னிடம் பகிர்ந்துகொள்ளஎன்றுமே நான் தயங்குவதில்லை.

ஒவ்வோர் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியும் உன்னை எனக்கு ஞாபகப்படுத்தியே தீரும். இயக்கத்தின் முழுநேரப் போராளியாக

எழுபத்தி எட்டாம் ஆண்டில் நீ அடியெடுத்து வைத்த நாள் அதுதானடா. 78 ஆம் ஆண்டுமார்கழியில் இயக்க ரீதியாக அறிமுகமான நீ துண்டுப் பிரசுரம் கொடுத்தல், இயக்கத்திற்கு ஆட்சேர்த்தல், எதிரியின் நடமாட்டங்களை எமக்குத் திரட்டிதருதல் போன்ற வேலைகளை அதுவரையில் செய் துவந்தாய்.

சிறு அசைவைக்கூட மிகவும் திட்டமிட்டே நடைமுறைப்படுத்த வேண்டிய அந்தக் காலகட்டத்தில் உனதுபணி இயக்கத்திற்கு மிகவும் தேவையாக இருந்து. கட்டையான கறுவலான உனது உருவத்தைக் காணுபவர்கள் உன்னை இயக்கத்தைச் சேர்ந்தவன் என ஒருபோதும் நினைக்கமாட்டார்கள். உனது உருவ அமைப்பு இரகசியமான வேலைகளை உன் மூலம் செய்துகொள்ளுவதற்கு மிகவும் ஏற்றதாக இருந்தது.

விடுதலைப் போராட்டத்தில் முழுநேரமாக இணைந்து கொண்ட ஆரம்பகாலத்தில் நீ பட்ட கஷ்டங்களை இன்று விடுதலைப் பாதையில் காலடி எடுத்துவைக்க எண்ணும் அத்தனை போராளிகளும் கண்டிப்பாக தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள். அப்போதுதான் சுதந்திரத்தின் பெறுமதி எத்தகையது என்பதை அவர்களால் புரிந்து கொள்ளமுடியும்.

நீயும் நானும் குறிப்பிட்ட அக்காட்டில் கொட்டில் அமைத்து பண்ணை வேலைகளை செய்வதற்காகப் புறப்பட்டோம். யாழ்ப்பாணத்தில் இருந்து வழியில் சில அத்தியாவசியப் பொருட்களுடன் அங்கே சென்றோம். மழையினாலும் புயலினாலும் அந்தப் பாதையில் சீர்குலைந்து காணப்பட்டது பலத்த சிரமத்தின் மத்தியில் எமது பிரயாணத்தை மேற்கொண்டோம். எமது பிரயாணத்தின் கடைசி எட்டுமைல்களையும் நடந்தே போகவேண்டியிருந்து. இவ்வளவு தூரம் நடந்து போவது உனக்கு பழக்கமில்லாத விடயமாக இருந்தாலும் உனது ஆர்வம் கையில் வாளியையும் பொருட்களையும் மாறி, மாறித் தூக்கிச் சென்று எமது பிரயாணம் முடியும் இடம்வரை கொண்டு போகவைத்து. இரவு பத்துமணியளவில் நாம் சந்திக்கவேண்டியவரின் வீட்டுக்குச் சென்றதும் 'அப்பாடா' என்று நிம்மதியுடன் எமது நோக்கத்தைத் தெரிவித்தோம். ஆனால் நாம் எதிர்பாத்துச் சென்றவர் மனதில் என்னதான் குடியிருந்ததோ? கையை விரித்துவிட்டார்.

மீண்டும் திரும்பி எட்டுமைல்கள் நடந்துவந்து பஸ் மூலம் யாழ்ப்பாணம் திரும்பிவந்தோம். பளையில் கிடுகு வாங்கிக்கொண்டு மீண்டும் அங்கே சென்றோம். போக்குவரத்து மேற்கொள்வது சிரமமாகவே இருந்து. எமது பிரயாணம் மூன்றுநாட்கள் தொடர்ந்தது,

இரவில் நடைபாதையே எங்கள் மஞ்சம். கொட்டும் மழையும் கிடுகிடுக்கும் பனியும் எங்கள் இலட்சிய உணர்வை மீண்டும் பட்டை தீட்டின.

வாகனப் பிரயாணமுடிவில் எட்டுமைல் தூரமும் மாறிமாறி கிடுகுக் கட்டைத் தூக்கிக்கொண்டு சென்றோம். எமக்கென ஒரு கொட்டில் போட்டு அதனுள்ளேயே படுத்து உறங்கிய அன்று ஏற்பட்ட உணர்வு அலாதியானதுதான். ஒரு ஏக்கர் காணியைத் திருத்தத் தொடங்கினோம். இடையில் இயக்கத்தின் வேறு அலுவல்களுக்காக நான் யாழ்பாணம் வந்துவிட்டேன்.

உனக்குப் பின்வந்த வேறு சிலருடன் நீ இணைந்து நீ அந்தக் காணியைச் சிறந்ததொரு பண்ணையாக்கினாய். விவசாயம் என்றால் என்னவென்றே தெரியாதவர்களுக்கு மிளகாய்ச் செய்கையைப் பற்றி படிப்பிக்கக் கூடியளவு அனுபவம் உன்னை ஆக்கிவைத்தது.

'சித்தாந்த வேறுபாடு' என்ற பெயரில் இயக்கத்தை நாசஞ் செய்யப் புறப்பட்ட குழு உன்னையும் இயக்கத்தைவிட்டு பிரிக்க பெருமுயற்சியெடுத்தது. நீ அவர்களுக்கே புத்திசொல்லி வந்த நீங்கள் வடிவாகச் சாப்பிட்டுவிட்டுப் போங்கோ என்று சாப்பாடு கொடுத்து அனுப்பிவைத்தாய். இவனுக்காக இவ்வளவு தூரம் அலைந்தோமே என்று புறுபுறுத்துவிட்டுச் சென்றனர் அவர்கள். 'தம்பி'யின் மீது நீ கொண்டிருந்த நம்பிக்கை தொடர்ந்து இயக்கத்தில் உன்னை இயங்க வைத்தது. மாவட்ட அபிவிருத்திச்சபை என்னும் மாயமான போராட்டத்தில் இடையே வேடிக்கைப் பொருளாகக் கொண்டு வந்தனர் கூட்டணியினர். கிராம யாத்திரை என்ற பெயரில் அவர்களது நாடகம் ஆரம்பமாயிற்று.

கூட்டத்தில் கேள்விகேட்ட இளைஞர் குழப்பவாதிகள், அரசின் கைக்கூலிகள் என்று முத்திரை குத்தினர் பதில் சொல்லத் தெரியாத கூட்டணியினர். நீயும் சங்கரும் சீலனும் உங்களுக்குத் தெரிந்தவழியில் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டீர்கள். S.S.O. பதவிகளுக்காகவும் வங்கிப் படிவத்துக்காகவும் ஏங்கித் திரிந்த கூட்டணியின் தொண்(குண்)டர்கள் சீலனைக் கட்டிப் பிடித்தனர். கட்டிபிடித்தவரின் பின்னால் சென்று உனது சிலிப்பரை தூக்கி முதுகில் வைத்துக் ''ஹான்ஸ் அப்'' என்று நீ சொன்னதும் நிலை குலைந்தனர் அந்த வீராதிவீரர்கள். நீ வைத்திருப்பது என்ன என்பதை திரும்பியும் பார்க்காமல் தமது எஜமானர்களை நோக்கி ஒடித்தப்பினர். உனது சமயோசித புத்தி அன்று சீலனைக் காப்பாற்றியது.

நீர்வேலி வங்கிப் பணத்தைக் காப்பாற்றுவதில் நீ எடுத்துக் கொண்ட சிரமங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை இராணுவத்தினர்

குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றால் அதற்குக் கொஞ்சநேரம் முன்தான் நீ அங்கிருந்து அவற்றை அகற்றியிருப்பாய். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன்முதலாக இராணுவத்தினர் மீதான தாக்குதலை மேற்கொண்ட மூவரில் ஒருவன். மக்கள் நடமாட்டம் நிறைந்த யாழ் நகரில் சீலனின் தலைமையில் கைத்துப்பாக்கியுடன் அச்சாதனையைப் புரிந்தீர்கள்.

இராணுவத்தினரின் றைபிளைப் பாதுகாப்பாக வைத்துவிட்டு நாம் தங்கியிருந்த இடத்தை நோக்கி வந்தபோது பக்கத்துவீட்டு அக்கா ''சம்பவம் முடிந்து பெடியன்கள் சென்றபோது நான் கண்டேன்'' என்று சொன்னா. என்ன மாதிரி சம்பவம் நடந்தது என்று எதுவும் அறியாததுபோல விசாரித்துத் தெரிந்து கொண்டாய். நல்லவேளை அவ பதற்றத்தில் இருந்ததாலும் நேடியாகக் காணாததாலும் அந்த இடத்தைவிட்டு மாறவேண்டிய நிலைமை ஏற்படவில்லை.

பயிற்சிக்காக இந்தியா சென்றாய், பயிற்சிமுகாமின் 'கொத்து ரோட்டி ஸ்பெசலிஸ்ட்' நீ. ஏற்கெனவே உன்னிடம் இருந்த சுறுசுறுப்பு, துணிவு என்பவையும் கராட்டித் திறமையும் பயிற்சி முகாமில் உனது திறமையில் பளிச்சிட வைத்தன.

மீண்டும் புலேந்திரனுடன் தமிழீழம் வந்தாய், வரும் போதுவள்ளக்காரர் உங்களைப் பேசாலைக் கரையில் இறக்கிவிட்டனர். கரை இறங்கிய உங்களை அங்கே குடியிருந்த சிங்களக் காடையர் பிடித்துக் கொண்டனர். எமது மண்ணில் அண்டிப் பிழைக்கவந்தவர்கள் எம்மையே அதிகாரம் செய்து இந்த மண்ணிற்குச் சொந்தக்காரர்களான எம்மை அடிமைகளாக நடத்துகிறார்களே என அனைவரும் குமுறினோம்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் 30 காபைன் சகிதம் புகுந்து விளையாடினாய். தாக்குதல் முடிந்து வரும்போது காயமுற்ற ஒவ்வொருவரையும் கட்டிப்பிடித்து அழுதாய் உனது கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியதை அன்றுதான் முதன்முறையாகக் கண்டேன்.

உமையாள்புரத் தாக்குதல், கந்தர்மடத் தாக்குதல் என்பனவும் உன் திறமையைப் பளிச்சிட வைத்தன. யாழ். கச்சேரியில் இராணுவத்தினருக்கும் கூட்டணியினரும் பாதுகாப்பு மகாநாடு கூட்ட இருந்த சமயத்தில் முதல் நாளிரவு மகாநாடு நடக்க இருந்த மண்டபத்திற்கு குண்டுவைத்துப் பல்வேறு நடவடிக்கைகள் மூலமாகவும் எமது எதிர்ப்பைத் தெரிவித்தோம். அன்று மண்டபத்தின் உட்சுவர்களில் பூவரசம் இலைகளாலும் பூக்களாலும் ''பாதுகாப்பு

மகாநாடு யாரைப் பாதுகாக்க?'' என்று எழுதியிருந்தாய். உனது கேள்வி மக்களைச் சிந்திக்க வைத்து பத்திரிகைகள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்தன. அன்று பாதுகாப்பு மகாநாடு கூடிய கூட்டணியினர் நீண்டகால இடைவெளிகளின் பின்னர் மெல்லமெல்ல வந்து பதுங்குகுழியில் பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் பருத்தித்துறையில் ஐ.தே. கட்சியின் தலைமை வேட்பாளராக இருந்த இரத்தினசிங்கம் உனது ஆசிரியர். ஆனாலும் உனது பார்வையில் துரோகி என்றே இருந்தது. உரிய இடத்திற்கு அனுப்புவதற்கு உனது பங்கையும் வழங்கினாய்.

மீசாலையில் சீலனை இழந்த வேதனை சில நாட்களாக உன்னுள்ளத்தில் குடிகொண்டிருந்தது. உனது உணர்வுகளுக்கு வாய்ப்பளிக்க 'திருநெல்வேலித் தாக்குதல்' சந்தர்ப்பமளித்தது. மதிலுக்குமேல் நடப்பது உனக்குத் தெரியாமலிருக்கும் என்பதற்காக சீமேந்துக் கற்களை உனது உயரத்திற்கு ஏற்றவாறுஅடுக்கினாய் தனியே நின்று தலைவருக்கு அடுத்ததாக நின்றது நீதான். தலைவருக்கு அருகில் கிறனைட் வீழ்ந்ததும் பதறிவிட்டாய். தமிழ் மக்களின் அதிர்ஷ்டம் கைக்குண்டு சக்தியிழந்தது. அன்றைய தாக்குதலில் சுறுசுறுப்பாக எல்லா இடமும் திரிந்தாய். ஒருவரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டது. அம்மானை இழந்ததால் இந்த வெற்றியினை நினைத்து பூரிக்கும் நிலையில் நாம் இல்லை.

தொடர்ந்து வந்த இனக்கலவரம் ஆயிரக்கணக்கில் இளைஞர்களைப் போராட்டத்தில் உள்வாங்கியது. கட்டுப்பாட்டை கருத்தில் கொண்டுசில நூறு பேரைமட்டுமே நாம் எம்முடன் இணைத்துக் கொண்டோம். அப்போதுநடந்த இரண்டு பயிற்சி முகாம்களில் முதலாவதற்கு பொன்னம்மானும் இரண்டாவதற்கு நீயும் பொறுப்பாக விளங்கினீர்கள். பயிற்சி முகாம் முடிந்துவந்ததும் அதிரடிப் படையினர்மீதான தாக்குதலை பருத்தித்துறையில் நடத்தினாய். பருத்தித்துறை பொலிஸ் நிலையம்வரை அதிரடிப் படையினரை ஓட ஓடவிரட்டினாய்.

அதன் பின்னே பருத்தித்துறை பொலிஸ் நிலையம் உனது தலைமையிலான பொதுமக்களின் போராட்டத்தில் உன்னிடம் வீழ்ச்சியடைந்தது. ஆயுதங்கள் பொலிஸ் நிலைய ஆவணங்களுடன் நீயும் நானும் பொலிஸாரிடம் பறிகொடுத்த மோட்டார் சைக்கிளும் எமது கையில் கிடைத்தன.

மோட்டார் சைக்கிள் பறிகொடுத்த அந்தச் சம்பவத்தை நினைக்கையில் உனது நிதானத்தை மெச்சிகொள்வேன். கடல்

வழியாகப் பயணம் மேற்கொள்ளும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள நீயும் நானும் பயணமானோம் வழியில் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டோம் எமது பையை சோதனையிட்ட பொலிஸார் ''இதென்னடா கிறனைட்டோ'' என்று கேட்டபடியே எடுத்தபொருள் கிறனைட்டாக இருக்கவே அதிர்ச்சியடைந்து நின்ற அந்தக் கணநேரத்தில் பொலிஸாரிடமிருந்து பிலிம் றோஸ், படங்களை என்பவற்றைப் பறித்துக் கொண்டு "ஓடி வா'' என என்னையும் கூட்டிக் கொண்டு ஒடினாய். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்தான். எம்மால் பறிகொடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் எமதுகையில் கிடைத்தது அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

பொலிஸ் நிலைய ஆவணத்திலிருந்து கிடைத்த விபரங்களின்படி துரோகி நவரட்ணத்திற்கு உரிய தண்டனை வழங்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாய்.

ஆனால் உனது சேவை நீண்டகாலம் தமிழினத்திற்குக் கிடைக்கக் கூடாது என்ற துரிஷ்டமோ விதி உன்னையும் எம்மையும் பிரித்து விட்டது. வாகனத்தில் சீலனின் போஸ்டரை ஏற்றிவந்து கிட்டுவின் காருக்கு வழிகாட்டியாக நீ மோட்டார் சைக்கிளில் விக்கியுடன் வந்துகொண்டிருந்தாய். தொண்டமானாற்றில் அதிரடிப்படையினர் உன்னை வழி மறித்தபோது நீ அவர்களை போக்குக் காட்டிவிட்டு தப்பமுயன்றாய் ஜீப்பினால் அதிரடிப் படையினர் உன்னை மோதமுயன்றனர். வெட்டவெளிப் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளை நீ திருப்பி அது எதிர்பாராமல் சேற்றினுள் சிக்கியது. சேற்றிலிருந்து எழும்பி தப்பியோடினீர்கள். அதிரடிப் படையினர் சுட்டனர் தப்பி ஒடிய நீங்கள் ஒரு சைக்கிளை எடுத்தபோது சைக்கிள் உரிமையாளர் தடுத்தார். நிலைமையை விளக்கியபோதும் கொடுக்கவில்லை. முடிவு உங்களை நெருங்கிவந்தது. அதிரடிப் படையினர் துப்பாக்கி வேட்டுகளுக்கு நீ இரையானாய்.

உனது உயிரைக் கொடுத்து பின்னால் காரில் வர இருந்த அனைவரது உயிரையும் நீ காப்பாற்றினாய். உனது தியாகத்தை அர்த்தமுள்ளதாக்கி விட்டாய்.

உன் உயிரைப் பலியெடுத்த அதிரடிப்படையினர் நெடியகாட்டில் எமது கண்ணிவெடியில் பலியாகிவிட்டனர். அவர்களிடம் இருந்து கைப்பற்றிய நாட்குறிப்பொன்றில் உன்னைச் சுட்டதுதானே என ஒருவன் குறிப்பிட்டிருந்தான்.

அனைவரது இதயத்திலும் 'கட்டைக் கறுவல்' ரஞ்சன் நீக்கமற நிறைந்திருக்கிறான்.

*நினைவுப்பகிர்வு:* **அஜித்**

*வெளியீடு : களத்தில் இதழ்*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **கப்டன்**

*இயக்கப் பெயர்:* **லாலா ரஞ்சன்**

*இயற்பெயர்:* **கனகநாயகம் ஞானேந்திரமோகன்**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **ஓடக்கரை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **02.09.1960**

*வீரச்சாவு:* **13.07.1984**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம் தொண்டமானாற்றுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையின் சுற்றி வளைப்பின்போது வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **எள்ளங்குளம்**

*மேலதிக விபரம்:* **எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## மேஜர் அல்பேட்

நாம் ஏராளமான மரணத்தைக் கண்டுவிட்டோம். தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது. வீரமரணம் எமக்குப் பரீட்சையமானது. சாவைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்றுதான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்தித்தபோது எம் இதயம் உருக்குலைந்து தளர்ந்து, எம் உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிபடுத்தமுடியும்.

6 அடி 2 அங்குலமான உன் உயரமான (நீளமான) உடல் அசையாது கிடந்தநிலை கண்டு மக்கள் பதறியதை, உன் கிராமமே கலங்கியதைக் கண்டு உன் மரணம் தமிழ் மக்களை எந்தஅளவுக்குப் பாதித்திருகின்றது என்பதை அறிந்து நாம் துடித்தோம்.

எம் முகாம்களில் ஒன்று இராணுவத்தினால் தாக்கப்படுகிறது என்பதை அறிந்து எம்மை விடுவிக்க விரைந்த நீ எம் அன்புப் பிணைப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டாய். கிராமச் சனங்களோடு பழகும் போது அந்தச் சனங்களோடேயே ஒன்றிப் போகும் உன் எளிமையான தோற்றம், எம்மை எல்லாம் பிரமிக்கச் செய்தது.

எம் புலம்பலைநிறுத்திவிட்டு அல்பேட்டைப் பற்றி..

பண்டிதர் ஆயுதக் கிடங்குகளுக்குப் பொறுப்பாக இருந்து வேலைசெய்த காலத்தில் பண்டிதருக்கு அடுத்தபடியாக இருந்துவேலை செய்து இயக்கத்தின் நன் மதிப்பைப் பெற்றவன், ‘கந்தையா’ என்று செல்லமாக பண்டிதரால் அழைக்கப்பட்டவன். அச்சுவேலியில் நடைபெற்ற எம் தளம் மீதான இராணுவமுற்றுகையில் தன்னுடைய துப்பாக்கியில் இருந்தகுண்டுகள் தீரும்வரை போராடி வெற்றிகரமாக வெளியேறியவன். பண்டிதரைப் பலிகொண்டஅந்தப்

பெரிய முற்றுகையில் இருந்து வெற்றிகரமாக வெளியேறியதே அவனுடைய திறமைக்குச் சான்றாகும்.

பண்டிதரின் மறைவுக்குப் பின் ஆயுதக் கிடங்குகளின் பொறுப்பாளராகப் பணியாற்றி பண்டிதர் இழப்புக்கு ஈடு செய்தவன். 1982 ஆம் ஆண்டு தொடக்கம் தன்னைஎம் இன விடுதலைக்காக அர்ப்பணித்துப் பணியாற்றியவன். அல்பேட்டைக் காணும் யாரும் போரிடுவதில் அனுபவம் மிக்கவன் என்பதை தவறின்றி ஊகிக்கமுடியும். முதல் பார்வைக்குஅவன் வயது இருபதுக்குமேல் இருபத்துநாலுக்கு உள்ளதாகவே இருக்கும் என்று தோன்றும். ஆனால் வெய்யிலிலும் காற்றிலும் அடிபட்டிருந்தஅவன் முகத்தையும் கண்களின் அருகிலும் நெற்றியிலும், வாயின் பக்கங்களிலும் நுண்ணிய இழைகளாக விழுந்திருந்த சுருக்கங்களையும் சிந்தனையின் ஆழ்ந்த களைத்த கருவிழிகளையும் உற்றுகவனித்தபின் அவன் வயதில் இன்னும் பத்து ஆண்டுகளைக் கூட்டலாம் போலிருக்கும்.

அல்பேட் கோபித்ததை, கோபப்பட்டதை நாம் காணவில்லை என்றே கூறலாம். ஏனோ தெரியவில்லை அவனுக்குக் கோபம் வருவதில்லை. நாம் சிலவேளைகளில் வேண்டுமென்றே சீண்டுவோம். அப்போதுகூடஅவன் எருமை மாட்டில் மழை பெய்வதுபோல இருப்பான். அன்பினால் வழிநடத்தி, அரவணைப்பால் பாதுகாத்து,அவன் வளர்த்த அவனுடைய வீரர்கள், அல்பேட்டைப் போலவே உருவாகி இருப்பதைக் கண்டுவியப்புடன் அல்பேட்டுக்குத் தலை வணங்குகின்றோம்.

குழந்தைகள் என்றால் அல்பேட்டுக்கு அலாதிபிரியம். குழந்தைகளோடு பழகும்போது அவனும் ஒரு குழந்தையாகி மழலைமொழி பேசுவதைக் கண்டு நாம் சிரித்த பொழுதுகள் ஏராளம்.

எமது முகாம்களில் அல்பேட்டைச் சுற்றி ஒரு மழலைப் பட்டாளமே இருக்கும். அந்த சின்னஞ் சிறுசுகள், அல்பேட்டைக் காணாமல் தவித்த தவிப்புக்கள், அவர்களைப் பொறுத்தவரையில், அவன் கோவிலுக்குப் போய்விட்டான். கோவிலிலிருந்து வருவான். வரும்போதுஅவர்கள் அடிக்கடிகேட்ட, சொல்லிவிட்ட சாமான்கள் வேண்டி வருவான். அல்பேட் அவர்களை 'குட்டிச் சாத்தான்' என்று அழைப்பது வழக்கம் அந்தக் குட்டிச் சாத்தான்கள் அல்பேட் கோவிலுக்குப் போய்விட்டதை, போய்விட்ட செய்தியை மிகவும் சந்தோஷத்துடனும் மிகுந்த குதூகலத்துடனும் தமக்குள்ள பரிமாறிக் கொண்டார்கள்.

அவர்கள் அந்த மழலைகள், அல்பேட் கோவிலுக்குப் போய் திரும்பி வருவான் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது இராணுவத் தந்திரத்துக்கமைய கோட்டையில் இருந்து எதிரிகளைவெளியில் வராமல் தடுக்கும் பொறுப்பும் கோட்டை மீதான தொடர்ந் ததாக்குதலை நடத்தும் பொறுப்பும் அல்பேட்டிடம் கொடுக்கப்பட்டிருந்தது. தனது பணியைச் செவ்வனே செய்து முடித்து எமது வெற்றிக்கு வழிவகுத்தவன்.

ஒருநாள் விடியற்காலை அல்பேட் தன் முகாமில் உள்ள தோழர்களை தினசரி காலைப் பயிற்சிக்குத் தயார் படுத்திக் கொண்டிருக்கையில், தொலைத் தொடர்புசாதனம் (வோக்கி ரோக்கி) அலறியது. அவன் வோக்கியை இயக்கி அழைத்த இடத்துடன் தொடர்பை ஏற்படுத்தியபோது, சுதுமலையில் உள்ள எமது முகாம் ஒன்று இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டும் செய்திகிடைத்தது. அல்பேட் தன் தோழர்களைப் பார்த்து உரக்க அழைத்து விரைந்து, ஆயுதங்களுடன் வானில் (வாகனம்) ஏறிவிரைந்தான். வான் இணுவில் பகுதியால் சுதுமலையை அண்மித்தபோது மூன்று 'பெல் ஏ.பி. 412 ரக ஹெலிகாப்டர்கள் அப்பகுதியை சுற்றிச் சுற்றி மெசின் கண்ணினால் குண்டுமழை பொழிந்து கொண்டிருந்தது.

மேலே வானத்திலே வட்டமிட்டுக் கொண்டிருந்த அலுமினியப் பறவைகளில் ஒன்று உயரத்தில் இருந்து பாய்ந்து மலையில் வழுகிவருவதுபோல மிகமிக வேகமாக வாகனத்தை நோக்கிப் பாய்ந்துவந்து '50 கலிபர் மெசின்கன்'னினால் சுட்டுத் தள்ளியது. குண்டுவரிசைகள் வாகனத்திற்கு மிக அருகாக நிலத்திலே கோடிட்டுச் சென்றது. குறி தவறிவிட்டது. அல்பேட் தன் தோழர்களைப் பார்த்து 'டே, தும்பியில் இருந்து சுடுறாங்கள் கவனமாக இருங்கோ' என்று கூறி முடிக்கவும், (பெல் ஏ,பி, 412 ஹெலிகாப்டர்களை நாங்கள் 'தும்பிகள்' என்று அழைப்பது வழக்கம்) உருமறைப்பு வர்ணம் பூசப்பட்ட இன்னொரு அலுமினியத் தும்பி பக்கவாட்டாக தாழப்பறந்துவந்தது. ''சுடப்போறான், வானை எங்காவது ஒருபுறம் திருப்பி ஒதுக்கு'' என்று கத்தினான் அல்பேட். வான் ஒதுங்கஅல்பேட் தோழர்களுடன் கீழேபாய்ந்தபோது விமான எஞ்சின் கடகடப்புச் சத்தத்துடன் மெசின் கண்ணின் இடைவிடாத குண்டுச் சத்தத்துடன் தும்பி தாழப்பறந்துசென்றது. வானுக்கு முன்பாக குறுக்குப்பாட்டாக குண்டுவரிசை மண்ணிலே கோடிட்டது. குறிதவறி விட்டார்கள். மறுபடியும் இன்னும் அருகாக அல்பேட்டும், வானும், சேதமின்றித் தப்பித்துக் கொண்டது.

அல்பேட் தன் ''வோக்கி ரோக்கியுடன்' முகாமுக்குத் தொடர்பு கொண்டபோது, முகாமுக்கு பின்பாக ஹெலிகாப்டர்கள்

இராணுவத்தினரை இறக்கிய தோட்டப்பகுதியான இடத்திற்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டது. குழு அவ்விடத்தை அணுகியபோது இராணுவக் கமாண்டோக்கள் தாம் இறங்கிய இடத்தில் சிலரை நிலைப்படுத்திவிட்டு, மற்றும் சிலர் முகாமைநோக்கி சென்று கொண்டிருந்தனர்.

அல்பேட் கிளர்ச்சியுற்றான். ஆனால் அதுசாவு குறித்த அச்சமில்ல. மிக, மிக வீரமுள்ள பதற்றமற்ற மனிதர்களுக்க இயல்பான ஒன்று. ஆபத்து பற்றிய முன்னுணர்வுதானும் இல்லை இது. அவன் கவலைப்பட்டது கமாண்டோக்களை எப்படியாவது தடுக்கவேண்டும்.

தோட்டங்களில் சிலசில இடங்களில் மரவள்ளிச் செடிகள் மிக அழகாக செழிப்பாக செறிவாக வளர்ந்திருந்தது. உயர்ந்து செழிப்பாக செறிவாக வளர்ந்திருந்த மரவள்ளிப் பற்றைகள் ஒளியைப் புகவிடாமல் இருட்டைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

அல்பேட் தனது குழுவினர் சகிதம் அவர்களைத் தாக்கத் தொடங்கினான். இராணுவத்தினர் 2 அங்குல சிறிய மோட்டார் சகிதம் எதிர்த்தாக்குதல் நடத்தினர். முன்னேறிய இராணுவக் கொமாண்டோக்கள் மீதும் பலத்த தாக்குதல் நடத்தப்பட்டது. முன்னேறியவர்கள் மீதும் தாக்குதல், நிலைகொண்டு காவல் செய்து கொண்டிருப்பவர்கள் மீதும் தாக்குதல், வானத்தில் சுற்றிக் கொண்டிருந்து இவர்களுக்கு காவல் செய்யும் அலுமினியப் பறவைக்கும் தாக்குதல், பலமணிநேரம் இடைவிடாததாக்குதல்.

கமாண்டோக்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள் பின்புறத்தில் அவர்களை விமானம் ஏறவிடாமல் செய்வதற்காக யமனைப் போல் நின்று கொண்டிருந்தான் அல்பேட். எனவே அல்பேட் குழுவின் மேல் பலத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பலவர்ணம் பூசப்பட்ட பெல் ஏ.பி. 412 - ரக ஹெலிகாப்டர்கள் மூன்றும் தம்முடைய எம் 60 ரக மெசின் கன்னினாலும் வட்டமிட்டுத் தொடர்ந்து தாக்குதலை நடாத்தின. அல்பேட் குழுவினரை நோக்கிவந்த மோட்டார் குண்டுகள் வெடித்துக் கொண்டிருந்தன. திடீரென்று அல்பேட் சுருண்டு விழுந்தான். இடது கண்ணுக்கு கீழே பெரிய ஓட்டை. அதிலிருந்து குருதி ஊற்றெடுத்துப் பாயும் நீர்த்தாரைகள் போல பாய்ந்தது. அல்பேட்டைத் தூக்கிக் கொண்டு சிலர் பின் விரைகின்றனர். அல்பேட்டுக்கு சிகிச்சை அளிப்பதற்கு முன்பாகவே அவன் தன் உயிரை இந்த மண்ணின் விடுதலைக்காக அர்ப்பணித்துவிட்டான்.

நினைவுப்பகிர்வு: **கிட்டு**

*நன்றி – களத்தில் இதழ்*

*தை 1986.*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **மேஜர்**

*இயக்கப் பெயர்:* **அல்பேட்**

*இயற்பெயர்:* **ச. கந்தையா ரூபதநிதி**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **அச்சுவேலி தெற்கு, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **24.06.1961**

*வீரச்சாவு:* **21.12.1985**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம், சுதுமலையில் எமது முகாமொன்றினை சிறிலங்காபடையினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **எள்ளங்குளம்**

*மேலதிக விபரம்:* **எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டடப்பட்டுள்ளது.**



## மேஜர் கனீபா

சாதிக்கவேண்டும் என்பதன்றிவேறுசிந்தனைகள் அவளிடம் இருக்கவில்லை. ஓயாத அலைகள் 02 இன்போது தனக்குரிய பகுதியை நிச்சயமாகப் பிடிப்பேன். சண்டையில் இரண்டுஅதிகாரிகளைப் பிடித்து போனமுறை (1998.02.01) உள்ளே வந்து வீரச்சாவடைந்தவர்களை என்ன செய்தீர்கள் என்றுகேட்பேன் என்றுதான் சண்டை தொடங்கும்வரை சொல்லிக் கொண்டிருந்தாள்.

சண்டையின் போதான அவளின் அணியின் நகர்வு இலகுவாக இருக்கவில்லை ஒரு கட்டடக் காடாக இருந்த பெருந்தளத்தை நெருங்குவதற்காய் ஆங்காங்கே சிலமரங்கள் கொண்ட நீண்டவயல் வெளியை எதிரியின் கண்காணிப்பு நிலைகள், அவதானிப்புக் கோபுரங்கள் என்பவை அறியாதவாறு மிக்ககவனமாகக் கடந்து வரிசைவரிசையாக அமைக்கப்பட்டிருந்த முட்கம்பிவேலிகளை சுருள் கம்பி வலைகளை கண்ணி வெடிகளை அகற்றி சூடுகளை வழங்கியவாறு மண் அணை மீதிருந்த வேலியைப் பிரித்துஅதன் பின்னிருந்த முட்கம்பிவேலிகளையும் வெட்டிஅதன் வழியாக உள்நுழைந்துவலமும் இடமும் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்த காவலரண்களை அல்ல காவற்கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டுபோய் சண்டை மிகவும் உக்கிரமாகவே நடந்தது. கனீபாவால் கைப்பற்றப்பட்ட காவலரண்கள் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து உருத்திரபுரம் போகும் பிரதான சந்தியில் வீதியுடன் அமைந்திருந்ததால் நகரப் பகுதிக்குப் போகும் இராணுவப் பின்னடைவுகளைத் தவிர்க்கும் நோக்குடன் இழந்த காவலரண்களை மீளக் கைப்பற்றுவதில் படையினர் கடுமையாகமுயன்றனர். கைப்பற்றிய பகுதியை தக்க வைக்க கனீபாவின் அணியும் உக்கிரமாகப் போராடியது. தமது

தளத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்கனவே பலமான நிலைகளை அமைத்து ஆயுத ஆள்பலத்தை குவித்து வைத்திருந்த படையினருக்கும் குறிப்பிட்டளவு ஆயுததளவாடங்களுடன் உட்புகுந்த கனீபா அணியினருக்குமிடையே நடந்த கடுமையான சண்டையில் கனீபாவின் அணி அதிக இழப்புக்களைச் சந்தித்தது. உதவிக்கெனப்போன சிறுஅணியும் இழப்புக்களைச் சந்திக்க, படையினர் கடும் முயற்சியின் பின் தமதுபழையநிலைகளைப் பிடித்துக்கொள்ள, எஞ்சிய ஒரு சிலருடன் வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள் ஆயுதங்களுடனும் கனீபா எதிரியின் காவல்வேலிக்கு உள்ளே.

ன்னுடைய அணிவீழ்த்தி விட்டதாக களத்தின் வேறொரு மூலையில் நின்றதன் தோழிகளுக்கு தொலைத் தொடர்புசாதனம் மூலம் அறிவிக்க எல்லோரும் நம்பியேவிட்டார்கள். பிறகுதான் உண்மை தெரிந்து தாங்கள் ஏமாந்தது புரிந்து சிரித்தார்கள். எந்தச் சண்டையின் போதுமே அவள் தனது பகிடிக் குணத்தைக் கைவிட்டதில்லை.

எட்டுவருடங்களின் முன் பலாலியைச் சூழவிருந்த காவலரண்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானவற்றை மிகுந்த நம்பிக்கையோடு தலைவர் எமது படையணியிடம் தனித்துவமாகப் பொறுப்புக் கொடுத்திருந்த காலப்பகுதியில்தான், வழிமறித்துத் தாக்கும் எமது இப்போதய வளர்ச்சி நிலையின் அத்திவாரம் பலமாக அமைக்கப்பட்டது. அந்தநேரத்தில் வழிமறிப்புச் சண்டை அனுபவம் சிறிதுமற்ற ஆனால் மன உறுதியில் நம்பிக்கை வைத்த நிலையில் தான் எமது படையணி இன்றைய சூழ்நிலையை எதிர்கொண்டது. ஆரம்பத்தில் மிக நெருக்கமாக அமைந்திருந்த கட்டடங்களிற் கிடையேயும் வாழைத் தோட்டங்களிடையேயும் விழிபிதுங்க காவற் கடமையில் நின்றதும், படையினரும் இவர்களின் பக்கமாகவேஅதிகதொல்லைகள் கொடுத்ததும், குறிப்பிட்ட காலத்தின்பின் நிலைமை வேறுவிதமாகி படையினர் இவர்களின் பக்கம் தலையைக் காட்டத் தயங்கியதுவுமாக இன்றுவரை தக்கவைத்துக் கொள்வதையும் கனீபா இடையிடையில் தன் பழைய தோழியருடன் இரைமீட்டுக் கொள்வாள்.

1990, 1991 இலே பலாலியைச் சூழவிருந்தகாவலரண் பகுதியிலே அவ்வப்போது நடந்த சண்டைகள், ஆகாயகடல் வெளிச்சமர், பலவேகய 1, 11,கட்டைக்காடுமினிமுகாம் தகர்ப்பு, தொண்டைமனாற்றிலிருந்து ஒட்டகப்புலம் வரையிலான நூற்றைம்பது காவலரண்கள் அழிப்பு என்பவற்றில் பங்குகொண்ட, பின்

இராணுவஅதிகாரியாகப் பயிற்சிஅளிக்கப் பட்டு சண்டைகளுக்கான பயிற்சி ஆசிரியராகக் கடமையாற்றினாள். இவளின் நுணுக்கமான ரசனைக்கும் கலையுணர்வுக்கும் எடுத்துக்காட்டாகஅதிகாரிகள் பயிற்சியின் போதான நாடகம் ஒன்று இன்றும் நெஞ்சில் நிழலாடுவதைக் குறிப்பிடலாம்.

கலைநிகழ்வன்று கல்லூரியே களைகட்டிவிடும்,பெண் போராளிகளும் ஆண் போராளிகளும் போட்டியாக நிகழ்ச்சி தயாரிப்பார்கள் தொடர் வகுப்புக்களுக்கும் பயிற்சிகளுக்கும் இடையில் கிடைக்கும் சிறு ஓய்வின்போது அவசர அவசரமாகத் தயாரித்து சில வேளைகளில் கடைசி ஒத்திகை கூடச் செய்யாமல் மேடையேறி, ஆனால் தரம் குறையாமல் சமாளித்து அசத்தி விடுவார்கள்.

அன்று அப்படித்தான் நாடகம் அரங்கேறியது சும்மா ஒரு முறைசெய்து பார்த்துவிட்டு மேடையேறும்போதுதான் அவரவர் கற்பனைக்கு ஏற்றவாறு ஒப்பனைசெய்து கொண்டனர் அவர்களின் திட்டப்படி ஒரு கள்ளுக்கடையை முதலாளி திறக்கும் காட்சியுடன் நாடகம் ஆரம்பமாகும். கனீபாதான் முதலாளிமேடையிலே திரைவிலகியது மேசையொன்றிலே வெள்ளைத் திரவம் நிரப்பப்பட்ட போத்தல்களைக் கண்டு நாடகக் கோஸ்டியே திகைத்துப்போனது. கனீபா உண்மையாக கள்ளை நிரப்பினாளோ, சவர்க்காரத்தை கரைத்து நிரப்பினாளோ என்ற அச்சத்திலேயே குடிப்பதுபோல் நடிக்க வேண்டியவர்களுக்கு வயிறு பகீரென்றது. திரைவிலகிய பின்னும் கனீபாவை மேடையில் காணவில்லை. பார்வையாளருக்கு நடுவே இருந்து கனீபாவின் சின் னஉருவம் பட்டுடையுடனும் திருநீற்றுப் பூச்சுடனும் மடித்த சறக்கட்டுடனும் கையில் கொழுத்தப்பட்ட சாம்பிறாணிக் குச்சியுடன் வந்துதாவி மேடையேறியது போத்தல்களைச் சுற்றி சுற்றி சாம்பிராணிப் புகை காட்டிய கனீபா மேசையின் ஓரத்தில் அவற்றைக் குத்தி நிறுத்திவிட்டு, இரண்டு கைகளாலும் நெற்றியில் குட்டிதோப்புக்கரணமும் போட்டுவிட்டு கல்லாப் பெட்டியில் குந்தினாள். எல்லோருக்குமே சிரிப்பை அடக்கமுடியாமல் போய்விட்டது. நாடகம் தொடர்ந்து நடந்ததுகள்ளுக் குடிப்பவர்களாகநடிப்பவர்கள் வெள்ளைத் திரவத்தை மிக அருகில் பார்த்து அது அந்தமாதம் முடியும் வரையில் குடிக்க வேண்டியதே நீருக்குரிய லக்ஸ்பிறே என்பதை இனம் கண்டு வயிறெரிந்ததும் அவர்களை கனீபா ஒருவாறு சமாளித்தும் எஞ்சியிருக்கும் ஒருசிலரின் நெஞ்சில் இன்றும் பசுமையாக இருக்கின்றது.

மேஜர் மதனா, மேஜர் தாரணி இருவருமே கஸீபாவின் சகபயிற்சி ஆசிரியர்கள். அப்போது சண்டைக்கான மாதிரிப் பயிற்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது நடந்த இடம் ஒருபெரிய இராணுவத் தளத்தின் அயல். பகலில் தொடங்கும் பயிற்சி நள்ளிரவு வரையும் தொடரும் அதன் பின்னர்தான் எல்லோரும் நீண்டதொலைவில் உள்ள தங்குமிடத்துக்கு நடந்து வந்து சேர்ந்து ஆயுதம் துப்பரவு செய்து குளித்துவிட்டுப்படுப்பார்கள். அன்றிரவு பயிற்சி முடியத் தாமதமாகிவிட்டது பயிற்சியாளர்கள் வந்துவிட்டார்கள். இவர்கள் மூவரையும் காணோம். பயிற்சிநடக்கும் வெளியோன்றிலேயே படுத்து உறங்கிவிட்டுக் காலையில் தங்குமிடத்துக்கு திரும்பிய மூவரையும் கொட்டில் தேவையில்லை என்றுதானே வெட்டையில் போய்ப்படுத்த நீங்கள் இனி இஞ்ச இருக்கவேண்டாம். உடமைகளை தூக்கிக்கொண்டு வெட்டையிலேயே இருங்கோ என்று பொறுப்பாளர் துரத்திவிட்டார்.

'சரியக்கா' என்றவாறு மூவரும் மறுபேச்சுப் பேசாமல் எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். போனவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதற்காக மாலையில் பொறுப்பாளர் தேடிப்போனார். அங்கே இலை, குழை, ஓலைகளால் ஒரு வட்டக் குடில் அமைக்கப்பட்டு உள்ளே வெண்மணல் பரப்பப்பட்டு, பொருட்கள் எல்லாம் தட்டிஒன்றிலே ஒழுங்காக அடுக்கப்பட்டு வாசலில் நல்வரவு எழுதப்பட்டு வாங்கோ அக்கா என்று வரவேற்பு அளிக்கப்பட்டு தேநீர் கொடுத்து உபசரிக்கப்பட்டு ஒன்றுமே நடக்காததுபோல கஸீபா உரையாடலைத் தொடர்ந்தாள். சவால்களைக் கூட இயல்பாக சமாளிக்கும் வல்லமை அவளிடம் இயல்பாகவே இருந்தது.

கஸீபாவின் வளர்ச்சியில் மேஜர் துளசிக்கு முக்கிய பங்குண்டு. கஸீபா சிறுத்தைப் படையணிக்கு பயிற்சி ஆசிரியராக இருந்தகாலத்தில் ஒரு தவறு செய்துவிட்டு தண்டனையில் சமைத்துக் கொண்டிருந்தாள். இவளோடு ஒன்றாகவே அடிப்படைப் பயிற்சி எடுத்த துளசி அறிவுமுதிர்ச்சியுள்ள நிதானமான போராளி. அவருக்கு குடுகுடு என ஓடித்திரியும் கஸீபாவில் நல்ல நேசம். தண்டனையில் சமைத்துக் கொண்டிருந்த கஸீபாவை, தான் ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வருவதாக பொறுப்பாளரிடம் அனுமதிகேட்டு அவளைத் தண்டனையில் இருந்து எடுத்து தன்னுடன் வைத்திருந்தார்.

'இஞ்ச வா கஸீபா உனக்கு நான் விளையாட்டு ஒன்று சொல்லித் தாறன்' என்று அவளைத் தன்னருகே இருத்தி கணினியின் செயற்பாடுகளைச் செய்து காண்பிக்க கஸீபாவுக்கு அது ஆச்சரியமான புதுமையான விளையாட்டாக இருக்கவே ஆர்வத்துடன் ஈடுபட்டாள். தான் கணினி கற்பிக்கப்படுவது அறியாமலே அதில் தேர்ச்சி

பெற்றுவிட்டாள். அவளுக்கு தன்னையே நம்ப முடியவில்லை தன்னை விளையாட்டாக நல்ல நிலைமைக்கு கொண்டு வந்த துளசியில் அவளுக்குச் சரியான மதிப்பும் பாசமும் எப்போதுமே உண்டு இரண்டுபேருமே ஒன்றாகக் களத்தில் நின்றபோது கனீபாவின் ஒன்றுவிட்ட சகோதரியான லெப். மதனா மட்டு-புளுகுணாவை அதிரடிப் படைதளத் தகர்ப்பில் வீரச்சாவடைய இயக்கத்தில் இணைந்த ஏழு ஆண்டுகளின் பின் அப்போதுதான் முதல் முதலாக விடுமுறையில் மட்டக்களப்பிலிருந்த தன் குடும்பத்திடம் போனாள்.

விடுமுறை முடிந்த ஒரு மாதத்தின் பின் வன்னி திரும்பியவளுக்கு மேஜர் துளசியின் வீரச்சாவு செய்தி அதிர்ச்சியைத் தந்தது. அந்த அதிர்ச்சியுடனேயே ஜயசிக்குறுய் களத்திற்கு திரும்பி விட்டாள்.

தன் அணியிலிருந்த போராளிகள் யாரையுமே அவள் கடிந்து கொண்டதில்லை. நெருக்கடியான நேரங்களில் வேலைகள் நடந்துமுடிந்திராவிட்டால் நிலைமையின் அவசரத்தை விளக்குவாளே தவிர யாரையும் சினந்ததில்லை. யார் மனதையும் நோகப் பண்ணியதில்லை யாருடைய வாழ்நாள் எவ்வளவுகாலம் நீடிக்கும் என்று யாருக்குமே தெரியாததால் எல்லோருக்கும் தனதன்பைக் கொடுத்தாள். எல்லோருக்குமே உதவிசெய்ய விரும்பினாள்.

சண்டைக்குப் புறப்படும் கடைசிநேரத்தில் மறிப்புத் தாக்குதல் அணியை வழிநடத்தப் போகும் லெப். கேணல் செல்வியிடம் ஓடிச்சென்று கவனம் உங்களுக்கு ஏதும் பிரச்சினையெண்டால் எனக்கு அறிவியுங்கோ. நான் என்ர வேலையை முடிச்சுட்டு சப்போட்டுக்கு வருவன் என்றாள்.

கனீபா விருப்பப்பட்ட மாதிரியே பெண் போராளிகள் ஏராளம் படையினரைக் கொன்றனர்.

தெருவெங்கும் குருதி வடிய சிதறிக்கிடந்த படையினரின் உடலங்களிடையே நாம் நடந்தபோது படையினர் தப்பயோடிய வழியெங்கும் அவர்கள் வீசிஎறிந்த ஆயுதங்கள், ஆவணங்கள், உடமைகள், இராணுவப் பட்டிகள், பாதணிகள் இன்ன பிறவெல்லாம் இறைந்து கிடந்தபோது, நிலைகளில் இருந்து பிடுங்கி ஏற்றப்பட்ட பல ரகமோட்டார் பீரங்கிகளுடன் இராணுவ வாகனங்கள் நின்றபோது வெற்றிக் கொடியை தளபதி விதுசா அவர்கள் ஏற்றி வைத்தபோது பார்த்து அமைதியுற கனீபா இருக்கவில்லை.

நினைவுப்பகிர்வு: **மலைமகள்**

நன்றி: களத்தில் இதழ் (22.04.1999).

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **மேஜர்**

*இயக்கப் பெயர்:* **கனீபா**

*இயற்பெயர்:* **இராசமாணிக்கம் சகாய லூட்ஸ்**

*பால்:* **பெண்**

*முகவரி:* **திருகோணமலை வீதி, வாகரை, மட்டக்களப்பு.**

*மாவட்டம்:* **மட்டக்களப்பு**

*வீரப்பிறப்பு:* **17.08.1974**

*வீரச்சாவு:* **27.09.1998**

*நிகழ்வு:* **கிளிநொச்சியில் அமைந்திருந்த சிறிலங்கா படைத்தளம் மீதான ஓயாத அலைகள் 02 நடவடிக்கையின்போது வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **முள்ளியவளை**

*மேலதிகவிபரம்:* **முள்ளியவளை, மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## லெப். கேணல் சுபன்

"4.30 மணிக்கு சுபன் எழும். அதுக்கு முன்னமே சனம் வந்து அவனைப் பார்க்க நிற்கும்.

எழும்பினதிலிருந்து வந்தவங்களை சுபன் சந்தித்துக் கதைக்கும். சண்டைக்குப் போட்டுவந்து கலைச்சு இருக்கும்; அப்பாவும் யாரும் சந்திக்க வந்தா சந்திச்சுக் கதைக்கும்.

வெளியிலை வேலை செய்யேக்கை சரியாச் செய்வம். இல்லாட்டி சனம் சுபனிட்ட சொல்லிடும்.

நாங்கள் ஏதும் சொன்னால் உங்களோட என்னபேச்சு? நாங்க தளபதிக்கிட்ட சொல்லிக்கிறோம் என்று சனம் சொல்லும்.

சுபன் செத்ததை அவங்களாலை தாங்கிக்க முடியலை.

மக்களின் சிக்கல்களைத் தீர்ப்பதில் சுபன் காட்டிய கரிசனையையும், அவனுக்கும் மக்களுக்கும் இருந்த நெருக்கத்தையும் பரஞ்சோதி சொல்லிக் கொண்டிருந்தான்.

"குடும்பங்கள் பிரிஞ்ச சிக்கல் எண்டால் சுபன் நேரடியாகவே தலையிடும். எவ்வளவு குடும்பங்களைச் சேர்த்து வைத்திருக்கும்.''

மன்னாரில் கள்ளியடியில் பிறந்த சுபனின் குடும்பம் பெரியது. 'அண்ணே, என்னை வளர்க்க எனது அப்பர் 100 மாடு வளர்த்தாராம்' என்று சுபன் சொல்லிச் சிரிக்கும்.

மழைக்கு இருண்ட வானத்தில் மின்னல் வந்து சிறிதுநேரம் தரும் வெளிச்சத்தில் இருட்டே தெரியாததுபோல, சுபன் சிரிக்கும்போது அவனது பல்லின் வெண்மையில் அவன் கறுப்புமுகம் மறைந்து போகும். மாட்டில் பால் கறக்கும்போது 'சர்', 'சர்' எனச் சீராகவரும் ஒலிபோலவே சுபன் கதையும் சீராக, மெல்லிய இசை நயத்துடன் ஒலிக்கும்.

''அப்பர் சொந்தமா மாடு வளர்த்தவரோ, இல்லை ஊரிலை இருக்கும் மாடுகளைப் பிடித்துவந்து அடைத்து வளர்த்தவரோ'' என நாம் சுபனைக் கிண்டல் செய்வதுண்டு.

"இந்தியாவிலே பயிற்சி முகாமிலே, சுபனை மாட்டுக்குள்ளதான் காணலாம். சுகயீனமானபயிற்சிப் போராளிகளைப் பராமரிக்கப் பால் தேவைப்பட்டது. அதை சுபன் செய்தது.''

தமிழ்நாட்டில் ஒரு மலைப்பகுதியில் இந்தப் பயிற்சிமுகாம் இருந்தது. அடிக்கடி கீழேவந்து பால் எடுத்துச் செல்லமுடியாது.

மன்னாரின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையை சுபன் காட்டினான்.

விதைக்காத நெல்வயல்களை விதைக்க முயற்சி செய்தான்.

மக்கள் குறைதீர்க்க அடிப்படை வசதிகளை அங்கே அமைக்க முயன்றான்.

'உயிலங்குளத்திற்கும் அடம்பனுக்கும் இடையில்தான் மன்னார் நகரம் அமைய வேண்டும்' எனச் சுபன் அடிக்கடி கூறும். 'தமிழீழத்தில் அப்படித்தான் இருக்கும்' எனச் சொல்லிக் கொள்ளும்.

மன்னார் மாவட்டப் போராளிகளின் குடும்பங்களின் துன்பங்கள் துயரங்கள் அவனை மிகவும் வாட்டும்.

மன்னாரில் வீரச்சாவைச் சந்தித்த எல்லாப் போராளிகளின் நிழற்படங்களுடன் கூடிய ஒரு வீடு முதன் முதலில் தமிழீழத்தில் மன்னாரில்தான் அமைக்கப்பட்டது.

"மாவீரர் துயிலும் இல்லத்தை மிகவும் சிறப்பாக அமைக்கச் சுபன் கவனம் எடுத்திச்சு. அடிக்கடி சென்று பார்க்கும். கடைசியாகவும் பல வேலைகளைச் செய்யச் சொல்லிச்சு. ஆனால் பார்க்கத்தான் ஆள் இல்லாமல் போச்சு.''

பரஞ்சோதியின் நா தளதளத்தது.

"எதையும் ஆழமாகச் சிறப்பாகச் செய்யணும் எனச் சொல்லும். செய்தும் காட்டும்.''

"தோரணம் கட்டிக்கொண்டு நின்றேன். சுபன் வந்ததைப் பார்த்தேன். ஏதோ பிழை பிடிக்கும். பின் தானே நின்று கட்டிக்காட்டும். நான் ஒழிச்சிடுவேன். ஆள் வந்திச்சு. பார்த்துவிட்டுத் தோரணங்களை அவிட்டுக் கட்டிச்சு. பரஞ்சோதி எங்கே என்று கேட்டுப் போனேன்.''

“தோரணம் கட்டினது சரியா'' என்று கேட்டது. ‘‘சரிதான்'' என்றேன்.

‘‘ஒன்றிலை நாலு முடிச்சு கட்டி இருக்கிறீங்க, இன்னுமொன்றிலே மூன்று முடிச்சு போட்டிருக்கிறீங்க. எல்லாம் ஒரு சீராக இருந்தா நல்லதுதானே'' என்று சொல்லிச்சு.

“இப்படித்தான் எந்த விடயமென்றாலும், அது சின்ன விடயமென்றாலும் சரியாகச் செய்ய வேண்டும். எனச் சொல்லும்.''

“பிழை யாரும் விட்டால் கண்டிக்கும். பிழைகளைத் தெளிவாக விளங்கப்படுத்து.''

“கண்டிச்சுப் போட்டு நல்லா அரவணைக்கும்.''

‘‘கண்டிப்பும், அரவணைப்பும் அதைஎப்போதும் குறிப்பிட மறந்திடாதீங்க'' என்றான் பரஞ்சோதி.

“பண்டிக் கருக்கள் என்றால் சுபனுக்கு விருப்பம். தொதொல், மசுகெட் இதுவும் விருப்பம்.''

“ஆள் நல்லா சமைக்கும். ஓய்வா இருந்தா சமைக்கும். சமைச்சு எல்லோருக்கும் சாப்பிடக் கொடுக்கும்.''

ஒருநாள் ஒரு ஐயாவை கூட்டி வந்தாங்க. அவர் சமையலிலே பெரிய ஆள், அதைச் செய்வார் இதைச் செய்வார் எண்டாங்க.

சுபன் விதவிதமாக ‘அது செய்வீங்களா இது செய்வீங்களா எனக் கேட்டுது. அவருக்கு ஒன்றுமே செய்யத் தெரிந்திருக்கலை. சுபன்தான் அவருக்கு செஞ்சுகாட்டும்.

அந்த ஐயாவும் சமையலும்... அது பெரிய பகிடி

மழை பெஞ்சா இரவிலே நித்திரை இல்லை என்று தெரிஞ்சுக்கணும். சுபன் வேட்டைக்குப் போகும். நாங்க துவக்கி தூக்கினா மானுக்கோ, முயலுக்கோ தாங்க தப்பிக்கலாம் எனத் தெரியும்.

சுபன், ‘நீ போய் எடுத்து வா' என்று சொல்லிவிட்டுச் சுடும். குறிதப்பாது.

குறி தவறாமல் சுடுவதில் மட்டுமில்லை, ஆயுதங்களில் சுபன் மிகக் கவனம். எத்தனையோ போராளிகளின் குருதிசிந்திப் பெற்ற ஆயுதம்' என்று அடிக்கடி சொல்லி, ஆயுதங்களை மிகக் கவனமாகக் கவனிக்கும்.

ஆயுதம் பேணுதல் எப்படி இருக்கவேணும் என்று நான் விளக்கத் தேவையில்லை. அதுஉங்களுக்குத் தெரியும் என்று சொல்லிவிட்டு பரஞ்சோதி, கண்டிப்பும், அரவணைப்பும் அது முக்கியம் அதைமறந்திடாதேங்கோ என்றான்.

மடு ஏதிலிகள் தங்ககத்தை ஒழுங்குபடுத்த சுபன் கடுமையாக உழைத்தான்.

இப்படியான ஒரு சிக்கலை மன்னார் சந்தித்தது. இதுதான் முதல் தடவை.

இருக்கும் குறைந்த வசதிகளுடன் தன்னால் இயலக் கூடியதை அவன் செய்தான்.

இந்தியாவில் பயிற்சிமுடித்து திரும்பிய சுபன், லெப்.கேணல் விக்டரோடு நின்று மன்னாரில் செயற்பட்டான். 1986 இன் நடுப்பகுதியில் மன்னாரில் நடந்த ஒருசண்டையில் காயமடைந்து, சிகிச்சைக்காகத் தமிழ்நாடு சென்ற சுபன், அதன் பின் தலைவரோடு மூன்று ஆண்டுகள் நின்றான்.

02.04.1987 காங்கேசன்துறை தங்ககத்தில் சிறிலங்காப் படைகளுடனான மோதலில் காயமடைந்தான்.

தலைவர் பிரபாகரனைத் தேடி, மணலாற்றுக் காட்டில் இந்தியப் படையினர் 'செக்மேற்' 1, 11, 111 என்ற இராணுவ நடவடிக்கைகளைச் செய்தபோது, அந்தச் சண்டைகளில் நின்றான்.

15.04.1989 அன்று வெளிஓயாவில் சிங்களப் படையை மறைந்து தாக்கிய நிகழ்ச்சியில் முதன்மைப் பங்குவகித்தான்.

1989 நடுப்பகுதியில் மன்னார் மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்றான்.

சுபன் பொறுப்பேற்று சிறிது காலத்தில், மேஜர் சுட்டியின் தலைமையில் மன்னார் மருத்துவமனையில் இந்தியப் படையின் சிறிய தங்ககம் மீதான தாக்குதல் நடந்தது. அத்தாக்குதலில் 24 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். நாலு 'பிறண்' இலகு இயந்திரத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

1990 இன் ஆரம்பத்தில், கிளிநொச்சிக் காட்டுப் பகுதியில் இருந்த ஈ.என்.டி.எல்.எவ். துரோகக் கும்பலின் முகாம்மீது நடாத்தப்பட்ட பெரியதாக்குதலில், சுபன் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்தான்.

தமிழீழ - சிறிலங்காப் போர் மீண்டும் வெடித்த பின் தலைமன்னார் பழைய பாலம் படைத் தங்ககம் (15.06.1990),

கயுவத்தை தங்ககம் (21.06.1990) என்பன முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டன.

கயுவுத்தையில் இருந்த பவல் வாகனம் ஒன்று கையகப்படுத்தப்பட்டது.

சிலாவத்துறை, ஆனையிறவுப் படைத் தங்ககங்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் சுபன் கலந்து கொண்ட முக்கிய தாக்குதல்களாகும்.

சுபனின் காலத்தில் வஞ்சியன் குளத்திலும் (29.04.1991) வேப்பங்குளத்திலும் (30.03.1992) நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல்கள் புகழ்பெற்ற தாக்குதல்களாகும்.

வஞ்சியன் குளத்தில் 60 இற்கும் மேற்பட்ட படையினரும், வேப்பங்குளத்தில் 24 படையினரும் கொல்லப்பட்டனர். இவற்றில் இருந்து முறையே, 50 இற்கும் 30 இற்கும் மேற்பட்டஆயுதங்கள் எடுக்கப்பட்டன.

தமிழீழத்தில் மிகப் பெரிய அளவில் காவல் உலாவந்த படையினர் மீது அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டு அடிப்படை அணிமுற்றாக அழிக்கப்பட்ட நிகழ்ச்சி வஞ்சியன் குளத்தாக்குதல் ஆகும்.

''வங்காலை இறங்குதுறையில் வந்து அடிப்பம் (09.10.1990) என்று எதிர்பார்த்திருக்கமாட்டாங்க. அங்கு தாக்கிவிட்டு இரண்டு அல்லது மூன்று நிமிடத்திற்குள் வெளியேவேண்டும். அத்தாக்குதலில் 6 படையினர் கொல்லப்பட்டனர்.

பூநகரித் தாக்குதல் பற்றி (25.09.1992) நினைச்சுக்கூடப் பார்த்திருக்க மாட்டாங்க. இரண்டரை மைல் இராணுவவேலியை அழித்து, 62 காவலரண்களைத் தகர்த்தோம். 25 படையினர் கொல்லப்பட்டாங்க. 30க்கு மேல் ஆயுதங்கள் கைப்பற்றினோம். அதில்தான் ஆள் காயப்பட்டுவிட்டது என்றுதான் சொன்னாங்க. உடம்பைத்தான் கொண்டு வந்தாங்க.

எந்தத் தாக்குதல் எண்டாலும் கடைசி வேவுக்கு சுபன் வரும். வந்து பார்த்து யார் யார் எங்கு நிலையெடுக்கவேண்டும். என்ன செய்யவேண்டும் என்றுசொல்லும்.

அதன் பிறகுதான் தாக்குதல் நடக்கும். ஆள் பக்கத்திலே நிக்குது எண்டாலே ஒரே உற்சாகமாக இருக்கும்.

‘‘அண்ணே, செய்யமுடியாது, என்று ஒன்றும் இல்லை’’ என்று சுபன் அடிக்கடி சொல்லும்.

சுபனின் அகரமுதலில் ‘முடியாது என்று ஒன்று இல்லை’.

*நன்றி: களத்தில் இதழ்*

*(11.12.1992).*

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

பொறுப்பு: **மன்னார் மாவட்டச் சிறப்புத் தளபதி**

நிலை: **லெப். கேணல்**

இயக்கப் பெயர்: **சுபன்**

இயற்பெயர்: **வினாசித்தம்பி சுந்தரலிங்கம்**

பால்: **ஆண்**

முகவரி: **கள்ளியடி, இலுப்பைக்கடவை, மன்னார்.**

மாவட்டம்: **மன்னார்**

வீரப்பிறப்பு: 21.07.1965

வீரச்சாவு: 25.09.1992

நிகழ்வு: **கிளிநொச்சி, பூநகரிபள்ளிக்குடாவில் சிறிலங்காப் படைமினி முகாம்கள் மற்றும் 62 தொடர் காவலரண்கள் தாக்கியழிக்கப்பட்ட சமரில் வீரச்சாவு.**

துயிலுமில்லம்: **ஆட்காட்டிவெளி**

மேலதிக விபரம்: **ஆட்காட்டி,வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## லெப். கேணல் ஞானி

கப்டன் அன்பரசி படையணி துணைத் தளபதி லெப். கேணல் ஞானி...

சகல ஆயத்தங்களோடும் தயாராவிட்ட ஒரு போர்ப் பயணத்திற்கு இறுதிக்கணங்கள் அவை, கூட்டங்கூட்டமாக கூடிநின்று ஆடியும், பாடியும், பேசிக்களித்துக் கொண்டும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார்கள் போராளிகள். ஒரு திசையிலிருந்து பல குரல்கள் ராகத்தோடு எழுகின்றன.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்றே நீ கூறு! வேங்கைகள் ஆனவர் நாங்கள் எந்த வேளையும் சாகலாம் போங்கள்'' என்று ஒலித்த அந்தக் குரல்களையும் மீறி,

''வேங்கைகள் ஆனவர் நாங்கள் எந்த வேளையும் வெல்லுவோம் போங்கள்'' என ஓங்கி ஒலித்தது ஒரு குரல், அந்த இனிமையானதும் உறுதியானதுமான, நம்பிக்கையோடு எல்லோரையும் மீண்டும் சேர்ந்து பாடவைத்ததுமான குரலுக்குரியவள்தான் லெப். கேணல் ஞானி.

தென்தமிழீழத்தில் சிறீலங்கா அரச படைகளினதும் காட்டுமிராண்டித்தனமான அட்டூழியங்களும், கோரத் தாண்டவங்களும் தலைவிரித்தாடிய காலப்பகுதி அது. சுற்றிவளைப்புக்களும் இளைஞர், யுவதிகள் கைதாவதும், காணாமல் போவதும் கண்டகண்ட இடங்களில் எல்லாம் சுட்டு வீசப்படுவதும், வீதிகளில் இரத்த ஆறு பாய்வதும் வழமையான செயற்பாடுகளில் ஒன்றாகிப் போனது. இவைகளுடன் அயற் கிராமமான கொக்கட்டிச்சோலைப் படுகொலையும் சேர்ந்து அன்றைய ஒன்பதாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த சூரியாவும் (பேரின்பநாயகம்

சூரியகுமாரி) இன்றைய எமது லெப். கேணல் ஞானியுமான இவளுக்கு விடுதலைப் போராட்டத்திற்கான அத்திவாரக் கற்களாக அமைந்தது.

தொண்ணூறின் (1990) இறுதிப் பகுதியில் மட்டு - 02 பயிற்சிப் பாசறையுள் நுழைந்து, பல சிரமங்களுக்கு மத்தியில் கஸ்டப்பட்டுச் சூழ்நிலைக்கேற்ப தன்னை புடம்போட்டுக்கொண்டு பயிற்சியெடுத்தவளைப் பற்றி இன்றும் அவளுடன் பயிற்சியெடுத்த போராளிகள் கதை கதையாய் கூறுகின்றனர். அவர்களுள் ஒருத்தி ஞானியுடனான தன் பயிற்சிக்கால நினைவுகளை மீட்டுப் பார்க்கின்றாள்.

'அங்க கொட்டில் அடிக்கிறதில இருந்து கிணறு வெட்டுறதுவரை நாங்கள் தான், ஞானி நல்லா மாஞ்சு வேலை செய்யும், என்ன வேலை செய்தாலும் நல்லாத்தான் இருக்கும், எங்கட பயிற்சி நேரம், எங்கடமுகாம் இருந்த பகுதிகள் எல்லாம் இராணுவம் சுற்றி வளைச்சு, காடு காடா ஓடித்திரிஞ்சு தான் பயிற்சியெடுத்தம், ஒரு முறை எங்கட பழைய இடத்தில் இருந்து இராணுவம் பின்வாங்கிப் போய்விட்டது எண்டாப்போல, நாங்கள் திரும்பி எங்கட இடத்திற்கு போவம் எண்டு போனம். ஒருத்தருக்கும் இருபது நாளா சாப்பாடே இல்லை. காட்டில் உள்ள மிருகங்களை அடிச்சு, உரிச்சு உப்புப்போட்டு அவிச்சுத்தான் சாப்பிட்டது. எத்தனை நாளைக்குத்தான் சாப்பிடுறது. அந்தப்பகுதியிலே மிருகங்களும் இல்லாமப்போச்சு, பின்னே இருபது நாளா பட்டினிதான். எல்லோருக்குமே சரியான களை. போய் ஒரு இடத்தில் எல்லோரும் படுத்திட்டம்.

இரவோட இரவா இராணுவம் எங்களைச் சுற்றி வளைச்சிட்டுது. எங்களுக்குத் தெரியாது. விடியவும் தான் தெரிஞ்சு அந்த இடத்தில நல்ல சண்டை. அப்ப நாங்கள் புது ஆக்கள்தானே. காயக்காரரையும் தூக்கிக்கொண்டு திரும்பி நின்ற இடத்திற்கு ஓடினோம். காயக்காரரை கட்டுவதற்கோ, தூக்கிப் போடுவதற்கோ ஒரு வசதியுமே இல்லை. ஞானிதான் உடனேயும் கிடந்த உடுப்புக்களைக் கிழித்து காயத்திற்கு கட்டுகள் போட்டு, தன்ர கையாலேயே காட்டுத்தடி முறித்து சாரத்தை அதனுள் புகுத்தி காயக்காரரை தூக்கிச் செல்வதற்கு வசதியாக வழி செய்து அனுப்பினாள்.

வேறொரு சமயமும் இப்படித்தான், எமது முகாமிற்கு உணவுப்பொருட்கள் வரவேண்டுமானால் ஒரு அருவி கடந்து தான் வரவேண்டும். உணவுக்காகவே அந்த அருவியிடம் நாம் பல போராளிகளைப் பறிகொடுத்துள்ளோம். அப்படியான பெரிய அருவி அது. ஞானியுடன் நாங்கள் ஐந்து பேர் மரக்கறி எடுக்கச்சென்றோம்.

பத்துமைல் நடந்து அருவியைக் கடக்கவேண்டும். ஒருநாள் வேலை, அன்று முழுதும் எங்களுக்கு காட்டுக்காய்கள் தான் சாப்பாடு. கட்டி நீந்துவதற்கு கயிறு இல்லை. எம்மைக் கரையில் விட்டுவிட்டு ஞானி தனிய நீந்தி அக்கரைக்கு சென்றாள். மறுகரையிலுள்ள போராளிகளுக்கெல்லாம் பெரிய அதிசயம் எப்படி இவர் கயிறில்லாமல் நீந்தி வந்தார் என்று, 'என்னென்று இதால வந்தனீங்கள்' என்று கேட்டவர்களுக்கு 'நான் ரெயினில் வந்தனான்' சிரிக்காமலேயே பதில் செல்லிவிட்டு, அங்கே கயிறு வாங்கி மரக்கறியை கட்டிவிட்டு தானும் நீந்திவந்து எங்களுடன் சேர்ந்து கொண்டாள்.

அப்படி சொல்லிக் கொண்டு போனால் நிறையவே சொல்லலாம். அங்கே நடந்த ஒவ்வொரு செயற்பாட்டின் முடிவிலும் ஞானிக்கும் பங்கிருக்கும். என்று கூறினாள் அந்தப் போராளி.

பயிற்சிப் பாசறையில் இவளின் இந்தச் செயற்பாடுகள் தான் பயிற்சிகளின் முடிவில் ஒரு பயிற்சி ஆசிரியராக இவளை இனம்காட்டியதுபோலும், பயிற்சி முடிந்ததும் பயிற்சி ஆசிரியராகச் செயல்பட்ட இவள், தான் சண்டைக்குப் போகவேண்டும் என்று பொறுப்பாளருடன் சண்டையிட்டு வெற்றியும் பெற்றாள்.

இவளின் முதற்சண்டை அருந்தலாவை சிங்களப் பகுதியில் நடந்த சண்டை. ரோந்துவரும் இராணுவத்தை தாக்கவேண்டும். எல்லோரும் நிலையெடுத்திருந்தனர். நேரம் காலை 10.45 மணி, பதினொன்று, பன்னிரெண்டு, பன்னிரெண்டரை என நேரம் ஓடிக்கொண்டிருந்ததே தவிர, இராணுவம் வருவதாக காணவில்லை. என்னடா இவங்களை காணவில்லை என்று கூறிய ஞானி தனது நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு செல்லவென பிறணைத்தூக்கித் தோளில் அடித்துக் கொண்டு நடந்தவேளை திடீரென அதே இடத்தில் நிலை எடுத்தாள். முன்னால் பார்த்தாள் இராணுவம் வந்து கொண்டிருந்தது. ஞானியின் முதல்சண்டையை ஞானியே தொடக்கி வைத்தாள். நல்ல உக்கிரச் சண்டை. இவளின் முன்னாலேயே நான்கு இராணுவத்தினரின் உடல்கள் வீழ்ந்து கிடந்தன. முதல் சண்டையே வெற்றிகரமாக முடிந்ததையிட்டு ஞானிக்கு மனதில் அடங்காத பெருமை.

கொஞ்சம்கூட ஞானி அந்த இடத்தில் அலட்சியமாக இருந்திருந்தாலும் சண்டை தோல்வியில் முடிந்திருக்கும். தானாகவே முடிவெடுத்து செயல்பட்டதால்தான் எமக்கு அது வெற்றியைப் பெற்றுத்தந்தது. இதில் ஞானியின் பிறணுக்குச் சின்னக்காயம். இவள் மயிரிழையில்தான் தப்பியிருந்தாள்.

அதன் பின்னர் இவளுக்கு சண்டையோகம்தான். எங்கு போனாலும் ஒரே பதுங்கித்தாக்குதல்கள்.

அடுத்தது பள்ளித்திடல் மினிமுகாம் மீதான தாக்குதல் இதுவும் ஒரு மக்கள் குடியிருப்போடு சேர்ந்த மினிமுகாம். சண்டை ஆரம்பமாகிவிட்டது ஞானியின் மறுபக்கத்துக்கு பிறண் தேவையாக இருந்தது. அழைப்புக் கிடைத்ததும் விரைந்தோடிய ஞானியின் முன்னால் வீரிட்டு அழுதபடியிருந்த சிறு குழந்தை ஒன்று. வாரியணைத்து குழந்தையை ஒரு கையிலும், பிறணை மறுகையிலும் பிடித்துக்கொண்டு வந்து அந்தக் குழந்தையை காவும் குழு மூலம் பின்னால் அனுப்பிவைத்து பெற்றோரிடம் குழந்தையை ஒப்படைக்கக் கூறிவிட்டுத்தான் தொடர்ந்து சண்டையிட்டாள். இச்சண்டையிலும் இராணுவத்தின் பல உடல்கள் கைப்பற்றப்பட்டு, கொண்டு வரமுடியாத காரணத்தால் தகனம் செய்துவிட்டு வந்தனர். ஞானி செல்லும் சண்டைகளில் எல்லாம் ஒரு அதிஷ்ரம் தான், எதிரியின் உடல்கள் எடுக்காமல் விடமாட்டார்கள்.

அடுத்ததாக சிங்கபுரவில் ரோந்து அணிமீதான தாக்குதல். வெலிகந்தையில் கொழும்பு வீதியில் நடந்த பதுங்கித்தாக்குதல், கள்ளிச்சை - வடமுனையில் நடந்த தாக்குதல் எனக்கூறிக்கொண்டே போகலாம்.

கள்ளிச்சை வடமுனைத் தாக்குதல், இது மட்டக்களப்பில் முதல் பெண்போராளி களத்தில் வீரச்சாவடைந்த தாக்குதல், ஞானியும், நிலாவும் பக்கத்து பக்கத்து நிலையில் நின்று சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். இந்த சண்டையணிக்குத் தலைமை தாங்கிச் சென்ற நிலா இச்சண்டையில் வீரச்சாவடைய, அவரின் வோக்கியை எடுத்து மற்றவர்களுக்கு நிலைமையை அறிவித்து தொடர்ந்தும் சண்டையிட்டாள். சண்டைமுடிந்து திரும்பும்போது அவளின் கையில் தனது பிறணும், தோளில் நிலாவின் உடலும் சுமந்துவந்தாள்.

தொடர்ச்சியாக சண்டைகளும், பதுங்கித் தாக்குதல்களும் என்று பயிற்சி எடுத்த காலம் முதல் தொண்ணூற்றி மூன்று (1993) வரையும் இருபது சண்டைகளுக்கு மேல் ஞானி சென்றுவந்திருந்தாள்.

இந்தக் காலப்பகுதியில் தான் தேசியத்தலைவர் அவர்களின் பணிப்பின் பேரில் தென்தமிழீழத்தில் இருந்து பல அணிகள் வடதமிழீழம் நோக்கி அழைக்கப்பட்டன. அதில் பெண்கள் படையணியும் அடங்கும். அதில் ஞானியும் தெரிவு செய்யப்பட்டாள். புறப்படும் வரை அவளின் கால் நிலத்தில் நிலையாக நிற்கவில்லை.

நாங்கள் யாழ்ப்பாணம் போகப்போகிறோம். அண்ணையைப் பார்க்கப்போறம். அண்ணைக்கு முன்னாலும் நிறைய சண்டைகள் பிடிச்சுக் காட்டுவம் என்று துள்ளித்திரிந்தாள்.

பயண நாளும் ஆரம்பமானது. பெண்போராளிகள் வண்டி மூலமும், ஆண்போராளிகள் கால்நடையாகப் போவதும் எனத் திட்டம். ஆனால் இவள் விடவில்லை. ஏன் நாங்கள் மட்டும் வண்டியில் போகவேணும், எங்களுக்கு நடக்கத்தெரியாதோ, நாங்களும் நடப்போம் என அடம்பிடித்து, ஆண் போராளிகளுடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினர். சேறுகளும்,தண்ணீர்களும், அருவிகளும் தாண்டி ஏழுநாட்கள் தொடர்ந்து நடை. பதினாறு அருவிகள் நீந்திக்கடக்க வேண்டும். கடந்தனர், ஆனால் இவர்கள் கொண்டுவந்த உலர் உணவு எல்லாம் அருவியோடு போய்விட்டது. பசியோடு நடந்து திருமலையை அடைந்தனர். அங்கு உணவுப்பொருட்கள் சேகரித்து ஆற்றங்கரையோரத்தில் சமைத்துவிட்டு, குளித்துவிட்டு வந்து பார்த்தால் சமைத்துவைத்த இடத்தில் சாப்பாட்டுப் பாத்திரங்கள்கூட இல்லை எல்லாவற்றையும் ஆறு அள்ளிக்கொண்டு போய்விட்டது. எல்லோருக்கும் பெருத்த ஏமாற்றம். அங்கு நின்ற போராளிகளின் தயவால் சிறிது வயிறுகளை நிரப்பிக்கொண்டு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்து பன்னிரண்டாம் நாள் வடதமிழீழத்தில் கால் பதித்தது ஞானியுடனான படையணிகள்.

அங்கிருந்து வந்த பெண்கள் அணி இங்கே செயல்பட்டுக் கொண்டிருந்த பெண்கள் படையணியுடன் இணைக்கப்பட்டது. பரந்துபட்ட சிந்தனையும் தமிழீழம் எங்கள் நாடு, நாம் ஒரு தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட கிளைகள் எமது உழைப்பு, இந்த நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் தேவை என்பவற்றை தெளிவாக உணர்ந்து கொண்ட ஞானியால் இங்கேயே நீண்டகாலங்களுக்கு நின்று செயற்பட முடிந்தது. தனது ஆளுமையாலும், அயராத கடுமையான உழைப்பாலும், முயற்சியாலும், மாலதி படையணியிலும் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டாள்.

இங்கு இவளது முதல்களம், ஒப்பரேசன் தவளை இதில் காலில் விழுப்புண்ணேந்தினாள். அதன்பின் புலிப்பாய்ச்சல், சூரியக்கதிர், ஓயாத அலைகள் – 01, என பல களங்களில் இவள் பதிவானாள்.

சூரியக்கதிர் - 01 நடவடிக்கை புன்னாலைக்கட்டுவன் பகுதியூடாக எதிரிப்படைகள் தமது வேகமான ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். எமது அணிகளை பின்னால் நகர்த்தி நிலைப்படுத்தினால் ான் எம் தரப்பு இழப்புக்களை கொஞ்சமேனும் குறைக்கலாம். நகர்த்துவதற்கான அவகாசமோ

*மிகமிகக் குறைவு. அந்தளவுக்கு எதிரிப்படைகளின் நகர்வு வேகமாக இருந்தது. அந்த இடத்தில் ஞானியும் அவளின் 50 கலிபரும்தான் எமக்குக் கைகொடுத்தது. நாம் பாதுகாப்பாக நிலை எடுக்கும் வரைக்கும் காப்புச்சூடு கொடுத்தது. குறுகிய நேரத்திற்கு எதிரிகளின் நகர்வைத் தடுத்து தாக்குதல் தொடுத்தாள்.*

ஓயாதஅலைகள் - 01, சமருக்குச் சென்று வந்தவள் தென்தமிழீழம் சென்று தன் போராளித் தங்கையையும் அழைத்துக்கொண்டு விடுமுறையில் வீட்டுக்குச் சென்று திரும்பிய அந்த மூன்று மாதங்களிலும் கூட அங்கே இரண்டு பதுங்கித்தாக்குதல்களில் பங்குபற்றி அங்கேயே புதிதாக பயிற்சி முடித்த போராளிகளுடன் மீண்டும் வந்துசேர்ந்தாள். இவளது திறமைகளையும் செயற்பாடுகளையும் கண்ட பொறுப்பாளர்களும், தளபதிகளும் இவள் அழைத்துவந்த பிள்ளைகளையே இவளிடம் ஒப்படைத்து ஜெயசிக்குறு களத்திற்கு அனுப்பினர். பல வழிகளில் அன்பரசி படையணியின் வளர்ச்சிக்காக உழைத்து, ஜெயசிக்குறு களத்திலும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து அணியொன்றுக்கு பொறுப்பாக செயற்பட்டு, ஓயாதஅலைகள் – 02 தாக்குதல் சம்பவம் வரை ஓயாதிருந்து ஓய்ந்து போன லெப். கேணல் ஞானிபற்றி அன்பரசி படையணியின் சிறப்புத் தளபதி அவர்கள் கூறுகையில்,

*''இவரைப் பற்றிக் கூறுவதானால் நான் கூறிக்கொண்டே போகலாம். இவரைக் கண்டாலே மற்றவர்களுக்கு தானாகவே ஒரு வீரம் வரும். அப்படியான ஒரு நிமிர்ந்த தோற்றமும், உறுதியும் கொண்டவர். தொண்ணூற்று ஆறாம் (1996) ஆண்டுதான் திரும்பி அன்பரசி படையணிக்கு வந்தவர்.*

*மட்டக்களப்பில் இருந்து இவர் புதிய போராளிகளைக் கூட்டிவரும் போது கடவான வீதி என்று ஒரு வீதி அது கடந்து தான் வரவேண்டும். வரும்போது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கத் தொடங்கிவிட்டனர். அப்போ அதில நல்ல சண்டை. அதில் திறமையாகச் செயல்பட்டு ஒரு போராளிகள் கூட விடுபடாமல், காயப்படாமல், வீரச்சாவடையாமல் கூட்டிவந்தார். இவர்கள் வரும்போது நிறையவே கஸ்ரங்கள், புதிய போராளிகள், தண்ணீர் இல்லை, சாப்பாடு இல்லை. ஏழுநாட்கள் தொடர்ந்து நடை, இடை இடையில் பதுங்கித் தாக்குதல்களுக்கும் முகங்கொடுத்து பன்னிரண்டாம் நாள் வந்துசேர்ந்தனர்.*

*அவர் கூட்டிவந்த அந்த அணியையே அவரிடம் கொடுத்து, இந்த அணி உங்களுக்குரியது என்று கூறிய மறுவினாடியே நாங்கள்*

கூறாமலே அணிக்குரிய வேலைகளைத் தொடங்கிவிட்டார். அணியிலுள்ள பொறுப்பாளர்களுடன் கதைத்து, மேலதிக பயிற்சிகளுக்கு ஒழுங்குசெய்து, தானே நேரே நின்று சூட்டுப் பயிற்சி எல்லாம் கொடுத்து இரணைமடுப் பகுதியில் காவலரண் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அவர்கள் வந்த மூன்றாம்நாளே அவர்களுக்குச் சண்டை கிடைத்தது. நல்ல மழை எல்லா இடமுமே தண்ணீரும் சேறும், காப்பரண்களும் எதுவுமில்லை. அதில் நின்று சண்டையிட்டு, இரண்டு ஏ.கே.எல்.எம்.ஜி. எடுத்தனர். இதில் ஞானிக்கு காலில் காயம். அவர் அப்படியேதான் நின்று சண்டைபிடித்தவர். நான் நேரே போய்த்தான் அவரை மருத்துவமனைக்கு அனுப்பியது. அங்கே கூட சும்மா இருக்கமாட்டார். நான் போகும் போதெல்லாம் தன் போராளிகளைப் பற்றித்தான் கேட்பார். காயம் மாறும் முன்னே அவர் சண்டைக்கு வந்துவிட்டார். அவரிடம் எந்த அலட்சியப் போக்கையுமே காணமுடியாது.

அதில் இருந்து மாங்குளம் மூன்றுமுறிப்பு பகுதிக்கு சென்ற அணி பல துன்பங்களுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது. அதேபோன்றுதான் ஒலுமடுப் பகுதியிலும், இந்த கஸ்ரங்களின் மத்தியிலும் போராளிகளின் மனம் சோராது வழிநடத்திய பெருமை ஞானிக்குரியதே.

அவரிடம் ஒருவேலையைக் கொடுத்தால் நான் திரும்பிப்போய்ப் பார்க்கவேண்டி அவசியமே இராது. அந்த வேலை சரியாகத்தான் செய்து முடிக்கப்பட்டிருக்கும். அதனால் அவரின் அணியென்றால் எல்லோருக்குமே விருப்பம், அப்படி மென்மையான, ஆளுமையான போராளி.

ஒருநாள் நான் காவலரண்கள் பார்த்துக்கொண்டு வரும்போது, தோளில் கட்டையுடன் வந்தார். முன்னால் இரண்டு பிள்ளைகள் பின்னால் ஞானி, ஏனென்றால் கட்டை தூக்கிறதில கஸ்ரம் தனக்கும் தெரிய வேண்டுமாம்.

பொதுவாகக் கூறப்போனால் இவர் தாக்குதலுக்கு ஒரு திறமையான தளபதி. இவருடைய இந்தத் திறமைகள் தான் இவரை அன்பரசி படையணியின் மூன்றாவது தளபதியாக உயர்த்தியது. இவர் பொறுப்பெடுத்தது ஆறுமாதங்கள் தான் அந்த ஆறுமாதத்துக்குள்ளும் படையணிக்குள் பல பொறுப்பாளர்களை எமக்கு இனம்காட்டினார். இன்னும் இருந்திருந்தால் நிறையவே செய்திருப்பார். இவரின் இழப்பு எமது படையணிக்கே பெரிய இழப்பு. ஓயாத அலைகள் - 02 சமரில்

ஒரு பகுதி வெற்றிக்குக் காரணமானவர்களுள் ஞானியும் ஒருவர். படையணியின் துணைத்தளபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் அவரின் முதல்களம் இது. இந்தக்களத்திலேயே பல வெற்றிகளுக்குக் காரணமாயிருந்த ஞானியை நாம் இழந்துவிட்டோம்'' எனக் குறிப்பிட்டார் அன்பரசி படையணியின் சிறப்புத் தளபதி அவர்கள்.

எமக்குப் பல புதிய போராளிகளையும், பொறுப்பாளர்களையும் தளபதிகளையும் புடம்போட்டு வளர்த்துத் தந்த பெருமை ஜெயசிக்குறு சமருக்கேயுரியது. எமது போராட்ட வளர்ச்சிக்கு பல வழிகளில் கை கொடுத்ததும், இந்தக் களம் தான். அந்த வகையில் ஞானியின் களமுனைச் செயல்பாடுகள் பற்றி மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி அவர்கள் கூறுகையில்,

''ஞானியைப் பொறுத்தவரையில் அவர் சரியான ஒரு வேலைக்காரி. கஸ்ரங்களுக்குத் தாக்குப்பிடிக்க கூடியவர். விடுமுறையால் வந்ததும் அவரை கொம்பனிப் பொறுப்பாளராகத்தான் நியமித்தோம். பின்னர் சண்டைகளில் அவரின் திறமைகளைப் பார்த்து அன்பரசி படையணிக்குத் துணைத் தளபதியாக நியமித்தோம்.

மாங்குளம் பகுதியில் இவர்கள் நின்ற பகுதி சரியான பிரச்சினைக்குரிய பகுதி. எந்தநேரமும் சினைப்பிங்தான். அப்படி ஒரு துன்பமான கட்டத்துக்குள் தான் இவர்கள் நின்றார்கள். இரவு - பகல் நித்திரையில்லை. ஒரே சண்டைதான். ஞானியும் பிள்ளைகளுடன் தானும் சேர்ந்து கஸ்ரப்படுவார். அதனால் தான் அன்பரசி படையணிக்குள் அவரால் வேகமாக வளர்ச்சி எடுக்கக்கூடியதாக இருந்தது.

இவர்களுக்கு ஓயாத அலைகள் – 02 சமருக்கு முக்கியமான வேலை கொடுக்கப்பட்டது. இரண்டு கொம்பனி நுழையவேண்டிய பாதை. அதில் ஒரு பாதையை இவர்கள் உடைத்து கொடுக்கவேண்டும். இவர்களுக்கு அது முக்கியமான வேலை. தற்செயலாக தவறுதலாக இருந்தால் இந்தச் சண்டையே பிழைத்திருக்கும். இந்தச் சண்டையில் நான்கு பாதை முக்கியமானது. நான்கும் உடைத்து நான்கு அணிகள் உள்நுழைய வேண்டும். இந்த நடவடிக்கையில் முதல் பாதை பிடித்தது ஞானி ஆக்கள்தான். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பாதையை குறிப்பிட்ட நேரத்திலேயே பிடித்துவிட்டார்கள். இதில் அவரின் செயற்பாடு ஒரு வேகமான செயற்பாடாக இருந்தது.

தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை முடித்து உள்ளே அனுப்ப வேண்டிய அணிகளை அனுப்பிவிட்டு, பக்கத்து பாதை உடைபடாததால் அந்தப் பகுதியால் செல்லும் அணிகளையும் எடுத்து உள்ளே அனுப்பிவிட்டு, தொடர்ந்தும் செயல்பட்டுக்

கொண்டிருக்கும்போது தான் வீரச்சாவடைந்தார். மற்றப்படி அவருக்கென கொடுக்கப்பட்ட வேலைகளை முடித்துவிட்டார். இது பாராட்டத்தக்க ஒரு விடயம்.

ஞானி உண்மையிலேயே தன்னம்பிக்கை மிகுந்த ஒரு போராளி. அவரின் தனிப்பட்ட குணாம்சங்கள் என்று கூறினால், போராளிகளுடன் நன்றாகச் சேர்ந்து போகக்கூடியவர். மகளிர் படையணியின் தனித்துவத்தையே விரும்புபவர். எதையும் நாங்கள் தனிச்சுச் செய்யவேணும், இன்னும் நிறைய சாதித்துக் காட்டவேணும் என்றெல்லாம் எண்ணமுடையவர். ஞானியும் ஜெயசிக்குறு சமர் முழுவதும் நின்ற ஒரு பொறுப்பாளர் அவர். இந்தச் சமர் இவர்களுக்கு பெரிய ஒரு அனுபவம், அவர் இருந்திருந்தால் பெரிய ஒரு வளர்ச்சியை நோக்கிப் போயிருப்பார். நான் நேரடியாகக் கவனித்த சில விடயங்களில் தங்களது காவலரண்கள் எல்லாவற்றையும் அழகாகத்தான் வைத்திருப்பார். தலைவரின் படமெல்லாம் வைத்து ஒவ்வொரு இடமும் நன்றாகத்தான் இருக்கும். கட்டளைகளை நிறைவேற்றுவதில் கூட ஒரு வேகம் இருக்கும். ஓயாதஅலைகள் × 02 இல்கூட அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைத் திறம்படச் செய்வதற்குக் காரணம் அவரின் அர்ப்பணிப்புத் தன்மைதான்.'' என்று கூறினார் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி அவர்கள்.

லெப். கேணல் ஞானி தனது நீண்டகள வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தைப் பதித்துக்கொண்டவள். போராட்ட வரலாற்றின் பல வெற்றிப்பாதைகளுக்கு வழித்துணையாக நின்றவள். அன்பரசி படையணியின் வளர்ச்சிக்கு படிக்கல்லாக அமைந்த ஞானியின் வீரமும், செயல்திறனும், வளர்ச்சியும் இன்றும் அவள் வளர்த்த போராளிகளில் தெரிகின்றது. தன்னை வளர்த்த தளபதிகளும்,தான் வளர்த்த போராளிகளும் மனமுருக,

''வேங்கைகள் ஆனவர்கள் நாங்கள்
எந்த வேளையும் வெல்வோம் போங்கள்''

என்று பாடிச் சென்றவள். இந்த சமரில் வென்றோம். ஆனால் ஞானி வரவில்லை. அவள் லெப். கேணல் ஞானியாய்...

அவள் இறுதியாகப் பாடிச்சென்ற அந்த இரண்டு பாடல் வரிகளும் எல்லோரின் காதுகளுக்குள்ளும் இப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

நன்றி: களத்தில் இதழ்
(23.09.1999).

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **லெப். கேணல்**

*இயக்கப் பெயர்:* **ஞானி**

*இயற்பெயர்:* **பேரின்பநாயகம் சூரியகுமாரி**

*பால்:* **பெண்**

*முகவரி:* **காத்தான்குடி, மட்டக்களப்பு.**

*மாவட்டம்:* **மட்டக்களப்பு**

*வீரப்பிறப்பு:* 03.09.1974

*வீரச்சாவு:* 27.09.1998

*நிகழ்வு:* **கிளிநொச்சியில் அமைந்திருந்த சிறிலங்கா படைத்தளம் மீதான ஓயாத அலைகள் 02 நடவடிக்கையின்போது வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **விசுவமடு**

*மேலதிக விபரம்:* **விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## லெப். கேணல் தட்சாயினி

*தட்சாயினி!*

*நெஞ்சை விட்டகலா நினைவுகளில் என்றும் நீங்கள் ....*

*கல்கியின் 'பொன்னியின் செல்வனில்' வருவாரே ஒரு முதிய வீரர். பெரிய பழுவேட்டையார் என்று அவருக்குப் பெயர். உடலில் அறுபத்து நான்கு வீரத்தழும்புகள் இருக்கிறதாம் அந்த வீரக்கிழவருக்கு. எங்கள் தட்சாயினியும் பெரிய பழுவேட்டையரைப் போலதான் என்றால் தட்சாயினியின் தோழி ஒருத்தி சற்றுப் பெருமையாக, உண்மைதான். தட்சாயினியின் உடலிலுள்ள வீரத்தழும்புகளை நின்று நிதானமாக எண்ணினால் அறுபத்து நான்குக்கும் அதிகமாகவே இருக்கும்.*

*தட்சாயினி!*

*அந்த வயதுக்கேயுரிய முதிர்ச்சி. களங்களில் அவள் காட்டிய உக்கிரம், தன்னோடுநிற்கும் போராளிகளில் வைத்திருக்கும் அன்பு, பராமரிப்பு, அவளது வளர்ப்பு, எல்லாவற்றுக்கும் மேலாகத் தவறுவிடுகின்ற கணங்களில் அவளது தண்டிப்பு எல்லாமே ஒன்றாகச் சேர்ந்து இவளை எங்களுள் ஆளுமையுடையவளாக நிலைநிறுத்தியது. விடுதலைப் புலிகள் மகளிர் படையணி சந்தித்த பெரும்பாலான சண்டைக் களங்களில் கம்பீரமாக ஒலித்த கட்டளைக் குரலுக்குரியவளை 1997.08.04 அன்று காலையின் பின் நெருப்பள்ளி வீசும் களம் இழந்திருந்தது. பல் சண்டைக் களங்களில் உடல் நிறையக் காயங்களைப் பெற்றுவந்து, தப்பிப்பிழைத்து, இனிக் காயப்படுவதற்கே இடமில்லை என்ற நிலையில் கூட களத்தைவிட்டு போகமாட்டேன் என்று அடம்பிடிப்பவள்.*

பலாலிகாவல் நிலைகள், மணலாறுகளம், மண்டைதீவு, சூரியக்கதிர், பூநகரி, தொண்டைமானாறு, ஒட்டகப்புலம் வரையான காவலரண் அழிப்பு என்ற நீண்ட பட்டியல் அவளுக்குரியது. திறமையான சண்டைக்காரி. பூநகரிச் சண்டையின் அவளுக்கு இடுப்பிலும் தோள்மூட்டிலும் பெரியகாயம்.

''இந்தக் காயங்களோடு உங்களாலை தொடர்ந்தும் பயிற்சி எடுத்துச் சண்டைபிடிக்க ஏலாது. வெளிநிர்வாக வேலைகளைச் செய்யுங்கோ'' என்று கூறப்பட்டும் கேளாமல், 'தன்னால் முடியும், தான் தொடர்ந்து சண்டையிலே நிற்பேன்' என்று விடாப்பிடியாய் நின்று செய்து காட்டியவள்.

மணலாறு மின்னல் சண்டையின்போது அவளுக்கு வயிற்றில் பெரியகாயம் ஏற்பட்டு, வெளிவந்து விழுந்த குடலை எடுத்து உள்ளே வைத்துப் பொத்தியபடி, இரத்தம் இழுக்க ஒருவரின் உதவியுமின்றி அரை மணித்தியாலம் நடந்தே மருத்துவ ஒழுங்குசெய்யும் இடத்துக்கு வந்துசேர்ந்தாள். அவளது மன உறுதியைக்காட்ட இதைப்போல் இன்னும் எத்தனையோ சம்பவங்கள்..

ஓரளவு பதட்டமில்லாத காவல்நிலைப் பகுதிகளில் அவள் நிற்கும்போது அவள் அங்கு நடத்துகின்ற தடபுடலுக்குக் கணக்கில்லை. அதுவும் கடற்கரையோரக் காவல்நிலைப் பகுதியாயின் தட்சாயினி நண்டுபிடித்து, வாய்க்குருசியாய் சமைத்துக் கொடுப்பாள். தனது குழுவிலுள்ள வயதில் சின்னப் போராளிகளுக்குதானே உணவு குழைத்துக் கொடுப்பாள். ஒரு அம்மாவுக்குரிய பொறுமையும் பண்பும் கண்டிப்பும் அவளிடம் உண்டு.

ஆள் சரியான தேத்தண்ணிச்சாமி, விடாக்குடியன், மொடாக்குடியன்மாதிரி காலம் நேரமில்லாமல் தேநீர் தயாரித்து, தானும் குடித் எல்லோருக்கும் கொடுப்பாள். தேனீயைப் போலவே அவளும் சரியான சுறுசுறுப்புத்தான்.

சூரியக்கதிர் 01இல் அவளுக்குப் பெரியகாயம். எறிகணை அவளின் காதோடு சேர்த்து கன்னத் தசைகளையும் பிய்த்துச் சென்றதோடு, மார்பிலும் பெரும் காயத்தை ஏற்படுத்தியது.

ஒருமுறை அவளது குழு ஒரு காவற்பகுதியில் நின்றது. அப்போது அவள் குழுவிலுள்ள ஒரு போராளிக்குக் காய்ச்சல், ஆறியும் ஆறாமலும் இருந்த வயிற்றுக்காயத்தைப் பொருட்படுத்தாது தானே மரத்தில் ஏறி இளநீர் பிடுங்கிக் கொடுத்துவிட்டு, வயிற்று நோவெடுக்க ஒருவருமறியாது தனியாகப் போயிருந்து வயிற்றைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

எப்போதும் இயக்கத்தின் நலன்,கட்டுக்கோப்பு, எல்லாவற்றுக்கும் மேலாக எமதுதலைவர் என்று தீவிரமான பற்றுவைத்த போராளி. மிகத் திறமையான சண்டைக்காரி. அவளோடு நின்ற நாட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு போராளிக்கும் உயிர்த்துடிப்பானவை. நெஞ்சைவிட்டு அகலாதவை.

*நன்றி: களத்தில் இதழ்*

*(17 மார்கழி 1997).*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப். கேணல்**

*இயக்கப் பெயர்:* **தட்சாயினி**

*இயற்பெயர்:* **மனுவேற்பிள்ளை கிளறின்வுறோனா**

*பால்:* **பெண்**

*முகவரி:* **புலோப்பளை,யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு: 03.11.1965*

*வீரச்சாவு:* 03.08.1997

*நிகழ்வு:* **வவுனியா, புளியங்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட வான்குண்டு வீச்சில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **வன்னி விளாங்குளம்**

*மேலதிகவிபரம்:* **வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.**



## லெப். கேணல் பரிபாலினி

அன்றைய நாள், நாம் எதிர்பார்த்ததிற்கு முற்றிலும் மாறான களநிலைமை அது. எதிரி உசாரடைந்து, எமது நகர்வுகளையே அவதானித்துக்கொண்டிருக்க வேண்டும். நாலாபுறமும் கவச வாகனங்களையும் கனரக ஆயுதங்களையும் நிலைப்படுத்திக் காத்துக் கிடந்தவரின் குகைக்குள் புகுந்த எமதணிகளை நோக்கி வாய் பிளந்தன இரும்புக் குழல்கள். எங்கும் நெருப்பு மழை, அந்த அக்கினிக் மத்தியில் இருந்து ஒலித்த அந்தக் குரல் தொலைத் தொடர்புக் கருவியூடாக எல்லோர் செவிகளிலும் ஒலித்துக் கொண்டிருந்தது. நீண்ட நெடுநேரம், அந்தத் தன்னம்பிக்கையான, உறுதியான, தெளிவான குரலை ஒலிபரப்பிக் கொண்டிருந்த தொலைத் தொடர்புச் சாதனம் அமைதியானது.

''பரி.. பரி.. பரி...''

''பரி.. பரி.. பரி...''

என அனைத்துக் கருவிகளும் அலற அந்தப் பெயருக்குரியவள், அந்தக் குரலுக்குரியவள் அடங்கிப் போனாள்.

1990 காலப்பகுதியில் பயிற்சிப் பாசறைகள் நோக்கி படையெடுத்த பெண்களில் இவளும் ஒருத்தி. எப்போதுமே அமைதியாகக் காணப்படும் இவள் எல்லோராலும் 'நல்லூர் நோனா' என அழைக்கப்பட்டவள். மணியடித்தால் சாப்பாட்டிற்கு முன்னின்று, வகுப்புக்குப் பின்நின்று, பயிற்சிக்கு முன்னின்று லெப். கேணல் மாதவியால் புடம் போடப்பட்டு, பரிபாலினியாக வெளிவந்த இவள்; 1992 முற்பகுதி வரை பலாலி, பத்தமேனி, தட்டுவன்கொட்டி என பல முன்னணிக் காவலரண்களிலும், வரலாற்றுச் சிறப்புமிக்க ஆகாய கடல்வெளிச் சமர், மின்னல் எனவும் பல சிறு சிறு சண்டைகளிலும் ஒரு போராளியாகவே தடம் பதித்தவள்.

1992 ஆரம்பகாலம், எமது இதயபூமியான மணலாற்றை எதிரியின் ஆக்கிரமிப்புக்களிலிருந்து பாதுகாக்கும் பணியில் பெண் போராளிகளையும் ஈடுபடுத்துவதற்கென புதிய அணியொன்று உருவாக்கப்படுகின்றது. பத்தே பத்துப் போராளிகளுடனும், இருநூற்றைம்பது பயிற்சி எடுக்காத புதிய போராளிகளுடனும் மணலாறு சென்ற அந்த அணி, அவர்களைப் பயிற்றுவித்தே தமது பணியைத் தொடங்க வேண்டும். பொறுப்பாகச் சென்றவருக்கு தன்னுடன் வந்த பத்துப் போராளிகளும் என்ன நிலையில் இருக்கின்றனர் என்பதே தெரியாது. அவர்களில் பரிபாலினியும் ஒருவர்.

இவள் அங்கே பயிற்சிக்கான துணை ஆசிரியராக நியமிக்கப்படுகின்றாள். பயிற்சிக்கான ஒழுங்குகள் செய்து, பயிற்சியும் ஆரம்பமாகி ஆறே ஆறு நாட்கள்.

கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து நாயாறு வரை மும்முனைகளில் முன்னேறி கரையோரப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதன் மூலம், தமிழர் தாயகத்தை துண்டாடுவதுடன், வடக்கிலிருந்து கிழக்கிற்கான எமது விநியோகப் பாதையைத் துண்டிப்பதற்காகவும், மூவாயிரம் சிங்களப் படைகள் 'கஜபார' கட்டம் ஆறு (ஒப்பரேசன் சிக்சர் கஜபார) என்ற பெயருடன் பெரும் எடுப்பிலான நகர்வை மேற்கொண்ட போது, வழிமறித்து நடந்த சண்டைக்குக் காவும் குழுவாகச் செல்லத் தயாராகின்றனர். எல்லோருக்குமே காடு புதிது, புதிய போராளிகள் வேறு. எவருக்குமே 'கொம்பாஸ்' தெரியாது. மூன்று நாட்களில் 'கொம்பாஸ்' பயின்று, பரிபாலினியுடன், இன்னுமொரு போராளியுடனும் புதிய போராளிகள் களம் இறங்கினர்.

ஆறு நாட்களே பயிற்சி எடுத்த போராளிகள், காட்டு அனுபவங்களும், சண்டை அனுபவங்களும் குறைந்தவர்கள். சீனத்தயாரிப்பு டாங்கிகளும், கவச வாகனங்களும், பீரங்கிகளும், விமானங்களும், உலங்குவானூர்திகளும், கடல் பீரங்கிப்படகுகளும் குண்டு மழை பொழிய, அந்த அடர்ந்த காடுகளுக்கூடாகவும், திறமையாகத் தனது பணிகளைச் செய்து, ஆண்டாள் என்ற ஒரு புதிய போராளியை இழந்து, அவர்களின் பணிக்கு பரிசாகக் கிடைத்த ஐந்து ஏ.கே.யுடன் ஒரு ஏ.கே.எல்.எம்.ஜீ உடனும் முகாம் திரும்பியது அந்த அணி. பரிபாலினியின் சந்தோசத்திற்கு அளவேயில்லை.

'பாத்தீங்களா, நாங்கள் சண்டைக்குப் போகாமல் சப்பிளைக்குப் போயே அஞ்சு ஏ.கே.யும் ஒரு எல்.எம்.ஜீ.யும் எடுத்திட்டம்' என்று சொல்லிச் சொல்லி துள்ளித் திரிந்தாள். அன்று

ஆறு நாட்களே பயிற்சி எடுத்த அந்தப் போராளிகளின் முதுகெலும்பாக நின்று செயற்பட்டவளே இவள்தான்.

எந்தவொரு இக்கட்டான நிலையிலும் சற்றேனும் பதட்டம் இருக்காது இவளிடம். அன்றிலிருந்து இன்றுவரை இது அவளிடம் ஒன்றிவிட்ட ஒன்று. இந்தப் பழக்கம்தான் பொறுப்பாளர்களிடம் பரிபாலினியை இனங்காட்டியது.

இரண்டரை மாதப் பயிற்சிக்காலங்களில் துணைப் பயிற்சியாசிரியராக இருந்தது மட்டுமல்லாமல், முதல் பயிற்சியிலேயே எதிரியை எப்படிக் குறிபார்த்துச் சுடுவது என்பதைப் பயிற்றுவித்து, இடையிடையே நடக்கும் பதுங்கித் தாக்குதல்களுக்கு அவர்களுடன் சென்று மீண்டும் மீண்டும் பயிற்சியைத் தொடர்ந்து ஐந்து இராணுவத்தைத் தாக்குவது என்றாலும் அதற்கும் இவர்கள் சென்று எண்ணிக்கையில் அடங்காத பதுங்கித்தாக்குதல்கள்.

''தலைவர் அடிக்கடி சொல்லுவார், 'ஆயிரம் முயல்களை ஒரு சிங்கம் வழி நடத்தலாம். ஆயிரம் சிங்கத்தை ஒரு முயல் வழிநடந்த ஏலாது' என்று. அதேமாதிரி புதிய போராளிகளைக் கொண்டு செய்யிறது என்பது, அதுவும் காட்டுச் சண்டை, சண்டைச் சூழலே பிள்ளைகளுக்குத் தெரியாது. பரிபாலினியில் இருந்த நம்பிக்கையில்தான் முழுப் பிள்ளையளையும் விடுறம்'' என்றார்; மணலாற்றின் ஆரம்பகால மகளிர் பொறுப்பாளர் சீத்தா அவர்கள்.

பயிற்சிகள் முடித்து இரு அணிகளாகப் பிரிக்கப்பட்ட படையணியில் ஒரு அணி பரிபாலினியின் தலைமையில் களம் இறங்குகின்றது. நூறு பேர் கொண்ட ஒரு அணிக்குப் பொறுப்பாளராகவும், அதே நேரம் இருநூறு பேரைக் கொண்ட முழு அணிக்கும் துணைப்பொறுப்பாளராகவும், நியமிக்கப்பட்ட பரியின் நிலை தர்மசங்கடமாகிப் போனது. தான் சண்டைக்கு முதலில் போகமுடியாதே என யோசித்தவள், ஐம்பது பேர் கொண்ட அணியைப் பொறுப்பெடுத்து முதலில் நகர்ந்து விட்டாள்.

'ஒப்பரேசன் செவன் பவர்' (ஏழு சக்திகள்) முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து முல்லைத்தீவு கொக்கிளாய் பிரதான வீதியூடாகச் செம்மலை, குழமுனை ஆகிய பகுதிகளை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருக்கு உதவியாக செம்மலை, அளம்பில் கடல் பிரதேசங்களூடாக தரையிறக்க முனைந்த இராணுவத்தினரை, கரையோரம் நின்ற பரிபாலினியின் அணி எதிர்கொண்டது. ஒரே நேரத்தில் மூன்று கடல்கலங்கள் சரமாரியாக குண்டுகளை வீசியவாறு கரையை நோக்கி வருவதும், இவர்களின் துப்பாக்கிகள் சடசடக்க

பின்வாங்குவதும் பின் வருவதும் போவதும், வருவதும் போவதுமாகத் திணறிய கலங்கள் இறுதியில் ஓடியேவிட்டன.

மணலாற்றின் வரலாற்றுச்சமர்களில் பெரும் எதிர்ச்சமரான இந்தச் சமரில், எதிரியின் கடல்வழி விநியோகத்தைத் தடுத்து நிறுத்திய பெரும் பணியில் எமது இன்றைய தளபதியான இவளின் பங்கும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே இருந்தது.

அன்றொருநாள் சண்டை முடிந்து அனைத்து அணிகளும் திரும்பிக்கொண்டிருந்தது. பரியைக் காணவில்லை. 'எமது எதிர்காலத் தளபதியை இழந்து விட்டோமா' என எல்லோர் மனங்களும் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது. 'பரிபாலினி வீரச்சாவாம்' என்ற செய்தியும் வந்துவிட்டது. ஆனால் மனங்கள் மட்டும் ஏற்க மறுத்தது. காயமடைந்தும், வீரச்சாவடைந்தும் வரும் ஒவ்வொருவரையும் ஓடி ஓடிப் போய்ப் பார்த்தார்கள். ஒவ்வொரு முறையும் ஏமாற்றம். மனமும் சோர்ந்து போய்க் கொண்டிருந்த அந்தக் கணத்தில் நான்கு பேர்களின் தோள்களில் ஒரு 'ஸ்ரெச்சர்' ஒரு நப்பாசையுடன் ஓடிப்போய்ப் பார்த்தால் பரிபாலினி. சீராக மூச்சு வந்து கொண்டிருந்தது, உயிர் பிரியவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டோம். கால்கள், வயிறு, ஒருபக்கத் தாடை எனப்பிய்ந்து தொங்கக் கட்டுப்போட்டபடி... பல மைல்களுக்கப்பால் உள்ள கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமை நோக்கி நடையாய் நடந்து, பல இராணுவ அரண்களை தாக்கியழித்த அந்தச் சமரில் இவள் படுகாயமடைய, சிலர், 'வீரச்சாவு' எனக்கூற, சிலர் 'இல்லை'யென, 'இவ்வளவு தூரம் கொண்டு போகிறதுக்கிடையில் ஆள் முடிஞ்சிடும்' என்று இன்னொருவர் சொல்ல, அவள் வளர்ந்த குஞ்சுகளின் தோள்களில் மூச்சுப்பேச்சற்ற நிலையில் எதுவுமே அறியாதவளாய் வந்து சேர்ந்தாள்.

காயங்கள் ஆறி, மீண்டும் கானகம் வந்தவளை எல்லோருமே கிண்டலடிப்பார்கள். அவளின் ஆறு பற்களையும் இழந்த வாயைப்பார்த்து. இவளுக்கும் சிரிப்பு வரும். ஆனால் சிரிக்க முடியாதவளாக கைகளால் மூடி சிரமப்பட்டுச் சிரிப்பாள்.

தொடர்ந்தும் கானகம் அவளைக் களம் நோக்கி அழைத்தது. கடும் பயிற்சி, கோட்டைக்கேணிக்கும் கொக்குத்தொடுவாய்க்கும் இடையில் ரோந்துவரும் இராணுவத்தினரை மறைந்திருந்து தாக்க வேண்டும். அந்த முகாமிலிருந்து இந்த முகாமுக்குக் கையசைத்தால் தெரியும். இரண்டு முகாம்களுக்கிடையில் உள்ள வெட்டை வெளியில் புல்லோடு புல்லாக இவர்கள். 8.30 மணிக்கு அவ்வழியால் வரும் இராணுவம் வரவில்லை. இவர்கள் திரும்பவும் வழியில்லை. இருட்டிய பின்னர்தான் அசையலாம். அதிகாலை 4.00 மணிக்கு

நிலையெடுத்தவர்கள் 'குளுக்கோஸ்' பக்கற்றும், தண்ணீர் பக்கற்றும்தான் ஆளுக்கொன்று கொண்டு சென்றார்கள். அதுதான் அன்றைய சாப்பாடு. மாலை 5.00 மணி அவர்கள் காத்துக்கிடந்த இரைகள் கிடைத்தன. நல்ல சண்டை, கைப்பற்றிய ஆயுதங்களுடன் திரும்பினர்.

''மணலாற்றிலிருந்து வந்த இவ்வளவு வருடங்களாகியும், இன்றும் சகபோராளிகளிடம் பரிபாலினியின் செயற்பாடுகளை குறிப்பிட்டுக்கொள்கிறேன் என்றால், அதற்குக் காரணம் அவரின் திறமையான செயற்பாடுகள்தான்'' என்றார் முன்னாள் மணலாறு மாவட்டத் துணைத் தளபதி பாண்டியன் அவர்கள்.

அடிக்கடி பதுங்கித் தாக்குதல்கள், பதுங்கித் தாக்குதல்கள் என விரிந்த களம் இதயபூமி - 01 உடன் அவளுக்கு முற்றுப்பெற்றது.

'பரி அக்கா உங்களை பிள்ளைகளுக்கு வகுப்பு எடுக்கட்டாம்' என்றால் அந்த ஏரியாவுக்குள்ளேயே பரிபாலினியைக் காணமுடியாது. படிப்பதென்றால் பச்சைக்கள்ளி. அப்படிப்பட்டவள் கல்விப் பிரிவுக்கென அனுப்பப்படுகிறாள். அந்தக் காலப்பகுதியில்தான் மணலாறு மாவட்டச் சிறப்புத் தளபதி லெப். கேணல் அன்பு வீரச்சாவடைய பரிபாலினி அழுத அழுகை அன்றுதான் அவள் அழுததை எல்லோரும் பார்த்திருக்கின்றோம். அவரின் வித்துடலுக்குக்கூட அஞ்சலி செலுத்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இன்றுவரை அவளுக்கு அது அழியாத கவலை.

இவளுக்கு ஒரு அறை, ஒரு மேசை, கதிரை, அறை எப்பொழுதுமே பளிச்சென்று இருக்கும். மேசையில் ஒழுங்காக உறைகள் இட்டு அடுக்கப்பட்ட கொப்பிகள், நேரே சுவரில் நாளிதழில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட அன்பண்ணையின் படம் ஒவ்வொரு நாளும் முற்றத்தில் இருந்த மல்லிகையில் பூக்கொய்து படத்துக்கு வைத்து அஞ்சலி செய்து, அவளை போரியலில் வளர்த்த ஆசான் அல்லவா லெப். கேணல் அன்பு.

இந்தக் காலங்களில் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும் என்று இவர்களுக்குக் கட்டளை. முகாமில் ஒரே 'கஸ்புஸ்'தான். அரைவாசித்தமிழ் அரைவாசி ஆங்கிலம்.

'சிஸ்ரர் நவணி... வோட்டர் டாங்....' நிரப்பும்படி சைகையில் முடிப்பாள் பரி.

பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றும் போது யாரும் வந்து 'என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டால் பரி ஒருமுறை சுற்றும் முற்றும் பார்த்து முழுசிவிட்டு, 'பிளவர் றீ வோட்டர்' மிகுதி சைகையில்.

கலை நிகழ்ச்சி என்றால் பரிக்கு சரியான விருப்பம். ஆனால் மேடையில் ஏறி எல்லோர் முன்னாலும் செய்வதென்றால் பயம், கூச்சம் இங்கேயோ செய்துதான் ஆகவேண்டும் என்ற கட்டாயம். என்ன செய்வது? அன்று மேடை ஏறிய பரி எல்லோரையுமே வாய்பிளக்க வைத்தாள். ''அதிசயத்தின்மேல் அதிசயம். பரிபாலினியா இப்படி நடித்தாள்'' என்று அனைவருமே ஆச்சரியப்பட்டனர். ஏனென்றால் இந்தப் பரிக்குள் இப்படியொரு கலைத்திறன் இருக்குமென்று எவருமே நம்பவில்லை.

ஒருநாள் இவர்களின் தமிழ் ஆசிரியர் எல்லோரையும் தூய தமிழில் ஆக்கம் ஒன்று எழுதும்படி கூறினார். பரியின் பெரும் முயற்சியில் சிறுகதை ஒன்று உருப்பெற்றது.

அதை இன்னொருத்தியிடம் வாசிக்கும்படி கொடுத்தாள், அவளும் இலேசுப்பட்டவள் அல்ல நடிப்பதென்றால் அவளுக்குக் கைவந்த கலை. பரியின் சிறுகதையை ஏற்ற இறக்கங்களுடன் பெரிதாக வாசிக்கத் தொடங்கினாள்.

''அந்தப் பெண்ணின் கண்களிலிருந்து சிறுநீர் வழிந்தது''

எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர். பரிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. 'ஏனப்பா, ஏனப்பா என்ன எல்லோரும் சிரிக்கிறீங்கள்' என்றவளிடம் 'சிறுநீர் என்றால் என்னப்பா?' 'சிறிய நீர், சொட்டு நீர்' என விளக்கியவள் தன் பிழை விளங்கவும் எல்லோருடனும் சேர்ந்து தானும் சிரித்து... சேர்ந்து படித்து... போராளிகளுக்கு வகுப்பெடுத்துய்ய புதிய போராளிகளை இணைத்து...

வெளியில் சிறுபிள்ளைத் தனத்துடன் காணப்படும் இவளிடம் முழுமையான ஒரு ஆளுமைத்தன்மையும் தன்னம்பிக்கையும் இன்னும் இன்னும் நிறையவே செய்ய வேண்டுமென்ற வெறித்தனமும் நிறையவே இருந்தது.

இவளின் உருவத்திற்கும், செயல்பாடுகளுக்கும் எந்த ஒரு சம்பந்தமுமே இல்லை என்பது மாதிரியான ஒரு தோற்றம். இவளின் செயல்பாடுகளின் வெற்றிகளே இதற்கான சான்றுகள்.

மீண்டும் பரிபாலினியின் சண்டைக்களங்கள் விரியத் தொடங்கியது.

1996 இல் புதிதாகப் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளிவந்த ஒரு அணிக்குப் பொறுப்பாளராக, அரசியல்துறை மகளிரணியாக... அந்த அணி களம் இறங்குகின்றது. அவர்கள் எதிர்கொண்ட சிக்கல்களோ எண்ணிலடங்காதவை. நீண்ட காலமாகச்

சண்டைகளில் பங்குபற்றாது வெளி வேலைகளில் ஈடுபட்டிருந்த போராளிகள். இவர்களுடன் புதிய போராளிகள், இவர்கள் நல்லமுறையில் சண்டை பிடிப்பார்களா? என்ற கேள்வி ஏனைய தாக்குதல் அணிகளுக்கு எனினும் 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கைக்கு எதிராக நின்று போரிட்டது இவர்களின் அணியும்.

பரந்தன் – ஆனையிறவு மீதான தாக்குதல் ஒன்றுக்கு பல அணிகள் பயிற்சி எடுத்தது. யார் யார் எந்தப் பகுதிகளுக்கென அவ் அணிகள் பிரிக்கப்பட்டபோது, ஒரு அணிக்கு உதவி அணியாக இவர்கள் பிரிக்கப்பட்டனர். ஆனால் இவர்களின் அணியை அவர்கள் ''தமக்கு வேண்டாம்'' எனக்கூறிவிட்டனர். பரிபாலினி, மேஜர் நித்தியா, கப்டன் ஜெயஜோதி உட்பட அனைத்துப் போராளிகளும் இறுகிப் போயினர். ''இவங்களுக்குச் செய்து காட்டுறம்'' என்ற சாவாலோடு களமிறங்கியவர்கள் சண்டையிட்டனர். காலையிலேயே விழுப்புண்ணடைந்த பரிபாலினி மாலை வரை களத்திலிருந்து வெளியேற மறுத்துவிட்டாள். பின்னரும் கட்டாயப்படுத்தியே வெளியேற்றப்பட்டாள்.

தொடர்ந்து 'ஜெயசிக்குறு' களம், முன்னர் இவர்களை மறுத்தவர்கள், சளைக்காது போரிட்ட இவர்களைக் கேட்டுப் பெறும் அளவுக்கு வளர்ச்சிகண்டுமய் ஓயாத உழைப்பும், கடுமையான பயிற்சியும் எல்லாவற்றிற்கும் அடிநாதமாய் பரிபாலினி...

ஓமந்தை இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்கு தாமே தடையுடைத்து, ஏனைய அணிகளுடன் தமது அணி ஒன்றுடன் பரிபாலினியும் உள்நுழைந்து, பல இராணுவக் காவலரண்களைத் தாக்கியழித்து மீண்டபோது, கப்டன் ஜெயஜோதியுடன் இன்னும் சில போராளிகள் திரும்பவில்லை. ஆனால் இவர்களைப் பாராட்டாத தளபதிகளே இல்லை. புளியங்குளத்தில் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக நின்று புளியங்குளத்தை 'புலிகள் புரட்சிக் குளமாக' மாற்றியதில் இவளின் பெரும் உழைப்பும் உள்ளது என்றால் மிகையாகாது.

அந்தச் சமருக்குப் பொறுப்பாக நின்ற தளபதி பிரிகேடியர் தீபன் அவர்கள் கூறும்போது, ''பரிபாலினியைப் பொறுத்த வரையில் குறிப்பாக நல்ல விசயங்களைப் பார்த்தனான், நல்ல ஒரு நிர்வாகி, துணிச்சலான சண்டைக்காரி மற்றது எல்லாத்திலேயும் ஒரு ஆர்வம் உள்ளவர் இந்த மூன்றையும் நான் அவளிடம் நேரடியாகப் பார்த்தனான்'' என்றார்.

''ஜெயசிக்குறுய்'' களமுனையில் இருந்து எடுக்கப்பட்ட அரசியல்துறை மகளிர் அணியின் போராளிகள் ஒவ்வொருவரும் அவரவரின் முன்னைய பணிகளைத் தொடரும்படி கூறிய தலைவர்,

பரிபாலினியை சமராய்வு பகுப்பாய்வுப் பிரிவுக்குத் தெரிவு செய்கின்றார்.

சண்டையில் நிற்கும் ஒவ்வொரு போராளிகளினதும் திறமைகளையும், செயல்பாடுகளையும், நிலமைகளுக்கேற்ப முடிவெடுக்கும் தன்மைகளையும், சண்டையின் வெற்றி தோல்விகளுக்கான காரணிகளையும், பகுப்பாய்வு செய்வதுமே இதன் நோக்கமாகும். ஆரம்பகாலத்தில் பரிபாலினியின் பொறுப்பில் பெண்போராளிகளே செயல்பட்டு வந்தனர். இந்தப் பணிகளில், எள் எனும் முன் எண்ணெய்யாக நிற்பாள் பரிபாலினி. கனவிலும் நினைவிலும் ''அண்ணை எங்கள நம்பி விட்டிருக்கிறார். நாங்கள் திறமையாகச் செயற்பட வேண்டும்'' என்பதே அவளின் தாரகமந்திரமாக இருந்தது.

01.02.1998 இல் ஆனையிறவு பரந்தன் சண்டையில் ஆரம்பமாகி 1999 இல் ஆண் போராளிகளையும் இணைத்து பிரிகேடியர் சொர்ணம் தலைமையில், எந்த மூலை முடுக்குகளில் நடைபெறும் சிறு சிறு தாக்குதல்கள் என்றாலும் அங்கெல்லாம் பரியும் சென்று வந்தாள். போகும் போது பாதை மாறி எதிரியின் பிரதேசங்களுக்கு முன்னால் சென்று மீண்ட சம்பவங்கள் பல.

ஓயாத அலைகள் மூன்றின் ஆரம்ப நடவடிக்கையின் போது சமராய்வு பகுப்பாய்வுப் பிரிவினரைக் கொண்டு களமிறங்கி மீட்கப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாக்கும் பணியில் மணலாற்றில் ஈடுபட்டு, மீண்டும் பகுப்பாய்வு வேலைகள் செய்தும்

தொடரும் ஓயாத அலைகளின் வீச்சால் எமது களமுனைகள் விரிவடைய, விரிவடைய தற்காலிகமாக சமராய்வு பகுப்பாய்வுப் பிரிவிலிருந்த ஒவ்வொருவரும் வெவ்வேறு படையணிகளுடன் இணையுமாறு பணிக்கப்பட, இவளின் பயணம் சோதியா படையணியை நோக்கித் தொடர்ந்தது.

''என்ர சண்டை அனுபவங்களைக் கொண்டு துர்க்காவுக்கு உதவியா நின்று, படையணியை நன்றாக வளர்த்து, அண்ணை பிள்ளையள எப்படியெல்லாம் வளர்க்க வேணும் என்று நினைக்கிறாரோ அதற்கெல்லாம் நாங்கள் செயலுருவம் கொடுக்க வேணும்'' என்று கூறிச் சென்றவளை முதல் சமரிலேயே நாம் இழந்துவிட்டோம்.

01.04.2000 நள்ளிரவு கடந்த விடிகாலை இயக்கச்சி இராணுவத்தளம் புகுந்து திரும்பாத தோழிகளுள் பரிபாலினியும் ஒருத்தியாக...

*பரிபாலினி மணலாற்றுக் காட்டின் மரவேர்களில் காவலிருந்து. காட்டுப் பறவைகளையும் விலங்குகளையும் நேசித்து, பொதிகள் பல சுமந்து, ஆழக்கிணறுகள் வெட்டி, பலம் மிக்க பாசறைகள் அமைத்து, உரமேறிய கைகளுடன் எதிரியுடன் பொருதி, பல துறைகளிலும் வளர்த்து தலைவனின் பெரும் கனவுகளுக்கேற்ப பிரகாசிக்கத் தொடங்கிய ஒரு இளம் தளபதி...*

*அடிக்கடி ரவைகளால் துளைக்கப்பட்டு, குண்டுச் சிதறல்களால் பிய்க்கப்பட்டு, இரத்தம் கொட்டி, வீரத் தழும்புகளால் நிறைந்த அவள் உடல்...*

*தனது சொத்தி வாயை நெளித்து, 'இஞ்சேருமப்பா இஞ்சேருமப்பா..' என்று எம்மைச் சுரண்டும் அந்த அழகான சின்ன உருவம்...*

*ஓ.. அவள் ஓயவில்லை. இன்னும் எம்முன் நிழலுருவமாக உலாவிக் கொண்டிருக்கிறாள்.*

*நினைவுப்பகிர்வு:* **உலகமங்கை**

*நன்றி: களத்தில் இதழ் (31.08.2000).*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப். கேணல்**

*இயக்கப் பெயர்:* **பரிபாலினி**

*இயற்பெயர்:* **சந்திரசேகரன் சுரனுலதா**

*பால்:* **பெண்**

*முகவரி:* **நல்லூர், யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **06.07.1973**

*வீரச்சாவு:* **01.04.2000**

*நிகழ்வு:* **கிளிநொச்சி, இயக்கச்சி பகுதியில் ''ஓயாத அலைகள் - 03" நடவடிக்கையின்போது வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **முள்ளியவளை**

*மேலதிக விபரம்:* **முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## லெப்டினனன்ட் சீலன்

"ஒரு கெரில்லாப் போராளியின் வீரம் அவனது இயந்திரத் துப்பாக்கியில் இல்லை. அவனது மனதில் தான் இருக்கிறது.'' இது தமிழீழத்தின் போராட்ட வரலாற்றில் முதன்மை வாய்ந்த கெரில்லாவீரன் லெப். சீலனின் அனுபவ மொழியாகும்.

லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி என்ற சொந்தப் பெயரைக் கொண்ட சீலன் திருமலையின் வீரமண்ணில் விளைந்த நன்முத்து. சிங்கள இனவெறி ஆட்சியாளர்களின் நேரடியான ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டு கிடந்த திருகோணமலையின் நடைமுறை அனுபவங்களைக் கண்கூடாகக் கண்டவர். சிறீலங்காவின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் கடற்படை, விமானப் படையின் அடக்குமுறைகளும் இராணுவம், பொலீஸ் ஆகியோரின் அரவணைப்புடன் சிங்களக் காடையர்கள் தமிழ் மக்கள் மீது புரிந்த கொடுமைகள் இவற்றுக்குமுடிவுகட்டஆயுதப் போராட்டமே ஒரேவழி என்பது சீலனின் ஒரே நம்பிக்கையாக இருந்தது. இதுவே சீலனை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்தது.

தமிழீழத்தை நோக்கிய அவரது சிந்தனைகளும், செயற்பாடுகளும் திட்டவட்டமானவை. தலைவர் பிரபாகரனின் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விடுதலைப் போராட்டத்திலேயே தமிழீழம் வெல்லப்படும் என்பதில் சீலன் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். தலைவரின் நேர்மையிலும் தூய்மையிலும் திறமையிலும் அவர் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தார்.

இயக்கத்தில் சேர்வதற்குமுன் விட்டெறிந்துவிட்டு வருவதற்கு வளமான வாழ்க்கையோ கைநிறையக் காசு கிடைக்கும் தொழிலோ

சீலனுக்கு இல்லை. ஆனால் இவரை நம் அன்றாடம் உணவுக்கே கடினப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு வறிய குடும்பம் இருந்தது.

ஆனால் கல்லூரி நாட்களிலேயே இனவெறி பிடித்த சிங்கள ஆளும் வர்க்கத்திற்கெதிரான போராட்ட உணர்வு கொண்டவராக சீலன் திகழ்ந்தார். 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொண்டு வரப்பட்ட சிறீலங்கா சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா சனாதிபதியாகப் பதவியேற்கும் வைபவத்தினை தமிழீழமண்ணில் கொண்டாட சிங்கள ஆட்சியாளர் எண்ணினர். இந்த வைபவத்தினையொட்டி திருமலை இந்துக் கல்லூரியில் சிறீலங்காவின் தேசியக் கொடியை ஏற்றிவைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சீலன் தனக்கே உரித்தான நுட்பமான அறிவினைப் பயன்படுத்தி பொஸ்பரஸ் என்னும் இரசாயனத்தை அக்கொடிச் சுருளில் மறைத்து வைத்தார். தேசியக் கொடியைஏற்றும் போது அது எரிந்து சாம்பலாகியது. சந்தேகத்தின் பேரில் 18 வயது மாணவனான சீலன் கைதுசெய்யப்பட்டுச் சிங்களக் கூலிப்படையால் சித்திரவதை செய்யப்பட்டார். அந்த வயதிலும் தனக்கு உடந்தையாக இருந்த எவரையும் அவர் காட்டிக் கொடுக்கவில்லை.

அவர் தனது ஆயுதப் போராட்ட வரலாற்றில் சாதித்தவை மகத்தானவை. 1981 அக்டோபர் மாதம் பிரிகேடியர் வீரதுங்கா சிறீலங்கா அரசாங்கத்தால் பதவி உயர்த்தப்பட்டு யாழ் இராணுவ அதிகாரியாக நியமிக்கப்பட்டபோது தமிழீழப் போராட்டவரலாற்றில் முதற்தடவையாகச் சிறீலங்காக் கூலிப்படைக்கு எதிரான கெரில்லாத் தாக்குதலுக்குத் தலைமைதாங்கி வெற்றிகரமாக நடாத்தி இரண்டு சிங்கள இராணுவத்தைச் சுட்டுவீழ்த்தியவர் சீலன்.

1982 இல் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்திற்காக ஜே.ஆர். ஜெயவர்த்தனா பயணம் செய்ததையொட்டி காரைநகர் பொன்னாலைப் பாலத்தில் கடற்படையினரின் இரக் வண்டியினைச் சிதைக்கும் தாக்குதல் நடவடிக்கை சீலன் தலைமையிலேயே நடைபெற்றது. இத்தாக்குதலில் இருந்து சிறீலங்காப் படையினர் தப்பிக் கொண்டபோதிலும் இத்தாக்குதல் சிறீலங்கா அரசுக்கு அச்சமூட்டுவதாக அமைந்தது.

1982 அக்டோபர் 27ஆம் நாள் சாவகச்சேரிப் பொலீஸ் நிலையம் மீதுவிடுதலைப்புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் வலதுகாலில் காயமடைந்த சீலன் காலைக் கெந்திக் கெந்தி இழுத்தவாறே தனது துப்பாக்கியுடன் எதிரிகளின் துப்பாக்கியையும் நண்பர்களின் கைகளில் கொடுத்துவிட்டு மயங்கிச் சாய்ந்தார்.

இத்தாக்குதலுக்கு ஐந்து மாதங்களுக்குமுன் பயிற்சியின்போது நெஞ்சில் குண்டு பாய்ந்து சிகிச்சைபெற்று ஓரளவு உடல்நிலை தேறியிருந்த சீலனுக்கு இது இரண்டாவது தடவையாகக் காயம்பட்டது. ஆனால் அவர் ஓய்வில்லை.

சிங்கள இனவெறியரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஐ.தே.க.வின் உறுப்பினர்களாக இருந்த மூவர் மீது 1983 ஏப்ரல் 29ஆம் நாள் இயக்கம் மேற்கொண்ட நடவடிக்கை சீலனின் தலைமையிலேயே இடம்பெற்றது.

1983 மே மாதம் 18ஆம் திகதி நடந்த உள்ளூராட்சித் தேர்தலைத் தமிழ்மக்கள் பகிஸ்கரித்தபோது தேர்தல் நிலையங்களின் பாதுகாப்பிற்கு யாழ் குடாநாடு முழுவதும் ஆயுதப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு கந்தர்மடம் சைவப் பிரகாச மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்திற்கு மூன்று சைக்கிள்களில் சீலனின் தலைமையின் கீழ் சென்ற போராளிகள் அங்கு நின்ற இராணுவத்தினர்மீது துணிகரத் தாக்குதலை நடாத்தினர்.

1983 யூலை 5 ஆம் திகதி வாகனம் ஒன்றில் சென்ற சீலனின் தலைமையிலான குழு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் நுழைந்து நான்கு பெரிய தகர்ப்புக் கருவிகளையும் தேவையான சாதனங்களையும் எடுத்துக் கொண்டது. இக்கருவிகள் பின்னர் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பெரிதும் உதவின. ஆனால் இக்கருவிகளைப் பெற்றுப் பத்துநாட்களின் பின்னர் சீலன் வீரச்சாவடைந்த சம்பவம் நிகழ்ந்தது.

1983 ஆம் ஆண்டுயூலைமாதம் 15ஆம் நாள் மூன்றுமணிக்கு தேசத்துரோகி ஒருவனின் காட்டிக் கொடுப்பால் சீலன், ஆனந் உட்ப நான்குபோராளிகள் தங்கியிருந்த மீசாலைப் பகுதியைச் சிங்கள இராணுவம் சுற்றிவளைத்தது. ஒருமினி பஸ், இரண்டு ஜீப், ஒருட்ரக் வண்டிகளில் வந்த நூற்றுக்கும் மேற்பட்ட சிவிலுடையணிந்த சிங்கள இராணுவ அதிரடிப் படையினர் சுற்றிவளைத்தனர்.

இதனை உணர்ந்து கொண்ட போராளிகள் நால்வரும் தங்கள் துப்பாக்கிகளை இயக்கியவாறு முற்றுகையை உடைத்து வெளியேற முயன்றனர். இவர்கள் வெட்டவெளியில் நிற்க இராணுவமோ பனை வடலிக்குள் நிலை எடுத்திருந்தது. இடைவிடாது போராட்டம் தொடர்ந்தது.

இந் நிலையில் சிங்கள இராணுவத்தின் துப்பாக்கிச் சன்னம் ஒன்று சீலனின் மார்பில் பாய்ந்திருந்தது. ஆனால் அவர் உயிர் போகவில்லை. உயிருடன் எதிரிகையில் அகப்படக் கூடாது என்ற

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மரபுக்கு ஏற்ப '' என்னைச் சுட்டு விட்டு ஆயுதங்களுடன் பின்வாங்குங்கள் ''என ஏனைய போராளிகளுக்கு சீலன் கட்டளை இடுகின்றார். திகைத்துப் போன அந்தப் போராளிகள் நிலைமையை உணர்ந்து கட்டளையை நிறைவேற்றுகின்றனர்.

அதேபோல இம் மோதலில் ஆனந் என்ற போராளியும் காயமடைந்து வீழ்கிறார். அவரும் '' என்னையும் சுட்டுவிடுங்கள் '' எனக் கோரிக்கை விடுகிறார். இவரையும் சுடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட மற்றைய இருபோராளிகள் முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளியேறினர்.

லெப்.சீலன் போராட்டத்தின் போது எவ்வாறு ஒரு தனித்துவமான போராளியாக விளங்கினாரோ அவ்வாறே அவரது வீரச்சாவும் வித்தியாசமாக அமைந்தது. இவ்வாறான மாவீரர்களின் தியாகங்களின் பலத்திலேயே தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்றும் வீறுநடை போட்டுச் செல்கின்றது.

நன்றி: களத்தில் இதழ் (15 சித்திரை 2000).

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*பொறுப்பு:* **தாக்குதல் தளபதி**

*நிலை:* **லெப்டினன்ட்**

*இயக்கப் பெயர்:* **சீலன் (ஆசீர்)**

*இயற்பெயர்:* **ஞானப்பிரகாசம் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **புனித மரியாள் வீதி, திருகோணமலை.**

*மாவட்டம்:* **திருகோணமலை**

*வீரப்பிறப்பு:* **11.12.1960**

*வீரச்சாவு:* **15.07.1983**

*நிகழ்வு:* **யாழ்ப்பாணம், மீசாலைப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின்போதான சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் சக தோழனால் சுடப்பட்டு வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:***கொடிகாமம்**

**மேலதிகவிபரம்: கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## லெப்.கேணல் அகிலா

எங்கள் போராட்டவரலாற்றில் அவர் ஓர் தனிஅத்தியாயம் லெப்.கேணல் அகிலா !

எங்கள் தலைவரின் சேனைக்குள் உருவான 'அக்கினிக் குழந்தை' மெல்ல உயிர்ப்புக்காக உழைத்தவர்களில் லெப்.கேணல் அகிலாவின் பங்கும் அளப்பரியது.

அவருள் இருந்த அந்தஆளுமை, பல்துறை விற்பன்மை, எமது தேசத்தைக் கடந்து பறந்துபோன பெருமை.. அவரது தனித்துவமான இடம் நிரப்பப்பட முடியாததுதான்.

எப்போதுமே காற்சப்பாத்துக்களைக் கழற்றியறியாத கால்கள், நடந்துவரும்போது தனியானதொரு கம்பீரம் நடையிற் தெரியும். அந்த மெல்லிய உருவத்தின் வல்லமை, அதைவிட உறுதியின் வலிமை, எல்லாவற்றிலுமே முன்னுதாரணமான போராளி.

அகிலாக்கா எல்லாப் போராளிகளையும் தொட்டுச்சென்ற அவரது நினைவுகள். இழப்பை நெஞ்சம் ஏற்கமறுக்கும். பெயர் கூற முடியாத சாதனைகளுக்குள்ளும், இன்னும் ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கிப்போன உண்மைகளுக்குள்ளும் அவர் ஆற்றியபங்கு, அவரது உழைப்பு.. இவை அவரை இனங்காட்ட முடியாத பக்கங்கள். எழுத்திலே வடிக்கமுடியாத வரலாற்று நிகழ்வுகள்.

அவர் இயக்கத்துக்கென சேவையாற்ற புறப்பட்டகாலங்கள் மிகநெருக்கடியானவை. போராட்ட உத்வேகங்கொண்ட பெண்களணி ஒன்று தங்கள் தங்கள் குடும்பங்களுக்குள்ளே போராட்டம் நடத்தி வெளியே வந்து இந்தத் தேசத்துக்காய் தம்மை அர்ப்பணிக்கத் தொடங்கியது. லெப்.கேணல் திலீபனினால் உருவாக்கப்பட்ட 'சுதந்திரப் பறவைகள்' அணிக்குள் அவர்கள் ஒன்று திரண்டனர்.

இருண்மைச் சக்திக்குள் உறங்கிக் கிடந்த மனங்களைத் தட்டியெழுப்ப அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டனர். அந்தஅணிக்குள் அகிலாவும் தன்னை இணைத்துக் கொண்டார். அன்றுதொட்டு இன்றுவரை தனது செயல்களினால் மட்டும் தன்னை இனங்காட்டிவந்தார்.

அவரது துப்பாக்கியிலிருந்து புறப்படும் ரவைகள் எப்போதுமே இலக்குத் தவறியதில்லை. பெயர் சொல்லக் கூடிய இலக்காளர். அந்த இலக்குத் தவறாததன்மை அவரது போராட்டவாழ்வின் எல்லாப் பக்கங்களிலும் ஊடுருவியிருந்தது. எந்த வேலையாயினும் செய்து முடிக்கின்றவரையில் அவரது அயராத உழைப்பு, செய்து முடிக்க வேண்டும் என்ற ஓர்மம் அவரிடம் தனித்துவமாக விளங்கியது.

எல்லாவற்றையும் விட அவரிடமிருந்த பிரச்சனைகளை அணுகின முறை வித்தியாசமானது. இந்த வேலையை எப்படிச் செய்வது? குறித்த நாட்களுக்குள் செய்துமுடிக்க முடியுமா? யோசித்து யோசித்து மண்டையைப் போட்டுக் குழப்பிப் போய் அவர் முன்னாள் நின்றால், இவ்வளவு நேரமும் இதற்காகபோய் நின்றோம் என்ற மாதிரி செய்கின்ற வேலை இலகுவானதாகிவிடும். ஒவ்வொரு போராளியையும் சுயமாக வளர்த்தெடுப்பதில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையும் செயலாற்றலும்.. எங்கள் நெஞ்சுக்கூட்டுக்குள் அவரை ஆழ இருத்திவிட்டது. எந்த வேலையாக ஓடி அலைந்து திரிந்தாலும் நித்திரையின்றிய இரவுகளைச் சந்தித்தாலும் தானே நேரம் ஒதுக்கி, போராளிகளுக்கு கல்வியூட்டிய அந்த நாட்கள். எல்லோரும் எல்லாவற்றையும் அறிந்திருக்கவேண்டும் என்ற அவரது கொள்கை செயலுருப்பெற்றபோது, முகாமில் அனேகமான போராளிகள் இயந்திரங்களைத் திருத்துவதிலிருந்து எவ்வாறு சுவையாகச் சமைப்பது என்பதுவரை கற்றிருந்தனர்.

அவருக்குரிய வரலாற்றின் முகவுரைக்கு எடுத்துக் கொண்ட சிலவரிகள் இவை. இந்த அறிமுகத்துக்குரிய லெப்.கேணல் அகிலாவின் கடைசி மூச்சு 30.10.1995 இல் சூரியக்கதிர் படர்ந்த காலைப்பொழுதோடு கலந்து போனது. வலிகாமத்தின் மிகப்பெரிய சமருக்குள் ஊரெழுவின் சிவப்பு மண்ணுக்குள் குருதிதோய எங்கள் அகிலாக்கா கலந்துபோனார்.

நெஞ்சை விட்டகலாத நினைவுகளிலிருந்து.!

நன்றி : களத்தில் இதழ்

(12.06.1996)

## இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்

*நிலை:* **லெப்.கேணல்**

*இயக்கப் பெயர்:* **அகிலா**

*இயற்பெயர்:* **சோமசேகரம் சத்தியதேவி**

*பால்:* **பெண்**

*முகவரி:* **கோப்பாய் வடக்கு, யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **25.12.1969**

*வீரச்சாவு:* **30.10.1995**

*நிகழ்வு:* **யாழ். வலிகாமத்தில் சூரியகதிர் படை நடவடிக்கைக்கு எதிரான சமரில் வீரச்சாவு**

*துயிலுமில்லம்:* **கோப்பாய்**

*மேலதிகவிபரம்:* **கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## லெப். கேணல் மதனா

கப்டன் அன்பரசி படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் மதனா

மட்டக்களப்பில் போராட்டத்துக்கு மேன்மேலும் ஆளணியைச் சேர்ப்பதில் ஈடுபட்டு, பயிற்சி வழங்கி, படையணியைக் கட்டிவளர்த்ததில் அவள் பங்கு குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டம் இவர்களுக்கு மிகவும் வேதனையும் சோதனையும் நிறைந்த காலமாகவே இருந்தது. மட்டுநகர் காடுகளைச் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுமுழுதாக ஆக்கிரமித்திருந்த காலமது. அடிப்படை வசதிகள் கூட இன்றிய நிலையில், நம்பிக்கையும் மனவுறுதியும் மட்டும் பலமாகக் கொண்ட தருணங்களில் மதனா ஒருபோதும் சோர்வடைந்ததில்லை. தனது தோழிகளுக்குத் தெம்பூட்டி உற்சாகப்படுத்துவாள். இதன் பின்னர் படையணியைத் திரட்டி, அப்படையணிகள் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரான தாக்குதலிகளில் பங்குபற்ற வகைசெய்தாள்.

கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பு, தரவைக்குளம் இராணுவமுகாம் தகர்ப்பு, 4 ஆம் முச்சந்தி இராணுவமுகாம் தகர்ப்புபோன்ற பாரிய தாக்குதல்களிலும் அனைத்து பதுங்கித் தாக்குதல்களிலும் திறம்படச் செயலாற்றினாள். 4 ஆம் முச்சந்திமுகாம் தாக்குதலின்போது கப்டன் அன்பரசி வீரச்சாவடைந்தாள். அன்பரசி ஒரு சுறுசுறுப்பான விவேகமான போராளி. இவளும் மதனாவுடன் சேர்ந்துபடையணியின் வளர்ச்சிக்குத் தோளோடு தோள் கொடுத்து உதவியவள். இவளது ஞாபகமாகவே மட்டுஅம்பாறை மகளிர் படையணிக்கு அன்பரசி படையணி என்று பெயர் சூட்டப்பட்டது. மதனாவினது சுறுசுறுப்பையும், துணிவையும், புத்துணர்வையும், களங்களில் படை நடத்தும் திறமையையும் கண்ணுற்ற முதுநிலைப்

படைத்துறை ஆணையாளருள் ஒருவரான மாவட்டச் சிறப்புத் தளபதி அவர்கள் மதனாவை அன்பரசி படையணியின் சிறப்புத் தளபதியாக நியமித்தார்.

அன்போடும் அரவணைப்போடும் தன் தோழிகளுடன் ஆடிப்பாடி மகிழ்வாள். முகாமில் தாயாகவும் கடமையில் கண்ணியமாகவும், களத்தில் படைநடத்தும் தளபதியாகவும் நின்று போராளிகளை வழி நடத்திக் கொண்டிருந்தாள். இவளுக்கு சக தோழிகளுடன் சேர்ந்து விளையாடுவதேன்றாலே அலாதிப்பிரியம். பின்னேரம் நான்கு மணியாகி விட்டால் தன் படையணியினரை முகாமில் தங்க விடமாட்டாள். கால்பந்து, கைப்பந்து, கிரிக்கெட், வட்டக்காவடி எனப் பல்வேறு விளையாட்டுக்களை சக தோழியர் அனைவரையுமே விளையாடுவதற்கு உற்சாகப்படுத்திதானும் சேர்ந்து விளையாடுவாள். இதனால் ஒவ்வொரு போராளியின் மனநிலையும் சமநிலைப்படுகின்றது என்பது அவளின் எண்ணம்.

மதனா பங்குபற்றிய தாக்குதல்களில் மக்கள் நிறைந்துவாழும் சந்தவெளி, முறக்கொட்டான்சேனை, மாவடிவேம்பு ஆகிய இடங்களில் ரோந்து சென்ற சிங்கள இராணுவத்தினர்மீது மேற்கொண்ட தாக்குதல்கள் மக்கள் மனதில் இடம் பிடித்தன. இதில் பெருமளவு எதிரிகளும் இராணுவத் தளபாடங்களும் அழிக்கப்பட்டன. மதனாவின் வழிநடத்தலில் பெண்புலிகளின் வீரம் கண்டு எதிரி அதிர்ந்தான். மக்கள் அதிசயித்தனர். புளுகுணாவிவெற்றிச் சமரிலும் மதனா தனது படையணியினருடன் பெரும் பங்காற்றினாள். மட்டக்களப்பில் இவளின் பாதம் படாத மண்ணே இல்லையெனலாம். கிழக்குக் காடுகளின் காட்டுமரங்கள், மலைகள், அருவிகள் அத்தனையும் இவளை அறியும்.

1997.03.05 இல் கஜபாகு சிறப்புப் படையினர் நிலை கொண்டிருந்த வவுணுதீவு ஆக்கிரமிப்பு இராணுவமுகாம் மீதான தாக்குதலில் இவளது அணிக்கு ஒரு இலக்குக் கொடுக்கப்பட்டது. அதிகாலை 1.05 மணிக்கு சண்டை ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து எட்டுமணி நேரம் உக்கிர மோதல் தொடர்ந்தது. நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் எஞ்சிய எதிரிகள் திகில் அடைந்து ஓடத் தொடங்கினர். தனக்குக் கொடுக்கப்பட்ட பகுதியை வெற்றிகரமாகக் கைப்பற்றிய மதனாவின் குரல் ஆர்வத்துடன் தொலைத்தொடர்பு சாதனத்தில் ஒலித்தது.

''நாங்கள் எங்கள் பகுதியை முற்றாகப் பிடித்து கிளியர் பண்ணி விட்டோம்''.

களத்தில் அவளது பணிமுடிந்தபின்னர் கூவிச்சென்ற எறிகணை ஒன்று இவளது உயிரைப் பறித்துக்கொண்டது. காயம்பட்ட தோழி ஒருத்தி மதனாவின் உடலைச் சுமந்தபடி வந்துகொண்டிருந்தாள்.

மதனா... மகளிர் படைநடத்திய இளைய தளபதி அவள். அவளது பெயர் சொல்ல இன்று நீண்ட அணியாய் அவர்கள்.

மதனா பங்கு பற்றிய தாக்குதல்களில் மக்கள் நிறைந்துவாழும் சந்தவெளி, முறக்கொட்டான்சேனை, மாவடிவேம்பு ஆகிய இடங்களில் ரோந்து சென்ற சிங்கள இராணுவத்தினர்மீது மேற்கொண்ட தாக்குதல்கள் மக்கள் மனதில் இடம் பிடித்தன. இதில் பெருமளவு எதிரிகளும் இராணுவ தளபாடங்களும் அழிக்கப்பட்டன. மதனாவின் வழிநடத்தலில் பெண்புலிகளின் வீரம் கண்டு எதிரி அதிர்ந்தான். மக்கள் அதிசயித்தனர். புளுகுணாவி வெற்றிச் சமரிலும் மதனா தனது படையணியினருடன் பெரும் பங்காற்றினாள். மட்டக்களப்பில் இவளின் பாதம் படாத மண்ணே இல்லையெனலாம். கிழக்குக் காடுகளின் காட்டுமரங்கள், மலைகள், அருவிகள் அத்தனையும் இவளை அறியும்.

*நன்றி: களத்தில் இதழ்*

*(10.09.1997).*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*பொறுப்பு:* **அன்பரசி படையணியின் சிறப்புத் தளபதி**

*நிலை:* **லெப். கேணல்**

*இயக்கப் பெயர்:* **மதனா**

*இயற்பெயர்:* **நாகேந்திரம் கருணாதேவி**

*பால்:* **பெண்**

*முகவரி:* **வாகரை, மட்டக்களப்பு.**

*மாவட்டம்:* **மட்டக்களப்பு**

*வீரப்பிறப்பு:* **06.06.1975**

*வீரச்சாவு:* **06.03.1997**

*நிகழ்வு:* **மட்டக்களப்பு, வவுணதீவுப் படைமுகாம் மற்றும் கட்டளைத் தலைமையகம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு**

## லெப்டினன்ட் கேணல் ரத்தி



2 ஆம் லெப்.மாலதி படையணி துணைத் தளபதி லெப்டினன்ட் கேணல் ரத்தி.

எமது தலைவன் பூத்த மண்ணாம் வடமராட்சியின் ஓர் கிராமமான துன்னாலையில் பிறந்து வளர்ந்தவள்தான் ரத்தி. இவள் தனது கல்வியை வடமராட்சி வடஇந்து மகளிர் கல்லூரியில் கற்று வந்தாள் இவள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்த வீராங்கனையாகத் திகழ்ந்தாள். இவற்றில் மட்டுமன்றிக் கலை நிகழ்ச்சிகளிலும் இவள் திறமை விளங்கியது. இவ்வாறாக இவளது கல்வி தொடர்கையில் எமது மண் அந்நியர்களினால் ஆக்கிரமிக்கப்பட்ட நினைவுகள் இவள் கண் முன் நிழலாடியது.

இவளின் ஒன்றுவிட்ட அக்காவான கப்டன் லீமாவும் இவளும் ஆருயிர் சகோதரிகள் இவர்களைப் பார்ப்பவர்கள் எவரும் உடன் பிறப்புக்கள் என்றுதான் கூறுவார்கள் அப்படி ஒரு பாசப்பிணைப்பில் தான் இருவரும் வளர்ந்தவர்கள் இருவரும் வீட்டில் யார் முதல் இயக்கத்துக்கு செல்வது என்று சண்டை பிடிப்பார்கள் கப்டன் லீமா கூறுவார் ''சுபா, நீ நில் நான் போறன். நீ வீட்டில் ஒரே பிள்ளை'' என்று அதற்கு ரத்தியின் பதிலோ ''இல்லையக்கா, நான் போறன். நீங்கள் நில்லுங்கோ. அன்ரி பாவம் என இருவருக்கும் வாக்குவாதம் தொடரும்.

1990-ன் முற்பகுதியில் ஒருநாள் காலை 8 மணியளவில் கப்டன் லீமா தனது பாசமான கோதரிக்கும் கூறாது எல்லோருக்கும் மடல் எழுதிவைத்து விட்டு தாய் மண்ணைக் காக்க பயிற்சிப் பாசறைநோக்கி செல்கின்றாள். லீமாவின் தாயார் அழுதவண்ணம் இருக்க அன்று காலை 10 மணிக்கு ''அன்ரி, அழாதேங்கோ நான் அக்காவைப் பார்த்துக் கொண்டு வாறன் என்று கூறிவிட்டுத் தானும்

தாயகப் போரில் இணைந்து கொள்ள விரைகின்றாள். ஆம் இருவரும் மகளிர் படையணியின் ஏழாவது பயிற்சிமுகாமில் தமது பயிற்சிகளை முடித்தார்கள் பின் இருவரும் வெவ்வேறு கடமைகளுக்காக அனுப்பப்படுகின்றனர்.

கப்டன் லீமா 1991 இல் ஆனையிறவுச் சமரில் வீரகாவியம் ஆகின்றாள் இச் சமரில் ரத்தி மிகவும் நிதானத்துடனும் முகாமை அழிக்கவேண்டும் என்ற உறுதியுடனும் தனது குழுவையும் நகர்த்தி தானும் நகர்கின்றாள். குண்டுமாரி பொழியும் வேளைதனில் லீமாவின் உடன் பிறப்பெனப் பாசம் வைத்த ரத்தியின் உடலையும் குண்டு பதம் பார்த்து குருதிசொரிய வைத்தது. அவள் மயக்கமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டாள்.

அங்கு மயக்கம் தெளிந்தவுடன் ''என்ரை அக்கா ஒரு பிரச்சினையும் இல்லாமல் நிக்கிறாவா'' என அருகில் நின்ற தோழியிடம் கேட்கின்றாள். தோழிகள் இவளின் பாச அக்காவின் இழப்பை இப்போது எப்படிக் கூறுவது என நினைத்து பின் ஒருவாறு தயங்கித் தயங்கிச் சகோதரியின் இழப்பைத் தோழி கூறுகிறாள். இவளின் குரல் மிகவும் உறுதியுடன் பின்வருமாறுஒலிக்கின்றது. ''என்ரை காயத்தை வேளைக்கு மாத்தி விடுங்கோ. என்ரை அக்காவை சுட்டவனோடை நான்போய் சண்டை பிடிச்சுச் சுடுவன்'' என்று பின் இவளின் காயம் மாறினாலும் கை ஒன்று இயலாமல் போனது இவளது திறமையைப் பார்த்த மருத்துவப் பொறுப்பாளர் ''ரத்தி நீங்க மருத்துவப் பிரிவில கொஞ்ச நாளைக்கு நிதி வேலை செய்யுங்கோ'' என்று கூறினார் அதற்கு அவள் ''நான் மாட்டன் எனக்கு கை ஏலும் என்னைச் சண்டைக்கு விடுங்கோ'' எனக் கேட்டுச் சண்டைபிடித்தாள். பின் எல்லோரின் வற்புறுத்தலினாலும் கொஞ்சக் காலம் செய்யிறன் என்று தனது கடமையைத் தொடர்கிறாள். இவளின் மனமோ மிகவும் இளகிய மனம் மற்றவர்கள் துன்புறுவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மனநிலை இவளுக்கு இல்லை. அத்துடன் மிகவும் நகைச்சுவையாகக் கதைகள் கூறி எல்லோரையும் சிரிக்க வைப்பாள். இவளுக்கு கையுடன் வாயிலும் காயம் ஏற்பட்டு அதற்கு தையல் போடப்பட்டு இருந்தது.

நோயாளர் தங்களுக்கு என்ன விருப்பமான உணவு கேட்டாலும் உடன் எங்கு சென்றாவது வாங்கிவந்து கொடுப்பாள். இவளின் பணி மருத்துவப்பிரிவில் தொடர்கையில் எமது தளபதியால் புதிய போராளிகளுக்கு பயிற்சி வழங்க எனப் பயிற்சி ஆசிரியராக இவள் நியமிக்கப்படுகின்றாள். புதிய போராளிகளை மிகவும் சிறந்த போராளிகளாகவும் உறுதியுடையவர்களாகவும் மிகவும் கண்டிப்புடன் வளர்த்தாள். பின் தான் சண்டைக்கு போகவேண்டும் என்று கேட்டுச் சண்டைகளில் பங்குபற்றுகிறாள். இப்படியாக முல்லைச் சமரிலும்

தனது குழுவுடன் இவளும் மிகவும் ஆவேசத்துடன் முன்னேறுகின்றாள். இறுதி மட்டும் இவள் சண்டைசெய்கிறாள் இடையில் எமது விசேடத் தளபதி வோக்கித் தொடர்பு கொண்டு உன்ரை பக்கம் என்ன மாதிரி ரத்தி என்று கேட்க ''அக்கா நான் ஆமியை முன்னே விடமாட்டன் அவன் அப்படி முன்னேறி வாறதென்டா என்ரை உடலைத் தாண்டித்தான் வருவான் என்று மிகவும் உறுதியுடன் கூறுகிறாள்.

முல்லைச் சமரில் இவள் தனது முழுத்திறனையும் வெளிப்படுத்தினாள். இவளின் திறமைகளையும் வழிநடத்தும் ஆற்றலையும் கண்ட விசேடதளபதி இவளை துணைத் தளபதியாய் நியமிக்கிறார். இவளின் திறமைகள் மென் மேலும் வளர்ச்சியடைந்த வண்ணம் இருந்தன, 'ஜெயசிக்குறு' படையெடுப்புத் துருப்புக்கள் மீதும் நெடுங்கேணிப் பகுதியில் 15.05.1997 அன்று இவளின் அணி மிகவும் உக்கிரமாகச் சண்டைசெய்கிறது. இவள் ஓடி ஓடி சகல நிலைகளுக்கும் சென்று எல்லாவற்றையும் நேரடியாகக் கவனித்து சண்டை செய்கிறாள். மிகிவும் ஆவேசத்துடனும் வேகத்துடனும் முன்னேறியவளின் உடலை எதிரியின் குண்டுகள் பதம் பார்த்தன. ''என்னை ஒருவரும் தூக்கவேண்டாம் ஆமி வாறான் அடியுங்கோ'' என்று கூறியவாறு தாயகப்பற்றுடன் குருதி சிந்த தாய்மண்ணில் தலை சாய்த்து முத்தமிடுகிறாள்.

*நினைவுப்பகிர்வு:* **போராளி அ. பூரணி**
*நன்றி: களத்தில் இதழ் (22.04.1999).*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப். கேணல்**

*இயக்கப் பெயர்:* **ரத்தி**

*இயற்பெயர்:* **கிருஸ்ணபிள்ளை சுபாஜினி**

*பால்:* **பெண்**

*முகவரி:* **கரவெட்டி ,யாழ்ப்பாணம்.**

*மாவட்டம்:* **யாழ்ப்பாணம்**

*வீரப்பிறப்பு:* **30.06.1975** *வீரச்சாவு:* **15.05.1997**

*நிகழ்வு:* **வவுனியா, ஓமந்தையில் ஜெயசிக்குறு நடவடிக்கைக்கு எதிரான சமரில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **விசுவமடு**

*மேலதிக விபரம்:* **விசுவமடு, மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**



## லெப்டினன்ட் கேணல் நவம்

சிங்கள இனவெறித் தாக்குதலினால் மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் தன் தாய் தந்தை குடும்பத்தாரோடு வாழ்ந்துவந்த நவம் 1983 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டான்.

மலையகத்தில் மிக வறுமையான குடும்பத்தில் பிறந்த நவம் தன் பள்ளிக்கூடப் பாடங்களை அதிகம் படிக்காவிட்டாலும், பொது நலன், இன உணர்வு, சுதந்திரம், அஞ்சாமை, துணிவு என்பனவற்றைத் தன் தந்தையின் நடைமுறை வாழ்க்கை அனுபவத்திலிருந்து பெற்ற நவம் தான் பிறந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதியாகத் தமிழீழப் பகுதிக்கு வந்த அவலத்தையும் நன்கு அனுபவித்து உணர்ந்தவன்.

அதனால் தமிழீழத் தனியரசைப் பெற்றாலன்றித் தமிழ் மக்களின் இது போன்ற இன்னல்களை எது விதத்திலும் தடுத்து நிறுத்த முடியாதென்ற முடிவுக்கு நவம் ஆளானான். எனவே தமிழீழ விடுதலைக்காக உண்மையாகவும், உறுதியாகவும் போராடி நெருக்கடிகளுக்கு மத்தியில் பல தியாகங்களைச் செய்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தான்.

தாய் தந்தையரால் அருமைராஜ் என்று பெயரிடப்பட்ட நவம் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்ததும் நவம் என்ற இயக்கப் பெயரை வரித்துக் கொண்டான்.

இயக்கம் மேற்கொள்ளவிருந்த சிங்கள இராணுவத்தின் மீதான தாக்குதல் நடவடிக்கை ஒன்றுக்கான பயிற்சியின்போது ஏற்பட்ட விபத்தில் மணிக்கட்டுக்கு மேல் வலதுகையை இழந்த நவம், அதனால்

சோர்ந்துவிடவில்லை, மிகுந்த தன்னம்பிக்கையுடன் விரைவிலேயே தன் இடது கையினால் ஆயுதங்களைக் கையாளப் பழகிக் கொண்டான். இடதுகையினாலேயே சகல வாகனங்களையும் வேகமாகவும், சாதுரியமாகவும் செலுத்தும் வகையில் பயிற்சி பெற்றான்.

இயக்கத்தில் மிகவும் துடிப்பாகச் செயலாற்றி வந்த நவத்தின் காலடிபடாத இடமே வன்னிக்காடுகளில் இல்லை என்று கூறிவிடலாம். அந்த அடர்ந்த காடுகளில் திசையறிகருவி (கொம்பாஸ்) இன்றி எங்கிருந்தும், குறிப்பிட்ட எந்தப் பகுதிக்கும் விரைவாகச் செல்லக்கூடிய திறமையை அவனது காட்டு வாழ்க்கை அவனுக்குப் பெற்றுக் கொடுத்திருந்தது. தான் படும் அல்லல்களும் வாழ்ந்த அடிமை வாழ்வும் எதிர்காலச்சந்ததி படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தான்.

நவம் இந்தத் திறமையை தன்னுள் மறைத்து வைத்திருக்கவில்லை. இயக்கத்தில் உள்ள பல இளைஞர்களுக்கு அடர்ந்த காட்டில் நடமாடுதல், போன இடத்துக்கே திரும்பி வருதல், திசைகளை அறிதல் போன்றவற்றில் பயிற்சி அளித்தான். அவனிடம் பயிற்சி பெற்ற இயக்க இளைஞர்கள் பலர் இன்று காட்டுப் பயணத்தில் மிகுந்த ஆற்றலுள்ளவர்களாகத் திகழ்கிறார்கள். ஒரு கையை இழந்துவிட்ட போதும் களத்திலிறங்க அவன் பின் நின்றதில்லை. விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதல்களிலெல்லாம், உற்சாகத்துடன் கலந்து கொண்டான். களத்தில் புயல் வேகத்தில் செயற்படும் திறமையினால் பல தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு அவனைத் தேடி வந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு முன் முல்லைத்தீவு மாவட்டம் முந்திரிகைக் குளத்தில் விடுதலைப் புலிகள் சிங்களப் படைகள் மீது நடத்திய பெரும் தாக்குதலுக்கான சகல முன் ஏற்பாடுகளையும் செய்தவன் நவம். அத்தாக்குதலின் போது சிங்கள இராணுவத்தினரிடமிருந்து 122 ரக துப்பாக்கிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

ஒற்றைக் கையுடன் அவன் தலைமை தாங்கி நடத்திய பல தாக்குதல்களின் மூலம் இந்தியப் படையினரிடமிருந்தும் ஏராளமான ஆயுதங்களையும் ரவைகளையும் வெடி மருந்துகளையும் இயக்கத்திற்கு கொண்டுவந்து குவித்துள்ளான்.

இயக்கம் நடத்திய தாக்குதல்களின் போது தனது திறமையையும், துணிச்சலையும் வெளிப்படுத்திய நவம் தலைவர் பிரபாகரனின் பெருமதிப்பைப் பெற்றான். இயக்கத்தில் பல பொறுப்புக்கள் அவனைத் தேடிவந்தன. விரைவிலேயே இயக்கத்தின்

‘லெப்டினன்ட் கேணல்’ பதவியைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இயக்கப் பொறுப்பாளனாகவும் ஆனான்.

மலையகத் தமிழர்களை அரவணைத்துச் செல்லவேண்டும், ஐக்கியப்பட வேண்டும் என்று அடுக்கு மொழிகளில் வார்த்தை ஜாலம் பேசிக் கொள்ளும் பல குழுக்கள் நடைமுறையில் மலையகத் தமிழர்களை அடிமைகள் போலத்தான் தமது இயக்கத்தில் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் செயலிலேயே தமது எண்ணங்களை வெளிப்படுத்துபவர்கள். செயற்திறனுக்கும், மதியூகத்துக்கும், தியாக சிந்தைக்கும் மதிப்புக் கொடுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில், கல்வியறிவு அதிகமில்லாத போதிலும், அஞ்சாமை, ஆற்றல், அடக்கம் என்பனவற்றை வெளிப்படுத்திய மலையகத் தமிழனான நவம் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெரிய பொறுப்புக்களில் மாவட்ட பொறுப்பாளர் எனும் பொறுப்பையும் லெப். கேணல் நவம் வகித்தான்.

வடக்கு கிழக்கு மாகாணத்தை இணைக்கும் மணலாற்றுப் பகுதியில் (வெளி ஓயாவில்) சிங்களக் குடியேற்றத்துக்கு உதவியாகவும், பாதுகாப்பாகவும் செயற்பட்டு வந்த சிங்கள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலிலும் லெப். கேணல் நவம் முக்கிய பங்கேற்றான். இத்தாக்குதலில் 21 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

04.05.1989 அன்று, குளவிசுட்டான் காட்டிலிருந்து சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தியில் கொழும்புக்கு பேச்சுவார்த்தைக்குச் சென்ற யோகி, மூர்த்தி மற்றும் தோழர்களை வழியனுப்பிவிட்டுத் திரும்பிய லெப். கேணல் நவம் மறுவாரமே பெரிய தாக்குதலொன்றுக்குத் தயாரானான்.

13.05.1989 அன்று இயக்கத்தின் தாக்குதலொன்றுக்கு தலைமையேற்றுச் சென்ற நவம், நெடுங்கேணி பாடசாலையொன்றில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரின் ஐந்து காவல் அரண்களை ஒரே நேரத்தில் தாக்கி அங்கிருந்த ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றினான். அந்த அதிரடித் தாக்குதலில் 18 இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அக்காலத்தில் விடுதலைப் புலிகள் இந்தியப் படையினர் மீது மேற்கொண்ட மிகப்பெரிய தாக்குதல் நடவடிக்கை இதுவாகும். இத்தாக்குதலின் போது தலைமையேற்றுச் சென்ற லெப். கேணல் நவம் காயமடைந்த போதிலும் தாக்குதலுக்கு அழைத்துச்சென்ற போராளிகளையும், தாக்குதலின் போது கைப்பற்றிய ஆயுதங்களையும் பாதுகாப்பாக

இருப்பிடத்திற்கு கொண்டுவந்து சேர்த்துவிட்டு தன் வயிற்றில் துப்பாக்கிக் குண்டு பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்றான். ஆயினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவன் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டான்.

*நன்றி: களத்தில் இதழ்*

*15.05.2000.*

**இம் மாவீரர் பற்றிய முழுமையான விபரம்**

*நிலை:* **லெப்.கேணல்**

*இயக்கப் பெயர்:* **நவம் (டடி)**

*இயற்பெயர்:* **செல்லப்பெருமாள் அருமைராசா**

*பால்:* **ஆண்**

*முகவரி:* **கொக்குத்தொடுவாய், மணலாறு.**

*மாவட்டம்:* **முல்லைத்தீவு**

*வீரப்பிறப்பு:* 02.02.1961

*வீரச்சாவு:* 15.05.1989

*நிகழ்வு:* **இந்தியப்படையினரின் நெடுங்கேணிப் பாடசாலை முகாம் தாக்குதலில் விழுப்புண்ணடைந்து பண்டுவத்திற்காக சென்றபோது தமிழகத்தில் வீரச்சாவு.**

*துயிலுமில்லம்:* **அளம்பில்**

*மேலதிக விபரம்:* **அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.**

# உறுதிமொழி

*தமிழீழத்தாய் நாட்டிற்காகத்*
*தமது இன்னுயிரை ஈந்த*
*மாவீரர்களை நினைவு கூரும்*
*இப்புனித நாளில்*
*ஈழத் தமிழனாகிய நான்*
*உலகின் எத்திசையில் வாழ்ந்தாலும்*
*தமிழீழமே எனது இலட்சியம் என்றும்*
*இந்த இலட்சியத்துக்காக*
*அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்றும்*
*சுதந்திரமும் இறைமையுமுள்ள*
*தமிழீழத் தனியரசான*
*எனது வரலாற்று மண்ணின் மீட்சிக்காக*
*அயராது உழைப்பேன் என்றும்*
*உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றேன்.*

'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்'

**விழுதுகள் பாகம் 02**
**விரைவில் உங்களுடன்...**



எமது மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தேசிய விடுதலை என்கின்ற உயரிய இலட்சியத்திற்காக வாழ்ந்து அந்த இலட்சியத்திற்காகத் தமது வாழ்வைத் தியாகம்செய்தவர்கள். இதனால்தான் இவர்கள் சாதாரண மனிதர்களிலிருந்து வேறுபட்டுநிற்கிறார்கள், உயர்ந்துநிற்கி-றார்கள். எமது தேசத்தின் வரலாற்றில் சங்கமமாகி நிற்கிறார்கள்.

– மேதகு வே.பிரபாகரன்
தமிழீழ தேசியத் தலைவர்

நீங்கிப் போய்விடுமோ நிலத்தமிழர் வரலாறு என ஏங்கி நிற்கும் காலத்திலே தாங்கி நிற்கும் தூணாகி சான்று பகர்கிறது "விழுது". மாவீர மணிகளின் வரலாறு மகத்தான தொகுப்பொன்றின் பேரேடு. இதைப் படியாமல் எதைப் படிப்போம்? எம்தமிழர் வீட்டிலெல்லாம் இந்நூலை வைப்போம்.

போற்றப்பட வேண்டியதும் காக்கப்பட வேண்டியதும் தலைமுறைகள் தோறும் நிலைபெற வைக்கப்படவேண்டியதுமான மாவீரர் வரலாற்றுத்தடத்திற்கு மகத்தான ஓர் இடம் "விழுது" எனும் நூற்றடம்.

தமிழர் இல்லமெலாம் தமிழ் மாவீரர்களின் கதை சொல்ல வேண்டும். நிலவைக் காட்டி சோறு ஊட்டும்போதே நிலத்திற்காய் மடிந்தோரின் நினைவுகளை பேச வேண்டும். இதயத்தில் இருக்கும் மாவீரரின் எண்ணற்ற நினைவுகளை எழுத்தாக்கி வைப்பது மட்டுமே அடுத்த சந்ததி படித்திட தொடுத்திடும் பெரும்பணி. தினமுமிவர் வரலாற்றினை மனம் வைப்போம். திசையெட்டும் யாவர்க்கும் சொல்லி வைப்போம்.

- உயிர்ப்பு



வெளியீடு
நிதர்சனம்
NIEDHARSHANAM

ISBN 9780645038309